[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 1894.

B
M93

114364

உ

கடவுள் துணை.

பொதிகைமாமலை மகாமகுத்துவம் பொருந்திய

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சகாவியங்களில்,

## வாதகாவியத் திறவுகோலாகிய

# வாதசெளமியம்,

## ௩ உ ா.

இஃது,

லோகோபகாரமாய்

சில கனவான்கள் கேட்டுக்கொண்டபடி

கும்பகோணம் - மேலக்காவேரி

ம - ா - ா - ஸ்ரீ,

## ஆறுமுகஞானியாரவர்களால்

சுவானுபவ கைவல்லியமாக

பார்வையிடப்பட்டு,

ஷை சுவாமி அவர்களின் மாணாக்கர்கள்

மேலக்காவேரி

ஆ. பொன்னுசாமி ஆசாரியவர்களாலும்

கருப்பூர்

பொ. வைத்திலிங்கபிள்ளையவர்களாலும்

சென்னையைச்சார்ந்த - சூளை:

ப. அ. குப்புசாமிமுதலியா ரவர்களது

தொண்டமண்டலம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1893 ௵.

*Registered, Copy Right.*

இதன் விலை அணா 12.

REGISTRAR OF BOOKS · 27 FEB. 94 · MADRAS

LB
M93

11454

# விளம்பரம்

இதனால், யாவருக்குந் தெரிவிப்ப தென்னெனில், ௧௮௬௭-வது, வருஷத்திற்பிறந்த, ௨௫-வது ஆக்டின், ௨௰-வது, பிரிவினிற்சொல்லிய, ௬-வது விதியின் பிரகாரம் இந்த பஞ்சகாவியங்களில் வாதகாவியத் திறவுகோலாகிய வாதசௌமியம் நூல் - ம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றமையால் என துத்தரவன்றி அச்சிடப்போகாது, அப்படி அச்சிடுபவர்களை மேற்சொன்ன ஆக்டின்பிரகாரம் வழக்கிடப்படும்.

## அறிவிப்பு.

இதனா லியாவருக்கும் அறிவிப்ப தென்னெனில் இந்த வாதசௌமியம் வேண்டுபவர்கள் கும்பகோணம் மேலக்காவேரி ம-ா-ா-ஸ்ரீ, ஆறுமுகஞானியாரவர்களிடத்திலும், சென்னையைச் சார்ந்த சூளை அவதானம் பாப்பையர்வீதி (௬௧) வது, நெம்பர், தொண்டமண்டலம் அச்சியந்திரசாலையில் இன்னும் பலவித தமிழ் தெலுங்கு புஸ்தகங்களும் விலைசகாயமாய் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

[illegible] ப. அ. குப்புசாமிமுதலியார்.



அகஸ்தியமகாமுனிவர்.



# வாதசௌமிய அதிகார

## அட்டவணை.


| அதிகாரங்கள். | பக்கம். | அதிகாரங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| அகாரபூசை | 54 | அறுவகைசாக்குக்கட்டு | 103 |
| அகாரபூசை | 105 | அனேகம் | 21 |
| அகாரதீட்சை | 54 | ஆக்கினை | 23 |
| அட்டகணபதிமூலமந்திரம் | 67 | ஆக்ருஷணம் | 64 |
| அட்டாங்கயோகம் | 68 | ஆசனவிபரம் | 69 |
| அட்டகர்மவிபரம் | 60 | ஆசனமொன்பதுவிபரம் | 77 |
| அட்டகர்மவாற்றிபருத்திறுதை விவரம் | 181 | ஆசாபாசம் | 124 |
| அண்டகவசம் | 143 | ஆதாரதெரிசனை | 247 |
| அண்டபிண்டமரிய | 216 | ஆகாரபூசை | 104 |
| அத்தோயுகம் | 84 | ஆதியந்தவிளக்கம் | 33 |
| அமாவாசிவிபரம் | 120 | ஆத்துமதெரிசனம் | 248 |
| அமுர்தாசத்தால்துருகன்னம் | 226 | ஆறுமுகசாளங்கவேதை | 242 |
| அமுர்தாசவேதை | 227 | ஆறுமுகக்கங்குசெந்தூரம் | 154 |
| அமுர்தாசங்கொள்ள | 112 | ஆறுவகைமுத்திரைவிபரம் | 97 |
| அமுர்தாசமுன்னை | 114 | இடமலகை | 71 |
| அடச்செம்புவேதை | 216 | இயோகத்திறல்குருகொண்டால் சாந்தி | 288 |
| அயத்தின்சத்துருமித்துரு | 236 | இரசத்துக்குச்சத்துருமித்துரு | 236 |
| அடக்களங்குவேதை | 178 | இரசித்தியானம் | 24 |
| அயக்காந்தபெயசச்செந்தூரம் | 157 | இராஜாங்கயோகம் | 224 |
| அயச்செம்புசெந்தூரம் | 156 | இருள்வெளி | 88 |
| அரிதாரயியம் | 122 | இருதயதெரிசனம் | 169 |
| அரிதாரயியம் | 129 | இருந்துவாழ்கமவுனம் | 211 |
| அரிதாரயியம் | 142 | இலிங்கக்கட்டு | 125 |
| அரிதாரக்கட்டு | 244 | இலிங்கவேதை | 134 |
| அரிவுதெரிசனம் | 248 | இலிங்கமெழுகு | 284 |
| அருவதெரிசனம் | 254 | உகாரதீட்சை | 55 |
| அவயோகி | 222 | உகாரதீட்சை | 110 |
| அனவபடக்கம் | 52 | உச்சாடனம் | 63 |
| | | உப்புக்கட்டு | 145 |

| அதிகாரங்கள். | பக்கம். | அதிகாரங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| மந்திரத்தியானம் | 118 | லிங்கக்கட்டு | 125 |
| மயக்கமரிய | 152 | லிங்கக்கட்டு | 214 |
| மயேஸ்வரிபூசை. | 92 | லிங்கவேதை | 215 |
| மரக்கனி | 113 | லிங்கமொழுகு | 284 |
| மவுனமார்க்கம் | 165 | லோக காந்தரசவங்கச் செந்தூரம் | 147 |
| மவுனம் | 194 | வகாரதீட்சை | 56 |
| மவுனதியோகம் | 223 | வசிகரம் | 60 |
| மனோதெரிசனம் | 249 | வசிஸ்டர்ஸ்ரீராமருக்குச் சொன்ன கதை | 152 |
| மாரணம் | 65 | வயிரவைப்பு | 163 |
| மால்தியானம் | 83 | வல்லாரைகற்பம் | 160 |
| மானதபூசை | 173 | வாசிதாரணை | 257 |
| முக்கிகாரணபூசை | 114 | வாதவகைச்சரக்கு | 185 |
| முச்சுழி | 195 | வாலைதீட்சை | 111 |
| முச்சுடர்நமக்கண் | 181 | வாலைபூசை | 149 |
| முத்துவைப்பு | 162 | வாலைச்சந்திரசெந்தூரம். | 186 |
| மூப்புச்செயநீர்பற்பம் | 58 | விசத்தி | 22 |
| மூப்புச்சுன்னம் | 57 | வித்துவேதனம் | 64 |
| மூப்புச்சுன்னம் | 101 | விந்துதெரிசனம் | 253 |
| மூப்புச்செயநீர் | 102 | வீரவைப்பு | 130 |
| மூலத்தில்சாந்தி | 206 | வீரக்கட்டு | 210 |
| மேலாதாரதெரிசனம் | 260 | வெடியுப்புக்கட்டு | 143 |
| மோகனம் | 61 | வெடியுப்புஜெயநீர் | 170 |
| மோகினிமுத்திரை | 99 | வெடியுப்புசத்துருமித்துரு | 234 |
| யுகம்பதினெட்டுமேறிய | 41 | வெள்ளிபற்பம் | 127 |
| போகப்பெருமை | 150 | வெள்வங்கருகு | 245 |
| போகக்குறிப்பு | 159 | வைரவைத்தியானம் | 27 |
| யோகமார்க்கமாத்திரை | 202 | | |
| யோனிமுத்திரை | 100 | | |


ஆக அதிகாரங்கள் உசரு.





கடவுள்துணை.

அகஸ்தியமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

வாதகாவியத் திறவுகோலாகிய

# வாதசௌமியம்

## ௲ உ௱.

### காப்பு.

சோதியெனும் மனோன்மணியைத் தியானஞ்செய்து
  சுகமான சௌமியசா கரத்தைப்பாட
ஆதியெனுங் கணபதியும்வல் லபையுங்காப்பு
  அரசான பிரம்மனொடு சரஸ்வதியுங்காப்பு
நீதியெனும் மாலுடனே லட்சுமியுங்காப்பு
  நின்றிலங்கும் ருத்திரனு மாருத்திரியுங்காப்பு
ஓதியதோர் மயேஸ்பரனும் மயேஸ்பரியுங்காப்பு
  வுறுதியுள்ள சதாசிவனும் மனோன்மணியுங்காப்பே. (க)

மணியான ரவிமதியுஞ் சுழினைகாப்பு
  மகத்தான வேதியர்தன் பாதங்காப்பு
கனியான நால்வேத அந்தங்காப்பு
  கருணைவளர் சாஸ்திரமோ ராறுங்காப்பு
அணியான வாதார சொருபங்காப்பு
  அருளான வமிர்தரச போதங்காப்பு
தனியான பராபரமாஞ் சோதிகாப்பு
  சதானந்தப் பூரணமாந் தாய்காப்பாமே. (உ)

தாயான சிவயோக மூலங்காப்பு
சகலகலைக் கியானமணி பீடங்காப்பு
மாயாத வாசிமல ரந்தங்காப்பு
மணிமந்திர நாதவொலி கீதங்காப்பு
சாயாத வடிமுடியும் நடுவுங்காப்பு
சௌமியமாம் தேவாதி ரிஷிகள்காப்பு
தேயாத வாசியடா மவுனங்காப்பு
சிவசிவா அகாரமுட னுகாரங்காப்பே. (௩)

உகாரமென்ற நாதமடா சத்திகாப்பு
வுறுதியுள்ள அகாரமடா சிவமேகாப்பு
சிகாரமென்ற சோதியடா வாலைகாப்பு
சிவசிவா மகாரமென்ற மவுனங்காப்பு
வகாரமென்ற பஞ்சகண தீசைகாப்பு
மகத்தான சடாதார ஆதிகாப்பு
நகாரமுடன் அகாரவரை ஓங்காரத்தில்
நாடிநின்ற சூட்சமடா ஆதிகாப்பே. ( )

ஆதிகுரு வேதியர்தன் பாதம்போற்றி
வருள்பெருகுங் கேசரியைப் பூசைபண்ணி
சோதியெழவுஞ் சௌமியசா கரத்தைப்பாட
சுயஞ்சோதி வர்தியந்தனு சுழினைகாப்பு
நீதியுடன் ஆதார மூலந்தன்னில்
நின்நிலைக்கும் பிரணவ மயனார்காப்பு
ஓதியதோர் கலைமகளும் பூமகளுங்காப்பு
வுண்மையுள்ள செயமகளும் காப்புத்தானே. (௫)

தானான சதுரகிரி மூலங்கண்டு
தவமான சிவயோகத் திருக்கும்போது
கோனான வேதியனை யடுத்துநானுங்
குறியான பூரணத்துக் குருதிகேட்டேன்
ஊனான சத்திசிவ மென்றுபின்னும்
உண்மையுள்ள வகஸ்தியனே வாவாவென்றார்
தேனான வடமொழியைக் கையிலீய்ந்து
திருவான பூரணத்தின் திறந்சொன்னாரே. (௬)



திறஞ்சொன்ன மகிமையைநான் பெற்றுக்கொண்டு
திருவான வடமொழியை நன்றாய்ப்பார்த்து
டாஞ்சேர்ந்த பூரணமா மதிவிலேறி
பாடினேன் சௌமியசா கரத்தைமைந்தா
சரமான வாசியினை யுறுதிகொண்டு
சந்தோஷ மாகவே நாளுநாளும்
வரஞ்சேர்ந்த தவமதனால் பாடிநானும்
மகத்தான வேதியர்முன் வைத்தேன்தானே. (௭)

தானான சௌமியசா கரத்தைநன்றாய்த்
தன்மையுடன் ஆதியந்தந் தயவாய்ப்பார்த்து
தேனான வடமொழியைத் தமிழ்தான்செய்த
திரமான கருவிபரம் நன்றாய்ச்சொன்னீர்
ஊனான வுலகமதி லுலகத்தோர்கள்
உறுதியுள்ள கைலாச மடங்கொள்ளாது
மானுக்கேள் சௌமியசா கரத்தையும்
மார்க்கமுடன் அக்நிசத்தி மகிழ்ந்தபாரே. (௮)

பாரென்று சொன்னமொழி பெற்றுக்கொண்டு
பதிவான பொதிகைதனில் வாசமாகி
கேளென்ற சௌமியசா கரத்தைப்பார்த்து
நிட்சயமா மஷ்டாங்க யோகம்பார்க்கில்
சாரென்ற பொதிகைமலை சார்புக்குள்ளே
சார்ந்திருந்த தபோதனர்கள் தானேகூடி
கேளென்ற பொதிகைதனின் முடிமேற்சென்று
மெய்ஞ்ஞான சற்குருவின் அடிபணிந்தார். (௯)

பணிந்துமிக வனைவோரு மிருகைகூப்பி
பரமகுரு தேசிகரே பதிவாய்நீரும்
கனிந்துமிக அந்தமதிற் கருணையாகி
கடாட்சித்த சௌமியசா கரத்தைநாங்கள்
அணிந்துவரின் தெரிசனங்கள் பார்ப்போமென்று
அனைவோரு மொருமனதாய் அருள்கண்கூர்ந்து
துணிந்தவர்தோ முமமுடைய பாதந்தன்னில்
சுகமாக வடிமையடைந் தானொன்றுமே. (௧௦)

ஆளென்று சொன்னதபோ தனைப்பார்த்து
ஆதிதொடுத் தந்தம்வரை சொன்னோம்நூலில்
காலென்ற கருக்குருவும் நன்றாய்ச்சொன்னோம்
காசினியில் தபோதனர்கள் கருணையாகி
வாளென்று சொன்னதொரு தீட்சைமார்க்கம்
வளமான சவுக்கார வழலைப்போக்கும்
மேலென்ற காப்பதிலே யாறுலட்சம்
விண்டதிலே சூட்சமதாய்க் கண்டோம்பாரே. (கக)

கண்டதொரு சகலகலை வேதந்தன்னை
கடைந்தெடுத்து சௌமியசா கரமாய்ப்பாடி
கொண்டதொரு சூஸ்திரத்தைக் குருமுன்வைத்தேன்
குருவான வெங்குருவும் நன்றாய்ப்பார்த்து
விண்டதொரு சாகரந்தான் ஆதிசூட்சம்
விளம்பாது விளம்பாது மவுனம்பண்ணு
அண்டகே சரந்திலே தவஞ்செய்யென்று
ஆதிகுரு வேதியரும் சொன்னார்பாரே. (கஉ)

பாரையா சொல்மொழிகள் தவறொண்ணாது
பத்தியுட னுத்திரவு பெற்றுவந்தால்
சேரையா சௌமியமாம் பொருளுஞ்சொல்லி
நிசமான சாகரத்தின் நிலையுங்காட்டி
தேரையா வென்றுக்கா யாதியிஞ்து
செய்ததொரு சாஸ்திரமே யிவோமென்று
மேரையா மேருவடி முடியிற்சென்றேன்
விளம்பியதோர் சௌமியத்தை சொல்லக்கேளே. (கங)

சொல்லக்கேள் சௌமியசா கரத்தைமைந்தா
சுகமான வடமொழியைத் தமிழாய்ச்செய்தேன்
அல்லக்கேள் ஆதிமுதல் சொன்னநூலில்
அறிதரிது இதில்பெருமை யாருங்காணார்
வெல்லக்கேள் வேதமென்ற சௌமியத்தை
மேலான பதவியென்று பதனம்பண்ணி
வுள்ளத்தின் றன்னொளிவு மேலேசேர்ந்து
மூண்மையுட னந்திசந்தி பூசைபண்ணி. (கச)



பண்ணப்பா சௌமியத்தை முன்பின்னறு
பதிவான சாகரத்தை யதிற்கொண்டு
வெண்ணப்பா வென்றுதன்னை மறந்திடாதே
விசபாசா தனமுழுது மிதுவேசித்தி
முன்னப்பா சொன்னசாஸ்திரங்களெல்லா
முன்பின்னாய்ப் பூரணத்திற் சேர்க்கச்சொன்னோம்
கண்ணப்பா கண்மணிபோ லிந்தநூல்தான்
கைலாச மேருகிரி தீபமாச்சே. (கரு)

ஆச்சப்பா மேருகிரி தீபம்போலே
ஆரகார சௌமியசா கரந்தான்பாரு
நீச்சப்பா கடினமென்று நினைக்கவேண்டாம்
நேர்மையுள்ள வைபாக முறைபாகங்கள்
பாச்சப்பா வெகுதெளிவு யின்னூல்போலே
பகராது முன்சொன்ன சாஸ்திரங்கள்
காச்சப்பா யின்னூலை பதனம்பண்ணி
கனகமுடன் சிவயோகங் கருத்தாய்ப்பாரே. (கசா)

கருவான சௌமியசா கரத்தைமைந்தா
கருணையுடன் விளம்புகிறேன் கருணைக்கேளு
திருவான வாதார மூலகுண்டலி
செப்பரிது தத்துவத்தின் வழியிதோர்மை
வுருவான தீட்சையொடு பூசைமார்க்க
முத்தமனே யஷ்டகன்மஞ் சித்துமூலம்
குருவான கற்பமொடு மந்திரசித்து
கூர்மையென்ன யோகமொடு ஞானந்தானே. (கஎ)

தானான யோகமொடு சமாதிதீட்சை
சத்தியொடு சிவதீட்சை வாலைதீட்சை
தேனான பூரணமா மவுனதீட்சை
திருவான பஞ்சகன தீட்சையோடு
ஊனான முப்பூவாம் வழலைதீட்சை
வுண்மையுள்ள வித்தைவகை மோடியங்கம்
பூனான மையுடனே திலதவாடை
போக்கான மறைப்புடனே யின்னங்கேளே. (கஅ)

இன்னங்கேள் சொல்லுகிறேன் ஜயநீர்போக்கு
யின்பமுள்ள திராவகத்தின் கருவின்மார்க்கஞ்
சொன்னதொரு கட்டினங்க ளுருக்கினங்கள்
சுகமான பற்பமொடு செந்தூரங்கள்
வர்னமுள்ள குளிகையுடனே மெழுகுமார்க்க
மகத்தான தூபமொடு தீபவேதை
எண்ணவொண்ணா தைலமொடு லேகியங்க
ளேகாந்த மானதொரு லகிரிபோக்கே.

போக்கான வைப்புமுறை பாஷாணங்கள்
புகழான வுபரசங்கள் காரசாரம்
வாக்கான குளிகையுடன் கெவுனசித்தி
மகத்தான லோகமா ரணங்களோடு
தாக்கான சத்துருமித் துருக்கள்தானுந்
தன்மையுடன் குருமுடிக்கும் பாகந்தானுந்
தூக்கான புடபாகம் பெரிப்பாஞ்பாகந்
முடியான கைபாகங் கணக்குந்தானே. (௨௰)

கணக்கான சேர்மானஞ் சரக்குவைப்பு
கருணையுள்ள ரத்தினங்கள் வைப்புமார்க்கம்
புணக்கான சல்லியங்கள் ஒட்டியங்கள்
புலிரத்த மேவல்பில்லி சூனியங்கள்
தனக்கான லகிரியிலே வனந்தமார்க்கந்
தன்மையுள்ள தெரிசனங்கள் கோடாகோடி
யிணக்கமுள்ள சக்கரங்க ளாவேசங்க
ளேகாந்த வஞ்சனங்கள் கோடிபாரே. (௨௧)

கோடியென்ற வெகுகோடி தொழில்களெல்லாங்
குறித்தபடி சௌமியமாய்க் காணலாகும்
நாடிமனங் கொண்டுகுறி கண்டாயானால்
நந்திபிர காசமது நயனந்தன்னில்
ஆடுகின்ற திருநடனங் காணலாகு
மப்பனே சக்கரங்கள் தோற்றும்பாரு
கூடுகின்ற சக்கரத்தி னினங்கள்தன்னை
சொல்லுகிறேன் வேதமுறை சூக்ஷந்தானே. (௨௨)



## ஜீவாத்மா பரமாத்மா தத்துவத்தின் விபரம்.

தானென்ற சூக்ஷமடா விந்துநாதந்
தனையறிந்த நாதமுடன் விந்துசேர்
கோனென்ற குருவருளா லங்குறித்
கொண்டெழுந்த மடபதியை [illegible]னசொல்வேன்
ஊனென்ற மடபதிக்கு வுறுதி[illegible]ன
வுண்மையுள்ள வக்கினியும் வாய்வுங்கூடி
தேனென்ற ஜீவாத்மா பரமாத்மாவாய்ச்
சென்றிருந்து வாதார மானார்பாரே. (௨௩)

பாரப்பா ஆதார மாராதாரம்
பரிவான ஆதார மடத்துக்குள்ளே
நேரப்பா வக்கினிதான் ஜீவாத்மாவாய்
நிறைந்துநின்ற வாய்வதுதான் பரமாத்மாவாய்ப்
பேரப்பா பெருகிநின்ற கடத்திலுள்ளே
பிலமாக நின்றுதிரு விளையாட்டாடி
காரப்பா வாகாசஞ் சாக்ஷியாக
கருணையுட னின்றதடா கருவாய்க்காணே. (௨௪)

சாணப்பா தத்துவத்தின் விபரஞ்சொல்வேன்
கருணையுடன் சொல்லுகிறேன் கனிவாயகக்கேளு
பேணப்பா பூதமைந்து சொல்லக்கேளு
பிரிதிவு அப்புவுடன் தேய்வுமாக
பூணப்பா வாய்வுடனே ஆகாசந்தான்
பொருந்திநின்ற பூதமடா வைந்துமாச்சு
தோணப்பா மனக்கண்ணால் நன்றாய்ப்பார்த்துத்
துலங்கிநின்ற பூதத்தை நன்றாய்க்காரே. (௨௫)

காரப்பா அஞ்சுபஞ்ச பூதந்தன்னை
கண்குவித்து மனக்கண்ணால் கருவாய்ப்பார்த்தால்
மேரப்பா மேருகிரி காணலாகும்
மேரான சதுரகிரி விலாசந்தோணும்
ஆரப்பா வுனக்கிடு சொல்லப்போறேன்
அரகரா பூதவகை யறிந்துகொண்டால்
நேரப்பா நின்றகை லாசந்தோன்றும்
நிஜமான ஞானியிற் றிரியங்கேளே.

கேளப்பா ஞானயிந் திரியந்தன்னை
கிருபையுடன் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
ளுளப்பா தோத்திரந்தான் காதுமாகுந்
தொக்கவென்று சொன்னதுதான் தேகந்தேகம்
வாளப்பா சக்ஷுவென்றால் நேத்ரமாகு
மகத்தான சிங்குவென்றால் வாய்தானாகுங்
காலப்பா வர்க்கிராண மூக்குமூக்கு
கருணையுள்ள ஞானயிந் திரியமைந்தா. (௨௭)

அஞ்சான பஞ்சயிந் திரியந்தன்னை
வருளான மனக்கண்ணாலன்றாய்ப்பார்த்து
நெஞ்சார வஞ்சிநிலே பார்த்துமைந்தா
நிலையான குருபதியில் நின்றாயானால்
மிஞ்சாமல் வாசியது தானேதானாய்
மெய்ஞ்ஞான தீபமது விளங்கும்பாரு
தஞ்சமுட னந்நிலே நன்றாய்ப்பார்த்துச்
சங்கையுடன் கர்மயிந் திரியங்கேளே. (௨௮)

கேளப்பா வாக்குடனே பாதம்பாணி
கிருபையுடன் பாயுரு வுபஸ்தமைந்துந்
துளப்பா கர்மயிந் திரியமாகுஞ்
சுகமாகத் தானறிந்து சத்தியமானால்
பாளப்பா போகாது ஞானமார்க்கம்
பத்தியுட னிந்தையும்நீ கண்டுதேர்ந்தால்
கோளப்பா வொன்றுமில்லை வாசியேதுங்
குறியாக வைம்புலனைக் கூர்ந்துபாரே. (௨௯)

பார்க்கையிலே வைம்புலனை நன்றாய்க்கேளு
பதிவான சத்தமொடு பரிசரூபம்
ஏர்க்கவே ரசமுடனே கெந்தமைந்து
மின்பமுள்ள வைம்புலனை யறிவதற்கு
சேர்க்கையுட னைம்புலனைக் கண்டுமைந்தா
தேர்ந்துமன தறிவாலே தேர்ந்துகொண்டால்
மார்க்கமுள்ள சித்தரென்று பார்க்குந்தோறு
மைந்தனே வைம்புலனை வகுத்துக்காணே. (௩௰)



காணவே வைம்புலனை வகுத்துப்பார்த்துக்
கருவான வாதார மூலத்தேகி
தோணவே வாசியுட னிலையைக்கண்டு
சுத்தமுட னவ்வாகி தன்னிலேறி
பூணவே யண்டவனாத் தன்னிற்சென்று
புத்தியுடன் சித்தமதாய் நின்றாயானால்
ஊணவே காணமந்தக் கரணநாலு
முன்னமையுடன் சொல்லுகிறே னுகந்துகேளே. (௩௧)

கேளப்பா புலத்தியமா ரிஷியேயையா
கிருபையுள்ள கரணமந்தக் கரணந்தன்னை
கோளடா யில்லாத மனந்தானென்று
கூர்மையுட னின்றிலங்கும் புத்தியொன்று
தேரடா வாங்கார மானதொன்று
சிவசிவா சுத்தமென்ற சித்தமொன்று
ஆளடா கரணமென்ற கரணநான்கு
மப்பனே யறிந்துகொண்டு வாழ்ந்தும்பாரே. (௩௨)

பாரப்பா வாற்றுமதத் துவந்தானப்பா
பதிவாக யிருபத்து நாலுஞ்சொன்னேன்
நேரப்பா தானிருந்து வாற்றுமாவாம்
நிலையறிந்து பெற்றிடில் வாசியாகுங்
காரப்பா வாசிநிலே சருவைக்கண்டு
கருவாக வாற்றுமதத் துவத்தைப்பார்த்தால்
ஆரப்பா வுனக்குநிக ருண்டோபிள்ளாய்
மப்பனே வித்தியாதத் துவங்கேளே. (௩௩)

கேளப்பா வித்தியாதத் துவத்தைச்சொல்வேன்
கேள்வியென்ன காலையென்றும் நியதியென்றும்
ளுளப்பா கலையென்றும் வித்தையென்றுஞ்
சுகமான ராகமென்றும் புருடனென்றும்
நாளப்பா மாய்கையென்று யேழுமாச்சு
நன்மையுடன் வித்தியதத் துவத்தைப்பார்த்து
ஆளப்பா வாதாரத் தேகந்தன்னை
யறிந்துகொண்டு சிவதத்து வத்தைக்கேளே. (௩௪)

கோளடா சிவதத்துவந் தன்னைமைந்தா
  கிருபையுள்ள புலத்தியனே யின்றுப்கேளு
ஆளடா சுத்தவித்தை யீசுவரமுமைந்தா
  வப்பனே சதாசிவமும் சத்திசிவமைந்து
ஞுளடா சிவதத்துவ மென்றுபேரு
  சுகமான தத்துவங்கள் முப்பத்தாறும்
வாளடா வுடற்கருவி யென்றும்பேரு
  மைந்தனே தானறிந்து தன்னைப்பாரே. (௩௫)

பாரப்பா தன்னையிகத் தானேகண்டு
  பத்தியுட னுட்கருவி மூலம்பார்த்து
நேரப்பா நின்றதினால் தத்துவத்தின்பெருமை
  நீதியுடன் தோணுமடா நினைவாய்ப்பாரு
சாரப்பா மனசார சார்ந்துபார்த்தால்
  சார்வான தத்துவங்கள் தோணும்பாரு
ஆரப்பா வறிவார்கள் பூதமைந்தி
  லிறப்பிறந்த தத்துவந்தான் தொண்ணூற்றாறே. (௩௬)

ஆரான பூதமைந்தின் விரிவைக்கேளு
  அப்பனே பிருதிவியின் கூர்தான்மைந்தா
கோரான மயிருடனே யெலும்புசர்மம்
  கிலையான நரம்புசதை யைந்துமாச்சு
பேரான பிருதிவியின் கூறைச்சொன்னேன்
  பொறுமையுடன் தானறிந்துப் பிலமாய்நின்று
கூரான அப்புடைய கூறுபாரு
  குணமான புலத்தியனே குவித்துப்பாரே. (௩௭)

பாரப்பா வப்புவுடன் கூறுசொல்வேன்
  பதிவான நீருடனே யுதிரமப்பா
காரப்பா சுக்கிலமும் மூளைமச்சை
  கருவான வைந்துமடா வப்பின்கூறு
தேரப்பா அப்பினுட கூறறிந்து
  தெளிந்துமன தொன்றாகத் தன்னைப்பாரு
சாரப்பா தன்னுணர்வாய் பார்த்தால்மைந்தா
  தயவான தேய்வினுட கூறுகேளே. (௩௮)



கேளப்பா தேய்வினுட கூறுகேளு
  கேள்வியென்ன பசியுடனே நித்திரையுமாகும்
ஞுளப்பா மைதுனமும் பயமுஞ்சோம்பல்
  தொகுத்துரைத்த வைந்துமடா தேய்வின்கூறு
ஆரப்பா தேய்வினுட கூறறிந்து
  வாக்குமுடன் தன்னகத்தை மனதாய்ப்பாரு
காலப்பா வலுவறிந்து பார்த்தாயானால்
  கலையான வாய்வினுட கூறுதானே. (௩௯)

தானான வாய்வினுட கூறுகேளு
  தன்மையுள்ள புலத்தியனே நடத்தல்ஓடல்
வானான யிருத்தலொடு கிடத்தல்மைந்தா
  வுத்தமனே யெழுந்தலொடு மைந்துமாச்சு
வானான வாய்வினுட கூறறிந்து
  மார்க்கமுடன் தன்னகத்தை மகிழ்ந்துபாரு
கோனான குருவருளால் பார்த்தாயானால்
  குணமான வாகாசக் கூறைக்கேளே, (௪௰)

கூறாக வாகாசக் கூறுதன்னை
  குறியுடனே சொல்லுகிறேன் குணமாய்க்கேளு
நேராகக் குரோதமொடு லோபமோகம்
  நிசமான மாச்சரிய மதமுமைந்தா
ஊரான வாதாரந் தன்னைப்பார்த்து
  வுத்தமனே தானவனும் நின்றாயானால்
தேராக வாசியது தேருந்தேரும்
  சிவபூத மைந்துதொழி லிருத்தலிந்த. (௪௧)

அஞ்சான வைந்துபத்து நாடிதன்னை
  யப்பனே சொல்லுகிறே னறிவாய்க்கேளு
திஞ்சாத யிடையானபின் சுழிமுனையாகி
  துலங்குகின்ற காந்தாரி யத்தியோடு
மிஞ்சான வஸ்வனியும் அலம்புருடன்
  வேகமுள்ள குகமுடன் சிங்குவைகைபத்தும்
நெஞ்சார நின்றதோர் நாடிபத்தும்
  நேர்மையுள்ள பிருதிவியின் கதிதான்பாரே. (௪௨)

வளியான வாய்விளிட வழிதான்மைந்தா
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மனதாய்க்கேளு
தெளியாத பிராணனுடன் அபானன்தானும்
நிசமான வுதானனுடன் சமானன்மைந்தா
அளியாத வியானனுட னைந்துமப்பா
அரகரா தேய்வுடனே வாய்வுமாச்சு
சுளியாத தேயுவாயுவைத்தான்கண்டால்
சுகமாக பூதவா யுவைத்தான்கேளே. (சங)

கேளப்பா நாகனொடு கூர்மன்மைந்தா
கிரிகரனும் தேவதத்தன் தனஞ்செயனுமைந்தும்
ஆரப்பா வைம்பூத வாயுவென்பா
ராச்சரியத் திசைவாய்வை யறிந்துகொள்ளு
காலப்பா திசைவாய்வை யறிந்துகொண்டு
கருணையுடன் சிவயோகக் கருத்தில்நின்றால்
கோளப்பா வொன்றுமில்லை யெல்லாஞ்சித்தி
குறிப்புடனே வாகாச வழிதான்கேளே. (சச)

கேளடா வாகாச வழிதான்மைந்தா
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
வாளடா அர்த்தமே டனைதானென்று
வகையான புத்திரமே டனைதானென்று
சூளடா வுலகமே டனைதானென்று
சுத்தமுட னாகாச வழியைக்கண்டு
ஆளடா வந்தரங்கச் சுழியில்நின்று
வப்பனே வாக்காதி யறிந்துபாரே. (சரு)

பாரப்பா வாக்காதி யென்னவென்றால்
பதிவான வசனமொடு கெமனமுந்தானம்
நேரப்பா விசர்க்கமொடு வானந்தமைந்தும்
நிரமான வசனாதி யென்றும்பேரு
காரப்பா வசனாதி யைந்துங்கண்டு
கருவான வாதார மூலம்பார்த்து
சாரப்பா பிரகிருதி வழியைப்பார்க்க
தன்மையுடன் சொல்லுகிறேன் சங்கைகேளே. (சசு)



கேளப்பா ராசதமுந் தாமதமுமைந்தா
கிருபையுள்ள சாத்துமிக குணங்கள்மூன்றும்
வாளப்பா முக்குணங்க ளறிந்துகொண்டு
வரிசையுடன் விந்துவுட வழியைக்கேளு
சூளப்பா பைசந்தி மத்திமைவைகரியுஞ்
சூக்குமையும் நாலுமிது வாக்கேயாகும்
ஆளப்பா வாக்காதி நாலும்பார்த்து
அரகரா வாதாரந் தன்னைக்காணே. (சஎ)

காணப்பா வாதாரந் தன்னிலேதான்
கருவான வுடற்கருவி முப்பத்தாறும்
பூணப்பா பிறக்கருவி யறுபதாச்சு
புத்தியுட னுள்வெளியும் நன்றாய்ப்பார்த்தால்
தோணப்பா தத்துவங்கள் தொண்ணூற்றாறுந்
தோனுமடா யிருதயத்திற் சூழ்ந்துபார்க்கில்
வீணப்பா வொன்றுமில்லை தத்துவமாங்குப்பை
விளங்குபதி பசுபாசம் விளையாட்டாச்சே. (சஅ)

ஆச்சப்பா வுட்கருவி முப்பத்தாறு
மப்பனே சிவத்திலுட கூடேயாச்சு
நீச்சப்பா பிறக்கருவி யறுபதுதான்
நிசமான சத்தியுட கூடேயாச்சு
பேச்சப்பா வுள்வெளியும் நன்றாய்ப்பார்த்து
பெருமையுட னாதார நிலையுங்கண்டு
காச்சப்பா கருவிகர ணாதியென்று
காடான தத்துவத்தைக் கண்டுதேறே. (சகூ)

தேரப்பா சரிதையுடன் கிரிகைரெண்டுஞ்
சிவசிவா சத்தியுட கூடேயாச்சு
காரப்பா யோகமுடன் ஞானம்ரெண்டும்
கருவான சிவத்திலுட கூடேயாச்சு
நேரப்பா சிவராச மந்தங்கண்டு
நெறிமுறைமை தவாரம லந்தம்பார்த்து
சாரப்பா சதுரகிரி பொதிகைதன்னில்
சங்கையுட னின்றுதவந் தானேசெய்யே. (ருய)

தானான தேசமதில் கூடிநின்ற
　சங்கைகளைச் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
ஊனான ரோமமது மூன்றரையாங்கோடி
　யுத்தமனே நாடிப்ப தெழுபத்திராயிரமாங்
கோனான தேகமடா பலமோராயிரமாங்
　கொள்கிபதிற் குடல்பலந்தா னைம்பத்தைந்து
பூனான பல்லதுவும் பலந்தானாலு
　பொருந்திநின்ற சதைபலமு மிருநூறாச்சே. (௫௧)

ஆச்சப்பா வப்பதுவும் பலந்தானைந்து
　வப்பனே மச்சையது பலந்தானாலு
நீச்சப்பா யீரலது பலந்தானெட்டு
　நிசமான வஸ்தியதைச் சொல்லக்கேளு
காச்சப்பா பலமும்நூற் றிருபதாச்சே
　கட்டிநின்ற சேஷ்மந்தான் நாழியாகும்
பேச்சப்பா பித்தமது படிதான்காலாம்
　பிலமான சுக்கிலந்தா னரைக்காலாகும். (௫௨)

ஆச்சப்பா சர்மமது யென்னவென்று
　லப்பனே பலம்நூற்றிப் பதினாலாச்சே
நாமப்பா யிப்படிதான் கூடிநின்று
　சரீரமதில் வாசலது யெட்டுமாச்சு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
　நாடிநின்ற கோபுரத்தில் வாசலொன்று
ஓமப்பா வவ்வாச லொன்பதுக்கு
　வுண்மையுள்ள வாதாரக் கதவைப்பாரே. (௫௩)

பாரப்பா வாதாரக் கதவைச்சாற்றி
　பலபலவாய் நின்றதொரு தாளைப்பூட்டி
நேரப்பா வப்பூட்டுத் தனக்குமைந்தா
　நிசமான சுழினையே கோல்தானப்பா
ஆரப்பா வறிவார்கள் சுழினைக்கோலை
　யழித்துமிகத் தானிறுத்திப் பார்க்கும்போது
வீரப்பா கொண்டதொரு வாராதாரம்
　விபரமுடன் தோணுதற்கு விபரங்கேளே. (௫௪)



கேளப்பா விபரமென்ன மூலாதாரங்
　கிருபையுடன் கண்டுகொள்ள வகையைக்கேளு
காலப்பா தோன்றிநின்ற மூலாதாரங்
　கருணையுடன் சொல்லுகிறே னண்டம்போல
மேலப்பா வண்டமதிற் சூழ்ந்துநின்ற
　விசையான யிதழதுதா னாலுமாச்சு
சூளப்பா நிறமதுதான் மாணிக்கம்போற்
　சுகமாக நின்றுதடா மூலம்பாரே. (௫௫)

பாரப்பா மூலமென்ற முட்டைக்குள்ளே
　பதியான வசுதாந்தா னோங்காரமாச்சே
நேரப்பா நின்றவோங் காரத்தோடே
　நிசமான ரீங்காரம் உகாரங்கூட்டி
சாரப்பா தன்மனமே சாக்ஷியாக
　தன்மையுடன் தானிருந்து செபிப்பாயாகில்
காரப்பா கணபதியும் வல்லபையுமைந்தா
　கனிவாக வந்தனிடங் கனிவாற்காணே. (௫௬)

காணடா கனிவாகக் கண்டாயானாற்
　கருணையுள்ள சிவயோக முறதியாச்சு
பூணடா சிவயோக முறதியானாற்
　பொற்கமல முச்சியிலே தீபங்காணும்
பேணடா தீபமதை தினமும்நோக்கிப்
　பிசகாமல் வாசியிலே பிலமாய்நில்லு
தோணடா யவ்வாசிப் பிலமாய்நின்றாற்
　சுகசிவ பிராணகலை சுத்தமாச்சே. (௫௭)

## சுவாதிஷ்டானம்.

சுத்தமுட னாகார மூலஞ்சொன்னேன்
　சுவாதிஷ்டானத்தினுட சுகத்தைக்கேளு
பத்தமுட னாற்கோண மிதழ்தானாறு
　பதிவான பொன்னிறம்போ லிருக்குமைந்தா
சுத்தமுள்ள நாற்கோண நடுவிலேதான்
　தெளிவான நகாரமென்ற தீபமேத்தி

சித்தமுமே சகாரமுடன் சிவநீக்கிட்டு
நிலையறிந்து வுருச்செபிக்க சித்தைக்கேளே. (௧௮)

கேளடா நிலையறிந்து வாசிகொண்டு
கீழ்மேலும் நன்றாக நின்றுபாரு
சூளடா நின்றனிலே பார்க்கும்போது
சோதியொன்று தோணுமடா பிரமசொரூபம்
ஆளடா பிரம்மநிலை ரூபங்கண்டா
லடங்காத வாசியது வடங்கும்வீட்டில்
காலடா வாசியது யடங்கிநின்றாற்
கண்ணடங்க பூரணத்தைக் காணலாமே. (௧௯)

## மணிபூரகம்.

காணவே பிரம்மாவின் பதியைச்சொன்னேன்
கருவான மணிபூரகங் கருத்தைக்கேளு
தோணவே பிறைமூன்றும் பிறைபோற்கீறித்
துலங்கவிதி லீகாரந்து பத்தம்போட்டு
பேணவே நிறமதுதான் பளிங்குபோலாம்
பிறைமூன்றும் பிறைநடுவே மகாரமிட்டு
பூணவே சங்கிலி மங்கென்றேதான்
பூரணமாய்த் தினம்நூறு செபித்துக்காரே. (௨௰)

கார்க்கவுரு செபித்துநாடு புருவமீதில்
கண்ணுமனக் கண்ணுமே நன்றாய்ப்பார்த்தால்
யார்க்கமுடன் லட்சுமியும் விஷ்ணுதேவர்
மகத்தான பூரணச்சந் திரன்போல்மைந்தா
யேர்க்கையுட னிருதயத்திற் காணும்பாரு
யின்பமுள்ள தெரிசனத்தைக் கண்டாயானால்
தீர்க்கமுள்ள சிவயோக வாழ்வுபெற்று
செல்வபதி யாயிருப்பாய் தினமும்நோக்கே. (௨௧)

நோக்குவது பூரணச்சந் திரனைநோக்கு
நுண்மையுடன் பூரணமாய் நின்றாயானால்
நாக்குநுனி யந்தமதில் வாசிநின்று
நலங்காமல் தீபமதில் நாடும்பாரு



வாக்குமனோ தொன்றாகி நின்றுபாரு
மகனே கண்பசவு வாழ்வுண்டாகும்
தூக்கமென்ற கொடுமைதனை யகற்றிமைந்தா
சுகமான யிடமறிந்து சபந்தில்நில்லே. (௨௨)

## அநாகதம்.

நில்லடா நிலையறிந்து சுகத்தைக்காண
நேசமான ருத்திரனார் பதியைக்கேளு
சொல்லடா சொல்லறிந்து சுகத்தைப்பார்க்க
சுகமான முக்கோணம் நன்றாய்க்கீறி
அல்லடா முக்கோணத் ததிலேநீதா
னப்பனே பன்னிரண்டு இதழ்தான்போடு
வில்லடா செம்புநிற மானகோட்டை
விரையான கோட்டைநடு விந்துபோடே. (௨௩)

போடப்பா விந்துநடு வோங்காரந்தான்
பூரணமாய் சிங்கிலி யென்றுநாட்டி
நாடப்பா விந்துநடு முனைமையத்தில்
நாடிநின்று சிங்கிலி யென்றுசொல்லி
விடப்பா யிலப்பதற்கு தினம்நூற்றெட்டு
விரும்பிமன தறிவுடனே யுருவேசெய்தால்
சூடப்பா தானேறி முனைமையத்தில்
சூரியன்போல் காந்திவெகு சோதியாமே. (௨௪)

சோதியென்ற காந்தியடா சூரியகாந்தி
துலங்குநடுச் சுழினைபைநீ கண்டாயானால்
வாதியென்ற வாதார மாராதார
மருமையா னதொரு மேலாதாரம்
நீதியுடன் தோணுமடா வாசியாலே
நின்றிலங்கும் வாசிதனைத் தன்னுள்பார்த்து
சாதியென்ற சராசரத்தைத் தானென்னெணி
சதாயோக பூரணமாய் நின்றுபாரே. (௨௫)

பார்க்கையிலே ருத்திரனார் கடாட்சத்தாலே
பாதாதி கேசமுதல் நன்றாய்ப்பாரு

பேர்க்கையுடன் பார்க்கையிலே மைந்தா மைந்தா
யென்னசொல்வே னக்கினிபோ லாகுந்தேகந்
தீர்க்கமுட னக்கினிபோல் தன்னுள்கண்டாற்
சிவயோக வாழ்வுவெகு திறமாயிற்கு
மார்க்கமுட னுருத்திரனார் பதிகைப்பார்த்து
மனங்குளிர்ந்து பூரணத்தில் மருவியேமே. (௬௬)

## விசுத்தி.

மருவிநின்ற தலமதுதான் விசுத்திவீடு
மகத்தான வறுகோணம் நன்றாய்ப்போட்டு
திருவிருந்த வறுகோணஞ் சுத்திநல்ல
தீர்க்கமுடன் பதினாறு யிதழ்தான்போட்டு
குருவிருந்த கோட்டைவெகு கருப்பாயிற்குங்
குணமான வக்கோட்டை நடுவிலேதான்
உருவரிந்து விந்திட்டு வோங்காரஞ்சுத்தி
வுத்தமனே வங்கிலி யங்கென்றுபோடே. (௬௭)

போட்டபின்பு மனதுகந்து மனக்கண்சாத்தி
பூரணமாய் வங்கிலி யங்கென்றிட்டு
நாட்டமுடன் தானிருந்து வொருநாளுமைந்தா
நன்மையுடன் தான்செபித்து நயனமேலி
தேட்டமுடன் குருபதியிற் சென்றுபாரு
சிவசிவா வாய்வேக லகிரியுண்டாம்
வாட்டமில்லா லகிரியடா வாய்வேகமாகு
மகத்தான போகசிவ போதமாமே. (௬௮)

ஆமப்பா போகமென்று சிவயோகந்தா
னருளான முச்சுடரி னந்தத்தாலே
ஓமப்பா முச்சுடரி னந்தம்பார்த்தா
லொளிவிளக்காய் நின்றதொரு மூலத்திதான்
வாமப்பா னிறைந்ததொரு மூலத்திதான்
வளர்ந்ததடா வறுகோண வனையின்மேலே
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்ப்பாரு
நாதாந்த மயேஸ்வரத்தைக் காணலாமே. (௬௯)



## ஆக்கினை.

காணவே மயேஸ்வரத்தின் கடாட்சத்தாலே
கண்ணான சதாசிவத்தின் கருணைக்கேளு
தோணவே யாக்கினையாம் விந்துவட்டந்
சொல்நிறைந்த வட்டமதி லிதழ்தான்ரெண்டு
பூணவே வட்டமதின் நிறந்தான்சொல்வேன்
புதுமைவெகு புதுமையடா வாகாசந்தான்
பேணவே வாகாச வட்டத்துள்ளே
பேர்பெரிய பிரணவத்தை நன்றாய்நாட்டே. (௭௰)

நாட்டமுடன் ஓங்கார நடுவிலேதான்
நன்மையுட னகாரமுட னுகாரஞ்சாற்றி
தேட்டமுடன் மகாரம் நடுவிலசாற்றி
திறமாகத் தானிருந்துப் புருவமேகி
கூட்டமன்றி தானாகத் தானேநின்று
குணமாக அங்கிங் உம்மென்றேதான்
வாட்டமில்லா மனதாக நிலைம்நூர்மைந்தா
மார்க்கமுடன் தான்செபிக்க வரிசைகேளே. (௭௧)

வரிசையுட னகாரஞ் செபித்தாலமைந்தா
மார்க்கமுடன் சதாசிவத்தை மகிழ்ந்துகண்டால்
தெரிசனமாய் நின்றதொரு வாராதாரந்
சிவசிவா அருபமய மாகத்தோணும்
கரிசனமாய் ரூபமதைக் கண்ணிற்கண்டால்
கண்ணடங்காத் தெரிசனங்கள் காணலாகும்
புரிசமுடன் சதாசிவத்தில் மனதைவைத்து
புத்தியுட னுதினமும் பூசைபண்ணே. (௭௨)

பண்ணப்பா வாதார பூசைபண்ணி
பதியான முச்சுடரின் தியானங்கேளு
நண்ணப்பா புருவமதில் மனக்கண்சாற்றி
நாட்டமுடன் அங்கிலி ரங்கென்றேதான்
உன்னப்பா வாடவிழிக் கண்ணினின்று
வுத்தமனே நாற்றொட டுருவேசெய்தால்

கண்ணப்பா நான்குளிர மதிநீரின்று
காணுமடா பூரணச்சந் திரனைப்பாரே. (எங)

பாரப்பா பூரணச்சந் திரனைக்காணில்
பாதாதி கேசமுதல் பதிவாய்மைந்தா
நேரப்பா குளிர்ச்சிவெகு குளிர்ச்சியாகும்
நேமமுட னென்னேர நினைவாய்மைந்தா
கோரப்பா குருபதியிற் றிரமாய்நின்று
செகத்தோர்க்கு விபூதியைச் கடாக்ஷித்தாக்கால்
வீரப்பா கொண்டதொரு சரமுந்தீரும்
வினையான வல்வினையும் விட்டுப்போமே. (எச)

போமப்பா சகலபிணி ரோகமெல்லாம்
பூரணச்சந் திரனுடைய பிறப்பைக்கண்டால்
காமப்பால் கானற்பால் சுருணைக்குங்
கலையான வாசியது கடக்காதப்பா
சோமப்பால் சொலிக்குமடா விந்தப்பாலை
யந்தமுடனித்திபமுங் கொண்டாயாகில்
தாமப்பா தன்னிலேயே தான்தானாகுந்
தானான வாதார மூலம்பாரே. (எரு)

ஆச்சப்பா சோதிவெகு சந்திரமு
மாகமாம் வக்கேலி பதிவாய்நின்று
மூச்சப்பா நிறைந்ததொரு வாசியாலே
முனையான சுழிமுனையில் வாசிநாட்டி
பேச்சப்பா தானிறுத்தி மவுனமாக
பெருமையுடன் சிவயோகத் திருந்தாயாகில்
போச்சப்பா வயதிருத்தி யகன்றுபோகும்
பொன்னொளிவு தேககாந்தி யாச்சுபாரே. (எசு)

## ரவித்தியானம்.

பாரப்பா மூலமதில் மனக்கண்சாற்றி
பதிவான ரவியினிட தியானங்கேளு
நேரப்பா புருவநடு தீபம்பார்த்து
நிசமான அக்கினி உக்கிரமென்றாக்கால்



சாரப்பா பதிறைய வுருவிலேதான்
தன்னகமாய் நின்றதொரு ரவிதான்மைந்தா
மேரப்பா தான்துலங்க ரவிதான்மீறி
மெய்நிறைந்த காந்திவெகு தேகமாச்சே. (எஎ)

தேகமென்ற தேகமடா தேவரூபம்
திருவான ரூபமதை பூசைபண்ணி
பாகமுடன் விபூதியைச் தியானஞ்செய்து
பாருலகில் மானிடர்க்குக் கடாட்சித்தாக்கால்
ஆகமுடன் சகலசவு பாக்கியம்பெற்று
வருள்பெருக பூரணமா யிருந்துவாழ்வார்
யேகமென்ற பூரணத்தின் கிருபையாலே
யென்மகனே சுடரினுட தியானங்கேளே. (எஅ)

## சுடர்த்தியானம்.

கேளப்பா ரவிமதியைத் தியானம்பண்ணி
கிருபையுள்ள சுடரதிலே மனக்கண்சாற்றி
யாளப்பா அக்கினி நீங்கென்றேதா
வருள்பெருக நூற்றெட் டுருவேசெய்தால்
காலப்பா வலுவான ரவிமதிதன்னாலே
கருணைவளர் புருவநடு சுடரிலேதான்
வாளப்பா மனங்குவிந்து நிற்கும்போதில்
முகத்தான சோதிவெகு சோதியாச்சே. (எகூ)

சோதிமய மானசிவ சூக்ஷங்கண்டால்
சுகசீவப் பிராணனது வகலாதையா
ஆதியிலே முச்சுடராய் நின்றசூக்ஷ
மாறியப் போராக ளறிவானந்தம்
நீதியுட னறிவான போதம்பெற்று
நிசமான முச்சுடரைக் கண்டாயானால்
லோதியதோர் மந்திரகலை வாசியாலே
வுண்மையென்ற மந்திரக னெல்லாஞ்சித்தே. (அ௦)

## சண்முகத்தியானம்.

சித்தான முச்சுடரின் தியானஞ்சொன்னேன்
சிவாயகுரு சண்முகனார் திர்க்கத்தாலே
பத்தான தசைநிலைக்கு முத்திபெற்றுப்
பரமகுரு சண்முகனார் தியானங்கேளு
வித்தான சூக்ஷமடா சற்றேயில்லை
வேதமுடி வானதொரு விஞ்சைமூலஞ்
சத்தான விஞ்சையடா சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்கிலீ சிம்மென்றோதே. (௮௧)

ஓதியதோர் நாழிகையில் மைந்தாகேளு
வுண்மையுள்ள சண்முகனார் வடிவேல்கொண்டு
நீதியுடன் ககனத்தில் தானேநின்று
நினைந்தபடி னின்றுவினை யாகிப்பாரு
ஆதியுட னாதார சொரூபமாகி
யாறுமுக மானசெய லார்தான்காண்பார்
சோதியென்ற சொரூபமதி லாறுமுகமாகி
துலங்குதடா சுடரொளியைத் தாண்டிப்பாரே. (௮௨)

பாரப்பா சுடரொளியைக் கண்ணால் தாண்டி
பதிவான கடைக்கண்ணால் நடுக்கண்ணைப்பார்க்க
நேரப்பா நடுநிலையைக் கண்ணாறப்பார்க்க
நின்றுருபஞ் சோதிமய மாகத்தோணும்
தேரப்பா மனதறிவால் விபூதிவாங்கி
திருவான பதிநோக்கித் தியானம்பண்ணி
காரப்பா வுலகோர்க்கு கடாக்ஷத்தாலே
கருமவினை நீருடா கண்ணைப்பாரே. (௮௩)

சண்ணைப்பார் மனக்கண்ணால் தன்னைப்பாரு
கமலமென்ற சுழினையுட காலைப்பாரு
விண்ணைப்பார் காலறிந்து வுன்னைப்பாரு
வேதமய மாவசிவ யோகம்பாரு
பெண்ணைப்பார்த் தலையாதே தன்னைப்பாரு
பெலமான வாசிதிரு மூலம்பாரு



தன்னைப்பார் தன்னிலையே வாசிமூலஞ்
சதாமூல மானதே சரிதான்பாரே. (௮௪)

## வைரவத்தியானம்.

பாரப்பா வைரவனார் தியானங்கேளு
பரிவான வைரவனை யார்தான்காண்பார்
நேரப்பா வவருடைய நிலையைக்கேளு
நிலையான வாதார முடிமேலாக
காரப்பா உங்கிலி அங்கென்றோதிக்
கருத்துறவே மனதாக நின்றாயானால்
ஊரப்பா வூர்முழுதும் காவலான
வுண்மையென்ற வைரவனைக் காணலாமே. (௮௫)

காணலா மவருடைய மூலங்கேளு
கனகரத்தின மானசிறு குழந்தைபோலத்
தோணலாம் புருவநடு கமலந்தன்னிற்
சுகமாகச் சொரூபமிலே கண்டாயானால்
பேணலா மவர்பதத்தைத் தியானஞ்செய்து
பெருமையுடன் மானதமாம் பூசைசெய்தால்
பூணலாஞ் சகலவரங் கைக்குள்ளாகும்
பொற்கமல வைரவனைத் தியானம்பண்ணே. (௮௬)

## குருத்தியானம்.

பண்ணப்பா தியானமது குருத்தியானம்
பரமகுரு சீர்பாதந் தியானங்கேளு
வுண்ணப்பா கண்ணான மூலந்தன்னில்
முத்திகொண்ட வக்கினியாஞ் சுவாலைதன்னை
நண்ணப்பா வாசியினால் நன்றாயூதி
நடுமனையைப் பிடித்தேறி நேட்டமாக
விண்ணப்பா கேசரியாம் புருவமைய
மேன்மைபெறத் தானிருத்தி வசிவசியென்னே. (௮௭)

எண்ணியிரு நாற்றெட்டில் மைந்தாகேளு
யோகாந்த மானகுரு வின்பந்தன்னில்

பொன்னொளிபோ லருவுருவங் கண்ணிற்காணும்
புத்தியுட னவ்வேளை புருவமேவிற்
கண்ணொளிவுந் தன்னொளிவா யுன்னைநோக்கி
கருணையுடன் வசியென்றே கருத்திற்கொண்டு
தன்னொளிவு போலவேநீ யுருவேசெய்தால்
தாயான வாசியது தனதாங்காணே. (௮௮)

காணவே சத்திசிவ மந்தமாகும்
கருணைவள ரந்தமதைக் கருதக்கேளு
பேணவே சிவமென்றாற் சத்திமூலம்
பேரறிந்து வசியென்றால் வாசிமூலம்
பூணவே சத்திசிவம் வாசியாகிப்
பொருந்திநின்ற காரணத்தை யார்தான்காண்பார்
தோணவே குருமுறையாயக் காணவேணுந்
தொடுகுறிபோல் காணுதற்கு வகையைக்கேளே. (௮௯)

வகையான வகையேது வென்றுகேட்டால்
மார்க்கமுடன் சரியைவழி காணவேணும்
தகையாமல் சரியைவழி நடந்தாயானாற்
சிவசிவா கிரியையுட வழியேகாணும்
பகையாமல் கிரியைவழி நன்றாய்ப்பார்த்தாற்
பாலகனே யோகவழி பரிவாய்த்தோணும்
நகையாமல் யோகவழி தானேசென்றால்
நன்மையுடன் ஞானவழி காணலாமே. (௯௰)

## சரியை, கிரியை, யோக ஞானம்.

———*———

காணுதற்கு சரியைவழி யென்னவென்றாற்
கருணையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பூணுதற்கு நவ்வெழுத்தின் மேலேமைந்தா
புகழான மவ்வெழுத்தாற் சிகாரந்தோணும்
பேணுதற்கு மவ்வெழுத்தின் மேலேசென்று
பிலமாக வவ்வெழுத்தின் கீழதாகத்
தோணுதற்கு சிவாலயமும் நதியுமுண்டு
சுத்தமுட னந்திடத்தில் கண்டுதேறே. (௯௧)



கண்டுமனந் தேர்ந்தந்த நதியில்மூழ்கிக்
கமலமலர் சிவாலயத்தைப் பூசைபண்ணி
நின்றநிலை காணுக மாந்தரெல்லாம்
நீள்புவியில் சிவாலயங்கள் நதிகள்தேடி
சென்றுமிகத் தானலைந்து பாதவித்து
சிவனிலை யறியாமல் இளைத்துமாண்பர்
அண்டமெனு முடலுயிரை யறியாமற்று
னலைவார்கள் சரியைவழி யறியார்தானே. (௯௨)

தானென்ற திருக்கோவில் நதிகளல்ல
சங்கையுள்ள வேதமுதல் சாஸ்திரங்க
ளானென்ற மனுப்பிறந்து செய்தமாய்கை
வுறுதியுள்ள வம்மாய்கை யறிந்துதள்ளு
வானென்ற காதலித்து செயலறிந்து
மார்க்கமுள்ள மெஞ்ஞானத் தலைவரெல்லாங்
கோனென்ற கேசரியைப் பூசைபண்ணிக்
குறியறியான் சரியைவழிக் கூர்ந்தோர்தானே. (௯௩)

தானென்ற பூரகத்தின் கீழதாகச்
சடையான சிவாலயங்கள் நதிகளுண்டு
கோனென்ற அனுகதமாம் மயிர்பாலத்தப்பால்
கொண்டுநின்ற சிவாலயங்கள் நதிகளுண்டு
வானென்ற வாசிமலர் தலையிலிட்டு
மகத்தான சிவாலயத்தைப் பூசைபண்ணி
தேனென்ற வுடலுயிரை யறியாமற்றான்
திகைத்தபடி மாய்கையிலே திரிவார்பாரே. (௯௪)

பாரப்பா சரியைவழி முறைமைசொன்னேன்
பதிவான கிரியைவழி பகரக்கேளு
நேரப்பா முக்கோணந் தன்னிலேதான்
நிறைந்தவிதழ் பனிரெண்டின் மேலதாகச்
சேரப்பா வாயுவதாக் குள்ளதாகச்
சிவாலயத்திற் சிவனுமையுந் தீபம்போலே
காரப்பா கருவிழி மலர்க்கண்கொண்டு
கருணையுள்ள வாசிமலர் சொரிவாய்ச்சாற்றே. (௯௫)

சாற்றிநீ தொழுதக்கே நின்றுபாரு
சங்கையுள்ள பாவமெல்லாந் தானேதீரும்
போற்றியே வாதரைப் புதுமைகண்டு
பொருந்திநின்ற வாசியுட இரத்தைப்பெற்று
நேத்திரத்தின் சின்மயத்தைக் கண்டுபோற்றி
நினைவறியா மானிடர்கள் நேசந்தப்பி
ஆற்றுமத்தின் நிலைதனையே காணமற்று
வலைவார்கள் கிரியைவழி யறியார்பாரே. (௬௬)

பாரப்பா ஆரியமதின் கீழ்தானப்
பற்றிநின்ற சுடரொளியா மூலத்தன்னை
காரப்பா கணபதியைத் தொழுதுபோற்றிக்
கருணையுடன் வாசிமலர் சாத்திமைந்தா
நேரப்பா வவ்வாசி கொண்டுமேலே
நீயறிந்து பூரணமாய் நின்றுக்கொண்டு
சாரப்பா சார்புநிலை யறியாரெல்லாஞ்
சங்கையுட னதில்மூழ்கித் தயங்குவாரே. (௬௭)

தயங்குவார் நதிமூழ்கி நீர்தெளித்து
தன்மையுட னிறணிந்து ஸ்நானம்பண்ணி
மயங்குவா ரிருவிழியு மூடிக்கொண்டு
மணியெடுத்துத் தானுட்டி மதங்கள்பேசி
இயங்குவா ரக்கிரமம் பிடித்தேயந்த
சிவனிலை யறியாதத் திருடர்தானும்
மயங்குகின்ற வாதாரம் பாராமற்றுன்
நாடிகளிற் றுன்றிரிவார் மயங்குதன்னே. (௬௮)

தள்ளடா தனையறியா மூடர்தன்னை
தன்னிமனை யெறிமனந் சாந்தமாக
உள்ளடா யெட்டெழுத்துஞ் சிவமதாகு
முறுதியுள்ள விரண்டெழுத்துஞ் சத்தியாகும்
நில்லடா யெட்டிரண்டு மொன்றாய்நின்ற
நிலையான சிவாலயங்கள் நதிகள்தன்னை
யல்லடா வந்தனிலே காணுவரெல்லா
மலைவார்கள் கிரியைவழி யறியார்தானே. (௬௯)



தானென்ற கிரியைவழி சொன்னேன்மைந்தா
தன்மையுடன் யோகவழி சாற்றக்கேளு
கோனென்ற மிருகதிருஞ் சுழியிலேற்றி
குறியான நவக்கிரகந் தன்னைக்கண்டு
வானென்ற வனுக்கிரகந் தன்னைசென்று
மகத்தான சிதம்பரத்துக் கப்பால்நின்று
தேனென்ற கமலமலர்ப் பொய்கைதன்னில்
திருவான பொய்கையில்நீ ராடிக்காணே. (௭௦)

காணடா நீராடி சிவனைநீயுங்
கண்டுமன தூருதியினு லம்பரத்தில்
கோணடா பெருவாசற் சென்றுபுக்கிக்
குணமான சுழிமுனையில் பத்திக்கொண்டு
ஊண்டா வாசியினு லாராதார
மூடுருவ நிராதார மண்டமேவி
பேணடா வந்தனிலே தன்னில்நின்று
பிலமான ரவிமதியைத் தன்னுட்காணே. (௭௧)

காணப்பா சந்திரகலை பதினாறாகுங்
கருவான சூரியகலை பனிரெண்டாகும்
பேணவே யிருகதிரு மொன்றாய்நின்ற
பிலமான சூரியகலைப் பன்னிரண்டில்
தோணப்பா வுடலுக்குள் நின்றமிச்சந்
சொந்தமுடன் போனதெங்கே யிருந்ததெங்கே
பூணப்பா யிருந்தமிச்சம் நாலுந்தானும்
பொருந்திநின்ற பூரணமாய்க் கண்டுபாரே. (௭௨)

கண்டுபார் பூரணமே யென்றுபோற்றி
கருணைவளர் கலைநாலுங் காணமற்றுன்
தொண்டரெனப் பசியடங்கி விரதங்காத்துச்
சுழன்றுநின்ற வாசிதனை யடக்கிமைந்தா
நின்றனிலே காணமல் நதிகள்தேடி
தேடினதால் மலைகளெல்லாஞ் சுற்றிப்பார்த்து
ஓன்றுமிட மறியாமல் யோகஞ்செய்து
வுடலுயினைக் காணமலலைவார்பாரே. (௭௩)

பாரப்பா யோகவழி நன்றாய்ச்சொன்னேன்
பதிவான ஞானவழி பகரக்கேளு
காரப்பா வாதார மூலந்தன்னிற்
கனிவான வக்கினிதன் றாவிதன்னை
சேரப்பா முக்கோணச் சுடரில்நின்று
திருவாசி யானதொரு செங்கண்மேவி
சாரப்பா வந்தமனைச் சொந்தமென்று
சங்கையுடன் தானிருந்து தன்னைக்காணே. (௭௪)

காணப்பா மேல்வெளியைக் கண்டுகூடி
கருணையுட னவ்வெளியைக் கண்டுகூடி
பூணப்பா நிராதாரச் சித்தமாகிப்
பூரணமாய் நின்றபரி பூரணமேயாகி
தோணப்பா சிவனயன்மால் பூசைசெய்து
துடங்கினின்ற திவினைக ளென்றுமற்று
பேணப்பா ருசியற்று வாசையற்று
பேரண்ட சோதியுட சோதிதானே. (௭௫)

சோதியென்ற வைந்தெழுத்துந் தான்தானாகித்
துலங்குகின்ற சதானந்தந் தான்தானாகி
ஆதியென்ற மூன்றெழுத்துந் தான்தானாகி
யடங்கியொன்றாய் நின்றபொருள் தான்தானாகிச்
சாதியென்ற சமரசமுந் தான்தானாகிச்
சதாகோடி மந்திரமுந் தான்தானாகி
வேதியென்ற கெவுனமுத லஷ்டசித்தும
பேசாத மவுனமது தான்தானாமே. (௭௬)

ஆமப்பா வாதியந்த பொருள்தானென்று
மடங்கினின்ற பஞ்சகர்த்தா ளதுதானென்றுந்
தாமப்பா சத்திசிவந் தான்தானென்று
தன்மையுள்ள பஞ்சகர்த்தாள் தான்தானென்று
ஓமப்பா யேழுவகை யுலகமெல்லா
முறுநிகொண்டு தானாகத் தான்தானென்று
சோமப்பா னன்தானே வலன்தானென்றுஞ்
சோதிமய மாயிருப்பார் ஞானிதானே. (௭௭)



தானென்ற சரியைமுதல் ஞானஞ்சொன்னேன்
சமரசமாய்க் கண்டறிந்து தன்னைப்பாரு
ஊனென்ற வுடலுயிரைக் கண்டாயானா
லுண்மையென்ற சரியைமுதல் ஞானந்தோற்றுங்
கோனென்ற குருவருளா லமைந்தாரியுங்
குறிப்பறிந்து ஞானநிலை கூர்ந்துபார்க்க
வானென்ற சரியைமுதல் ஞானமட்டு
மார்க்கமுட னன்றாகச் சூக்ஷங்கேளே. (௭௮)

கேளப்பா வயன்மாலின் திரையறுத்து
கிருபையுள்ள ருத்திரன்றன் திரையைநீக்கி
யாளப்பா மயேசுரன்றன் திரையைத்தள்ளி
யதன்மேலே சதாசிவன்றன் திரையைச்சுட்டு
ஆளப்பா வைம்புலனைக் கட்டித்தள்ளிச்
சுகசீவப் பிராணமயத் தேதிருந்து
காலப்பா செவிவிழியுங் கடந்தப்பாலே
கருணையுடன் தானிருப்பார் ஞானிதானே. (௭௯)

தானென்ற முப்பாழில் மும்மலமும்நீக்கித்
தற்பரத்துக் கப்பால்மயிர்ப் பாலமீதில்
வானென்ற நெருப்பாறுக் கப்பாற்சென்று
மகத்தான பரவெளியில் மனதொடுங்கி
கோனென்ற வெளியொளியில் தானேதானாய்க்
குவித்திருந்து சிவயோக ஞானந்தானாய்
ஊனென்ற வாதியந்தந் தானேதானா
யுகந்திருப்பார் சிவஞான முணர்ந்தோர்காணே. (௮௰)

## ஆதியந்தவிளக்கம்.

காணவே சிவஞான முணர்ந்தோர்தானுங்
கருணையுள்ள மாதவத்தோர் பெருமைதானும்
பேணவே தூலமதைச் சூக்ஷமாக்கிப்
பிலமான சூக்ஷமதுக் காரணமாய்நின்று
தோணவே வாதியந்த மொன்றாய்நின்று
துலங்குகின்ற சுடரொளியிற் சோதியாகிப்

பேணவே பூமியில்வந் தவதரிப்பார்
பிறந்தாலுஞ் சிவயோகி யாவார்பாரே. (௫௰௧)

பாராரு மெக்கியமா முனியேயையா
பரிவான ரிஷிமுனிவர் சித்தரெல்லாம்
நேராக நின்றுதவம் பெற்றபேரை
நீள்புவியிற் பிறந்திவரா மென்றுவாக்கியம்
பேராகச் சொல்லிமனக் கசடுநீக்கிப்
பிறவாத நெறிகாட்டி வயிரமீந்து
மாறாத வடிமையென்டத் தாருமென்று
மார்க்கமுட னவர்பதத்தில் வணங்கினேனே. (௫௰௨)

வணங்கிமிக விற்கையிலே வேறியோது
மகத்தான வாதியந்த வரலார்தன்னை
மனங்குவிய வெந்தனுக்குச் சொன்னாரப்பா
மகத்தான ரகஸ்யமடா ஞானமார்க்க
மிணங்கியதோ ரந்தரங்க மானரூபந்த
மேகாந்த ரூகூதமென்ற கதையைக்கேளு
குணங்குவியு மாதியந்தக் குறியைநன்றாய்க்
கூர்மையுடன் சொல்லுகிறேன் குணமாய்க்கேளே. (௫௰௩)

கேளப்பா நான்முகன்மா லிந்திராதிதேவர்
கெடியான வேதமுதல் சமயத்தோருந்
தேரப்பா தேடியறி யாதவஸ்து
தெளிவான வெளியதுதான் பரமதாகும்
கேளப்பா பரமான வஸ்துதன்னைக்
கிருபையுட னறிவதுவே யாதியந்தங்
கோளப்பா வாதியந்தவஸ்து மனுபடைத்த
கெதியையறிக வறிவதுவே விளக்கந்தானே. (௫௰௪)

தானென்ற வாதியந்த விளக்கந்தன்னைச்
சங்கையுடன் சொல்லுகிறேன் தயவாய்க்கேளு
வானென்ற வுலகமதில் மைந்தாமைந்தா
மகத்தான வெழுவகையின் தோற்றந்தானுங்
கோனென்ற ஜகமதிலே பிறக்குமுன்னே
குருவான பரமிருந்த குறியையமைந்தா



னென்ற திருமுடியு மடியுந்தன்னை
யுத்தமனே சொல்லுகிறே னுறுதிகேளே. (௫௰௫)

கேளப்பா புலத்தியனே நன்றாய்க்கேளு
கிருபையுட னுலகமது ஜனிக்குமுன்னே
காலப்பா பரமிருந்த கருணைதன்னைக்
காரணமாய்க் குருவருளாற் கருதக்கேளு
ஆளப்பா குருபதந்தான் விஸ்வரூப
மவருடைய வடிவுவொளி யடிபாதாளம்
வாளப்பா முடியதுதா னண்டத்துச்சி
மகத்தான பரசொரூப வடிவுதானே. (௫௰௬)

காணவே வுச்சிமுடி தன்னைமைந்தா
கருவான பிருமனுமே தேடித்தேடி
தோணவே காணாமல் வந்தாரப்பா
சுகமான மாலதுவு மேனமாகிப்
பூணவே பூமிபா தாளஞ்சென்று
புத்தியுடன் வைத்தவடிக் காணமற்றான்
பேணவே மாலயனுந் தேடித்தேடிப்
பெருகிநின்ற வடிமுடியுங் காணார்பாரே. (௫௰௭)

## உலகம்படைத்தவரலாறு.

பாரப்பா வடிமுடியுந் தேடிப்போன
பரிவான மாலயனுங் காணாரென்று
நேரப்பா வேதமுறைத் திட்டசெய்தி
நீள்புவியி லியாவர்களு முறைசெய்வார்க
ளாரப்பா வறிவார்கள் பரசொரூப
மந்தரங்க மானசிவ ரூபாரூபங்
காரப்பா குருவருளால் தெரிந்தமட்டுங்
கருணையுடன் சொல்லுகிறே னென்றுதானே. (௫௰௮)

என்றுமுள்ள ரடிமுடியே வாதியந்த
மேகமவர் வடிவுவெளி யடிபாதாள
மன்றுகதிர் சந்திரனு மில்லாக்கால
மதிருபிடி யின்மேக மில்லாக்காலங்

குன்றுசெடி வான்பெண்ணு மில்லாக்காலங்
கூறப்ந்ர பூதநெறி யில்லாக்கால
பொன்றனவே நிறைந்தபரம் நின்றவாறு
மொருவரறியாதசெய லுண்மைகாணே. (௱௰௯)

காணவே வேதநெறி யில்லாதகாலங்
கருவான சாஸ்திரமா யில்லாக்காலம்
பூணவே யுபதேச மில்லாக்காலம்
புண்ணியபா வங்களிரண்டு மில்லாக்காலம்
பேணவே குலநெறிக ளில்லாக்காலம்
பெருகிநின்ற மந்திரங்க ளில்லாக்காலந்
தோணவே சொன்னதெல்லா முண்டாய்நின்ற
சூக்ஷுமதைச் சொல்லுகிறே னுகமாய்க்கேளே. (௱௨௰)

கேளப்பா பராபரமாய் நின்றசோதி
கிருபையுடன் சிவன்படைக்க நினைந்தபோது
மாளப்பா வல்லபரந் தன்னிலேதான்
வளமான சிவமதுதா னுண்டாச்சப்பா
மேலப்பா சிவமதிலே சத்தியுண்டாய்
விளங்கிநின்ற சத்தியிலே மைந்தாகேளு
ளாளப்பா சதாசிவந்தான் றுலங்கிநின்ற
சொம்பெரிய சதாசிவத்தின் மயேசுரந்தானே. (௱௨௰௧)

தானான மயேஸ்வரத்தி லுருத்திரன்றான்
சங்கையுள்ள ருத்திரனிற் றிருமாற்றோன்றி
கோனான திருமாலி லயனார்தோன்றிக்
குவித்தெழுந்த வெழுவருந்தான் கூர்மையாக
வானான பராபரத்தை யறியமாட்டார்
மகத்தான பரந்தானே பராபரமாய்நிற்குந்
தேனான பரமசிவ னதிகாரத்தைத்
தீர்க்கமுட னனுக்கிரகஞ் செய்தான்பாரே. (௱௨௰௨)

பாரப்பா வனுக்கிரகஞ் செய்தாலல்ல
பரமான பராபரந்தா னெங்குந்தானாய்
நேரப்பா நின்றபரஞ் சோதியாகி
நிறைந்ததொரு சோதியதாய் நின்றபோது



சாரப்பா முன்னுதித்த வெழுவர்தானுஞ்
சங்கையுட னவர்கள்செய்யு முறைமைதன்னை
யாரப்பா வறிவார்கள் புலத்தியரே
னாதிதொடுத் தத்துவங்க ளறிந்துகாணே. (௱௨௰௩)

காணவே பரமசிவன் வானுண்டாக்கக்
கருணையுள்ளத் திருமாலைக் கண்ணால்மேவி
பூணவே சதாசிவத்தைப் பார்க்கும்போது
புத்தியுடன் பேரண்டம் படைத்துநின்று
றூணவே மயேசுரனைப் பார்க்கவேதா
ஞமிரியிடி வாய்வுதனைப் படைத்துநின்றார்
தோணவே ருத்திரனைக் கண்ணாற்பார்க்கத்
தாலக்குமின்ன லக்கினியும் படைத்தார்பாரே. (௱௨௰௪)

பாரான திருமாலைப் பார்க்கும்போது
பதிவான கண்டமேகம் படைத்துநின்றார்
ஆரான பிரம்மனையும் நோக்கும்போது
வளவற்ற பூமிதனைப் படைத்துநின்றார்
நேரான சத்திதனைக் கண்ணால்மேவி
நிஜமான சூரியனைப் படைத்துநின்றார்
போரான சிவமதுவும் பதியாய்நின்ற
பெருமையுட னெழுவரதி காரங்காணே. (௱௨௰௫)

காணவே யண்டாவி லதுதான்மைந்தா
காசினியி லன்புடையோ ரனேகஞ்சொல்வார்
தோணவே கண்டபடி யண்டந்தன்னில்
தொகுத்துவாக்க யாட்டார்கள் சுணங்கச்சாதி
பேணவே யண்டமதில் மனுவுண்டாக்கும்
பெருமைதனைக் குருவருளாற் பேசவேன்கேள்
பூணவே மேலேழு லோகந்தன்னை
புத்தியுடன் விதம்விதமாய்ப் படைத்தார்கேளே. (௱௨௰௬)

கேளப்பா லோகமதைப் படைத்தபின்பு
கிருபையுடன் பரமசிவன் மனுவுண்டாக்க
கேளப்பா சத்திதனை வரவழைத்துக்
கெணிதமுடன் மனுப்படைக்கக் கிருபைசெய்தார்

கேளப்பா பராபரையாள் கிருபைபெற்றுக்
 கெணிதமுடன் சதாசிவத்துக் குபதேசித்தாள்
கேளப்பா சதாசிவனுங் கிருபைபெற்றுக்
 கெதியுடைய மயேசுபரருக் கீய்ந்தார்பாரே. (௱உஎ)

பாரான மயேசுரந்தான் ருத்திரருக்கீந்தார்
 பதிவான ருத்திரனு மாலுக்கீந்தார்
நேரான மாலதுவும் அயனுக்கீந்தார்
 நிசமான வயனரும் நிலையைப்பெற்று
பேரான கருணையினால் மனுப்படைக்கப்
 பெருமையுட னுதிபந்தம் நடுவில்நின்று
மாராத காலறிந்து மவுனங்கொண்டு
 மனுப்படைக்க வினைத்துநின்று ரயனார்தானே. (௱உஅ)

அயன்முதற்கொண் டைவருட லுயிருஞ்சத்தி
 யாதியந்த சிவனரு முயிர்க்குயிராய்நின்று
தயவுபெற வெடுத்துவுயி ராண்பெண்கோடிச்
 சங்கையில்லா மூப்பிளமை சாக்காடன்றி
ஜயம்பெறவே வொருகோடி காலம்வாழ்ந்து
 தீர்க்கமுட னிருக்கையிலே மைந்தாகேளு
நயம்பெறவே சிவனுமையை நோக்கிமைந்தா
 நமைவணங்க வனுக்கிரகஞ் செய்யென்றாரே. (௱உகூ)

செய்யென்ற சொன்னமொழி யுமையுங்கேட்டுச்
 சிந்தைமன தொன்றாகச் சிவனைநோக்கி
மெய்யென்ற வித்துவகைத் தானுண்டாக்கி
 மேதினியி லுயிர்பயிர்கள் மேன்மையாக
மையென்ற திருமால்தான் மேகந்தன்னை
 மார்க்கமுட னினைக்கையிலே மைந்தாகேளு
பையென்ற முகிலதனு லமுர்தமுண்டாய்ப்
 பார்தனிலே சகலவித்துப் பதிவதாச்சே. (௱௩௰)

ஆச்சப்பா சென்னல்பதி னெட்டுவித்து
 வப்போதே வுண்டாச்சு வதின்மேல்மைந்தா
நீச்சப்பா வன்னமறு சுவையைக்கண்டு
 நிசமான மனுநீதி நேர்மையாக



பேச்சப்பா சகலசித்துந் தானுண்டாச்சுப்
 பெருகுகின்ற வாசைவெகு பேசமாச்சு
மூச்சப்பா வாசியது முன்பின்னாச்சு
 முழுங்கினின்ற ஜகமதுவுங் கலக்கமாச்சே. (௱௩௧)

கலங்கினின்ற லோகமதுக் குறிப்பாகக்
 கருணையுள்ள விஷ்ணுமுனிக் கருத்தைவைத்து
யிலங்கினின்ற வெட்டிரண்டு மொன்றாய்க்கட்டி
 யேகமென்ற வைந்தெழுத்தால் வேதமாக்கித்
துலங்கினின்ற மனுவைவொரு நான்குஜாதிச்
 சுத்தமுடன்தான்வகுத்துச் சுகமாய்மைந்தா
விளங்கினின்ற க்ஷத்திரிய வம்மிஷத்தில்
 விபரமுள்ள காசமுனி விபரங்கேளே. (௱௩௨)

கேளடா காசமுனி வுலகுக்கையா
 கிருபையுடன் பாஷைபதி னெட்டுஞ்சொன்னார்
வாளடா ராஜமுனி தர்க்கசாஸ்திரம்
 மகத்தான வேதாந்த சிப்பிசாஸ்திரங்
காலடா ஞானறிய மதனசாஸ்திரங்
 கலந்தமது மோசமதாய நன்மைதன்மை
யாளடா வறுதனையு மயிர்தங்காட்டி
 வங்கமுட னன்னமதாற் சார்ந்தார்தானே. (௱௩௩)

தானென்ற வன்மைதால் நித்திரையுண்டாய்ச்
 சங்கையுட னனுபோகமும் பிரமையுண்டாய்
வானென்ற வேகமுட னாசையுண்டாய்
 வஞ்சகமும் பிரப்பிறப்புக் தானுமுண்டாய்
தேனென்ற பலகோவில் கறிகளுமுண்டாய்ச்
 செகராஜ மகுடபதி வர்க்கமுண்டாய்க்
கோனென்ற வொப்பனைகள் நன்றாய்ச்செய்து
 குறிப்புடனே நான்முகூர்த்தஞ் செய்தார்பாரே. (௱௩௪)

பாரான மறையோர்கள் வேள்விசெய்யப்
 பதிவான விஷ்ணுமுனி வந்துதோன்றிச்
சீராக வரஞ்சேரு மென்றுசொன்னார்
 ஜெகத்திலது சுருதிமறை யாகவேதான்

நேராக நாள்முகூர்த்தம் கன்றாய்ச்சொல்ல
  நீதியுட னெந்தன்சொல் மேலதாகப்
போராக வந்தரந்தி லாருங்காணப்
  பெருமையுள்ள சோதிதனைப் பேசுங்காணே. (௱௧௫)

காணவே விஷ்ணுமுனி பிரம்மனைத்தான்
  கருதவையன் வந்துதித்தன் கேதுசொல்வார்
பூணவே யசுபதியோ டிருபத்தேழும்
  பொருந்துதவக் கிரகமது தானுண்டாக்கத்
தோணவே விளம்பினபின் மாதுதானுந்
  சொரூபமுள்ள சதாசிவ மகேசுரன்தானும்
பேணவே ருத்திரனு மாலுந்தானும்
  பெருமையுடன் பரணிதனைக்க வந்தார்தானே. (௱௧௬)

தானென்ற மாதுனையக்கிப் பிரமன்சொல்லச்
  சந்திரனுஞ் சூரியனுந் தானேயாகிற்
பானென்ற சதாசிவந்தான் ராஜாவானார்
  மகத்தான மகேசுரனுஞ் சனியுமானார்
ருவென்ற ருத்திரனுஞ்சங் கரனுமான
  ருண்மையுள்ள மாலதுவும் புதனுமானார்
மாலென்ற வபன்சுக்கிர வடிவுமானார்
  மகத்தான ராகுடனே கேதுதானே. (௱௧௭)

காணவே விஷ்ணுவைத்தா னுமையும்பார்க்கக்
  கருவான ராகுடனே கேதுமானார்
தோணவே சோதிரிஷி நாலுமுண்டாந்
  துலங்குகின்ற வமாவாசை திதிநாள்கரணம்
பேணவே நவசித்தாற் கிரகமாகி
  பேருலகில் நிறைந்தபின்பு பிழைப்பதற்குப்
பூணவே நக்ஷத்திர ராசியோகம்
  பொன்னுலகுண் டானதின்பின் னுண்டாம்பாரே. (௱௧௮)

பாரான பார்தனிலே மனுவுண்டாக்கிப்
  பதிவாக வந்தபின் பனேகசாஸ்திரம்
நேரான சாஸ்திரங்கள் சூஸ்திரங்கள்
  நேர்மையுள்ள ரிஷிமுனிவர் சித்தரெல்லாம்



மேரான கி[illegible]னிலே தபசுபண்ணி
  வெகு[illegible]டி காலம்வரை யோகஞ்செய்து
போத[illegible]வெளியோடே வெளியாய்ச்சேர்ந்தார்
  [illegible]லமான காலயுகம் பேசக்கேளே. (௱௧௯)

## யுகம் பதினெட்டுமறிய.

சேளடா புலத்தியனே மைந்தாநீயுங்
  கெணிதமுள்ள யுகமதுதான் பதினெட்டப்பா
ஆளடா வரியினுக மீரேழுகோடி
  வற்புதனார் யுகமதுதா னிரைந்துகோடி
வாளடா தன்மயுக மீராறுகோடி
  மகத்தான ராசியுக மீரெட்டுகோடி
காலடா யுகமெல்லாஞ் சொல்லுவோமேன்
  களமான வீராச னூலிந்துதானே. (௱௨௰)

தானென்ற விண்ணதனி லீரெட்டுகோடி
  தருவான வாய்தனக்குயுக மேழுகோடி
மானென்ற மைனயுக மிருமூன்றுகோடி
  மகத்தான மணிகள்யுக மிருமூன்றுகோடி
பானென்ற பணியிரத னன்குகோடி
  பதிவான விஸ்வாசன்யுக மூன்றுகோடி
வானென்ற வாய்தன்யுக மொருகோடியாகு
  மார்க்கமுடன் திரேதாயுகந் தன்னைப்பாரே. (௱௨௧)

பாரடா திரேதாயுக மதனைக்கேளு
  பதினேழு லக்ஷத்தோன் பதினாயிரமா
மேரடா கிரேதாயுக மதனைக்கேளு
  விருபது லக்ஷத்தோன் பதினாயிரமாந்
தேரடா துவாபரயுக மதனைக்கேளு
  தீர்க்கமுட னெண்பதுலக்ஷத் தொன்பதினாயிரமான்
காரடா கலியுகம்வெகு கடினமைந்தா
  கண்டபோர் நாலுலக்ஷத்தா முப்பதினாயிரமாம். (௱௨௨)

## சதுர்யுகம்.

ஆமப்பா யிந்தயுகம் பதினெட்டுமைந்தா
வப்பனே கூடியொரு சதுர்யுகமுமாகுந்
தாமப்பா சதுர்யுகம் பதினெட்டுச்சென்றால்
தயவான யிந்திரனுக் கொருநாளாகும்
ஓமப்பா வந்தநா ளாறைந்துகூடி
யுத்தமனே சொல்லுகிறே னொருமாதமாகும்
போமப்பா வம்மாதம் பனிரண்டுகூடி
புத்தியுடன் வருடமெனப் புகழ்ந்தகாணே. (௱௪௩)

காணப்பா வவ்வருஷ மறுபதுதான்கூடிற்
கருவான வாண்டியுக மென்பார்மேலோர்
பூணப்பா வாண்டியுகம் பதினெட்டுசென்றால்
பொங்குகடல் பிரளயமாய்க் கண்டுபாரு
வேளப்பா பிரளயமும் நூறாயிரமுமானால்
பெரிதான நாள்பெருக்கம் பேணிப்பாரே
தோணப்பா வப்பெருக்கு மீரெட்டுசென்றாற்
சுகமான யிந்திரர்க்குப் பூரணமாம்பாரே. (௱௪௪)

பாரடா சுகமாக வந்தநாள்மைந்தா
பதிவாக யேழாயிரங் கோடிமீண்டால்
சேரடா வகோரமுனிக் கிருவருமையா
நிசமாக வந்தநாள் யெண்கோடிசென்றாற்
சாரடா நாதமுனி பூரணமுமாவார்
சங்கையுட னந்தநாள் கோடிசென்றாற்
போரடா விஷ்ணுமுனி பரமபதமாவார்
பிலமான வந்தநாள் பதின்கோடிதானே. (௱௪௫)

காணவே பதின்கோடி செல்லும்போது
காசிமா முனியவருங் கயிலாசமாவார்
பூணவே வந்தநா ளெண்கோடிமீண்டால்
புகழான மாமுனிக்கி யிடமேயாகும்
தோணவே வந்தநாள் நவகோடிமீண்டால்
அகமான யீஸ்வரமுனியும் பிரம்மாவாவார்
பேணவே யந்தநாளேழு கோடிசென்றாற்
பிலமான யெண்கோணமுனி தனக்குக்கேளே. (௱௪௬)



கேளடா யெண்கோண முனியுமைந்தா
கிருபையுடன் கிமைநிறந் திடும்போதையா
சூளடா அவர்தானும் பூரணமேயாவார்
சுகமாக வந்தநாள் நவகோடிசென்று
ளாளடா வக்கினிமா முனிதான்மைந்தா
வரகார பரமபத பாகஞ்சேர்வார்
பாளடா வந்தநா ளெண்கோடிமீண்டால்
பார்த்துமா முனியவரும் பரமபதமாமே. (௱௪௭)

ஆமப்பா வந்தநாள் பதின்கோடிமீண்டா
லருமையுள்ள ரோமரிஷிக் கொருரோமமுதிருந்
தாமடா ரோமமது மூன்றரையாங்கோடி
சரியாக வுதிருமப்போ வவர்மரணமாவார்
நாமடா வந்தநாள் மூவிரட்டியானால்
நலமான பிரமமுனியவர்க்குப் பூசைவேளை
ஓமடா சிவபூசை யெழுநூறுமீண்டா
லுள்ளமுனி ரிஷிகளுக்கு வொருநாளுமாமே. (௱௪௮)

அந்தநா ளேழாயிரங் கோடிமீண்டா
லானதொரு ரிஷிமுனிவர் பிறந்திடுவாரப்பா
யிந்தநாள் பதினாயிரங் கோடிமீண்டா
லிதமான மால்தனக் கொருநாளாகும்
பந்தமுடன் கொண்டநாள் முப்பத்தொருமாதம்
பதிவான மாதமீராறு வொருவருஷம்
சொந்தமுடன் வருஷமது அறுபதுமேயானால்
சுகமாகக் கண்டுகொள்ள வாண்டுகளுமாமே. (௱௪௯)

ஆண்டுகளு மீரொன்ப தாகில்மைந்தா
வாவசலப் பிரளய மெழுநூறுமீண்டாற்
கண்டயுகப் பிரளயமு மெழுநூறுமீண்டால்
கலங்குமகா பிரளயம் நூறுதான்மீண்டால்
தோண்டுமொரு பூதசங்கார மெனலாகுஞ்
சுகபூத சங்கார மொருகோடிமீண்டால்
தாண்டிவரும் போதுவந்த சங்காரந்தான்
தருவான சங்காரமொரு மூன்றுமாமே. (௱௫௰)

ஆமென்ற சங்கார மாகிவருங்காலமறிய
திருமா லயனு மாலிலைமேற்பள்ளி
ஓமென்ற சயனமது வொருகோடிமிண்டா
வுத்தமனே சாகமதில் நித்திரையுமாவார்
தாமென்ற நித்திரை முத்திரைமேலாகி
தன்னொளிவு விண்ணொளிவு சரியாய்ப்பார்த்து
நாமென்று மிவரென்று நினையாமலந்த
நாதாந்த பூரணத்திற் பூரணமானாரே. (௧௫௧)

பூரணமாய் நின்றதொரு ரிஷிமுனிவர்தேவர்
பொருந்திநின்று வாதாரம் நன்றாய்ப்பார்த்து
காரணமாய்க் கருணைபொளி பார்வையாலே
கனயோக மானசிவ னிஷ்டைகூடி
பாரணிந்த பூமிதனி லனந்தங்கோடி
பத்தியுடன் தானிருந்து பரத்திற்செல்ல
நேரணிந்து னிலைபதிந்து நிலையில்நின்று
நிசமான பூரணக்கண் டேறினாரே. (௧௫௨)

யேறியே பூரணத்திற் செல்லும்போது
யென்னசொல்வேன் பிரிதிவியைப் பிரம்மனுக்குத்
தேரியே யாய்வுதனை மயேஸ்வரற்குத் தத்தந்
சிவசிவா வாசாசந் தன்னைமைந்தா
வாரியே யண்டமெல்லாந் தத்தஞ்செய்து
மைந்தனே சகலமுமே சொன்னேன்பாரு
கூரியே சதாசிவற்குத் தத்தம்பண்ணி
கொண்டபின்பு வறிவுபூ ரணத்தைக்கேளே. (௧௫௩)

கேளப்பா ரவிதனையே சூரியர்க்குத்தத்தம்
இருமையுள்ள மதிதனையே சந்திரற்குத்தத்தம்
வாளப்பா சூடான சோதிதனைமைந்தா
மகத்தான செகச்சோதி யிடமேசென்று
சூளப்பா யெங்குனிரை பரத்தோடொப்பாய்த்
துலங்குதடா நட்சத்திரஞ் சோதிபோலே
காலப்பா தனையறிந்த பேருக்கெல்லாங்
கடாக்ஷமு டன் பராபரத்திற் கலந்தார்பாரே. (௧௫௪)



பாரப்பா வுலகமெல்லாம் பரத்திலுட்கூத்து
பரிவாரங் கூத்தனுவும் வாசிநேர்மை
நேரப்பா வாசியது வன்னியுடன்கூடி
நிசமான பூதவகை யைந்துண்டாச்சு
பேரப்பா யைந்துவகை பூதத்தாலே
பெருகிநின்ற தத்துவங்கள் தொண்ணூற்றாறாய்
வீரப்பா கொண்டதெடந் தான்தானாக
வேதாந்த முறைமைநெறி யொன்றுமேகேளே. (௧௫௫)

(ஒன்றானபொருள்.)

ஒன்றான பொருளறிந்து வொன்றைக்கேளு
வுத்தமனே நலமான யுத்திகொண்டு
நின்றுமிம் வாசிதனில் மனக்கண்சாற்றி
நிசமான சரியையொடு கிரியையோகம்
பண்டான ஞானமொடு நாலுமைந்தா
பார்த்தவர்க்குக் கெதிமோக்ஷம் பலனுண்டாகு
மண்டமே சரிமாது தன்னாலந்த
வாதியென்ற சரியைவழி யறிந்துபாரே. (௧௫௬)

பாரப்பா சரியைவழி யகாரதிசை
பாலகனே தேகசுத்தி வனுஷ்டானங்கள்
காரப்பா கிரியைவழி வுகாரதிசை
கருவான சிவலிங்க சத்திபூசை
சாரப்பா யோகவழி மகாரதிசை
சகலகலை காலறிந்து தன்னைக்காண
நேரப்பா ஞானவழி பூரணமாந்திசை
நிராதார சொரூபநிலை தீபமாச்சே. (௧௫௭)

சாலோக சாமீப பதவி.

ஆச்சப்பா சரியைவழி நடந்தோர்க்கப்பா
வப்போதே சாலோக பதவியாகும்
பேச்சப்பா கிரியைவழி நடந்தோர்க்கப்பா
பெருமையுடன் சாரூப பதமேயாகும்
நீச்சப்பா யோகவழி நடந்தோர்க்கையா
நிசமாக சாரூப பதவியாகும்
மூச்சப்பா ஞானவழி வந்தோர்க்கையா
முத்தியுள்ள சாயுச்சிய பதவிதானே. (௧௫௮)

நாவென்ற சாலோக பதவிசேர்ந்தாற்
சகலசவு பாக்கியபதி தானேயாவான்
ஙவென்ற சாமீப பதவிசேர்ந்தா
லுலகுதனில் சராசரங்க ளோகஞ்செய்வார்
கோவென்ற சாரூப பதவிசேர்ந்தாற்
குவலயத்திற் சிவயோக ஞானியாவான்
வாவென்ற சாயுச்சிய பதவிசேர்ந்தால்
மகத்தான வெளியோடே வெளியாவானே. (கஙகூ)

வானான வெளியோடே வெளியாய்நின்று
மகத்தான நாற்பதமும் வகையாய்ப்பெற்று
ஊனான பஞ்சகர்த்தா நிலையும்பெற்று
வுகாரத்தவரை நிருநடன முண்மைகண்டு
கோனான குருபதத்தில் மனதொடுங்கி
குறியான பூரணமாய்ச் சேர்ந்தோர்க்கப்பா
தானான சமாதியுட னுண்மைகேளு
தன்மையுட னாற்பதமு மொன்றதாமே. (கசய)

தாமென்ற சரியைவழி நடந்தாலென்ன
தன்னறிவாய்க் கிரியைவழி நடந்தாலென்ன
வோமென்ற யோகவெளி நடந்தாலென்ன
வுத்தமனே ஞானமதி லுறைந்தாலென்ன
ஆமென்ற பூரணமே தாமென்றெண்ணி
வனுபான தமர்வாச லதிலேசென்று
நாமென்ற வைந்தெழுத்தி லிரண்டைப்பற்றி
நாதாந்த வெளியொளியில் நாடினோரே. (கசக)

## சமாதியளவு.

நாட்டமுடன் பூரணத்தில் நாடினோர்க்கு
நாதாந்த சமாதியுட னுண்மைகேளு
தேட்டமுட னெவ்விடமே யானாலென்ன
சிவசிவா வந்நிடத்தில் செம்மைபண்ணி
வாட்டமுடன் பத்தடியிற் சதுரமாக
மைந்தனே ரெண்டுமுழ வாழஞ்செய்து
ஆட்டமுட னதின்கீழே ஆறடியில்மைந்தா
அப்பனே முச்சாணி லாழம்பண்ணே. (கசஉ)



பண்ணப்பா வதின்கீழே நாலடியில்மைந்தா
பதிவான வாழமது வெண்சாணிளம்
நண்ணப்பா நிதானமதாய் நன்றாய்ச்செய்து
நலமான கிரகமதிற் பிரவேசிக்க
வுண்ணப்பா கற்பொடியுஞ் செங்கல்தானு
முத்தமனே திருநீறு மூன்றுமொன்றாய்
மூன்னப்பா செய்துகொண்டு பதனம்பண்ணி
முத்திசா மாவதற்கு முறைமைகேளே. (கசங)

கேளப்பா பாலுடனே யிளநீர்விட்டுக்
கிருபையுடன் தண்ணீருந் தேனுங்கூட்டி
குளடா வபிஷேகம் நன்றாய்ச்செய்து
சுத்தமுடன் மேல்துவட்டிச் சமமாய்மைந்தா
ஆளடா வவரைதனக்குப் பட்டுவஸ்திர
மன்பாகத் தானணிந்து வதின்மேற்சேரு
மேலடா பாதாதி கேசமட்டு
மேன்மையுடன் விபூதிதூ ளிதமேசெய்யே. (கசச)

செய்யடா விபூதிதூ ளிதமேசெய்து
திருவான புருவமதில் திலதப்பொட்டு
மெய்யடா தங்கமதாற் பட்டஞ்செய்து
மேன்மைபெற வைந்தெழுத்தை யதிலேமாறி
மையடா நெற்றிதனிற் பட்டங்கட்டிப்
பாங்குபெறச் சுகந்தமலர் மாலைசாற்றி
வையடா வமுதுகனி வர்க்கமுன்னே
வைத்தபின்பு தூபமொடு தீபங்காட்டே. (கசரு)

காட்டடா தூபமொடு தீபங்காட்டி
கருணையுடன் ரதமதின்மேற் கடாக்ஷஞ்செய்து
காட்டடா மணியோசை சங்கினோசை
நலமான ஜெயகண்டி மேளவாத்தியம்
மூட்டடா சகலவொலி நாதத்தோடே
முக்கியமாய் ரதமதனை நடத்திக்கொண்டு
கூட்டடா சமாதியுட வாசற்சென்று
சுகமாகக் கிரகப்பிர வேசம்பண்ணே. (கசசா)

பண்ணப்பா சிரசுமென்ற சமாதிக்குள்ளே
பதிவான மந்திரமென்ற பெஞ்சாண்தன்னில்
நண்ணப்பா நூறாமதாம் சுத்தி பண்ணி
நாட்டமுடன் ஓயும்கிலியும் சிவயநமாவென்று
கண்ணப்பா யிசான்னியம் பார்வையாகக்
கருணையுடன் தானிருத்திக் கனிவாய்மைந்தா
முன்னப்பா செப்புவைத்த முத்தூள்தன்னை
முக்கியமுடன் சிவசிவென் றெடுத்திடாயே. (கசுஎ)

யெடுத்துநன்றாய்ப் பாதாதி கேசமட்டும்
யின்பமுடன் தான்றுளை கெட்டிசெய்து
அடுத்துமிக பாதமுதல் பருவமட்டும்
அளவாக பொடியிட்டு வமிழ்த்திமைந்தா
தொடுத்துமிகப் புருவமுத லுச்சிமட்டும்
சொல்லுகிறேன் விபூதியில்கற் பூரஞ்சேர்த்து
கொட்டிமிக வமிழ்த்தினன்றாய்த் தூபதீபங்
குருவாழ்க மூர்த்திகர மாவாவென்றுன். (கசுஅ)

யெண்ணியே வைட்டெழுத்தை வுச்சரித்து
யின்பமுடன் மணல்பரப்பித் திரணைபோட்டு
வுண்ணியே திரணைநடு லிங்கமிட
முத்தமனே தான்வகுத்து வுறுதியாகப்
புண்ணியனே சுகந்தமல ரர்ச்சனைகள்செய்து
புத்தியுடன் சகலரச வர்க்கம்வைத்து
வன்னியென்ற ருத்திரனைத் தியானம்பண்ணி
மார்க்கமுடன் மானதமாம் பூசைசெய்யே. (கசுகூ)

செய்யப்பா மானதமாய்ப் பூசைசெய்து
சிந்தைமனந் தொன்றாகச் சிவனைநோக்கி
மெய்யப்பா கோதானம் பூதானங்கள்
மேன்மையுள்ள கன்னிகா தானஞ்செய்து
கையப்பா தவறும லதற்குப்பூசை
கருணையுடன் பூரிகா தானஞ்செய்து
மையப்பா மையமென்ற குருவைப்போற்றி
மார்க்கமுடன் தன்பதியில் வந்துசேரே. (கஎ௦)



சேரடா தன்பதியில் வந்திருந்து
சிறுமையுடன் சட்டரச வர்க்கஞ்செய்து
வாரடா குருபதத்தைப் போற்றிமைந்தா
வணக்கமுடன் குருபூசை வளமாய்ச்செய்து
பாரடா போகாமற் சமாதில்மைந்தா
பத்தியுடன் நித்தியமும் பூசைசெய்தால்
கோரடா வாராமற் சமாதிதன்னிற் (கஎக)
குருவான முற்றுகார மதிகமாமே.

ஆமப்பா வதிகமுள்ள வாண்பால்தன்னை
யருள்பெருக சமாதிவைக்கு முறைமைசொன்னேன்
ஓமப்பா வுறுதியுள்ள சத்திமாது
வுண்மையுடன் மூர்த்திகர மானல்மைந்தா
தாமப்பா முன்போலே சமாதிசெய்து
தன்மையுடன் மேல்திசையிற் குகைதான்செய்து
நாமப்பா சொல்லுகிறே மூர்த்திகரமான (கஎஉ)
நாதாந்த மாதுதனைச் சுகாசனமேசெய்யே.

செய்யப்பா சுகாசனமாய்த் தீர்க்கம்பண்ணி
சிவசிவா வபிஷேகம் நன்றாய்ச்செய்து
மெய்யப்பா தெரியாமல் பட்டுவஸ்திர
மேன்மைபெறத் தானணிந்து விபூதிசாற்றி
மையப்பா மையமதில் திலதப்பொட்டு
மகத்தான சுகந்தமலர் மாலைசாற்றி
வையப்பா தங்கத்தாற் பட்டஞ்செய்து (கஎங)
மகத்தான யெட்டெழுத்தை மாறிக்கேளே.

சேரடா யெட்டெழுத்தைக் கால்தலையாய்மாறி
சிறுமையுடன் நெற்றிதனிற் பட்டங்கட்டி
யாரடா தூபமுடன் தீபஞ்செய்து
வருள்பெருக நமசிவமே லன்பாய்வைத்து
வாரடா மணியோசை சங்கினோசை
மகத்தான ஜெயகண்டி நாதஞ்செய்து
மேலடா சமாதிவலஞ் செய்துநல்ல (கஎச)
வேதாந்த மானநடுக் குகையில்வையே.

வையப்பா கீழ்முகமாய்க் குகையில்வைத்து
மார்க்கமுடன் செங்கல்கல் லுப்புநீறும்
மெய்யப்பா மூன்றும்பொடி யொன்றாய்க் கூட்டி
மேன்மைபெற குகையினிறைய வமிழ்த்திவைத்து
கையப்பா வாராமல் மணல்நிறுத்திக்
கருணையுடன் சதுரமதாய்த் திரணைசெய்து
செய்யப்பா திரணைநடுஸ் தம்பம்வைத்துத்
தீர்க்கமுடன் மானதமாய்ப் பூசைபண்ணே. (கஎ௫)

பண்ணப்பா சகஸ்ரச வர்க்கமுமேற்றாய்
பதிவான மயேஸ்வரியைப் பூசைபண்ணி
கண்ணப்பா தானேக்கி மனதுகூர்ந்து
கன்னிகா தானமுடன் கோதானங்கள்
பொன்னப்பா தான்வினையும் பூதானங்கள்
புத்தியுடன் பூரிகா தானஞ்செய்து
நண்ணப்பா தன்பதியில் வந்திருந்து
நாட்டமுடன் குருபூசை நன்றாய்க்காணே. (கஎ௬)

காணவே குருபூசை நன்றாய்ச்செய்து
கருணைவளர் சமாதிதனில் கடாக்ஷமாக
பூணவே நித்தியமும் பூசைசெய்தாற்
பூரணமாய் மூர்த்திகரம் புதுமையாகும்
தோணவே சத்தியுட சமாதிதன்னில்
துலங்கும்வெகு புதுமைகள்தா னென்னசொல்வேன்
பேணவே பூரணமாய்ச் சமாதிபூசைப்
பெருமைவிட்டு யொருமைபதாய்ச் செய்துபாரே. (கஎஎ)

பாரடா வான்ரூப முனிதானுக்கு
பதிவான பென்ரூபம் ரிஷிதானுக்கு
காரடா ரிஷிமுனிவர் கருணைதன்னை
கருணையுடன் கண்டறிந்து பூசைசெய்ய
ஆரடா வறிவார்க ளாதியந்த
மரகார வாதியந்த மாண்பெண்ணுக்கு
நேரடா வாண்பெண்ணு பிறந்ததென்ன
நேர்மையுள்ள வறியல்லோ சாக்ஷிதானே. (கஎஅ)



தானேதான் தன்மனமே சாக்ஷியாகத்
தன்மையுடன் பூரணமாய் நின்றயானும்
கோனேதான் தானவனு யருனேதங்குள்
குருவான நவக்கிரக குகூந்தாலே
பூணைநீ பொற்கமலத் தூச்சிமீதிற்
பூரணமாய் நின்றிலங்கும் போதத்தாலே
நானேதா னீயனவே நன்மையாக
நாட்டமுடன் வாசியினுல் நயந்துபாரே. (கஎகூ)

பாரப்பா நயனவெளி குகூந்தாலே
பதிவான மூலமதி லாராதாரய்
காரப்பா வாதார லிங்கபீடங்
கண்ணிறைந்த முச்சுடராங் கமலபீடம்
நேரப்பா னின்றதொரு விந்துபீடம்
நின்றிலங்குங் கற்பூர தீபபீடம்
ஆரப்பா வறிவார்க ளாதிபீட
மந்தரங்க பீடமதைப் பூசைபண்ணே. (கஅ0)

பூசைநெறி யறியாம லாண்பெண்ணென்றும்
பொல்லாத மாய்கைவலைக் தன்னிற்சென்று
ஆசைகொண்டு மோகமதா யறிவுங்கெட்டு
வங்கமென்ற சங்கதியை யறியாமற்றான்
பாசமென்ற பவராசியில் மனதழுந்தி
பரகதியை யறியாத பாவிமாரே
ஓசையென்ற சத்தமுதித் தடங்கிவிட்டை
வுற்றமனக் கண்ணாலே நித்தம்பாரே. (கஅக)

(பிரணவமகிமை.)

நித்தமுநீ புத்தியுடன் பார்த்துமைந்தா
நேர்மையுட னந்திசந்தி பூசைபண்ண
சுத்தமுடன் சொல்லுகிறேன் புலத்தியாகேள்.
சோதியென்ற வாதார மூலம்பார்த்து
பத்தியுட னங்கிலி ஓமென்றுமேயும்
பதிவாக மானதமா யுருவேசெய்தால்
சித்தியுள்ள கணபதியும் வல்லபையுமைந்தா
நித்தைதனி லொளிவிளக்காய்த் தெரிவிப்பாயே. (கஅஉ)

தெரிசிப்பாய்த் தினந்தோறுந் தியானம்பண்ணி
 தீர்க்கமுடன் மானதமாம் பூசைசெய்தால்
கெரிசித்தி யாகியந்த வெளியிற்குள்ளே
 நின்றிலங்குங் கணபதியும் வல்லபையுமைந்தா
பரிசித்த மாகவேநீ தெரிசித்தாக்கால்
 பத்தியுடன் சகலசித்துங் கைக்குள்ளாகும்
வருவித்த சித்தாள்தான் கைக்குள்ளான
 மகத்தான வலையடக்கஞ் சொல்லக்கேளே. (௪௮௩)

## ஆலயடக்கம்.

கேளப்பா வலையடக்கஞ் சொல்லக்கேளு
 கிருபையுள்ள வல்லபையுங் கணபதியுமைந்தா
ஆளப்பா பிரம்மாவுஞ் சரஸ்வதியுமாகு
 ரதின்பிறகு திருமாலும் லட்சுமியுமானார்
மேலப்பா ருத்திரனு முருத்திரியுமானார்
 மேன்புடனே மயேசுரனு மயேஸ்பரியுமானார்
காலப்பா சதாசிவனு மனோன்மணியுமாகி
 காரணமெல்லா முடிந்து சத்திசிவமாச்சே. (௪௮௪)

ஆச்சப்பா வாதிபரா பரந்தான்மைந்தா
 வனுக்கிரகந் தானுதித்த கணபதிவல்லபையு
மூச்சப்பா விந்துசத்தி சிவமுமாகி
 மூவுலகுங் காருகி மூதனுமாகி
பேச்சப்பா நிறைந்ததொரு பஞ்சபூதம்.
 பேறுகிப் பெருமையினுங் கணபதியுமாகி
பாச்சப்பா பஞ்சகர்த்தா ளாக்குபேரும்
 பத்திகொண்டு வாதியிலே வோமென்றுரே. (௪௮௫)

ஓமென்றுர் பிரணவமே யாதிவஸ்து
 வுலகமெல்லாந் தானிறைந்த வோமசத்தி
தாமென்ற சத்தியடா யெங்குந்தானுய்ச்
 சதாகோடி மந்திரத்துக் குயிராய்நின்று
ஆமென்று வாடினது ஓங்காரந்தான்
 அடிமுடியாய் நின்றதுவு மோங்காரந்தான்
நாமென்ற வோங்காரந் தன்னிலேதான்
 நாடிநின்ற வெழுவகையும் பிறந்தவாறே. (௪௮௬)



வாறுன வெழுவகையில் தோற்றமெல்லா
 மகத்தான வோங்கார வடிவுமாச்சு
பேரான வேதமொடு சாஸ்திரங்கள்
 பெருகிநின்ற மந்திரங்க ளஷ்டகர்மம்
சேரான ஜபதபங்கள் யோகநிஷ்டை
 நின்றிலங்கும் கௌனமுதல் வசியமாற்றம்
கூரான வாதமொடு வைத்தியமெல்லாங்
 குருவான வோங்காரக் குறிதான்கேளே. (௪௮௭)

காணவே ஓங்காரம் ஓம்பிரதானங்
 கருணைவள ராதார மூலபீடம்
தோணவே மூலமென்ற வாதாரத்திற்
 றுலங்கிநின்ற ஆவியடா வாசியாச்சு
பேணவே ஆவியென்ற வாசியேறி
 பெருகிநின்ற வாதாரங் கடந்தப்பாலே
பூணவே ரவிமதியின் சுடரிற்சென்று
 புத்தியுடன் பூரணமாய்த் தீபம்பாரே. (௪௮௮)

பாரப்பா தீபமென்று லறிவின்கண்ணு
 பத்திகொண்டு வறிவதினுற் புருவமேவி
சாரப்பா கண்டமதி லங்கென்றாலனி
 சதாபோத பூரணமாய் நின்றுபார்த்தால்
சேரப்பா வின்றிலங்குஞ் சோதிபோலே
 நித்தியமுஞ் சுத்தமுடன் நினைவாய்ப்பார்த்தா
லாரப்பா வென்றதொரு வாராதார
 மாதிசிவ சோதிமய மாகுந்தானே. (௪௮௯)

தானுன வாதாரஞ் சோதிபோலே
 சங்கையுடன் றோணுமடா வங்கேபாரு
வானுன வண்டமதி னடுவேபார்த்தால்
 வகையாகத் தோணுமடா பஞ்சரூபம்
தேனுன வடிவுபஞ்ச ரூபமாகிச்
 சிவரூப மானசெய லாயுங்காணூர்
கோனுன சிவரூபந் தான்தானென்று
 குறித்துமன நிறுத்திநித்தம் பூசைபண்ணே. (௪௯௰)

## அகாரபூசை.

பண்ணப்பா பூசைவிதி தன்னைக்காணுர்
பார்தனிலே பமைத்தவிதிச் சித்துமாச்சு
நண்ணப்பா சித்துமுள்ள மதிதான்மைந்தா
நடுவான பீடமடா வண்டத்துச்சி
கண்ணப்பா தானிறைந்த வுச்சிமீதில்
கமலமென்ற வாயிரத்தி னிதழிதுள்ளே
முன்னப்பா அமிர்தமது கண்விட்டோடி
மூர்க்கமுட னந்தமிர்தம் பூசைபண்ணே. (௧௱௧)

பண்ணடா சிவபூசை சத்திபூசை
பத்தியுடன் சித்தமதாய் வாலைபூசை
நண்ணப்பா பூரணமாம் பூசைபோகி
நாதாந்த சோதிபடர் யோகபூசை
கண்ணடா தவராமற் பூசைசெய்ய
கருமானஞ் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
விண்ணடா நிறைந்தமலர்க் கண்ணேசூக்ஷம்
வேதாந்த சூக்ஷமதை விரும்பிக்கேளே. (௧௱௨)

## அ கா ர தீ க்ஷை.

விரும்பிமனங் கொண்டுசிவ பூசைகேளு
வேதாந்த சின்மயத்தை மெய்யிற்கொண்டு
வரும்பிறவி தனையகற்றுஞ் சிவமேதென்றால்
வகையுடனே சொல்லுகிறே னகாரமாச்சு
யருத்தமாய் நின்றதொரு வகாரமிட
மாரதியப் போரார்க ளாதிவிந்து
திருந்தியதோர் விந்துவென்றுற் கெங்கைகெங்கை
திருவான கெங்கையடா வமிர்தந்தானே. (௧௱௩)

தானென அமிர்தமடா வகாரமாச்சு
சங்கையுடன் காரமதைத் தானேதானுப்
வாரான கேசரியைத் தியானம்பண்ணி
வரிசையுட னுதயத்தில் தியானஞ்செய்தால்
ஊனுன தேகமதில் நின்றபிடை
யுக்கமனே யப்போதே விலகிப்போச்சு



வீறான் பிடையது விலகிப்போனால்
வேதாந்த திரோகமது சித்திபாச்சே. (௧௱௪)

ஆச்சப்பா திரோகமது சித்தியானு
லாதிசதா சிவசோதி யங்கேகாணும்
மூச்சப்பா தன்னிலேவிட் டசைபாதையா
முத்தியுள்ள சித்தமது கெட்டியாச்சு
பேச்சப்பா தானடங்கி மௌனமாச்சு
பேரண்டஞ் சுத்திவர கெவுனமாச்சு
நீச்சப்பா தானறிந்து கெவுனத்தேகி
நிசமான வகாரமதைப் பூசைபண்ணே. (௧௱௫)

## உ கா ர தீ க்ஷை.

பண்ணப்பா சிவமான அகாரதீக்ஷை
பத்திகொண்டு பூரணமாய்ச் செய்தபின்பு
நண்ணப்பா வுகாரமென்ற சத்திதீக்ஷை
நன்மையுடன் சொல்லுகிறே னுண்மைகேளு
விண்ணப்பா கண்ணுன மூலத்தீயில்
விளங்கிநின்ற வுகாரமென் றுஞ் சத்தியென்று
முன்னப்பா நிறைந்தசிவ சத்தியோடே
முத்தியுள்ள அகாரமென்ற வஸ்துசேரே. (௧௱௬)

சேரப்பா அகாரமுட னுகாரங்கூட்டி
செம்மையுட னருலேத்தி நின்றுயானல்
நேரப்பா னின்றதிரு வாசியாலே
நிலையான புருவமதில் தீபங்காணும்
காரப்பா தீபமதைக் கமலக்கண்ணால்
கண்ணிறைந்து வாசியினு லூன்றிப்பாரு
சாரப்பா வாசியினு லூன்றிப்பார்க்கச்
சதாபோத மானசிவ யோகியாமே. (௧௱௭)

## ம கா ர தீ க்ஷை.

ஆமப்பா சிவயோகஞ் செய்வதாகு
மப்பனே அகாரமுட னுகாரஞ்சொன்னேன்
தாமப்பா மகாரமென்ற வாலைதன்னைத்
தாரணியி லாரறிவார் சன்மார்க்கம்

காமப்பால் கொண்டசிவ கெவ்லையான
　கன்னிமனோன் மணியின்ற நாதமென்றும்
நாமப்பா சொல்லுகிறேன் செந்தேனென்றும்
　நாதாந்த மென்ற மகாரமாமே. (௧௯௮)

ஆமென்ற மகாரமுடன் மைந்தாகேளு
　அருள்பெருக அகாரமுட னுகாரங்கூட்டி
ஓமென்ற பிரணவத்தின் மகிமையாலே
　வுருதியுடன் மூன்றெழுத்துஞ் செபித்தாயாகில்
தாமென்ற தன்னிலேயே பிரம்மமாகி
　தானாகித் தானவனைத் தாந்தானுவாய்
நாமென்ற நாதாந்த முத்தியாலே
　நடுவெழுந்த மூன்றெழுத்துஞ் சித்திதானே. (௧௯௯)

சிகாரதீக்ஷை.

காணவே மூன்றெழுத்துங் கருணையாகக்
　கட்டாகச் செபித்தபின்பு யின்னங்கேளு
பேணவே சிகாரமென்று லார்தான்காண்பார்
　பேரண்ட மானபூ ரணமேயாகும்
தோணவே பூரணத்தைக் கண்டுகொண்டு
　சுகமான சிவசக்தி வாலையோடே
பூணவே தானிருந்து செபித்தால்மைந்தா
　பூரணமாய்க் காயசித்தி புனிதமாமே. (௨௱)

வகாரதீக்ஷை.

புனிதமுடன் தானிருந்து பூசைபண்ணி
　பொற்கமலத் துச்சியிலே மனதைவைத்து
இனிதமுடன் வகாரமென்றால் வாசியாச்சு
　யேகமென்ற வாசியிலே யின்பம்வைத்து
கனிகரண மானசிவ சத்திவாலை
　கன்னுன பூரணமும் நாலுங்கூட்டி
மனிகரண மானதொரு மஞ்சுமைந்தா
　மகத்தான பஞ்சகண தீக்ஷையாச்சே. (௨௱௧)

பஞ்சகணதீக்ஷை.

ஆச்சப்பா பஞ்சகண தீக்ஷையோத
　மப்பனே வகைவிபரம் நன்றாய்க்கேளு
நீச்சப்பா சிவதீக்ஷை யுதயமாகும்
　நிசமான வாலையிலே சத்திதீக்ஷை



பேச்சப்பா பேசாத வாலைதீக்ஷை
　பேணிமனங் கண்டவுடன் தெண்டம்பண்ணு
மூச்சப்பா நிறைந்ததொரு வாமரூபி
　முத்திகொண்ட பஞ்சகணந் தான்தானாகும். (௨௱௨)

தானான பஞ்சகணந் தானாய்நின்று
　தன்மையுட னின்றுவிளை யாடலாச்சு
ஆனாகி னின்றுவிளை யாடுஞ்சித்தை
　யுலகமறி லறியாம லுழன்றுபோனார்
வானான வடிவுபஞ்ச ரூபந்தன்னை
　மார்க்கமுடன் கண்டுமன மகிழ்ச்சியானார்
கோனான குருபரமே யல்லமைந்தா
　குவலயத்தில் நீயுமொரு சித்தனாமே. (௨௱௩)

சித்தமய மாவதற்கு மைந்தாமைந்தா
　தீர்க்கமுடன் காரமதை யாண்டுசேவி
முத்திபெற செபித்தபின்பு உகாரந்தன்னை
　மூர்க்கமுடன் ஆண்டொன்று செபித்துக்கொள்ளு
பத்தியுடன் செபித்தபின்பு மகாரந்தன்னை
　பாலகனே ஆண்டொன்று பதிவாய்ச்சேவி
புத்தியுட னிதுமூன்றுஞ் செபித்துத்தீர்ந்தால்
　பூரணமுங் காரணமும் பொருந்துமப்பா. (௨௱௪)

பாரப்பா பூரணமே யண்டமாச்சுப்
　பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா வண்டமொடு பிண்டம்ரெண்டும்
　நேரறிந்துக் கொண்டவனே சித்தன்சித்தன்
சாரப்பா சௌமியசா கரத்தில்நீயும்
　தன்மையுடன் பூரணமாய்ச் சார்ந்துகொண்டால்
மேரப்பா வண்டபிண்டந் தானாய்நின்று
　மேதினியிற் பூரணமாய் வாசியாமே. (௨௱௫)

முப்புச்சுன்னம்.

வாசிக்குஞ் சிதமலர் முப்புமாச்சு
　வாடாத முப்பூவை யார்தான்காண்பார்

நேசிக்கு முப்பூவைச் சொல்லக்கேளு
  நிசமான சத்தமடா பூமிநாதம்
பூசிக்கும் பூனகம் பூரஞ்சத்தி
  பொருந்திநின்ற சவுக்கார மண்டமாது
காசிக்கி மேலான கன்னிகன்னி
  கைலாச மனங்கொண்ட முப்பூவாச்சே. (௨௱௬)

ஆச்சப்பா முப்பூவும் பூரச்சுன்ன
  மறுதெளிந்த கெங்கையடா நாதம்நாதம்
பேச்சப்பா பெருகிநின்ற நாதத்துள்ளே
  பெருகிநின்ற சுத்தசலம் விந்துசேர்த்து
மூச்சப்பா தானடங்க வண்டஞ்சேர்த்து
  முத்தியுந் தான்கூட்டிப் புடத்தைப்போடு
காச்சப்பா புடமறிந்து காச்சிப்பாரு
  கண்ணட்ங்காச் சுன்னமடா முப்பூகாணே. (௨௱௭)

காணுத முப்பூவைக் கண்டால்மைந்தா
  கருவான காரமுடன் சாரஞ்சேரு
பூனுன காரமதிற் சாரஞ்சேர்த்து
  பரிதிமதிச் சுடரான செயநீராச்சு
தேனுக செயநீரில் வீரஞ்சேர்க்கச்
  செந்தொரு செந்நீருப் நாதமாச்சு
ஊனுன நாதமதைப் பாணம்பண்ணி
  வுப்புமுதல் கற்பூரம் வளையுங்கூட்டே. (௨௱௮)

## முப்புச் செயநீர் பற்பம்.

கட்டான கட்டுமுறை திட்டங்கண்டால்
  கனகமென்ற பாக்கியங்கள் கைக்குள்ளாகு
மட்டாக மின்னமொரு முப்பூச்சுன்ன
  மார்க்கமுடன் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
திட்டாத அந்தமடா அண்டத்தாதி
  கெவுதமுள்ள பூரமுடன் வெடியுங்கூட்டி
தட்டாமல் கல்வமதில் நாதநீரும்
  தன்னமையுடன் ருணாத்து வட்டிப்பண்ணே. (௨௱௯)



பண்ணியதோர் வட்டதுவும் நன்றாய்க்காய்ந்தால்
  பாலகனே மண்சீலை வலுவாய்ச்செய்து
புண்ணியனே நிறையறிந்து புடத்தைப்போடு
  பூவான முப்பூவுஞ் சுன்னமாச்சு
கண்ணிறைந்த சுன்னமடா கமலச்சுன்னம்
  காரமுள்ள சுன்னமதிற் சாரஞ்சேர்க்க
வன்னியென்ற ஜயநீரா மென்னசொல்வேன்
  வானிறைந்த நீரதிலே வீரஞ்சேரே. (௨௱௰)

சேரடா வீரமது சேர்ந்தபோது
  தெளிவான நீரதுவும் செயநீராச்சுக்
காரடா செயநீரைப் பதனம்பண்ணி
  கட்டான வாதமுறை திட்டம்பார்த்தாற்
போரடா கொண்டதொரு நவலோகங்கள்
  பொருந்திநின்ற வங்கமெல்லாந் தங்கமாச்சு
நேரடா தங்கமதி மாதுதன்னை
  நேசமுடன் பாசம்வைத்துப் பூசைபண்ணே. (௨௱௰௧)

பண்ணப்பா சத்திசிவ பூசைபண்ணிப்
  பதிவான சிவயோகம் பார்க்கும்போது
கண்ணப்பா தன்னிலையிற் கருணையாகுங்
  கருணைவளர் தீபமதில் தீபங்காணும்
விண்ணப்பா நிறைந்ததொரு தீபங்கண்டால்
  வேதாந்த தேகமடா முத்தியாச்சு
முன்னப்பா நிறைந்தசிவ முத்தியாலே
  முத்தியுள்ள வமுர்தரச பற்பங்கேளே. (௨௱௰௨)

பற்பமென்ற வற்பனத்தை யார்தான்காண்பார்
  பதிவான நகாரமுடன் மகாரஞ்சேர்த்து
வற்பமையாய்க் காரமுடன் பூரங்கூட்டி
  புருதியுடன் பூரணனீர் தன்னாலாட்டி
கற்பமென்று வற்புதமாய்ப் புடமேசெய்தால்
  கசடற்று நீறியது பற்பமாகு
மற்புதமாய் நீறினதோர் பற்பந்தன்னை
  மங்கலென்ற சங்கதியை யறிந்துகூட்டே. (௨௱௰௩)

அறிந்துகொண்டு வாதாரம் கண்டுப்பார்த்து
ஆதியென்ற பரமமொடு சுவ்வமிரெண்டாம்
வருந்திமனக் கனிவதனால் செய்துமைந்தா
வகையுடனே யஷ்டாங்க யோகம்பாரு
தெரிந்துசடந் தானறிந்து யோகம்பார்க்கத்
திர்க்கமுள்ள மார்க்கமொன்று சொல்லக்கேளு
பொருந்திநின்ற வஷ்டகன்மஞ் சித்துபெற்றுப்
பூரணமா யஷ்டாங்க யோகமாமே. (௨௱௰௪)

## அஷ்டகர்ம விபரம்.

யோகமென்ற அஷ்டாங்க யோகம்பார்க்க
வுத்தமனே வஷ்டகர்மஞ் சித்துகேளு
ஆமென்ற தேகநவக் கிரகமாசு
ஆதியென்ற வநுக்கிரக முடியில்நின்று
பாகமென்ற வாதார மூலந்தன்னைப்
பத்திகொண்டு ஊடுருவிப் பார்க்கும்போது
வேகமென்ற வட்சரத்தின் ஆட்டையல்லால்
பெண்மகனே மற்றதெல்லாம் ஸ்தூலக்காணே. (௨௱௰௫)

## வ சி க ர ம்.

காணவே ஸ்தூலமுடன் சூக்ஷங்கண்டால்
காரணமாய்ச் சென்றுவினை யாடலாகும்
பூணவே நின்றுவினை யாடுதற்குப்
புத்தியுட னஷ்டகர்ம சித்துகேளு
தோணவே யஷ்டகர்ம சித்துகாண
சொல்லுகிறேன் வசிகரத்தின் சூக்ஷந்தன்னை
உவணவே தானிருந்து மூலம்பார்த்து
வுவமையுடன் குருபதியை யுகந்துகாணே. (௨௱௰௬)

உகந்துகொண்டு வசிகரத்தின் சூக்ஷங்கேளு
வுத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா
அகந்தெளிய விபூதியுத் தளமாய்ப்பூசி
ஆனகலை யாசனமே லிருந்துகொண்டு
முகந்தெளிந்த ருத்திராக்ஷ மணியைவாங்கி
முத்தியுட னதிகண பதியையன்றுப்ச்
செகந்தெளிய செபிப்பதற்கு மந்திரங்கேளு
சிவசிவா ஓம்றீங் அங்கென்றுதே. (௨௱௰௭)

ஒகடா ஆயிரத்தெண் ணுருவேசெய்தா
லுண்மையென்ற வாதிகண பதிதான்மைந்தா
நீதியுட னுனதிடத்தில் நின்றுக்கொண்டு
நீநினைத்த காரியங்கள் வசியஞ்செய்வார்
பேதமென்ற வேதமெல்லாம் வசியமாகும்
பேரண்டஞ் சித்தண்டம் வசியமாகும்
வேதமென்ற வேதமொடு சாஸ்திரங்கள்
விளங்கிநின்ற மந்திரங்கள் வசியமாமே. (௨௱௰௮)

ஆமப்பா தேவரொடு முனிவர்தானு
மடங்காத பசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுத லஷ்டனாக
மொடுங்காத பக்ஷிமுதல் சகலமெல்லாந்
தாமப்பா வாதிகண பதியின்சூக்ஷந்
தன்மையுடன் தியானித்துத் தானேநின்றாற்
காமப்பால் கானற்பால் வசியமாகிக்
கருணையுடன் சகலமும் வசியங்காணே. (௨௱௰௯)

## மோ க ன ம்.

காணவே வசிகரத்தின் மூலஞ்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருணைகேளு
பேணவே கீழ்த்திசையை நோக்கிமைந்தா
பிரணவத்தால் விபூதிவுத் தளமாய்ப்பூசி
தோணவே புலியா சனமேற்கொண்டு
சுத்தமென்று துளசிமணி கையில்வாங்கிப்
பூணவே சபிப்பதற்கு மந்திரங்கேளு
பொருந்துமகா கணபதியின் சூக்ஷந்தானே. (௨௱௨௰)

தானென்ற சூக்ஷமது சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்கிலி சிங்கென்றேதான்
வானென்ற குருபதியில் நின்றுக்கொண்டு
மார்க்கமுட னாயிரத்தெண் ணுருவேசெய்தால்

கோனென்ற மகாகண பதிதான்மைந்தா
குருவான விருதயத்திற் பிரகாசிப்பார்
ஊனென்ற விருதயத்திற் பிரகாசித்தா
லுத்தமனே சகலமுமோ கனந்தான்பாரே. (௨௨௧)

பாரப்பா ரிஷிமுனிவர் தேவரெல்லாம்
பதிவான மிருகமுதல் பக்ஷியெல்லாங்
காரப்பா சகலனுப் விஷங்களெல்லாங்
காட்டேரி பசாசமுதல் கணங்களெல்லாம்
நேரப்பா நதிகளோடுஸ் தலங்களெல்லாம்
நேர்மையுட னுன்சமுகங் கண்டால்மைந்தா
வீரப்பா தானொடுங்கி மோகனமேயாகும்
வேதமகா கணபதியும் விந்லைசயாச்சே. (௨௨௨)

## தம்பனம்.

ஆச்சப்பா மோகனத்தி னருமைசொன்னேன்
அரகரா தம்பனத்தி னருமைகேளு
காச்சப்பா மேல்திசையை நோக்கிமைந்தா
கருணையுடன் விபூதிவுத் தளமாய்ப்பூசி
பேச்சப்பா தானிருந்து மவுனமாக
பெருமையுடன் தெற்பையா சனமேற்கொண்டு
மூச்சப்பா தானிருத்தித் தாமரையின்மணியால்
மூர்க்கமுடன் செபிப்பதற்கு மந்திரங்கேளே. (௨௨௩)

கேளப்பா நடனகண பதியின்ருசக்கு
கிருபையுடன் ஓம்ஸ்ரீ ஙிஙியென்றேதான்
காலப்பா தானிருத்தி மைந்தாகேளு
கருணையுட னாயிரத்தெண் ணுருவேசெய்தால்
மேலப்பா நடனகண பதிதான்மைந்தா
மேன்மைபெற வுனதிடத்தில் நடனஞ்செய்து
சூளப்பா வுனதிடத்தி லிருத்திக்கொண்டு
சுத்தமுடன் தம்பனத்துக் கென்செய்வாரே. (௨௨௪)

வாரான தம்பனந்தா னென்னவென்றால்
மகத்தான துஷ்டரொடு மிருகமெல்லாம்



நேராக வுன்னுடைய சமுகங்கண்டால்
நேர்மையுடன் மனதொடுங்கி தம்பனமேயாவார்
போரான வாய்வுடனே நெருப்புத்தண்ணீர்
பிரளாமல் தம்பிக்கும் பொருமையாகக்
கூரான நடனகண பதியினாலே
கூர்மையுடன் சகலமுந்தம் பனமாம்பாரே. (௨௨௫)

## உச்சாடனம்.

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவான வுச்சாடனத்தைப் பகரக்கேளு
நேரப்பா தென்திசையை நோக்கிமைந்தா
நேர்மையுடன் விபூதிவுத் தளமாய்ப்பூசி
காரப்பா பட்டந்தா ஞசனமேற்கொண்டு
கருணையுடன் சங்குமணி கையில்வாங்கி
சாரப்பா சித்திகண பதியின்ருசக்கு
தன்மையுடன் ஓம்கிலியுஞ் சவ்வென்றெண்ணே, (௨௨௬)

எண்ணியே வாயிரத்தெண் ணுருவேசெய்தால்
ஏகாந்த சத்திகண பதியினாலே
உன்னியே சாடனந்தான் மைந்தாமைந்தா
வுறுதியுடன் சத்தியமா யாடும்பாரு
நண்ணியே சாடனமுஞ் சித்தியானால்
நாதாந்த புலத்தியனே சொல்லக்கேளு
நுண்ணிமையாய்க் கண்டதெல்லா முச்சாடிக்கும்
ஞேக்குமனக் கண்ணதினாற் றன்னைப்பாரே. (௨௨௭)

பாரப்பா பாரதனி லிருந்துக்கொண்டு
பத்தியுடன் சிவயோகத் திருக்கும்போது
வீரப்பா கொண்டதொரு நோய்களெல்லாம்
விதமுடனே பில்லிசூனி லியங்களெல்லாம்
நேரப்பா வுச்சாடனத்தாற் காணதோடும்
நிருவகிதா சலசித்து மாடலாகும்
தேரப்பா சத்திகண பதியினாலே (௨௨௮)
தீர்க்கமுடன் சாடனந்தான் சித்தியாமே.

## ஆக்கிருஷ்ணம்.

சித்தியுடன் சாடனத்தைச் சொன்னேன்மைந்தா
 தீர்க்கமுடன் கிருசனத்தை செப்பக்கேளு
முத்தியுடன் பேசுதற்கு முகமாய்க்கொண்டு
 மோனமுடன் விபூதிவுத் தளமாய்ப்பூசி
பத்தியுடன் பட்டுவஸ்திர மேலேகொண்டு
 பதிவாகப் படிகமணி கையில்வாங்கி
புத்தியுடன் வாலைகண பதியின்மூலம்
 பூரணமாய் ஓம்கிலியென் றேதே. (௨௨௧)

ஓதியே யாயிரத்தெண் ணுருவேசெய்தால்
 உத்தமனே கிருசனந்தான் சித்தியாகும்
நீதியென்ற கிருசனந்தா னுருதியாலே
 நினைத்தபடி வின்றுவினை யாடும்பாரு
சோதியென நின்றுவினை யாடுதற்குச்
 சொல்லுகிறேன் வாலைகண பதியினாலே
ஆதியென்ற வினைகளெல்லா மகன்றுபோகு
 மடங்காத விதங்களெல்லா மடங்கும்பாரே. (௨௨௨)

பாரான பார்தனிலே வஷ்டகர்மம்
 பத்தியுடன் செய்துவினை யாடும்போது
வீரான கர்ப்பமெல்லாங் கிருசனத்தினாலே
 விட்டகன்று போகுமடா விண்ணோருக்கு
நேராக நோக்குமனக் கண்ணாலேயும்
 நேர்மையுடன் குருபதியில் நின்றாயாகில்
பேரான வாலகண பதியினாலே
 பெருமையுடன் கிருசனத்தைப் பேணிப்பாரே. (௨௨௩)

## வித்துவேஷணம்.

பாரடா கிருசனத்தை சொன்னேன்மைந்தா
 பதிவானவித் துவேஷணத்தைப் பகரக்கேளு
காரடா தென்மேற்கு முகமாய்க்கொண்டு
 கருணையுடன் விபூதிவுத் தளமாய்ப்பூசிச்
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
 சங்கையுடன் பவளமணி கையில்வாங்கி



நேரடர் வுச்சிட்ட கணபதியின்மூலம்
 நேர்மையுடன் சொல்லுகிறே னினைவாய்க்கேளே, (௨௨௪)

காணவே ஓம்ஸ்ரீயு மறியும்யன்று
 கருணையுட னாயிரத்தெண் ணுருவேசெய்தால்
பூணவே வித்துவே ஷணந்தான்மைந்தா
 பூரணமாய்நின்றுவினை யாடும்பாரு
தோணவே னின்றுவினை யாடுஞ்செய்தி
 சொல்லுகிறேன் வேஷணத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்திக்காற்
 பெருமையுடன் திருநீறால் கெர்ப்பமாமே. (௨௨௫)

கெர்ப்பமென்ற வுற்பனந்தான் சித்திபாகும்
 கிருபையுடன் கரத்தாலே தானேனாலும்
உற்பனமா யுள்கரத்தால் தொட்டால்மைந்தா
 ஒன்றுபத்தாய்த் தான்வளரு முண்மையுண்மை
விற்பன விதர்க்கனமா யிருந்துகொண்டு
 வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
நட்புடனே வுச்சிகண பதியைத்தொழுதால்
 சாலான காரியமுஞ் சித்தியாமே. (௨௨௬)

## மாரணம்.

சித்தியுள்ள வேஷணத்தைச் சொன்னேன்மைந்தா
 தீர்க்கமுள்ள மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமாய்க்கொண்டு
 பாலகனே விபூதிவுத் தளமாய்ப்பூசி
வெத்திபெற வேங்கைபா சனமேற்கொண்டு
 வேகமுள்ள பெட்டிமணி கையில்வாங்கி
முத்தியுட னுக்கிரகண பதியின்மூலம்
 மூர்க்கமாய் ஓம்றீங் கிலியென்றெண்ணே. (௨௨௭)

என்னப்பா வாயிரத்தெண் ணுருவேசெய்தா
 லென்னசொல்வேன் மாரணந்தான் சித்தியாகும்
அன்னப்பா மாரணந்தான் சித்தியானால்
 நாடுமுன்னே சகலபிணி மாண்டுபோகும்

கண்ணப்பா தான்கெடுக்கச் சத்துருவின்பேரை
கருணையுடன் தானினைத்து மாரணத்தையோத
முன்னப்பா குண்ணியவன் மாண்டுபோவான்
மூர்க்கமுடன் மாரணத்தை யேற்றியூதே. (௨௧௬)

ஓதியொரு நாழிகையில் மைந்தாகேளு
வுதிரமறி லக்கினிதா னுடனேபாஞ்சு
விதியென்ற தெருத்தோறு மலைவான்மட்டை
விஞ்சையென்ற மாரணத்தை னெஞ்சில்வைத்து
நீதியுடன் விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
நேர்மையுடன் சகலபிணி மாண்டுபோகுஞ்
சோதியென்ற வக்கிரகண பதியின்சூக்ஷந்
சுத்தமுடன் மாரணத்துக் குயிருமாச்சே. (௨௧௭)

## பேதனம்.

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன்மைந்தா
வருள்பெருகும் பேதனத்தை யருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
கருணையுடன் விபூதியுத் தளமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
முத்திபெற கிருஷ்ணை சனமேற்கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின்சூக்ஷம்
பத்தியுடன் ஓம்ரீங் அம்மென்றெண்ணே. (௨௧௮)

எண்ணடா முளகுமணி தானுமைந்தா
யின்பமுட னுயிர்த்தெண் ணுருவேபாருல்
உன்னடா பேதனந்தா னுறுதியாகு
முத்தமனே வதினுடைய சித்துகேளு
கண்ணடா தானறிந்து பேதனத்தையோதி
கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நன்னடா வுன்றுப மைந்தாகேளு
நாட்டமுடன் விதம்விதமாய்த் தோணும்பாரே. (௨௧௯)

பாரப்பா புலத்தியனே சொல்லக்கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம்பண்ணி
நேரப்பா வின்றமிஞ்சி யாளர்கையில்
நிசயமாய் விபூதியைநீ கட்டினக்கால்



சாரப்பா சுரதோஷ வீக்கமெல்லாம்
க்ஷணத்திலே பேதலிக்கும் விருதுபோடு
தோரப்பா மூலகண பதியினாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. (௨௨௰)

செம்மையுட னஷ்டகர்ம மெட்டுக்குந்தான்
தீர்க்கமுட னஷ்டகண பதியின்சூக்ஷம்
நன்மையுடன் சொன்னடா னயந்துபாரு
நாதாந்த புலத்தியமா ரிஷியேமையா
யுண்மையுட னஷ்டதிசைக் கரசாய்நின்று
வுகந்துவினை யாடுதற்கு மிதுவேசூக்ஷந்
தன்மையுடன் சூக்ஷமதிற் சாக்ஷியாக
தானிருந்து வஷ்டகர்மந் தான்தானுமே. (௨௨௧)

## அஷ்டகணபதி மூலமந்திரம்.

ஆமப்பா வஷ்டதிசைக் கரசாய்நின்ற
அருமையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
ஓமப்பா ஆதிகண பதிதானென்று
வுறுதியுள்ள மகாகண பதிதானென்று
தாமப்பா நடனகண பதிதானென்று
சன்மையுள்ள சத்திகண பதிதானென்று
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுள்ள வாலகண பதிதானென்றே. (௨௨௨)

ஒன்றான வுச்சிட்ட கணபதிதானென்று
யுத்தமனே வுக்கிரகண பதிதானென்று
நன்றான மூலகண பதிதானென்று
நாட்டமுட னஷ்டகண பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூக்ஷந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் குணமாய்க்கேளு
நின்றுடு மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓம்கிலி அங்உங்கென்னே. (௨௨௩)

என்னமுட னிடதுகையில் விபூதிவைத்து
யேகாந்த கணபதியின் சுழியைநாட்டி
சொன்னமொழி தவறாமற் சுடரைப்பார்த்து
சுத்தமுடன் ஓம்கிலி அங்உங்கென்று

தன்னகமே சாட்சியதா யிருநாட்டெட்டுத்
 தான்செபித்து விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
முன்னிறைந்த சற்குருவின் கடாக்ஷத்தாலே
 மூர்க்கமுடன் றிருகிற வியாதிகளே. (௨௪௪)

கேளப்பா சுரமுடனே சன்னிதிரும்
 கெடியான குன்மமுடன் காசந்திரும்
சூளப்பா வஞ்சினையு மேவல்திரும்
 சுருக்கான பலவிஷமுந் தோஷந்திரும்
வாளப்பா சர்ப்பமொடு கெர்ப்பரோகம்
 வயற்றிலுள்ள கிரட்சியெல்லாம் வாங்கிப்போகும்
ஆளப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்று
 ஆதியென்ற பூரணத்தி லமுந்துவானே. (௨௪௫)

## அஷ்டாங்கயோகம்.

வாளப்பா அஷ்டகர்ம சித்துசொன்னேன்
 மகத்தான அஷ்டாங்க யோகங்கேளு
சூளப்பா யெமமொடு நேமந்தானும்
 ஆசனமும் பிராணயம் பிரத்தியாகாரம்
காணடா தாரணையுந் தியானமைந்தா
 கருணையுள்ள சமாதுடனே யெட்டுமாச்சு
நாலடா தானறிந்து யெட்டும்பார்த்தால்
 நடுங்காமல் பூரணத்தில் நோக்கலாமே. (௨௪௬)

நோக்கடா யெமவகைப் பதினொன்றுக்கும்
 நாண்மையுடன் நேமமது வகைதான்பத்து
தாக்கடா வாசனத்தில் வகைதான்கேளு
 சங்கையுள்ள வகையறுவ மொன்பதாச்சு
தூக்கடா பிராணயம் வகைதானஞ்சு
 சொல்லுகிறேன் பிரத்தியாகாரம் வகையாறு
வாக்கடா தாரணையின் வகைதானாறு
 வரிசையுள்ள தியானமது வகைதான்பத்தே. (௨௪௭)

வகையான சமாதியது வகைதானஞ்சு
 மார்க்கமுட னிதுவிபரம் வழுத்தக்கேளு



தகையாதே அகிம்சையும் சத்தியநிறைடு
 தானான அஸ்திகமும் பிரமங்கேளு
தேனான யட்சையொடு திருதிகூடம்
 தன்மையுள்ள மிதாகாசம் சவுசதோடு
வானான யெமவகை பதினொன்றுந்தான்
 மார்க்கமுடன் கண்டறிந்து வகையாய்நீயும்
ஊனான காயமதை யறிந்துக்கொண்டு
 வுறுதியுட னஷ்டாங்க யோகஞ்செய்தால்
தேனான வயிர்தாசம் கொள்ளலாகும்
 சிவசிவா நேமமதை செப்பக்கேளே. (௨௪௮)

## நியமம்.

செப்புகிறேன் நியமவகை பத்துமக்காள்
 சிவசிவா தவசோடு சந்தோஷந்தான்
ஒப்புகிறேன் ஆஸ்திகஞ்சந் தானத்தோடு
 உட்சிவ பூசையொடு சித்தாந்தசிரவணம்
அப்புகிறேன் சிவத்தோடு சிவமதிதான்மைந்தா
 அருள்பெருகும் விரதமென்ற வகைதான்பத்தும்
துப்புரவாய்க் கண்டறிந்து சிவயோகத்தை
 சுகமாக வகையுடனே யறிந்துபாரே. (௨௫௦)

## ஆசனவிபரம்.

அறிந்துபா ராசனங்க ளொன்பதையுங்கேளு
 வப்பனே சொற்றிலங்கோ முகற்றிறேடு
விரிந்துபார் பற்பமொடு வீரமைந்தா
 விசையான சிங்கமொடு பத்திரமுமைந்தா
பரிந்துமுத் திரைக்கமொடு மயூரமைந்தா
 பதிவாக னின்றசுக மொன்பதாச்சு
விரிந்துநின்ற வொன்பதையுந் தன்னுட்கண்டு
 வகையுடனே அஷ்டாங்க யோகம்பாரே. (௨௫௧)

## பிராணயாமம்.

பாரப்பா பிராணய வகைதானைந்தாம்
 பத்தியுடன் சொல்லுகிறேன் பதிவாய்க்கேளு

நேரப்பா ரேசகபூ ரகமுங்கும்பகம்
நிசமான சவுபீசம் நிர்ப்பீசமைந்தும்
காரப்பா குருவருளால் கண்டுதேறி
கருணையுடன் பிராணயக் கருவைக்கண்டு
தேரப்பா தேறியனந் தெளிவாய்நின்று
சிவசிவா சிவயோகத் தீர்க்கமைந்தே. (உ௫உ)

## பி ர த் தி யா கா ர ம்.

அஞ்சாம லாறுவகை பிரத்தியாகாரம்
அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
குஞ்சான சரீரமென்ற பிரத்தியாகாரம்
உருவான யிந்திரியம் பிரத்தியாகாரம்
நெஞ்சான பிராணனென்ற பிரத்தியாகாரம்
நிஜமான கரணமென்ற பிரத்தியாகாரம்
பஞ்சான காமியமாம் பிரத்தியாகாரம்
பார்மகனே சர்வசங்க பிரத்தியாகாரம். (உ௫௩)

காரமென்ற பிரத்தியா காரமாறும்
கருணையுடன் சற்குருவாற் கண்டறிந்து
வீரமென்ற மனதாலே யோகம்பாரு
வேதாந்த சாஸ்திரத்தை விரும்பிப்பாரு
சாரமென்ற வமிர்தரச பானங்கொள்ளு
சதாகால பூரணத்தில் சார்ந்துநில்லு
பாரமென்று மனஞ்சலித்து விட்டாயாகில்
பத்திமுத்தி காணவெகு வரிதாம்பாரே. (உ௫௪)

## தா ர ணை.

பாரடா தாரணையி னாறுவிதங்கேளு
பதிவான பூததா ரணைதானென்று
கேரடா பிராணதா ரணைதானென்று
நிசமான காரணதா ரணைதானென்று
தேரடா தெய்வதா ரணைதானென்று
சேர்ந்துநின்ற தத்துவதா ரணைதானென்று
காரடா பிரமதா ரணைதானென்று
கருணையுட னறுவிதங் கண்டுபாரே. (உ௫௫)



## தி யா ன ம்.

கண்டுபார் தியானவகை பத்துஞ்சொல்வேன்
கருணைபெற தேகமென்ற தியானமொன்று
நின்றுபார் சடாதார தியானமொன்று
நிசமான மண்டலத்தில் தியானமொன்று
விண்டுபார் பிரம்மத்தின் தியானமொன்று
விபரமுடன் மாலுடைய தியானமொன்று
சென்றுபா ருத்திரனார் தியானமொன்று
சிவசிவா தேவாதி தியானமொன்றே. (உ௫௬)

ஒன்றாக விஸ்வமென்ற தியானமொன்று
வுத்தமனே பிரணவத்தின் தியானமொன்று
பின்றும் நிராதார தியானமொன்று
நிசமான தியானவகை பத்துமைந்தா
அண்டர்தொழுஞ் சற்குருவைத் தியானம்பண்ணி
யகண்டபரி பூரணமா யறிவில்நின்று
நன்றாக சிவயோகந் திருந்துகொண்டால்
நாதாந்த முத்தரென நாடுவாரே. (உ௫எ)

## ச மா தி வ கை.

நாடவே சமாதியைந்துஞ் சொல்லக்கேளு
நாதாந்தத் தத்துவலய சமாதியொன்று
கூடவே விகற்பமாஞ் சமாதியொன்று
குறியான நிர்விகற்பச் சமாதியொன்று
தேடவே சஞ்சார சமாதியொன்று
தீர்க்கமுள்ள அருள்பெருகுஞ் சமாதியொன்று
ஆடவே சமாதிவகை யைந்தும்பார்த்து
அஷ்டாங்க யோகமென்ற தெட்டில்லே. (உ௫அ)

## இ ய ம வ கை.

நில்லப்பா வஷ்டாங்க மெட்டுமாச்சு
நேராக வியமமென்ற பத்துங்கேளு
சொல்லப்பா லக்ஷணத்தைச் சொல்லுகிறேன்கேள்
சுகமான கரமிருக பக்ஷியென்றும்
விள்ளப்பா யுந்தனிட சுகதுக்கம்போல்
மேன்மைபெற பார்க்கவுந் திசையென்பார்கள்

நல்லப்பா சித்தாந்தி சொல்லுவதுமைந்தா
நாட்டமுடன் வேதாந்தி சொல்லுவதுங்கேளே. (௨௧௯)

கேளடா கைகடந்தைம்பொறி வழியில்நின்று
இருமையுட னகண்டமென்ற பூரணத்தைமைந்தா
வாழடா வறிந்துபர சித்தனுகி
வகையான ஆதிவர்ணச் சிரமத்தாலே
கோளடா விகற்பமெல்லாங் கண்டுதள்ளி
கூர்மையுடன் மாறும லங்கிரியையாய்ச்சார்ந்து
ஆளடா அல்லின்ற நீரைப்போலே
அமர்ந்திருக்க அங்கிசைதா னென்பாரப்பா
மாளடா மயங்கிநின்ற பொய்யைவிட்டால்
மகத்தான சத்தியந்தா னென்பார்தானே. (௨௨௦)

தானென்ற வஸ்துவையும் தவிரவேறே
சாதகந்தா னில்லையென்று சஞ்சலித்து
பானென்ற சத்தியமாம் வாக்குக்காயம்
பத்தியுடன் சுத்தமதாய்ப் பதிவாய்நின்று
ஆனென்றே யிருக்கிறதை யாற்றிகமென்பார்
அன்னுதசீர சரீரத்தை சுபவமாக்க
கோனென்று நிதானித்து பின்னையொன்று
கூறுதே ஆற்றிக மென்றுசொல்லே. (௨௨௧)

பிரம்மம்.

சொல்லாது ருதுகால மில்லாநேரம்
சுகமான பெண்வெறுத்தால் பிரம்மமென்பார்
உள்ளான சரீரமே சுபாவமாக
வுத்தமனே லக்ஷணமா விருத்தியாலே
நல்லான பிரம்மமதே சுபாவமென்று
நன்மையுட னிரந்தரமு மாலோசித்தால்
வில்லான நிறுபிரம்ம சரீரமென்று
விரித்துரைப்பார் வேதாந்தி யறிவார்பாரே. (௨௨௨)

பாரப்பா சித்தாந்தி சொல்லுவாரும்
பதிவான சமுசார மாகாதென்பர்
நேரப்பா தன்னுடம்பில் வருத்தம்விட்டு
நிசமாக சுகவருந்த நிதயந்தன்னில்



சாரப்பாத் தன்னானந்தம் வந்தாலுந்தான்
சாதகமாய் சத்துருவுக் கிதமேசெய்யில்
பேரப்பா ஆக்ஷேப மிதையென்பார்கள்
பேய்மக்க ளிதுவல்ல சொல்லக்கேளே. (௨௨௩)

சொல்லக்கேள் வேதாந்த சாஸ்திரமேசெம்மை
குதென்றலைந்த சமயமெல்லாந் தொல்லையென்று
அல்லக்கேள் திடப்படுத்த ஆக்ஷேபமாகும்
அடங்காத சத்துருவால் வியாதியிடை
விள்ளக்கே ளிதுகளிலே புத்திமலமற்று
விபரமுட னிருக்கிறதே சமயமென்பார்
சொல்லக்கேள் சுகதுக்க முநிரபந்தம்
செகமாய்கை மாறுபி மானங்கேளே. (௨௨௪)

காணடா அபிமான சொர்ப்பனத்தை
கசடான மனதாலே தாங்கலற்று
பேணடா தொய்தநிலைப் பெற்றாராகில்
பெருகின்ற சமயமிது பிலமாய்ப்பாரு
ஊணடா காரியத்தில் மனதிக்கோலை
உருகாம லிருக்கிறதே தரித்திரமென்பார்
தோணடா வேதாந்தத் தாலேமுத்தி
சுத்தமுட னமைத்தொன்று மில்லைத்தானே. (௨௨௫)

இல்லையடா யிதைவிட்டால் முத்தியென்று
யேகாந்த யெக்கியமா முனிதான்சொன்னார்
தொல்லையடா மற்றதெல்லா மென்றுபூண
சுகமான திருதியென்ற திறவுமாச்சு
சல்லையடா ஆகாரச் சுருக்கில்மைந்தா
சருணையுடன் மிதாகார மென்பாரையோ
அல்லையென்ற சொற்பனத்தில் பத்தைத்தான்சன்றி
அடங்கிநின்றுற் பிரபஞ்ச மகிலத்தானே. (௨௨௬)

அகிலமெல்லாந் தானுகி அசைவுமற்று
அகண்டபரி பூரணமா யிருந்தோம் காம்தான்
தகிலமெல்லா முண்டசலம் போலேநின்று
தன்னைப்போல் லவனைப்பார்க்கி லமிர்தசாரந்தான்

பகிலமென்றப் பிரதிஞையும் நிறந்தன்னாலே
பரவிநின்ற பாசத்தைப் பருவமாக
நகிலமென்ற காமமொடு குரோதந்தன்னை
ஊர்ச்சவுசம் பிரச்சவுச மென்பார்காணே. (௨௬௭)

காணப்பா வேதாந்த சாரத்தாலே
காலமென்ற இருதிகளை காணேனென்று
வீணப்பா வந்ததில்லைப் போனதில்லை
வேதாந்த குருமுகத்தை தெரிந்துகொண்டு
தோணப்பா வெக்கால வஸ்துதானும்
சுகமாக விருப்பதுவே சவுசமாச்சு
ஆணப்பா யிமமென்ற பதினொன்றுஞ்சொன்னேன்
அறிந்துகொண்டு நியமமதை அருளாக்கேளே. (௨௬௮)

நியம வகை.

அறிவான மறையினுள்ளே பிரிந்ததென்னும்
அப்பனே நிஷ்களமாஞ் சந்திராயணத்தை
நெறியான விரதமதாய் சரீரம்வத்தி
நேர்மையுட னிருப்பதையோ தபசென்பார்கள்
விரிவான சத்தியந்தா னென்பதேது
விபரமெல்லாம் வித்தையென்று சொல்வதேது
சரியாக தானென்னப் பட்டதாரு
சங்கையுடன் நானென்ற சொல்தானோ. (௨௬௯)

சொல்லான நமக்குவந்த சொந்தமேது
சோத்திபந்தான் வந்தவகை யெதுதானென்றும்
நல்லான வருத்தமதாய்ப் பார்த்துபார்த்து
நன்மையுட நிறந்தாமு மாலோசித்து
பொல்லாது பூணதெல்லாம் விருத்திபண்ணி
புத்தியுடன் கிடைப்பதுதல் தபசாச்சப்பா
நில்லாமல் கிடைத்தமட்டும் சந்தோஷித்து
நன்மையுட னிருப்பதுவே சந்தோஷங்காணே. (௨௭௰)

காணடா பிரம்மாதி லோகத்துள்ளே
கலந்தசுரான் பிடமுதற் சிந்தித்தெண்ணி
தோணடா நரகம்போல் வெறுப்புவந்து
சொர்பனம்போல் சத்தென்று தவிரத்தள்ளி



ஊணடா வுண்மையென்ற வேதாந்தத்தை
உணர்ந்து சச்சுதாநந்த மயமாகநின்று
பூணடா தடையற்றுத் தெரிந்துநின்றால்
புத்தியுட னானந்த வடிவுதாமே. (௨௭௧)

வடிவாக யிருப்பதுவே சந்தோஷமாகும்
வரிசையுடனாகம புராணந்தன்னை
படிவாக விட்டுவிடா தின்றுகொண்டு
பத்தியுடன் வேதாந்த பொருளென்றெண்ணி
முடிவாக அத்திவரித் தடிமேல்நின்று
முன்பின்னாய் யாருகிற முறையாதென்று
அடியார்கள் சொல்லுகிற கருவைக்கேளு
அவர்சொல்லும் பூரணமு மறிந்துபாரே. (௨௭௨)

அறிந்துகொண்டால் ஆற்றிக மிதுவேயாச்சு
அருள்பெருகத் தெரிகின்ற பொருளையெல்லாந்
தெரிந்துகொண்டுபுண்ணியமாம் காலதோஷந்
செயலறிந்துகொடுப்பதுவே தானமென்பார்
அறிந்துநின்று குருச்சொல்லைத் தானுட்கொண்டு
மார்க்கமுடன் முக்குணமும் மனமொன்றாக
சொரிந்துமிக தன்னுடைய சொத்தையெல்லாம்
சுகமாக குருபதத்தில் தியானம்பண்ணே. (௨௭௩)

பண்ணடா சிவனயன்மால் வேதியோர்க்கும்
பதிவான அரதேசி பரதேசிக்கும்
நண்ணடா க்ஷத்திரியர் வைசியரோடு
நலம்பெறவே தரணிதன்னில் பிறருக்கெல்லாம்
ஊணியே தானதர்மஞ் செய்யென்றேதான்
உத்தமனே உலகத்தோர் சொல்வாரையா
துண்ணியே தனந்தேகம் சுகபோகம்போலே
சுகமாக சகலமெல்லாந் துலக்கக்கேளே (௨௭௪)

கேளடா சகலசித்தும் பொசித்ததெல்லாங்
கிருபையுடன் நமக்கெனவே திருத்திக்கொண்டு
நாளடா வொருமித்துக் கவுனிப்பார்க்குபுண்ணியம்
நன்மையுட னச்சதென்ற அறிந்துகொள்ளு

போண்டா சாஸ்திரத்தின் பயனேட்டப்பா
வரிசையாய்க் கேட்கிறதே சிரவணமாகும்
ஆண்டா சாஸ்திரங்க ளெல்லாம்விட்டு
அசைந்தாடும் விருத்திபெல்லாம் பிடித்துத்தள்ளே. (உஎ௫)

தள்ளியுந்தன் னிழல்போலே குருவானபின்னே
சச்சிதா னந்தமயந் தானென்றெண்ணி
தெள்ளிமையாய் தெளிவுக்குச் சித்தாந்தத்தில்
சேர்ந்துகொண்டு கேட்கிறதே சிரவணமாகும்
நள்ளினமாம் பிரவிர்த்தி நிவர்த்திபண்ணி
நன்மையுட னிருக்கின்ற பிரஜைகளெல்லாம்
அள்ளிமனப் பூரணமே தெய்வமென்று
அறிவிக்கும் புத்தியடா சிரவணமாமே. (உஎசா)

ஆமப்பா சந்தான வியாபாரத்தில்
ஆதாரம் வெகுகோடி யமர்ந்தாலுந்தான்
தாமப்பா அதின்மேலே அபேக்ஷைவிட்டால்
சங்கையுடன் மரியாதை இலட்சையென்பார்
சாமப்பா கேட்டிருந்த ஞானமெல்லாம்
சங்கையில்லா நிலைகுலைந்து தானேசந்தி
நாமப்பா சலியாமல் பெண்டீர்பிள்ளை
நன்மையுள்ள பாசமெல்லாம் நேசிச்சென்னே. (உஎஎ)

எண்ணியதோர் மாபாதி வந்தாலுந்தான்
பெண்மகனே அனிசகத்தி லிருந்துகொண்டு
துண்ணியந்த சித்தாந்த நிலையில்நின்றால்
துலங்குகின்ற வகையென்று சொல்லலாகும்
உண்ணியந்த சோனைவிட்டு தெளிவுவந்தால்
உத்தமனே மதியென்பா ருண்மையாக
குண்ணியந்த வேதாந்த நிலையில்நின்று
குருவான பூரணத்தைக் குவிந்துநோக்கே. (உஎஅ)

நோக்கென்று சொன்னதிலே நோக்கநோக்கு
நோக்கினதால் மதியென்று சொல்லலாகும்
வாக்கென்றும் குருசொன்ன மந்திரத்தைசெபித்து
மார்க்கமுட னின்றதால் சிவமதாச்சு



போக்கென்று மனதற்று வேதாந்தம்பார்த்து
புத்தியுடன் பூரணமாய் தள்ளியெல்லாந்
தூக்குகின்ற மோனமுற்றால் சிவமுமாச்சு
சுகமாக மற்றதெல்லாஞ் சிவமல்லபாரே. (உஎகூ)

பாரப்பா குருசொன்ன சாஸ்திரத்தின்படியே
பத்தியுடன் நடக்கிறதே விரதமென்பார்
நேரப்பா யெந்தெந்தக் காரியங்கள்வந்தும்
நேர்மையுள்ள துக்கம்வந்தாலும் பிரமமென்று
தேரப்பா நிறந்தரமும் வேதம்பார்த்து
செம்மையுடன் நிற்பதுவே விரதமென்பார்
சாரப்பா மேமென்ற பத்துஞ்சொன்னேன்
சங்கையுட னிருவகையுந் தானேகாணே. (உஅ௦)

காணவே யிருவகையும் பார்ப்பாளுகில்
கலங்கிமனஞ் சுவரில்லாச் சித்திரம்போலாம்
பூணவே அடிப்படையை வைக்குமுன்னே
பூட்டுகின்ற குளிகைக்கு மொக்குமொக்கு
பேணவே காயசித்தி பண்ணுமுன்னே
பேறான சதுர்யுகங் கண்டபேர்க்கும்
தேணவே செடத்தோடே முத்திகாணேன்
சொக்கினபின் முத்தியென்ற சொல்லுங்காணே. (உஅக)

## ஆசனமொன்பது விபரம்.

காணடா ஆசனத்தை விரித்துச்சொல்வேன்
கருவாக கோமுக ஆசனத்தைக்கேளு
தோணடா முழந்தாட்கு ளச்சிரெண்டில்
சுகமான பதமிருக்க கொற்றிகமாச்சு
பூணடா சிங்கா சனத்தைக்கேளு
பூரணமாய் ஒட்டியான பந்தம்பண்ணி
பேணடா முழந்தாள்மேல் கரங்கள்நீட்டி
பிராணனென்ற நாசியைப் பார்ப்பார்பாரே. (உஅஉ)

பாரப்பா பத்திரா சனத்தைக்கேளு
பறிவாகத் தானிருந்து காலிரண்டும்
காரப்பா பிரகாலே கையால்கட்டி
சன்னாயிருந்து தானிருக்க ஆசனமுமாச்சு

சாரப்பா முத்தான ஆசனத்தைக் கேளு
சங்கையுடன் பரடுமேல் பரடுபோட்டு
சேரப்பா குதத்துக்குள் குதிகால்வைத்து
செம்மையுடன் தானிருக்கத் திறந்தானமே. (உஅங)

ஆமப்பா கோமுகா சனத்தைக்கேளு
அங்கமுடன் முழங்கால்மேல் முழங்கால்போட்டு
தாமப்பா பாதம்ரெண்டில் கைகளையூணித்
தானிருக்க கோமுகா சனமதாச்சு
நாமப்பா வீரமென்ற ஆசனத்தைக்கேளு
நாட்டமுட னிடக்கால்மேல் வலக்கால்போட்டு
ஓமப்பா கோமுகம்போ லிருந்துகொண்டால்
உத்தமனே வீரமென்ற வுறுதிபாரே. (உஅச)

உறுதியுள்ள பத்மாசனத்தை சொல்லக்கேளு
உண்மையுடன் பாதம்ரெண்டும் தொடைமேலேற்றி
சுருதியுடன் கைரெண்டும் முழங்கால் வைத்து
சுத்தமுடன் தன்னகத்தை சுகமாய்ப்பார்க்க
பரிதியுள்ள பத்மாசன மிதென்று
பதிவான வேதாந்தப் பெரியோரெல்லாம்
வரிதியுடன் யெக்கியமா முனிதானெசொல்ல
மகத்தான ஆசனத்தை மகிழ்ந்தார்தானே. (உஅரு)

காணவே மயூர சனத்தைக்கேளு
கருணையுடன் கைரெண்டுந் தரையிலூன்றி
ஊணவே முழங்கையை யுந்திமேல்வைத்து
வுகந்துநின்ற சிம்மம்போ லுறுதிகொள்ளு
பேணவே சுகமுத்தா சனத்தைசொல்வேன்
பேணிமனங் கொண்டபடி யிருக்கநன்று
பூணவே யொன்பதுக்கும் விபரஞ்சொன்னேன்
பூரணமாய்ப் பிராணாப் பொருளைக்கேளே. (உஅசு)

## பிராணாயாமம்

பொருளான ரேசகந்தான் விடுவதப்பா
புத்தியுடன் பூரகந்தான் உள்ளேவாங்கல்
அருளான கும்பகந்தான் அண்டத்தெல்லை
அரகரா சவுபீசம் மந்திரமார்க்கம்



திருளான நிற்பீசம் மந்திரத்தைவிட்டு
சிவசிவா வெளிதனிலே பூரித்தேகில்
உருவாக அஞ்சுவிதம் வெளியாய்ச்சொன்னேன்
உத்தமனே ஆசனத்தி லிருந்துபாரே. (உஅஎ)

பாரப்பா மாத்திரைதான் முப்பத்திரண்டு
பரிவாக பூரிப்பாய் மூலத்துள்ளே
சாரப்பா மாத்திரைதான் அறுபத்திநாலு
சங்கையுடன் கும்பித்துப் பாருபாரு
காரப்பா மாத்திரைதான் பதினாறாக
கனிவாக ரேசிப்பாய் தவுடடாமல்
நேரப்பா யிம்முறையைப் பழகம்பண்ணி
நேர்மையுடன் பிரம்மதல மறிந்துநேதே. (உஅஅ)

அறிந்துபிரம்ம நிலையறிந்து நன்றாயோது
அதின்பிறகு விஷ்ணுவிலே அமர்ந்துவோது
தெரிந்துருத்திர நிலையறிந்து திறமாயோது
சிவசிவா மயேச்சுரத்தில் திரமாயோது
வருந்திமன நிலையறிந்து மைந்தாமைந்தா
மகத்தான சதாசிவத்தில் வந்துகூடி
விரிந்ததலந் தனையறிந்து ஓதியேற
விள்ளுகிறேன் பிராணாயம் ஒன்றாய்ச்சே. (உஅகூ)

ஆச்சப்பா பிராணாய மறிந்துசெய்தால்
அனேகமென்ற பாவமெல்லா மகன்றுபோகும்
மூச்சப்பா பிராணாயஞ் செய்யச்செய்ய
முக்கியமுடன் தேகத்தில் வேர்வைகொள்ளும்
நீச்சப்பா மும்மலமுங் கழிந்துபோகும்
நேர்மையுடன் நாடியெல்லாஞ் சித்தியாகும்
காச்சப்பா திசைநாதங் காதிற்கேழ்க்கும்
கருணையுடன் பிராணாயங் கருதக்கேளே. (உகூ0)

கேளப்பா யெட்டுவகை பருவமுண்டு
கிருபையுடன் புலத்தியனே சொல்லக்கேளு
காளப்பா கழண்டுவெகு வேர்வையானால்
கருத்துடனே தம்பிக்கும் ரெண்டாம் பக்ஷம்

வாளப்பா அக்கினிதான் சொலித்துநின்று
மகத்தான தீபனமா மூன்றுபக்ஷம்
கேளப்பா யில்லாமல் வாசியேறி
குருபதியில் தீபமுண்டாம் நாலாம்பக்ஷம். (உகூக)

பட்சமுடன் தன்னறிவே சாட்சியானல்
பரிந்து பிரகாசிக்கு மைந்தாம்பட்சம்
யிச்சையுடன் குண்டலியிற் சத்தங்கொள்ளும்
யெவ்மகனே சொல்லுகிறேன் ஆறும்பட்சம்
அச்சமற யெழுக்குள் மைந்தாகேளு
ஆகாச கெவுனமடா அதிகமாகும்
மெச்சவே தாரிஷ்டி யறிபப்பண்ணும்
மெய்ஞ்ஞான மெட்டினுள் மேன்மைத்தானே. (உகூஉ)

காணவே யெட்டினிலே திட்டமானல்
கர்மமென்ற தீவினைகள் காணுதோடும்
பூணவே ஆதாரஞ் சித்தியாகும்
பூரணமும் காரணமும் பொருந்துமைபா
தோணவே சொரூபமதாய் சோதியாகும்
சுகசிவ பிராணகலே சோபிக்குமபாரு
பேணவே பிராணபம் பெலத்துதானல்
பேரண்டஞ் சித்தண்டந் தான்தானச்சே. (உகூங)

## பிரத்தியாகார வகை.

ஆச்சப்பா சொல்லுகிறேன் பிரத்தியாகாரம்
அப்பனே வாசியின் வழியிற்சென்று
மூச்சப்பா நடத்திவைக்கு மிந்திரியப்பாம்பு
முனையரித்து மரிக்கிறதே பிரத்தியாகாரம்
நீச்சப்பா நிலையான பிரத்தியாகாரம்
நிசமாகு மாறுவித முண்டுபாரு
பேச்சப்பா பேச்சரிந்து ஆறுவிதந்தன்னைப்
பெலமான புலத்தியனே சொல்லக்கேளே. (உகூச)

சொல்லக்கேள் சரீரமென்ற பிரத்தியாகாரஞ்
சுகமாகச் சமாதியிலே யிருக்கவென்று
விள்ளக்கேள் அரியென்ற சிவமதொன்று
விபரமுடன் கண்டுணர்ந்து மேன்மையாகி



அல்லக்கேள் நாடிசுத்தி யானபின்பு
அப்பனே யிளமையெல்லாம் காப்பதென்றுஞ்
சொல்லக்கேள் ரெண்டுவிதங் கண்டுகொள்ளு
சிவசிவா யிந்திரியச் செயல்தான்பாரே. (உகூரு)

பாரப்பா யிந்திரியந் தன்தன்போக்காய்ப்
பதியைவிட்டு போகாமற் சமாதிதன்னில்
நேரப்பா பூட்டறுத்து நின்றால்மக்காள்
நேர்மையுடன் பிராணனென்ற பிரத்தியாகாரஞ்
சேரப்பா நாடிசுத்தி செய்தபின்பு
சிவசிவா வுச்சிமுதற் புருவந்தொட்டு
காரப்பா தோத்திரமுந் தோக்குசச்சு
கருவான சிங்குடனே ஆக்கிராணங்காணே. (உகூசா)

காணவே அடிநாக்குக் கண்டம்நெஞ்சு
கருவான வுதிரமொடு நரம்புநாபி
தோணவே தொடைமுழங்கால் பாதங்கேளு
தொகுத்துநின்ற வங்குஷ்டங் களிலேமக்காள்
பூணவே பிராணனைத்தான் தானம்விட்டு
புத்தியுடன் அழைக்கிறது கலைகீழாகும்
பேணவே பிராணனென்ற பிரத்தியாகாரம்
பிரதான மானநிலே பேசுவேனே. (உகூஎ)

பேசுவேன் அந்தரங்க கரணந்தன்னை
பிரபஞ்ச மாய்கைதன்னை நீக்கிமைந்தா
தேசுவென்ற காரியமாம் வஸ்துதன்னைத்
தெரிந்துகொண்டு சங்கற்ப விகற்பமெல்லாம்
ஆசுவென்ற மனைப்பித்து பிராணதாரை
அங்கமுடன் பண்ணுகிற யோகந்தன்னில்
வீசுகிறேன் ஆகமென்ற வேதாந்தத்தை
விபரமுடன் ஞானமதி நிருத்தல்நன்றே. (உகூஅ)

நன்றான காரியந்தான் பிரத்தியாகாரம்
நன்மையுடன் தனதான்னியம் பொன்னுமண்ணும்
நின்றாடும் புத்திரருஞ் சகலவித்துங்கண்டால்
நேர்மையுடன் நரகம்போல் காணுமக்காள்

ஒன்றான வைராக்கியம் வந்துதானால்
உத்தமனே விடுதல்மெத்த வசத்திநன்று
டன்றான சருவசங்கம் பிரத்தியாகாரம்
பதிவித்து வாமவேதாந்த பலனேக்காரே. (௨௯௯)

காரப்பா சாக்ஷியெங்கும் நாமாய்நின்று
கவிழ்ந்துநின்ற மாயமெல்லாம் நமக்குக்கீழே
சாரப்பா நிறந்தரமும் உணர்த்துநின்று
சகலபிர பஞ்சமெல்லா மிருக்குவென்று
நேரப்பா நின்றவனே அவன்தான் புத்தன்
நினைவாக ஆறுவகை யரிவித்தேதான்
பேரப்பா ஆறவிதத் தாரணையைச் சொல்வேன்
பெருகிநின்ற பூதமந்த்ர சமத்தாய்க்கேளே. (௩௱)

## தாரணை விபரம்.

கேளப்பா சரீரத்தில் பஞ்சபூதம்
கிறுமையுட் ஞடுகிற தானத்துள்ளே
ஞளப்பா மண்டலத்தில் வர்ணமூர்த்திச்
சுகமாகத் தானிருக்க பிராணதாரை
வாளப்பா பதிவான மூலத்துள்ளே
வணக்கமுடன் பிராணனைத்தான் தரிக்கப்பண்ணி
ஆளப்பா சிறமத்தோ டெண்ணப்பண்ணும்
அப்பனே ராப்பகலாய்க் காணுங்காணே. (௩௱௧)

காணப்பா குருவசனந் தெரிந்துகொண்டு
கலந்துநின்ற மாய்க்கையோடு மாயாவின்பம்
பேணப்பா சைதன்னிய மித்தமூன்றும்
பிலமான ஆபிசம் போலேபாரு
தோணப்பா மறைந்திருக்கக் கண்டானுந்தான்
தகளருத்து தீர்க்கமுடன் முத்தியாக
பேணப்பா அறிவுடனே யென்னேரந்தான்
பிலமாக நிற்கிறதோர் நிறந்தான்பாரே. (௩௱௨)

## தியான விபரம்.

பாரப்பா லோகத்தில் பிரமந்தாமென்று
பதிவாக நிச்சயித்து மனதுபூண்டு
நேரப்பா அறிவல்லோ தாரணையுமாச்சு
நிலையான தியானமதின் நேர்மைகேளு



காரப்பா அகிலமெல்லாம் போதமாக
கண்கண்ட சடமெல்லாம் அகண்டமாகி
நேரப்பா வெளியெல்லாம் நிர்மலமாய்க்கரண
நேர்மையுள்ள தியானமிது நினைவாய்க்காணே. (௩௱௩)

காணவே சமரபக்ஷம் பூர்வபக்ஷந்தன்னில்
கலந்துநின்ற ஆசனத்தில் கருணைவைத்து
பூணவே குண்டலமுங் கிரீடமுஞ்சாத்தி
புகழுள சரஸ்வதியும் வாமபாகம்
பேணவே பரிவாரஞ் சூழ்ந்திருக்க
பெருமையுட னிருதயத்தில் தியானம்பண்ணி
தோணவே மானதமாய்ப் பூசைசெய்தால்
சுத்தமுடன் தியானமடா சுகமாய்ப்பாரே. (௩௱௪)

## மால் தியானம்

பாரப்பா மாலுடைய தியானங்கேளு
பத்தியுடன் பச்சைவர்ண ரூபமாக
நேரப்பா சங்கொடு சக்கரமுமாக
நிசமான புஷ்பமொடு சக்கரங்கள்சாத்தி
காரப்பா குண்டலமுங் கிரீடம்வைத்து
கண்ணரிந்த முத்தினாயுந் துளசிமாலை
சேரப்பா லக்ஷ்மியும் வாமபாகம்
தீர்க்கமுடன் தியானிக்கத் தியானமாச்சே. (௩௱௫)

ஆச்சப்பா ருத்திரனை தியானஞ்செய்து
அரகரா அஞ்செழுத்தும் ஆயுதங்களோடு
காச்சப்பா குண்டலமுங் கிரீடம்வைத்து
கருணையுள்ள ருத்திரியும் வாமபாகம்
பேச்சப்பா தானிருத்தி மவுனமாக
பெருமையுடன் யிருதயத்தில் பேணிப்பார்க்க
மூச்சப்பா அடங்கிநின்ற தியானமாச்சு
முத்தியுடனே தனித்து யிருந்துபாரே. (௩௱௬)

இருந்துகொண்டு மயேசுரனைத் தியானம்பண்ணி
யிருள்கண்ட வெளிபோலே யின்பங்கொண்டு
வருந்திநின்ற குண்டலமுங் கிரீடஞ்சாத்தி
மகத்தான மயேஸ்வரியை வாமம்வைத்து

சொரிந்தமுர்தம் பூரணமாய் போதங்கொண்டு
  சுகசிவ பிராணகலை சுத்தமாக
அருந்தவமா யிருதயத்தில் நினைக்கமைந்தா
  அப்பனே மயேஸ்வரனார் தியானங்காணே. (௩௱௭)

## சதாசிவத் தியானம்.

காணவே சதாசிவனார் தியானங்கேளு
  கருணையுடன் பஞ்சவர்ண ரூபமாக
தோணவே மனோன்மணியும் வாமபாகம்
  சுகமாக தேவகணஞ் சூழ்ந்துநிற்க
பேணவே யிருதயமாங் கமலந்தன்னில்
  பிரியமுடன் தானினைந்து தியானித்தாக்கால்
பூணவே நினைத்தவண்ணங் கண்ணிற்காணும்
  புனிதமுள்ள தியானமதை பூண்டுபாரே. (௩௱௮)

பாரப்பா யிப்படியே ஆறுவகைத்தியானம்
  பதிவான மண்டலத்தில் மூன்றுவகைத்தியானம்
சேரப்பா தானிருந்து வுபாசிப்பார்கள்
  நேர்மையுள்ள தேவாதி தியானமாச்சு
வேரப்பா விஸ்வமென்ற தியானஞ்சொல்வேன்
  விளங்கிநின்ற பிரபஞ்சந் தான்தானென்று
காரப்பா அகண்டவெளி ரூபமாக
  கருணையெனத் தானிருக்கத் தியானமாச்சே. (௩௱௯)

## அத்தோயுதம்.

ஆச்சப்பா அத்தோய தியானங்கேளு
  அண்டரண்ட புவனமெல்லாம் தாமென்றெண்ணி
மூச்சப்பா சகலவுயிர் தாமென்றெண்ணி
  முடிவில்லா மந்திரமுந் தாமென்றெண்ணி
நீச்சப்பா பஞ்சகர்த்தாள் தாமென்றெண்ணி
  நிசமான பரம்வெளிதான் தானென்றெண்ணி
பேச்சப்பா பேசாது மவுனந்தானாய்ப்
  பேரண்டத் தட்பொருளாய்த் தியானஞ்செய்யே. (௩௱௰)

## சமாதி விபரம்.

செப்பப்பா தியானமது பத்துஞ்சொன்னேன்
  சிவசிவா சமாதிபத்துஞ் செப்பக்கேளு



மெய்யப்பா தத்துவலய சமாதியப்பா
  விளங்கிநின்ற பத்துமதை நன்றாய்ப்பார்த்து
பொய்யப்பா வென்றறிந்து புருவமேவி
  பூரணமாய் கற்பூர தீபம்பார்த்து
மெய்யப்பா மய்யத்தில் நின்றாயானால்
  மகத்தான தத்துவலய சமாதியாச்சே. (௩௱௰௧)

ஆச்சப்பா தத்துவலய சமாதிசொன்னேன்
  அரகரா சவ்விகற்ப சமாதிகேளு
நீச்சப்பா நிலையறிந்து வாசியாலே
  நிறைந்தபரி பூரணமாய்த் தீபம்பார்க்கில்
காச்சப்பா கருவிகர ணாதியென்ற
  கசட்டறுந்து வெளியொளியாய்க் கண்டுகொண்டால்
பேச்சப்பா சவ்விகற்ப சமாதியாச்சு
  பிலமான நிருவிகற்ப சமாதிகேளே. (௩௱௰௨)

கேளடா நிருவிகற்ப சமாதிதன்னை
  கிருபையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
வாளடா தன்னாலே சாக்ஷியாக
  மகத்தான அண்டமெல்லாம் தான்தானாக
கேளடா சகலவஸ்தும் போதமாக
  கண்டதுவும் கேட்டதுவு மாயமாக
ஆரடா ஆனந்தங் கொண்டாயானால்
  அரகரா நிருவிகற்ப மதுதான்காணே. (௩௱௰௩)

காணவே நிருவிகற்ப சமாதிசொன்னேன்
  கருணையுள்ள சஞ்சார சமாதிகேளு
தோணவே அண்டசரா சரங்களெல்லாம்
  சுகமாக வேறல்ல நாமென்றெண்ணி
பேணவே தானிருந்து திரகுக்ஷம்
  பிரியமுடன் கண்டறிந்து வாசிபூட்டு
ஊணவே நடக்கும்போ திறக்கும்போதும்
  வொடுக்கமுடன் மவுனமாய் வுலாவுவாயே. (௩௱௰௪)

வாயான மேல்வாசல் பூட்டும்போது
  மகத்தானதிக்குயெட்டும் ஒடுக்கமாச்சு
மாயாத ஒடுக்கமதில் ஒடுங்கிபந்த
  மகத்தான அனுக்கிரகம் வலஞ்சென்றேறி

தாயான சிரமதே போதமாகத்
  தானிருக்க சஞ்சார சமாதியாச்சே
தோயாத சஞ்சார சமாதிகொண்டு
  சுகமாக ஆரூட சமாதிகாணே. (௱௰௫)

காணவே ஆரூட சமாதிதன்னை
  கருணையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பூணவே தத்துவலய சமாதிபெற்று
  புகழான சவ்விகற்ப சமாதிபெற்று
பேணவே நிருவிகற்ப சமாதிபெற்று
  பிலமதாக சஞ்சார சமாதியாக
தோணவே ஆரூட சமாதிகொண்டால்
  சுத்தமென்ன அசுத்தமென்ன ரெண்டுமொன்றே. (௱௰௬)

ஒன்றான ஆரூட சமாதிகேளு
  உண்மையுள்ள புலத்தியனே யருமையாக
கண்டதொரு காக்ஷியெல்லாமனத் தீபமென்று
  கால்பிடித்து நடுவேறி முடிமேலாக
விண்டதொரு பஞ்சரிவை யறிவால்நீக்கி
  வேதாந்த தரும்வெளி வெளித்தன்னோடே
நின்றாடிக் கொண்டுசிவ ஜோதியாகி
  நின்றதினால் ஆரூட சமாதியாச்சே. (௱௰௭)

ஆச்சப்பா சமாதியஞ்சும் நன்றாய்ச்சொன்னோம்
  ஆதிதொடுத் தந்தவரை நன்றாய்ப்பாரு
பேச்சப்பா தானிருந்து நன்றாய்ப்பாரு
  பெருகிநின்ற அஷ்டாங்க திட்டம்பாரு
மூச்சப்பா முன்னிலைபாய் நிருத்திக்கொண்டு
  முத்தியுள்ள நவக்கிரக சூக்ஷக்கண்டு
பாச்சப்பா அனுக்கிரக பதியில்நின்று
  பாதாதி கேசமுதல் தன்னைப்பாரே. (௱௰௮)

தன்னைத்தான் தானறிந்து பார்க்கும்போது
  தத்துவமாய் நின்றதொரு தொண்ணூற்றாறும்
மெய்ன்னத்தான் தலையாது ஆகாயசம்
  மென்சொல்வேன் பஞ்சகர்த்தாள் பஞ்சபூதம்



கண்ணைத்தான் தானறிந்து கண்ணில்காணும்
  கலையான ரவிமதியும் சுடர்கள்மூன்றும்
உண்ணத்தா னுகந்துமனே மூணிப்பார்க்க
  மூண்மையென்ற நிச்சயத்தை வுரைக்கொண்ணாதே. ()

ஒண்ணான நிச்சயத்தை உரைக்கவென்றால்
  உண்ணுக்கும் அண்ணுக்கு மொன்றாய்காணேன்
கண்ணான பேரொளியை யென்னசொல்வேன்
  கருப்பல்ல வெளுப்பல்ல சிகப்புமல்ல
விண்ணான நீலமல்ல பச்சையல்ல
  விளம்புதற்கு வரி தான அண்டத்துள்ளே
பண்ணான பாழ்வீட்டு யிராருக்குள்ளே
  பாய்ந்துதன்னை பார்க்கவெல்லா மிருளாய்ப்போச்சே. ()

இருளான யிருளிலிட ஒளியைப்பார்க்க
  யென்னசொல்வே னதினுடைய யின்பந்தன்னை
மருளான மனம்நிருத்தி மனக்கண்கொண்டு
  மாசற்ற யிருலொளியை மகிழ்ந்தோர்தானும்
அருளான பொருளிலே தானேதானாய்
  அமர்ந்துவெளி தனையறிந்து ஒளியைப்பற்றி
வெகுளாமலிரு லருளில் தானேதானாய்
  விளங்குமருள் பொருளெனவே ரேவிப்பாரே. (௱௨௰௧)

மேவுகின்ற ஆதியந்த மூர்த்திக்குமுன்னே
  மெய்ஞ்ஞான யிருளிலே அருளுண்டாச்சு
தாவுகின்ற அருளதிலே ஒளியுண்டாச்சு
  தண்ணொளிவு தானதனால் வெளியுண்டாச்சு
கூவுகின்ற பரவெளியால் சதாசிவனே
  கூர்மையுடன் பேரண்டம் படைத்துநின்றார்
பாவுகின்ற மயேசுரனார் சத்தத்தோடே
  பதிவான வாய்வுதனை படைத்தாரப்பா. (௱௨௰௨)

பாரப்பா ருத்திரனார் தவத்தாலந்த
  பக்குவமாய் அக்கினியை படைத்துநின்றார்
போப்பா பெற்றதொரு பிரம்மாவுந்தான்
  பெருகிநின்ற பூமிதனைப்படைத்தாரப்பா
கோப்பா திருமால்தான் கருணையாலே
  நிச்சயமாய்ச் சலமதனை படைத்துநின்றார்

காரப்பா முன்சொன்ன சத்திசிவம்ரெண்டும்
கருணையுடன் ரவிமதியு மானார்தானே. (கஉங)

தானேதா னாகின்ற பெருவர்தானும்
தனித்துநின்ற பராபரமாஞ் சுழியினுள்ளே
வானேதான் செநியெனவே சகலசித்தும்
வரிக்கிவிளை யாடிமிக வானமுட்டி
ஊனேதான் தானெனவே முப்பாழுக்கப்பால்
ஓடுங்கின்ற பாழ்வீட்டுக்குள்ளே சென்று
நானேதா நீயென்று அந்தகாரம்
நலமான யிருளதனில் நாடிப்பாரே. (கஉச)

## இ ரு ள் ஒ ளி.

பாரப்பா யிருளொளியும் வெளிமூன்றப்பா
பதிவான தேகமதில் கண்டுகொள்ளு
சாரப்பா யிம்மூன்றி னிலையைச்சொல்வேன்
சரீரமென்ற சத்திபடா யிருள்தானப்பா
நேரப்பா அரிவான ஒளிவின்கன்று
நிசமான வெளியத்த மாயாமாயம்
காரப்பா மாய்கைவெளி கண்ணொருகூத்
கருவான கன்மறைந்தால் யிருள்தான்காணே. (கஉரு)

காணப்பா யிருளதினால் ஒளிவுதான்தோற்றும்
கருவான ஒளியதினால் வெளிதான்தோற்றும்
பேணப்பா வெளிபொளியு மெதுநாலுச்சு
பெருகின்ற இருளிலே உண்டாச்சப்பா
ஊணப்பா தானேநிக்கும் வகைகளைக்கேளு
உத்தமனே வெளியதுவும் மொளியாய்ச்சேரும்
பூணப்பா ஒளியதாவு யிருளில்சேரும்
புத்தியுடன் கண்டறியாய்த் தன்னுள்தானே. (கஉசா)

தன்னுள்ளே தானறிந்து தன்னைப்பார்க்க
தனதான மண்டலங்கள் மூன்றினுள்ளே
கண்ணுள்ளே பொரிதனிலே தன்னைக்கண்டேன்
கருணைவர வெளிதனிலே தின்னக்கண்டேன்
விண்ணுள்ளே முச்சுடரைக் கண்டேட
யந்தவேதாந்த முச்சுடரின் ஒளியைப்பார்க்கில்
யென்னுள்ளே யிருளதனில் நின்றுபார்க்கில்
ஏகாந்த பிரமமா மருள்தானாச்சே. (கஉஎ)



ஆச்சப்பா அருள்நிறைந்த புருவமத்தி
அண்டபதி ரண்டமென்ற ஆதிவீடு
பேச்சப்பா பெருகின்ற ஆதிவீட்டில்
பிலமான பஞ்சகர்த்தாள் பஞ்சசத்தி
மூச்சப்பா நிறைந்ததொரு சுடர்கள்மூன்று
முனையான சுழிமுனைதான் மோக்ஷமென்று
போச்சப்பா அந்திடமே சொந்தமாக
புத்தியுடன் அந்திடத்தைப் பூசைபண்ணே. (கஉஅ)

பண்ணப்பா பூசைவிதி கண்ணொருக்ஷம்
பாலகனே ருக்ஷமென்ற சுடரில்நின்று
நண்ணப்பா ஆதார மூலபாடம்
நாதாந்த மூலமடா நந்திவீடு
முன்னப்பா பின்னுவா நந்திவீட்டில்
மோக்ஷமென்ற அகாரத்தைச் சொல்லக்கேளு
விண்ணப்பா நிறைந்திருந்த புருவமேவி
மேன்மைபெற ஓம் நீங் அம்மென்றோதே. (கஉகூ)

ஓதுவது புருவநடு சுழியில் நின்று
உத்தமனே நூற்றெட்டு உருவேசெய்தால்
மாறுவளர் ஆதார பூசைதானும்
மார்க்கமுடன் சுத்தமதாய் சித்தியாச்சு
சோதமுழு தில்லாத ஆதாரம்
குருவான மூலமடா மேலாதாரம்
நீதியுள்ள ஆதார மீராறுக்கும்
நிரஞ்சனமாய் நின்றது ரணந்தான்பாரே. (கஙய)

பாரப்பா பூரணமாஞ் சோதியுண்டு
பக்திகொண்டு ஆதார பீடமானல்
நேரப்பா ஆதார பீடமீதில்
நிரஞ்சனமாய் நின்றதொரு வாலைதன்னை
காரப்பா சருணைவெளி கண்ணால்மேவி
கமலரச அமுர்தமதை கனிந்துகொண்டால்
பேரப்பா பெற்றதொரு சருவவாலை
பெருகின்ற வாலையடா கண்கொள்ளாதே. (கஙக)

கண்ணான கண்மூடிக் கருத்தொன்றாகிக்
  கருணைபெறக் கேசரத்தில் மனக்கண்சாற்றி
விண்ணான நேத்திரத்தை விரலாலாட்டு
  விளங்கிநின்ற ரவிபோலே காந்திவீசும்
ஒண்ணானகாந்திபிர காசங் கண்டால்
  உத்தமனே அபமிருத்து ஓடிப்போச்சு
முன்னான சோதியிலே மனக்கண்சாற்றி
  முத்தியுடன் சுத்தமதாய்த் தன்னைப்பாரே. (௧௱௨)

பாரப்பா சிவயோக வாலைபெண்தான்
  பத்திநின்ற தசனாதத் தானேகொண்டான்
காரப்பா வாலையவ ளிருந்தவீடு
  கருணைவளர் கேசரியாங் கமலந்தன்னில்
நேரப்பா சுழிசுழியாம் புருவமீதில்
  நின்றிலங்கும் கற்பூர தீபந்தானாய்ச்
சேரப்பா அத்திபச் சுடரிலேதான்
  தெளிந்துகொண்டு சிவஞான சிவத்தைத்தேடே. (௧௱௩)

தேடப்பா கண்மூடி விழியைத்தானே
  திருவான சுழிமுனையில் கருத்தைவைத்து
நாடப்பா நேத்திரத்தைச் சூட்டிப்பாரு
  நாதாந்த சுடர்விழியில் விரலாலாட்டு
கூட்டப்பா பிறைபொளி யென்னசொல்வேன்
  கோடான கோடிரவி பிறைவீசும்
சூட்டப்பா அப்பிறைபை தானேகண்டால்
  அகமான சிவரூபம் தான்தானச்சே. (௧௱௪)

ஆச்சப்பா சிவகலை யிதுதானப்பா
  ஆதியந்த மானதுவும் யிதுதானப்பா
பேச்சப்பா பேசாத மவுனமையா
  பெருகிநின்ற சாயுச்சிய பதமிதையா
மூச்சப்பா விளைந்திரு வாசியாலே
  முத்திபெற நவக்கிரகம் சூக்ஷம்பார்த்து
காச்சப்பா அகமினிகொண் டாருதாரக்
  கருவான வெளிப்பூசை கண்டேனே. (௧௱௫)



கண்கண்ட சிவரூப மிதுதானப்பா
  கருணைவளர் சாயுச்சிய பதமிதையா
விண்கண்ட வெளிப்பூச்சை சரிதைமார்க்கம்
  வேதாந்த சுழிமுனையில் மேவிப்பாரு
முன்கண்ட காக்ஷியெல்லாம் அங்கேகண்டேன்
  முத்தியுள்ள பிறப்பிறப்பு முன்னேகண்டேன்
கண்கண்ட ஓங்கார வட்டந்தன்னில்
  காணுதடா யெட்டி ரண்டுங் கருவாய்க்காணே. (௧௱௬)

## நாதவிந்து.

காணப்பா புலத்தியனே உனக்காய்ச்சொன்னேன்
  கருவான யெட்டி ரண்டும் நாதவிந்து
பேணப்பா நாதவிந்து சத்திசிவமாச்சு
  பெருகிநின்ற சத்திசிவந் தான்தானென்று
பூணப்பா அதிலதனால் மனமேபூண்டு
  புத்திடன் சத்திசிவ முறைக்கக்கேளு
தோணப்பா தனையறிந்து பூசைசெய்ய
  சொல்லுகிறேன் கருமானஞ் சூக்ஷ்ந்தானே. (௧௱௭)

தானான சூக்ஷமது யென்னவென்றால்
  தன்மையுடன் போம்வாய்வு சிவமதாகும்
வானான உட்புகுதல் சத்தியாகும்
  உண்மையுடன் யிதுவறிந்து தன்னைப்பார்த்து
கோனான குருபீடம் புருவமத்தி
  குருவான அனுக்கிரக சுழிமுனைமீதில்
வானான கேசரமே தானேதானாய்
  மனங்குளிர்ந்து பூசைசெய்யும் வகையைக்கேளே. (௧௱௮)

வகையான பூரகந்தான் வங்கென்றேது
  மகத்தான கும்பகந்தான் அங்கென்றேது
தகையான ரேசகந்தான் சிங்கென்றய்யா
  சுத்தமுடன் யோகசர நினைவைக்கேளு
பகையான பூரகந்தான் வங்கென்றேது
  புத்தியுடன் தானிருக்க மாத்திரையெண்டாச்சு
நகைபரதே நாலுதரம் அங்கென்றுக்கால்
  தன்மையுள்ள மாத்திரைதான் நாலுமாச்சே. (௧௱௯)

ஆச்சப்பா சேகரிச்செப் பிக்கென்றேதான்
 அணைத்தமிக ஊதிவிடு தன்னாடாமல்
மூச்சப்பா தானிருந்து யிப்படியேசெய்தால்
 முக்கியமடா சிவயோகம் பூசைதானும்
பேச்சப்பா பேசாமல் மவுனங்கொண்டு
 பெருகிநின்ற வாசிதா ரணையைப்பற்றி
காச்சப்பா யிப்படியே வருநம்தன்றில்
 கருணைபெற சிவயோகம் கருதிப்பாரே. (௯௪௰)

## மயேஸ்வரிபூசை.

பாரப்பா யிந்தவிதந் தேவிபூசை
 பதராமல் செய்துசிவ யோகம்பார்த்தால்
கோரப்பா யின்றவனும் மகனேயென்று
 நினைத்தவர்ந் தான்கொடுப்பாள் நிலையைப்பற்றி
சாரப்பா வாசிசிவ யோகத்தாலே
 சார்ந்திருந்து பூரணியைப் பூசைசெய்ய
காரப்பா ஆகாரம் நன்றாய்ப்பார்த்து
 கருத்தைவைத்து பூசைசெய்யக் கருணைக்கேளோ. (௯௪௧)

கேளப்பா மயேஸ்வரிக்கு வாமபூசை
 சிறப்புடன் செய்யுகின்ற முறையேதென்றால்
வளப்பா அன்னமுடன் பலகாரங்கள்
 வர்க்கவகை நெய்யுடனே பால்ரசங்கள்
ஆளப்பா வெண்தயிரு மண்டக்கோடு
 அருள்பெருக வல்துவொடு சுத்திவைத்து
காளப்பா தானதிந்து கைவேத்திபஞ்செய்து
 கருணைபெற தூபமுடன் தீபங்காட்டே. (௯௪௨)

காட்டடா தூபமொடு தீபங்காட்டிக்
 கருணைபெற மானதமாய்த் தியானஞ்செய்து
மூட்டடா மணியோசை சங்கினோசை
 முழக்கடா சகளத வோசையோடு
கூட்டடா சங்கீத மேளவாத்தியங்
 குமறவே நாககர சாமத்தானந்
சூட்டடா சேடமாச யுபசாரங்கள்
 சுத்தமுடன் செய்துகேடம் தன்னைவாக்கே. (௯௪௩)



வாக்கியிரு மார்பினிடை அணைத்துமைந்தா
 வணக்கமுடன் சிம் றிங் ஙிசி யென்றேதான்
ஓக்கியொரு மனதாக தியானம்பண்ணி
 உத்தமனே புருவமிக் கயலத்தேகி
தாக்கிமிக ஓம் றீங் அம் மென்றேநி
 சங்கையுடன் மூலகண பதியைப்பார்த்து
பாக்குபெற வ்ஙி வசி யென் றமூர்த்தமூட்டி
 பத்தியுடன் சற்குருவே நம வென்றோதே. (௯௪௪)

ஓதிமன பூரணமாய் மைந்தாநீயும்
 உண்மையுடன் அமுதுகறி வர்க்கமெல்லாம்
நீதியுடன் மூலமந்துக் கற்புதமிசெய்து
 நேர்மையுடன் சிவார்ச்சனை அருகமைத்து
சோதியென்ற புருவமதில் நிறுத்திவிட்டு
 சுகசிவ பிராணிகளை அமூர்த்தமீய்ந்து
ஆதிபரஞ் சோதிதனைத் தியானம்பண்ணி
 அமுதுகறி வர்க்கமெல்லாம் அவர்கட்கீயே. (௯௪௫)

ஈய்ந்துமிக னின்மாலிய மெல்லாங்கூட்டி
 யின்பமுடன் தூபதீபங்கள் காட்டி
ஆய்ந்துநின்ற அரதேசி பரதேசிக்கும்
 அன்னமொடு பலகாரம் அன்பாயீந்து
சாய்ந்துமனம் போகாமல் நிலையில்நின்று
 சங்கையுடன் வாசிதா ரணையைப்பற்றி
பாய்ந்துமிக ஆகாசத் தூண்ணேசென்று
 பராபரையே ஈசானியே அம்பரையேயென்னே. (௯௪௬)

## தோத்திரம்.

அம்பரையே அகண்டமே ஆதித் தாயே
 ஆதியந்த மில்லாத அரூபத்தாயே
சம்பரையே சமரச மவுனத்தாயே
 சச்சிதா னந்தவெளி தாயேதாயே
கம்பரையே நாதாந்த கருணைநித்தே
 நானென்றும் நீயென்றும் மில்லாதவளே
உம்பரையே உம்பருக்கும் அரியபரஞ்சுடரே
 ஓங்காரங் கடந்துநின்ற யோனியையென்னே. (௯௪௭)

ஒளியாகி ஒளிநிறைந்த வெளியுமாகி
ஒன்றாகி ரெண்டாகி உறுதியாகி
வளியாகித் தீயாகி வானுமாகி
மவுனரச யோகமென்னு ஞானமாகித்
தெளிவாகி தெளிவினுள்ளே ஒளியுமாகி
சித்தாதி ரிஷிகள்சித்தர் மனமுமாகி
தெளிவாகி சுழியாகித் தெளிவினுள்ளே
நேத்திரத்துக் கடங்காத பூரணமேகண்ணே. (௧௪௮)

பூரணமே கருணைவளர் போதத்தாயே
போதமய மானசிவ போகத்தாயே
காரணமே கண்நிறைந்த சமைத்தாயே
கமலரச பூரணமாய் நின்றமாதே
மாரணமாய் சகலசித்துந் தானேதானாய்
மகாமந்திர சொரூபமதாய் நின்றதாயே
தாரணமாய் சகலவுயிர் வாசியாலே
சத்தசுத்த சித்தமுமாய்த் தானேகாணே. (௧௪௯)

காணுகின்ற கர்ப்பூர தீபமாதே
கயிலாச வாசமுள்ள கமலத்தாயே
பூணுகின்ற சத்தாகி சித்துமாகிப்
பூரணமா யானந்த மயமுமாகி
ஊணுகின்ற சித்த சுத்தமுமாகி
உகந்தசையுள்ள நாதவிந்து கலையாகித்
தோணுகின்ற வெளியொளியின் சோதியாகி
சோதியென்ற ஆதியந்த வடிவுமாமே. (௧௫௦)

வடிவாகி முடிவாகி மாறுங்காணு
மன்னுயிர்க்குந் தானான மயமுமாகி
அடியாகி நடுவாகி வானுந்தாண்டி
அண்டசரா சரங்களுட னினைவுமாகி
முடிவாகி நானாகி நீயுமாகி
மூச்சாகி மூச்சற்றப் பொருளுமாகி
வடிவாகி அந்தமுமாய்ச் சுழியுமாகி
வாழ்கின்ற ஆனந்தப் பொருளுமாமே. (௧௫௧)



பொருளான வேதாந்த சித்தாந்தமாகி
புகழ்ந்துநின்ற சமரசத்தின் போக்குமாகி
அருளாகி அருளிருந்த அகண்டமாகி
அளவற்ற ஆகாச ரூபமாகி
மருளாகி மருள்கண்டு அறிவுமாகி
மகத்தான சோதிசிவ சாக்ஷியாகி
இருளாகி யொளியாகி வெளியுமாகி
யெத்தரிய பூரணமா யிருந்ததாயே. (௧௫௨)

தாயாகி தந்தையுமாய்ச் சேயுமாகி
சகலஉயிர் பிராணிகளை சீவனாகி
காயாகி கனியாகி ரசமுமாகி
கன்றாகி விண்ணாகி காந்தியாகி
ஓயாத மணிகெவுன நாதமாகி
யொன்றுக்கு மடங்காத வுண்மையாகிப்
பேயாகி பேர்பெரிய கண்டங்களாகிப்
பேரண்டமான பூரணமே யன்னே. (௧௫௩)

பூரணமாய்க் காரணமாய் புத்தியாகி
போக்காகி வரத்தாகி புகழ்ந்துயெங்கும்
காரணமாய் நிர்குணமாய்க் கருணையாகிக்
கண்ணடங்கா விண்ணாகி கருத்துமாகி
வாரணமாய் அதுவாகி யிதுவுமாகி
மருவியபின் அதுவற்று யிதுவுமற்று
தோரணமாய் அண்டமுதற் பதமுமாகிச்
சொல்லாகி சுழியாகி நின்றவாறே. (௧௫௪)

சுழியாகி வேதாந்த சாக்ஷியாகி
குணமாகி மனமாகி யதுவுந்தாண்டி
நெறியாகி ஆதியந்த சூக்ஷமாகி
நேரான வாசிதிரு வாசியாகி
சிறிதாகிப் பெரிதாகிச் சிவனாகிச்
சிவசிவ கலையாகித் தெளிவுமாகி
பெரிதாகி பெட்டுடனே காணுமாகி
பேரொளியாய்ச் சிந்தொளியாய் நின்றதாயே. (௧௫௫)

தாயாகி ஆதார மூலமாகித்
  தன்னொளிவும் விண்ணொளிவுந் தானுமாகி
தீயாகி காற்றாகி வானுமாகி
  செயலாகி மண்ணாகிப் புண்ணுமாகி
வாயாகி கண்ணாகி மூக்குமாகி
  வானிறைந்த காற்றாகிப் பருசமாகி
சேயாகித் திருவாகிச் செல்வமாகி
  தேவிமனோன் மணியான கண்ணே யென்னே. (௯௫௬)

கண்ணாகி கண்ணிறைந்த சாக்ஷியாகி
  கருணைவளர் கற்பூர தீபமாகி
ஒண்ணாகி சத்திசிவம் ரெண்டுமாகி
  பூத்தகலை ரவிமதியுஞ் சுடர்மூன்றாகி
விண்ணாகி வேதமென்ற நாலுமாகி
  வேதாந்த பஞ்சகர்த்தா ஐந்துமாகி
முண்மைபெற சடாக்ஷரங்க ளாறுமாகி
  முத்தியுள்ள வகைதோற்ற மேழுமாமே. (௯௫௭)

ஆமென்ற அஷ்டாக்ஷரங்க ளெட்டுமாகி
  ஆதிநவக் கிரகமுடன் றிசையுமாகி
ஓமென்ற திசைதனிற் குடிகொண்ட
  ஓங்கார றீங்கார உருவுமாகி
நாமென்ற நவ்வுடனே மவ்வுமாகி
  நலமான சிவ்வுடனே வவ்வும் யவ்வாய்த்
தாமென்ற அவ்வுடனே யிவ்வுமாகி
  சகலவுயிர் சவ்வாகி நின்றதாயே. (௯௫௮)

தாயாகி மூலகண பதியுமாகி
  தன்மையுள்ள நான்முகனு மாலுமாகித்
தீயாகி ருத்திரனும் மயேஸ்பரனுமாகி
  சிவசிவா சதாசிவனு மணியுமாகி
ஓயாதமுச் சுடரு மொளியுமாகி
  ஒன்றுமற்று நின்றபொருள் தானுமாகி
வாயாற ஓதுகிற மந்திரமாகி
  மந்திரமெல்லா மடங்குஞ் சோதிதானே. (௯௫௯)



ஆறுவகைமுத்திரை விபரம்.

சோதியென்றமயேஸ்பரியைப் பூசைசெய்யில்
  சுகமானமுத்திரையை சொல்லக்கேளு
ஆதியென்றமுத்திரைதான் ஆர்தான்காண்பார்
  அருள்பெருகுமுத்திரையை மனதிற்கொண்டு
நீதியுடனறுவகை முத்திரையைக்கேளு
  நிசமானஆவர்கள் முத்திரைதானென்று
ஓதியதோர்தாவான முத்திரைதானென்று
  உத்தமனேயோனியென்ற முத்திரைதானென்றே. (௯௬௰)

ஒன்றானதிருவினி முத்திரைதானென்று
  உறுதியுள்ளசோபினி முத்திரைதானென்று
என்றானயோகினி முத்திரைதானென்று
  நாட்டமுடன்ஆறுவகை முத்திரையமைந்தா
குன்றாதசிவயோக சற்குருவினாலே
  குறியறிந்துஆறுவகை முத்திரையைப்பெற்று
நின்றுமயேஸ்பரியைப் பூசைசெய்யில்
  நீமகனேஆறுவகை முத்திரையைச்சாற்றே. (௯௬௧)

சாற்றுவதுஆவாவர்கள் முத்திரையைக்கண்டு
  சங்கையுடன்ஓமென்று தியானஞ்செய்யில்
பாற்றிபனேசதர்கோடி மந்திரமுஞ்சித்தி
  பதிவானசகலகலை சாஸ்திரமுஞ்சித்தி
தேற்றியதோர்ஆதார மூலமதுசித்தி
  திருவாசியானதொரு வாசியதுசித்தி
தோற்றிரமாய்நின்றதொரு பூசையதுசித்தி
  சுகமானஆவாகன் முத்திரையின்சித்தே. (௯௬௨)

சித்தானதாவான முத்திரையைச்செய்து
  சீர்க்கமுடன்சிவியென்று தியானஞ்செய்து
வத்தாதபூரணமாஞ் சிவயோகசித்தி
  மகத்தானகற்பூர தீபமதுசித்தி
வித்தானபிற்மமொடு சாஸ்பதியுஞ்சித்தி
  வேதமயமானசிவ பேதஞ்சித்தி
சத்தானதாபனமுத் திரையின்மகிமை
  சங்கையுடன்கண்டுசிவ யோகஞ்செய்யே. (௯௬௩)

செய்யப்பாயோனிமுத் திரையைக்கொண்டு
  சீர்க்கமுடன்றீங்கென்று தியானஞ்செய்யில்

மெய்யப்பாதேவாதி தேவர்களுஞ்சித்தி
   மேலானஅண்டமொடு புவனஞ்சித்தி
மையப்பாமையென்ற சுளினைசித்தி
   மாலோடிலக்ஷிமியுங் கணங்கள்சித்தி
வையப்பாயோனிமுத் திரையைப்பெற்றுப்
   பத்தியுடன்சிவயோகம் பணிந்துகாணே. (௧௬௪)

காணவேதிராவிணிமுத் திரையைக்கொண்டு
   கருணையுடன்வங்கென்று தியானஞ்செய்யில்
பூணவேருத்திரன்முதல் சகலசெந்தும்
   புவியாளுமரசரொடு வசியமாகுந்
தோணவேசாந்தான சவுபாக்கியங்கள்
   சத்தமுடன்ஐந்தருவுஞ் சித்தியாகும்
பேணவேருக்கிரியுஞ் சத்தியோடு
   பிலமானதிருவணியால் சித்தியாமே. (௧௬௫)

பாரப்பாசோபினிமுத் திரையினாலே
   பத்தியுடன் ஆமென்று தியானஞ்செய்தால்
சேரப்பாசொல்லுகிறேன் சருவலோகம்
   சிசமான ஆகாசஞ் சித்தியாகும்
டேரப்பாமேருகிரி தீபஞ்சித்தி
   மெஞ்ஞானமயேஸ்பரும் மயேஸ்பரியுஞ்சித்தி
சாரப்பாசோபினிமுத் திரையினாலே
   கண்ணடங்காப்போதசிவ யோகமாமே. (௧௬௬)

ஆமப்பாமோகினிமுத் திரையைச்செய்து
   அருள்பெருகும்புருவமதில் மனக்கண்சாத்தி
ஓமப்பா அகாரமுடன் உகாரங்கூட்டி
   உத்தமனேமவுனமென்ற மகாரத்தேகில்
காமப்பாகானலப்பால் சித்தியாகும்
   கருணைவளர்மனோன்மணியுஞ் சித்தியாகும்
வாமப்பாபூரணமுஞ் சித்தியாகும்
   மகத்தானமால்பாதமுஞ் சித்திதானே. (௧௬௭)

சித்தியுள்ளமுத்திரைகள் சதுக்குந்தான்
   சிவாயகுருமுத்திரையைச் செப்பக்கேளு
பத்தியுடன்சொல்லுகிறேன் புருவமத்தில்
   பதிவாகயிருகரமு மொன்றாய்க்கூட்டி



சுத்தமுடன்வாடவெளிக் கண்ணில்நேரே
   தொழுதுமனம்நினைத்தபடி சுத்தமாக
முத்தியுடன்வரங்கொடுக்க வேணுமென்று
   மோனமுடன்மனோன்மணியைப் பூசைபண்ணே. (௧௬௮)

பண்ணப்பாபூசைவிதி சித்தரோடு
   முனிவர்பாடினார்கைமுறையாக யாரியாமற்றுன்
கண்ணப்பாசட்டைமுனி ஞுதர்தானும்
   நன்மையுடன்பூசைவிதி நன்றாய்ச்சொன்னார்
முன்னப்பா அந்தமதில் நன்றாய்ச்சொன்ன
   முடிவானசவுமியசா கரத்தைப்பார்த்து
கண்ணப்பாதுலக்குவது போலேகல்ல
   கருவானபூசைவிதி கணித்தார்காணே. (௧௬௯)

காணவேமுத்திரைக்கு விபரஞ்சொல்வேன்
   கைலாசபிடங்கொள்ளா தென்றுசொல்லி
பூணவேஆறுவகை முத்திரையில்மைந்தா
   புனிதமுடன்மூன்றுவகை முத்திரையைச்சேரு
தோணவேசித்தாதி நால்கட்டோருஞ்
   சுகமானமுத்திரையை சொன்னதல்லால்
பேணவேவிபரமது சொல்லவில்லை
   போரானசவுமியசா கரத்தைப்பாரே. (௧௭௦)

மோகினிமுத்திரை.

பாரடாமோகினிமுத்திரையைச் சொல்வேன்
   பதிவாகயிருகையுங் கூப்பிக்கொண்டு
நேரடாதர்சனி யிருவிரலும்விரித்து
   நேரான அங்குஷ்ட மத்தியிலும்படவே
கூடாமத்தியிலு மங்களுடமுனைபடவே
   கையரிந்துகொண்டதினால் மோகினிமுத்திரையாம்
சேரடாமுத்திரையை யறிந்துகொண்டு
   தீர்க்கமுடன்ஓமென்று செபித்துக்காணே. (௧௭௧)

திராவினிமுத்திரை.

காணவேதிராவினி முத்திரையைக்கேளு
   கைகூட்டிதர்சனி யிருவிரலும்விரித்துப்
பூணவேமத்திமையது கனிஷ்டமூன்றும்
   பேதமுடன்விரலமுந்த திராவினிமுத்திரையாம்

பேணவேமுத்திரையைக் குருவருளால்கண்டு
  பிலமாகவங்கென்று நியானித்தாக்கால்
தோணவேசகலசித்தி தானேஉண்டாய்
  சத்தமுடன்வசிகரமாய்வாழுந்தானே. (கஎ௨)

யோனிமுத்திரை.

தாவென்றயோனிமுத் திரையைக்கேளு
  சங்கையுடன்சொல்லுகிறேன் அங்குஷ்டமிரண்டும்
பூவென்றகனுட்டையடி விரல்படவேவைத்துப்
  பொருந்திரண்டுங்கைகூப்பிப் பிடித்துக்கொண்டால்
தேவென்றயோனிமுத் திரையுமாச்சு
  செம்மையுடன்முத்திரையைத் திறம்பண்ணி
ஊவென்றரீங்கார மனதிற்கொண்டு
  உறுதியுடன்தான்செபிக்க தேவதைகள்சித்தே (கஎ௩)

சித்தமுடன்பூசைவளி தன்னில்மைந்தா
  திர்க்கமுடன்பதினொரு முத்திரையைச்சொல்வேன்
சத்தமுள்ளமுத்திரைகள் தன்னிலேதான்
  சுகமான ஆறுவகை முத்திரைகளென்று
பத்தியுடனாறுவகை முத்திரையினாலே
  பருத்திரிந்து ஆகாரத் தெரிசினங்கள்பெற்று
வித்தானபிரவிதனை நன்றாய்நீக்கி
  வேதாந்தப்பூரணமாய் விளங்குமுத்தி. (கஎ௪)

காத்திவிரல் மகிமை.

முத்தியுள்ளகாத்தின்விரல் மகிமைதன்னை
  மோனமுடன்சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
பத்தியுள்ள அங்குஷ்டம் பெருவிரலாயிருக்கும்
  பதிவான அடுத்தவிரல் தற்சனியாம்மைந்தா
முத்தியுள்ளநடுவிரல்தான் மத்திமையாயிருக்கும்
  திருவானபவுத்திரந்தான் அனாமிகந்தான்மைந்தா
சுத்தமுள்ளசுண்டுவிரல் கனுட்டியெனலாகும்
  சுகமாகவிதையறிந்து முத்திரையைச்செய்யே. (கஎ௫)

செய்யப்பாபூசைவிதி அந்தமாகும்
  சிவசிவா ஆதியந்த மாதான்காண்பாய்
மெய்யப்பா ஆதியிலே அமைந்தவிதிமைந்தா
  மெஞ்ஞானமூலமடா ஓங்காரந்தான்



ஐயப்பாஓங்கார ரவியுமாச்சு
  மகத்தானமகாரமடா மதியுமாச்சு
பையப்பாரவிமதியுந் தானேநின்றுபார்க்க
  யிருள்கண்காணுதி தானுண்டாச்சே. (கஎ௬)

ஆச்சப்பா அமைந்தவிதி யிதுதானுச்சு
  ஆதியந்தபூரணமு மிதுதானுச்சு
மூச்சப்பாவின்றவிட மதுதானுச்சு
  மூவுலகுமாண்டவிட மதுதானுச்சு
காச்சப்பா அந்தயிடந் சொந்தமாக
  காலரிந்துமேலாகக் கமலக்கண்ணை
பாச்சப்பாகாலநிந்து யிடைபின்னுக
  யிருந்தரிந்துமூலமதில் பதிவாயில்லே. (கஎ௭)

பதிவானயிடமதுதான் புருவமத்தி
  பறைஞானகேசரியா யிருக்கும்வீடு
விதியானவீடறிந்து கெதியென்றெண்ணி
  மெஞ்ஞானஅமுர்தரசம் கொண்டாயானால்
மதியானசந்திரகலை ரவியிற்சென்று
  மகத்தானசோதிபிரகாசங்காணும்
கெதியானசோதிபிரகாசங்கண்டால்
  கேசரத்தைஆளுகிற வாசிதானே. (கஎ௮)

முப்புச்சுன்னம்.

வாசியென்றசிவயோகந் தனக்குமைந்தா
  மகத்தானகாரமுள்ள முப்புசொல்வேன்
தேசியென்றவுப்புடனே காரம்பூரம்
  திரமாகமூன்றுமொன்றாய் கல்வத்திட்டு
ஊசியென்றவுப்புநீர் தன்னாலாட்டி
  உறுதியுடன்தானெடுத்து வட்டுபண்ணி
மாசியென்றசிவகலசப் புடத்தைப்போடு
  மகத்தானசுன்னமிது காரந்தானே. (கஎ௯)

தாவென்றகாரமடா அண்டசத்து
  தருவானபூமியுட ஜெசத்து
வாவென்றவீரமடா பூரசத்து
  மாறுமுடன்சத்தவகை மூன்றுங்கூட்டி
மாவென்றகல்வத்தில் நன்றாயாட்டி
  மானநிருக்கலித்தருட்டி புடத்தைப்போடு

ஊமெனன்றசத்துவகை மூன்றுமொன்றாய்
 யுடன்சேர்ந்துஉரிகிபது சுன்னமாச்சே. (௧௮௪)

ஆச்சப்பாயின்னமொரு சுன்னஞ்சொல்வேன்
 ஆதியென்றபூரமு மனக்தஞ்சேர்த்து
காச்சப்பாகளிம்பான துரிசுகூட்டி
 கல்வமதில்பனச்சாற்றால் நன்றாயாட்டி
மூச்சப்பாதானிருக ரவியிற்போட்டு
 முன்னவனைத்தான்பணிந்து புடத்தைப்போடு
நீச்சப்பாவிலேபாத காரமாச்சு
 நிசமானகாரம்வெகு சுன்னமாச்சே. (௧௮௫)

முப்புச்செயநீர்.

பர்ரப்பாசுன்னவகை மூன்றுமொன்றாய்
 பக்குவமாய்கல்வத்தில் வைத்துக்கொண்டு
காரப்பாஅருவகைநீர் தன்னாலாட்டி
 கருணைபெறவளித்துருட்டி ரவியில்போட்டு
சாரப்பாநீர்வத்த நன்றாய்க்காய்ந்தால்
 சற்குருவைநான்பணிந்து புடத்தைப்போடு
வீரப்பாதானெருக்கி நீரிப்போகும்
 வெகுசுருக்குமூன்றுவகை சுன்னந்தானே. (௧௮௬)

தானென்மூன்றுவகை யொன்றாய்நின்று
 தன்மையுடன்நீரியது காரமாச்சு
ஊனெனகாரமுள்ள சுன்னம்போட
 உத்தமனேவச்சாரம் வீரம்பூரம்
கோனெனகுருவருளால் நாலுஞ்சேர்த்து
 கூர்மையுடன்கல்வமதில் பொடித்துக்கொண்டு
வானெனபீங்கானில் வைத்துமைந்தா
 மகத்தானசந்திரனில் வைத்துக்காணே. (௧௮௭)

காணவேசந்திரனில் வைத்துப்பாரு
 கசிந்துமிகத்தாநாரிக் கெங்கையாச்சு
தோணவேகெங்கையென்ற செயநீர்தன்னை
 சுத்தமுள்ளபீங்கானில் வடித்துவைத்துப்
பேணவேசரக்குகளில் சுருக்குத்தாக்கப்
 பேசாமற்தானடக்கி கட்டிப்போகும்
ஊணவேஉபசரக்கள் நீரிப்போகும்
 உருமையுள்ளசத்துவகை மெழுகுமாமே. (௧௮௮)



ஆமப்பாசாரமுதல் சாரமெல்லாம்
 அருமையுள்ளசெயநீரால் மெழுகுமாகும்
காமப்பால்காணலப்பால் கசிந்துநின்ற
 கருவானசெயநீரை யார்தான்காண்பார்
சோமப்பால்கண்டவனே கருதிகாண்பான்
 சோர்வன்றிவாதமுறை தானேசெய்வான்
நாமப்பாவென்றமுரி தன்னைநீயும்
 நுதாந்தபூரணமாய் நாடிப்பாரே. (௧௮௯)

நாடிப்பார்மூன்றுவகை சுன்னந்தன்னை
 நன்மையுடன்கைமுறையாய்ச் செய்துகொண்டு
தேடிப்பார்சரக்குகள்தான் நன்றாய்கட்டும்
 திரமானகளிலோகந் தங்கமாகும்
கூடிப்பார்தங்கமென்ற அங்கந்தன்னில்
 சோதிமயமான அண்டமென்ற
வாடிப்பார்த்தலையாமல் சொல்லக்கேளு
 மகத்தானருத்திரனை வணங்கிக்காணே. (௧௯௦)

அறுவகைசரக்குக்கட்டு.

காணப்பாபூரணமா மண்டசத்து
 கண்டவர்கள்விண்டதில்லை கற்பாஷாணம்
ஊணப்பாஉருதியுள்ள கற்பாஷாணம்
 உண்மையுள்ளவீரமடா லிங்கந்தாரம்
பூணப்பாபிரிதிவியும் அப்புஞ்சேர்த்துப்
 புத்தியுடன்ஆறுமொன்றாய்க் கல்வத்திட்டு
தோணப்பாமூன்றுசுன்னச் செயநீராலே
 சுத்தமுடன்தானரைத்து சுத்தம்பண்ணே. (௧௯௧)

சுத்திபண்ணும்வகையதனைச் சொல்லக்கேளு
 சுகமாகதானரைத்து வட்டுபண்ணி
பத்தியுடன்சட்டிதனி வைத்துச்சாம்பல்
 பத்துமிகத்தியெரித்து பதத்தைப்பாரு
சித்தியுடன்அனலெழும்பிக் கட்டிப்போகுந்
 தீர்க்கமுடன்தானெடுத்து செப்பக்கேளு
புத்தியுடன்செம்பிலைரா னிதாக்கிப்
 பூரணமாய்வெள்ளியிலே பூட்டிப்பாரே. (௧௯௨)

பார்க்கவெள்ளிதங்கமய மாகப்போச்சு
 பாரானகேசரியின் வாசத்தாலே

யேர்க்கையுடன்சிவயோகந் தங்கிப்போச்சு
  யேகாந்தவஷ்டகர்மஞ் சித்தியாச்சு
சேர்க்கையுடன் ஆதார மூலபீடஞ்
  சிறுவானபீடமதைத் தியானம்பண்ணித்
தீர்க்கமுடனிருந்து வாசியேறி
  ஜெகதீபமானசெயல் தான்காணுமே. (௮௯)

ஆதாரபூசை.

தானான ஆதார சுருபந்தன்னை
  சங்கையுடன்தானறிந்து தியானஞ்செய்ய
தேனானபுலத்தியனே சொல்லக்கேளு
  தேகசுத்திஉயிர்ச்சிவமாய் தெளிந்துகொண்டு
வானானவடமதில் மனக்கண்வைத்து
  மனங்கனிய ஓம் றீங் அம்மென்றுக்கால்
கோனான ஆதார பூசைதானுங்
  கோடானகோடிசெய்தப் பலத்துக்கொப்பே. (௯௰)

ஆப்பென்றஉருவைசதனைச் சொல்லக்கேளு
  ஓமென்றப்பிரணவமே மூலபீடஞ்
செப்பென்றபீடமதில் றீங்காரவாலை
  சென்றிருந்தாள் அகாரமென்ற சிவனுந்தானுங்
குப்பென்றுதானெழுந்து வாசியாகக்
  கொண்டுமென்றதிருவாசி அம்மைவாசி
அப்பென்ற ஆகார அம்மைவாசி
  அறையறிந்துசிவயோக அங்கம்பாரே, (௯௧)

பாரப்பாசிவயோக அங்கம்பார்க்க
  பதிவாக றீங் கென்றால் பூரகமேயாகும்
நேரப்பா அம்மென்றால் கும்பகமேயாகும்
  நேர்மையுடன்நிலையறிந்து நேசம்வைத்து
சாரப்பா ஓமென்று ரேசகமேசெய்யில்
  தவிடாமல்தேவாசி தானேதங்கும்
சேரப்பாவாசியது தங்கும்வீட்டில்
  சென்றிருந்து அடிகளெவ் முடியைக்காணே. (௯௨)

காணவே றீங் காரம் நாதமாச்சு
  கருணைவளர் அகாரமடா விந்துவாச்சு
பூணவே ஓங் காரம் வாசியாச்சு
  புத்தியுடன்தனதறிவால் தன்னுள்பாரு



தோணவே தனதறிவால் பார்க்கும்போது
  சோதியென்றரவிமதியுஞ் சுடர்மூன்றாச்சு
பேணவே சுடர்மூன்றுந் தன்னுட்பார்க்க
  பேசவொண்ணாமௌனமென்ற கற்பமாச்சே. (௯௩)

ஆச்சப்பாகற்பமென்ற அறிவைக்கேளு
  ஆதியென்ற றீங் காரஞ் சத்தியாச்சு
நீச்சப்பாசத்தியென்ற அகாரந்தன்னை
  நிலையறிந்துமாலையிலே நேர்மையாகப்
பேச்சப்பாதானிறந்த மௌனமென்று
  பெருமையுடனுருமையதாய்ப் பூசித்தாக்கால்
மூச்சப்பாதன்னிலைவிட் டசையாதையா
  மூர்க்கமுள்ளஓமசத்தி முத்திப்பாரே. (௯௪)

அகாரபூசை.

பாரப்பாஓமசத்தி பூசைசொன்னேன்
  பதிவான அகாரமென்ற சிவத்தின்பூசை
நேரப்பாநிலையறிந்து அகாரமான
  நேரானசிவமதுவும் விந்துவாச்சு
காரப்பாவிந்துவென்ற சாரந்தன்னை
  கருணையுடன்பூரணமா யுதையங்கல்லில்
தேரப்பாதானிருந்து உருவேசெய்தால்
  சிதம்பரத்தின்வெல்லையிலே தீபமாமே, (௯௫)

ஆமப்பா அகாரசிவ பூசைசொன்னேன்
  அறிந்துமனதருளாலே அறிவைப்பற்றி
காமப்பாவென்றமதந் தன்னைநீக்கி
  நடுவான றீங் கார வாலைதன்னை
தாமப்பாதன்னகமே வென்றுபோற்றி
  சதானந்தபூரணமாய்ப் பூசைசெய்தால்
வாமப்பால்கொண்டகெதி கண்ணுலந்த
  மகத்தானமடபதிதான் இருக்குந்தானே. (௯௬)

தானென்றமடபதிதான் தான்தானாகித்
  தன்மையுடன்பூரணத்தில் சாற்றக்கேளு
வானென்றவடிவுடைய அண்டந்தன்னில்
  மகத்தான அபூர்தரச போகந்தன்னைக்

கோவென்றகுருவருளால் தானேவாங்கி
  குரியானசத்திசிவ நாதங்கூட்டித்
தேவென்றகற்பூர தீபங்காட்டி
  திருவானபதிநோக்கிப் பூசைபண்ணே. (௯௭)

பண்ணப்பாபஞ்சகென திசைநமார்க்கம்
  பாலகனேதானறிந்து பதிமேற்கொண்டு
விண்ணப்பாதானறிந்த வாசியாலே
  வேதாந்தமுச்சுடருக் கப்பாலேகி
உன்னப்பாதன்னறிவால் மனக்கண்கொண்டு
  வுகமுடிந்தபட்டணத்தி லிருந்துபாரு
கண்ணப்பாதானறிந்து தன்னைப்பார்க்க
  கசடறவேதான்சிறந்த அங்கப்பாரே. (௯௮)

நாட்டம்.

அங்கமுடன்நின்றபஞ்ச பூதமதுநசித்து
  அணுவின்றபஞ்சமல மாகாரம்நசித்து
சங்கையுள்ளசிவகனையும் புவிபாடநசித்து
  சாக்கிரமவித்தையுட சராசரங்கள்நசித்து
பொங்குபுகலெழுவகையும் பூசைபலநசித்து
  போக்கானசரிதைமுதல் ஞானவரைநசித்து
நங்கைமுதல்போதவரை யிருவரியுநசித்து
  நாவென்றசொல்லதனை நசிப்பதுவேநாட்டம், (௯௯)

நாட்டமுடன்நின்றதிருகரணம் பதகதமுநசித்து
  ஞாதாந்தஞேதமுடன் வித்தையுநசித்து
தேட்டமென்றயோகமுடன் சிவயோகநசித்து
  திருவானகோவில்களும் நதிகளுமேநசித்து
இட்டமென்ற ஆங்கார சத்துருக்களுநசித்து
  அஞ்செழுத்துமூன்றெழுத்து மென்றுமிகநசித்து
வாட்டமென்றமயக்கமுடன் மகிழ்ச்சிகளுநசித்து
  வந்ததுவும்போனதுவும் நசிப்பதுவேநாட்டம். (௱)

நாட்டமுடன்கனவதனில் கண்டதெல்லாம்நசித்து
  நடுவணையுமடிமுடியும் நசிப்பதுவுநசித்து
ஆட்டமென்ற ஆகாச வாய்வுகளும்நசித்து
  அடர்ந்தெழுந்த அக்கினியு மப்புவுநசித்து
தேட்டமுடன்பிருதிவியும் ரவிமதியுநசித்து
  இருகின்றகளிமுனையும் சபையுநசித்து



ஓட்டமென்றபாசமது பிறப்புநசித்து
  ஒன்றுமற்றநிருமயமா யொடுங்குவதுநாட்டம். (௱௧)

ஒடுங்குவதுகாண்பவென வுண்ணுவதுவுநசித்து
  உறுதியுடனப்பிரமமோடு நியமமதுநசித்து
அடங்கிநின்றபிராணயம் ஆசனமுநசித்து
  அரக்காபிரத்தியா காரமதுநசித்து
தொடங்கிநின்றதாரணையும் தியானமதுநசித்து
  சுகசீவபிராணகலை சமாதிகளுநசித்து
திடங்கொண்டதூலமுடன் சூக்ஷமுநசித்து
  சிவசிவாநிராமயமாய் தெளிவதுவேநாட்டம். (௱௨)

தெளிவானவசிகரமும் மோகனமுநசித்து
  திரமானதம்பனமு முச்சாடனமுநசித்து
வளியானகிரிசனமும் வேசனமுநசித்து
  மாரணமும்பேதனமும் வகையுடனேநசித்து
பளியானசெகச்சால மானதெல்லாம்நசித்து
  பரிசனமாய்நின்றதொரு பெண்ணாசைநசித்து
ஒளியாதபெண்ணாசை மண்ணாசைநசித்து
  ஒன்றுமற்றுதன்மயமா யொடுங்குவதேநாட்டம். (௱௩)

ஒடுங்கிநிராமயமாகிப் பூரணதாரகமாய்
  உகமுடிந்தகவலையெல்லா மொருபுரமாய்நீக்கி
இடங்குவிந்துவலமான யேகபூரணமாய்
  எட்டெங்கக்காரியமும் மின்பமுடன்நினைத்தால்
கடங்கலந்திச்சித்துவெரு சத்தமாய்க்காணும்
  தன்மையுடன்தன்மனதை தானறிந்ததாலே
திடங்குவிந்துநிராமயமாய் சின்மயபூரணமாய்
  சிவசிவாசிவகரமே சிவமயமாய்க்காணே. (௱௪)

காணவேகண்டதெல்லாஞ் சிவமயமென்றெண்ணு
  கடந்தேறிப்போனதெல்லாஞ் சிவமயமென்றெண்ணு
பேணவேதன்னகமே சிவமயமென்றெண்ணு
  பிலமானவாசியது சிவமயமென்றெண்ணு
உண்ணவேஅண்டபிண்டஞ் சிவமயமென்றெண்ணு
  ஒடுங்கிநின்றசத்தமது சிவமயமென்றெண்ணு
தோணவேசிவமயமும் நிராமயமென்றெண்ணி
  சுகசீவபிராணகலை சுருபமயமாமே. (௱௫)

சூரியகிரிசோமகிரி நிதானம்.

ஆமப்பாசுரூபமயம் பூரணமென்றெண்ணி
  அடர்ந்தெழுந்தகத்துவத்தை அறிவால்நீக்கி
நாமப்பாஓமென்ற பிரணவத்திறூலே
  தன்னுயிர்போல்மன்னுயிரைத் தான்தானென்று
காமப்பாசொல்லுகிறேம் ஏகாந்தவீட்டில்
  நாடிமனங்கொண்டுதிரு நயனம்பாரு
சோமப்பாபால்கொண்டு திருநயனம்பார்க்க
  சோமகிரிசூரியகிரி சக்கமாச்சே. (ருாச)

ஆச்சப்பாசோமகிரி உச்சிமேல்
  ஆள்பெருகுஞ்சூரியகிரி மூலமாச்சு
மூச்சப்பாவுபயகிரி நடுவிலேதான்
  மோக்ஷமென்றசாக்ஷி யையா னென்னசொல்வேன்
பேச்சப்பாபேசாத சாக்ஷிதன்னை
  பிரணவத்தின் கிருபையினால் சொல்லக்கேளு
நீச்சப்பாநிலையறிந்து காணப்போகா
  நிசமானநிலைபதறா னந்திகாணே. (சாஎ)

காணவேஉந்தியென்ற கமலமீதில்
  கண்கொள்ளாசாக்ஷிவெகு சூக்ஷகாறும்
தோணவேசூக்ஷநிலை தானோசுண்டு
  அருவமென்றமேருவடா அண்டங்களில்
பூணவேஅண்டபதம் கைக்குள்ளாக
  புருவமென்றசமாதியிலே பூண்டுகொண்டு
ஊணவேமனதாறுதி யாகின்றாய்
  உத்தகலையவிமதியுஞ் சோதியாச்சே. (சாஅ)

சோதியென்றமுச்சுடரு மொன்றாய்நின்று
  துலங்குசுடாதன்னகத்தில் கன்றாய்ப்பாரு
நீதியுடன்நிலையறிந்து பார்க்கும்போது
  நிலையறிந்தசண்டெல்லாஞ் சோதியாச்சு
ஆதியென்றசோதியடா மனக்கண்ணாச்சு
  அறிவானதீபமடா ஆத்துமாவாச்சு
ஓதியசோர்மந்திரகலை ஆத்துமாவாகி
  உண்மையென்றபூரணமாய் விளங்குந்தானே. (சாகூ)

தானேதான்விளங்குமடா அறிவானந்தந்
  தன்மையுள்ளபூரணமாய்த் தான்தானாகும்



வீனேதான்திரியாதே அறிவைப்பற்று
  வேதாந்தஞ்சித்தாந்தம் இரண்டுமொன்று
கோனேதான்தானவனாய்க் குறித்துப்பாரு
  குறியறிந்துபார்த்துநிலை கொண்டாயானல்
ஊனேதான் ஆனந்த போதமாகும்
  மூன்மையென்றநிருவிகற்ப முறுதியாமே, (சாய)

பாரப்பாநிருவிகற்ப மார்தான்காண்பார்
  புத்தியுள்ளபுலத்தியனே, பகரக்கேளு
காரப்பாஅகாரமென்றால் சிவமதாச்சு
  கருணைவளர்சிவமதுதான் விந்துவிந்து
நேரப்பாவிந்துநிலை அறிந்துகொள்ள
  நிசமுனக்குயில்லையடா, நிசத்தைக்கேளு
சாரப்பாசற்குருவின் னிடமேசென்று
  சந்தையுடன்தானவனாய்த் தன்னைப்பாரே. (சாயக)

பாரப்பாதன்னைமிக அறிவால்கண்டு
  பாலகனேவிந்தாச அறுரர்த்மவர்க்கு
நேரப்பாசற்குருவை திபாணமபண்ணி
  நிலையறிந்துகணபதிக்கு அபிஷேகித்தால்
வீரப்பாகொண்டுநின்ற அறிவுமைந்தா
  மெஞ்ஞானபூரணமாய் விளங்கும்பாரு
காரப்பாஅந்தநிலை சொந்தமென்று
  கருணையுடன் அந்திசந்தி பூசைபண்ணே. (சாயஉ)

மணிகெவுன குளிகை,

பண்ணப்பாஅந்திசந்தி பூசைபண்ணி
  பரமகைலாசமென்ற மதியைசேர்க்கி
கண்ணப்பாகாணறிந்து தன்னைப்பார்த்தால்
  கசடானகர்மவினை காணுதோடும்
மென்னப்பாவென்றுதன்னை மறந்திடாதே
  வெட்டறிந்துநிட்டைமுடன் கட்டாயநில்லு
முன்னப்பாவிசையறிந்து பாய்ந்தகண்ணீர்
  முத்தியுடன்மணிகெவுன குளிகைபாரே, (சாயங)

பாராகும்புலத்தியமா ரிஷியே அய்யா
  பதியானஉலகமது பேயாய்சுற்று
சேராதகூற்றதுதான் சிவன்செயலென்றெண்ணி
  சேர்மையுடன்பூரணமாய்ப் புருவமேவி

ஞானான அடிமுடியும் மொன்றாய்க்கண்டு
சுகசீவப்பிராணமய மாகநின்றால்
மாராதவாழ்வுசிவ யோகவாழ்வு
வந்துதடாவந்துதடா மனதைக்காரே, (௨௱௰௪)

கற்பம்.

மனதானமனதறிந்து மனதைக்காக்க
மார்க்கமுள்ளகற்பமொன்று வழுத்தக்கேளு
கனமானகற்பமடா ஆர்தான்காண்பார்
கருணைவளர்உகாரமடா சத்திசந்தி
குணமானஉகாரமென்ற சத்திதன்னை
குருவருளால்அந்திசந்தி பூசைபண்ணிச்
சினமான ஆங்காரத் திறக்க...
சின்மயங்கொண்டேன்றானுந் திறமாய்ச்சில்லே, (௨௱௰௫)

உகார தீக்ஷை.

திரமானசத்தியடா உகாரசத்தி
சிவசிவாமனங்கிருத்திப் பூசைசெய்தால்
உரமானதேகமடா உறுதியாகும்
முற்றகலைக்கியானமடா சித்தியாகும்
திரமான அண்டபதம் கைக்குள்ளாகுந்
திருவானபூரணமுஞ் சித்தியாகும்
பரமானபராபரமுந் தான்தானாகும்
பதிவானமூலசத்தி பலந்தான்பாரே. (௨௱௰௬)

பாரப்பாபதியறிந்து குருவைக்கண்டு
பத்தியுடன்சத்திசிவ பூசைபண்ணி
காரப்பாகருணைவிழி மலர்க்கண்ணாலே
கமலமென்றபுருவநடு கண்ணைப்பற்றி
நேரப்பாநின்றாக்கால் மைந்தாமைந்தா
நிசமானசிவரூபம் கண்ணிற்காணும்
தேரப்பாசிவரூபங் கண்ணால்கண்டு
தெளிந்துமனங்கொண்டநின்று வாழ்வீரே. (௨௱௰௭)

ஆதியென்றனைகமடா சோதிசோதி
அதையறிந்துபூரணமாய்ப் பூசைசெய்தால்
சோதியென்றஞானமது மிதுதானாச்சு
சுகமானசிவயோக மிதுதானாச்சு



நீதியென்றபிராணாய மிதுதானாச்சு
நிசமானவாசியது மிதுதானாச்சு
ஓதியதோர்மந்திரமு மிதுதானாச்சு
உண்மையென்றபூசையது மிதுதானாச்சே. (௨௱௰௮)

ஆச்சப்பாமௌனரச மிதுதானாச்சு
ஆதியென்றகற்பமது மிதுதானாச்சு
நீச்சப்பாஉபதேச மிதுதானாச்சு
நிசமானசத்திசிவ மிதுதானாச்சு
பேச்சப்பாபேசுவது மிதுதானாச்சு
பேசாதமௌனமது மிதுதானாச்சு
காச்சப்பாதெரிசனமு மிதுதானாச்சு
கருணைவளர்வாலையுட கருத்துத்தானே. (௨௱௰௯)

வாலை தீக்ஷை.

கருத்தறிந்துகருணையுடன் கருவைக்கொண்டால்
காலசந்திமேலசந்தி காணுநேரம்
திருத்தமுடன்பூரணமும் நிலைநின்றாடுந்
திருவானவாலையுட செங்கேனாலே
வருத்தமென்றமாய்கையெல்லா மாண்டுபோகும்
மங்கையுடகொங்கையது வனுமைமெத்த
திருத்தியந்தமாதாவைப் பூசைபண்ணி
செம்மையுள்ளமாதாவாய் மகவாயென்னே, (௨௱௨௰)

யென்மகனேபுலத்தியமா சிஷியேஅய்யா
யின்பாசந்தான்கொடுத்த மாதர்தன்னை
தன்மையுடன்மோகமதாய் சரசஞ்செய்தால்
தான்நினைத்தகாரியங்கள் தவருண்டேபோம்
உண்மையென்றமந்திரங்க ளுதாவாதய்யா
உடலதிலேசெந்தீயு முடனேபத்தும்
வண்மையென்றகற்றவனு முயினையுண்பான்
மார்க்கமுடன்மனதறிந்து மனதைக்காரே. (௨௱௨௰௧)

காரப்பாமனதறிந்து மனதைக்காத்து
கருணையுடன்சத்திசிவ வாலைபூசை
நேரப்பாநேர்மையுடன் பூசைசெய்தால்
நினைத்தபடிமுடிக்கும்வகை கைக்குள்ளாகுந்
சாரப்பாசகலகலைக் கியானந்தோற்றுஞ்
சதாயோகமானசிவ யோகந்தானும்

தேரப்பா சிவயோகத் திரத்தால்மைந்தா
சிவசிவா பூரணத்தின் செயலைக்காணே. (௬௨௨)

செயலான செயலறிந்து செயலைக்கான
திறமான திர்க்கமொன்று செப்பக்கேளு
மயலானமயக்கருந்து மவுனங்கொண்டு
மகத்தான கேசரியாமண்டத்தேகி
சுயமான பூரணமாஞ் சோதித்தாயை
சுத்தமுடன் தாள்வணங்கி தொழுதுபோற்றி
சுபமாக வைத்தருமை செய்துகொண்டு
ஏகாந்தபூரணத்தை சுபமாய்வாங்கே. (௬௨௩)

பூரணமெழுகு.

வாங்கிவந்த பூரணத்தை மைந்தாகேளும்
வணக்கமுடன் பீங்கானில் வைத்துப்போற்றி
பாங்குபெறசிவபீசஞ் சரியாய்ச்சேர்த்து
பதமாகமத்தித்து ரவியில்வைத்து
சாங்கமாய்க்காய்ந்தபின்பு யெடுத்துப்பாரு
சதாசிவத்தின் செயலதனால் மெழுகாய்ப்போகும்
பூங்கமலஅமுர்தரச மெழுகைவாங்கி
புத்தியுடன் சத்திசிவ வாலைசேரே. (௬௨௪)

சத்திப்புபுதயிலம்.

சேரப்பா அஞ்சையுமே ஒன்றாய்ச்சேர்த்து
திறமாகமத்தித்து ரவியில்போடு
சாரப்பாயின்னமொரு கருமானங்கேள்
சத்திபுப்புதன்னுடனே வீரம்பூரம்
காரப்பாசருவரிந்து சேர்த்துக்கொண்டு
கலசமதில்தானமுழ்த்தித் தயிலம்வாங்கி
நேரப்பாமுன்சொன்ன அஞ்சம்போடே
நிசமானதயிலமதை விட்டுக்கிண்டே. (௬௨௫)

அமுர்தசரங்கொள்ள.

கிண்டியிகதாவெடுத்து ரவியில்போட்டு
கிருபையுடன்பீங்கானதன் தாளிச்சேர்த்து
அண்டசேசரிமாது தன்னைப்போற்றி
ஆக்கையில்தன்னையறிந்து அங்கிசந்தி
குண்டுமணிஅளவெடுத்துக் கொண்டாயானால்
குடிலமென்றதீவினைகள் காணாதோடும்



பெண்குசையுங்கீர்த்திபெற வாழ்வாரப்பா
சிவபாசாயாதி கர்பந்தானே. (௬௨௬)

தானென்றமவுனதி மவுனமாது
தன்னையறிந்தகாலமதில் தானேதானாய்
தேனென்றதிவ்வியரச பானங்கொள்ள
தெந்தமலர்க்குவிந்தபூ வரிந்தகாலம்
ஊனென்றமதுரரச மெழுகுதன்னில்
உகந்துமனக்கொண்டு வாய்வேகமாகி
கோனென்றகுருவருள ஒருஞ்சிவாங்கி
குவிந்தமலர்க்கனிந்தமணி சுவைத்துவாங்கே. (௬௨௭)

மாங்கனி.

வாங்கிபதுசுவையறிய மதுரங்கொண்டு
மனங்கனியமாவடியில் மலர்க்கண்சாற்றி
பாங்குபெறகுருவடியில் பதிவாய்நின்றால்
பதிவாகசிவயோகப் பலத்தினாலே
தாங்கிநின்றமூலமுதல் ஆறுதாரந்
தனக்கானபுவனமெல்லாம் தானேதானாய்
ஓங்கியதோர்வாசியுட பலத்தினாலே
ஊறத்தைமனைபிலத்துதடா உறுதிப்பாரே. (௬௨௮)

உறுதிஉள்ளபஞ்சசண பஞ்சமூலம்
உண்மையென்ற ஸ்ரீகோண மந்தத்தாலே
பருதிமதிசுடரொளியாய் அண்டஞ்சூழ்ந்து
பதிமணியாந்திசநாத வாசியாலே
பருதிதிருவாசியம்மா வாசியாலே
சுகசீவபிராணகலை சோதியாகி
சரிதையொடு கிரிகைசிவ யோகமாகி
சகலகலைக்கியானமென்ற ஞானமாமே, (௬௨௯)

ஞானமென்றஞானமடா மவுனஞானம்
நாதாந்தபோதமென்ற ஞானந்தன்னை
மோனமென்றமனதடங்கி ஞானப்பாலை
முத்திபிருகலைஅறிந்து ஊதிவாங்க
பானமென்றபானமடா மதுரபானம்
பரஞானபூரணமாய் நின்றபாயும்
தானமென்றதலமறிந்து வாய்வாலுங்க
சங்கையுடன்வாசிகொண்டு வாயால்வாங்கே. (௬௩௰)

வாங்கியிருகலையறிந்து மவுனமாக
மவுனமென்றமாங்கனியை கனிவாயுண்க
ஓங்கியெழுசபைதாண்டப் பிலமுண்டாகும்
தொடுங்கிமனக்கால்கெதியை நிணிப்பாரு

பாக்குபெற அண்டரண்டஞ் சுற்றிமீளும்
பரஞானஸ்ரீகோணத் தாயிரட்டு
மாய்கலிதானுண்டபிலக் கெதியுண்டாச்சு
மகத்தானசூக்ஷமென்ற சூக்ஷம்பாரே. (௪௱௧)

சூக்ஷமென்றஆச்சியுட கலையைப்பாரு
சூதானமானகெதி யிருகாலய்யா
சாக்ஷியினுள்சூக்ஷத்தின் காலைக்காண
கண்காக்ஷிபானுக்கால் வாதமாச்சு
தாக்ஷியென்றுஜக்காக்ஷி அமுர்தமுன்னைத்
தானறிந்தகண்காக்ஷி தானுமென்று
பேச்சியென்றகுட்சமடா பின்னேதுமில்லை
பிலமானஅனுபோகி யானும்பாரே. (௪௱௨)

பாரடாயிவளாட்டுக் காலேவாதம்
பத்திகொண்டுகண்டுபிடி வாதஞ்சித்தி
ஊரடாஉப்பாலும் அப்பினாலும்
உள்ளபடிகண்டுபிடி வாதத்தாயைக்
காரடாமுப்பூவிற் கட்டும்வித்தை
கையறிந்தர் சகைதம் கொள்ளையாச்சு
நாரடாநாதிமன மார்தான்கேட்ப்பார்
நல்லபதங்கண்டவர்கள் யேழைதானே. (௪௱௩)

அமுர்தரசமுன்னை.

ஏழையென்றே யான்பார்த்தேன் யென்னைப்போலே
யேகமிருமயமான சோதிப்பாலே
காலையிலேகருவறிந்து கொண்டோருக்கு
கண்டபடிகண்டவற்குத் தொண்டுசெய்வேன்
வாழையிலேதலைகுலை சாய்ந்தமர்க்கம்
வசையறியாற்றுரையரியார் மனசைக்காணூற்
தாழையிலேபூப்பூத்து சனியுண்டாச்சு
சதாபோதயோகமதால் காணுவாயே. (௪௱௪)

காணுதற்குயென்னசொல்வேன் விதிதான்வேணும்
கண்டவர்கள்விண்டதுண்டோ கனியின்மார்க்கம்
பூணுதற்குமனம்பூண்டுக் காலைப்பார்க்க
புலம்பிமனம் நிலைபாதே மூலம்பார்க்க
தோணுதற்குமும்மலமும் கண்டுபோகுஞ்
சுகமாகசாகரத்தை அறிந்துகொள்வாய்
பேணுதற்குயேகவெளி சூக்ஷாசூக்ஷம்
பொரிந்துகொள்வதற்குத் தொட்டுக்காட்டே. (௪௱௫)

முக்கிகோணபூசை.

தொட்டுமிகக்காட்டுவது அந்தரங்கத்தோடு
குரிபோலகாட்டுவது சூக்ஷாசூக்ஷம்



காட்டுவது அங்கையடா யிருகால்தொட்டு
காரணத்தால்தொட்டவிடங் கறுணையாகும்
பெட்டிரண்டுங்கூடியல்லோ திறவுகோலாய்
யிதையறிந்துபூரணத்தா லதிர்ந்துபார்க்க
திட்டுமடாபூரணத்தின் வட்டம்பாரு
கேசரத்தின்கேசரியின் இருவைப்பாரே. (௪௱௬)

பாரடாபரஞ்சோதி முக்கோணத்தில்
பத்திகொண்டுயின்னமொரு கருவைக்கேளு
கூரடாகனிந்துவுன தறிவாக்கீபுக்
காலறிந்துவாசியினால் கருவைப்பற்றி
ஆரடாநிலையறிந்து பானங்கொள்ளு
நிலையான அறுசுவையும் நிலைதப்பாது
மேரடாஅடிமூலங் கணேசன்சேர்கை
மெஞ்ஞானபூரணத்தின் கெதியைப்பாரே. (௪௱௭)

மந்திரவாள்தியானம்.

கெதியானகேசரமே மணியின்சோதி
கணேசனடிமூலமடா ஆதிபந்தம்
மதியானமைபமடா ருத்திரமூலம்
மகத்தானவாசியடா சிம் றீங் கென்று
விதியானவெழுத்தறிந்து ஓதுதற்கு
விளம்பறிது ஓங்கார விஞ்சைமூலம்
பதியானபதியறிந்து மந்திரவாளை
பத்திமனங்கொண்டபடி யின்னங்கேளே. (௪௱௮)

கேளப்பாமந்திரவாள்தனக்கு மூலமந்திரக்
கேசரத்தின்பூரண ஓங்காரவாளால்
ஆளப்பாஇதையறிந்து தியானம்பண்ணி
அடிமாந்துசெய்யாதே அரிவைப்பற்றி
நாளப்பாமுப்பெலியு மமர்ந்தேவாங்கும்
நாற்பத்திமுக்கோண சாத்தாட்டு
வாளப்பாவாழ்வதற்கு மவுனத்தானை
மனதுருகபூரணமாய் மதிக்கக்கண்ணே. (௪௱௯)

கண்ணானகமலிதிரி சூலிவாமி
காரணமேபூரணமே கமலத்தாயே
விண்ணானசபைதனிலே நடனமாடி
வேதாந்தப்பேரொளியாய் நின்றதாயே
முன்னானகண்மணியே சூபாரூபி
முதலானபூரணமே அருமைக்கண்ணே
ஒன்னானபூரணமா பென்னானந்தான்
ஓமென்றமூலமந்திர சத்திதாதே. (௪௱௰)

சத்தியமாய்நின்றசிவ சத்திமாதே
சமர்முனையில்வெத்திதரும் தாயேதாயே
வெத்தியுள்ளபூரணத்தின் வேதரூபி
வேதாந்தக்கோத்திரமாய் விளங்குந்தாயே
முத்தியுள்ளமோலமந்திர விவேகத்தாயே
மோனமுடன்தியானமதாய்ப் பூசைசெய்யே
பத்தியுள்ளமந்திரவாள் கையிலீய்ந்து
பதிவானவரங்கொடுப்பாள் கெதியைப்பாரே. (௪௪௧)

## நவகும்பபூசை.

பார்முழுதுமொருகுடைக்கீழ் பதிவாயான
பகர்ந்தசொல்லைமறவாதே ஞானம்பாரு
சீர்பெறவேபூசைசெய்ய கும்பமெட்டும்
தீர்க்கமுள்ளகும்பமடா ஓம் பிரதானம்
நேர்பெறவேகும்பநற் கும்பம்வைத்து
நேர்மையுடன்நவக்கிரகந் தனக்குமைந்தா
பேர்பெறவேகரகமதிற் கடியில்மைந்தா
பிலமானஅட்சரையும் படிதானென்றே, (௪௪௨)

படிவாகஅட்சரையைப் பாப்பிமைந்தா
பத்தியுடன்பிரணவத்தை பதிவாய்நட்டி
முடிவானசத்திநடு மையத்தின்கும்பம்
மோனமுள்ளஅட்சரையும் படிதானெட்டு
அடியானதலமதிலே சாத்திக்கும்ப
மதியென்றபிரணவத்தை மன்பாய்ச்சாற்றி
வடிவாகயெனையாள வாலாவென்று
மார்க்கமுடன்தானிருந்து சொல்லக்கேளே, (௪௪௩)

## நாற்பத்துமுக்கோணம்.

கேளப்பாபிரணவமேல் முக்கோணமிட்டுக்
கிருடையுள்ளகோணமதில் விந்துபோட்டு
வாளப்பாசொல்லுகிறேன் கும்பமெல்லாம்
வகையுடனேநாலணிந்து கெங்கைவிட்டு
ஆளப்பாமாங்குலையுந் தேங்காய்சாற்றி
அன்பாகரவர்தனித்து ஆடைசாற்றி
குளப்பாசுகந்தபரி மளங்கள்சாற்றி
சுத்தமுடன்தானிருந்து பூசைபண்ணே. (௪௪௪)

பூசைமுறைசொல்லுகிறேன் மைந்தாமைந்தா
பூரணமாங்கும்பமொருகும்பந்தன்னில்
நேசமுடன்மதுராசக் கனிகள்வைத்து
நேமமுடன்தூபமுடன் தீபங்காட்டி



ஓசையுள்ளமணிநாதம் சங்கநாதம்
உற்றமனேஜோலண்டி ஜெகநாதந்தான்
ஆசையுடனுபசாரஞ் செய்துநல்ல
ஆனந்தபூரணியை பூசைபண்ணே. (௪௪௫)

பண்ணப்பாபூசைநவ கும்பபூசை
பத்திகொண்டுசத்தமதாய் சத்திபூசை
விண்ணப்பாநிறைந்ததிரு மந்திரவாளாய்
விளக்குகின்றவேதாந்த வாலைபூசை
கண்ணப்பாநிறைந்ததிரு வாலைபூசை
காரணமும்பூரணமாய் நின்றபூசை
முண்ணப்பாசெய்தவத்தால் பலிக்கும்பூசை
முத்தியுள்ளபூசையடா சித்திதானே. (௪௪௬)

## புவனை பூசை,

சித்திதருபூசையடா தேவிபூசை
திக்கெட்டும்வெத்தியடா யிந்தபூசை
பத்திதருபூசையடா தப்போயில்லை
பதியறிந்தமந்திரவாள் தன்னையும்
புத்திக்குளிதையறிந்து பூசைபண்ணும்
பூமிமுதலாகாசமட்டும் பெற்றரூபி
முத்திகேள்முத்தியடா யறிவைப்பாரு
முன்னவன்தான்கண்ணிறைந்த மூலந்தானே. (௪௪௭)

தானென்றமூலமடா யேகமூலந்
தயவானகும்பநவ மூலமெல்லாம்
வானென்றபுருவமடா சொர்ணபுஷ்பம்
வகையுடனே திசைகளெட்டு கும்பஞ்சேர்ந்து
கோனென்றகும்பநடு கும்பந்தன்னில்
குருவானதங்கமது களஞ்சிவாங்கி
பூனென்றதகடதுவே புவனைமாது
பூரணியாள் அட்சரத்தைப் பொருந்திநாட்டே. (௪௪௮)

நாட்டமென்றநடுவான கும்பந்தன்னில்
நாதாந்தபுவனைசக் கரத்தைச்சாற்றி
தேட்டமென்றகும்பமெல் கும்பமெல்லாம்
சிவசிவாபூசைமுறை செயமாய்ச்செய்து
ஆட்டமென்றஅம்பலவர் தன்னையும்
அங்கனையேபூரணமாய்த் தியானம்பண்ணி
வாட்டமில்லாவாசிமலர் வாசத்தாலே
வளர்பிறையுந்தேய்பிறையும் பூசைபண்ணே. (௪௪௯)

பண்ணடாநன்முறை ஆசைவைத்து
பத்தியுடன்மனம்சொரண்டி பூசைசெய்தால்

முன்னடாயின்று திருபுவனைதாயும்
　மூன்றுலகும் தன்வசமாயாள்வதற்கு
கண்ணடா கருணைவைத்து திருநீரிட்டு
　கமலமலர் அமுர்தமதை கனிவாயூட்டி
விண்ணடா தானிருந்த மந்திரவானை
　வேதாந்தபூரணமாயிவாள்பாரே. (௪௫௰)

## மந்திரத் தியானம்.

பாராளும்புலத்தியனே சகலருக்கும்
　பதிவானமந்திரவாள் சூட்சங்கேளு
நேரானமூலமடா வடிவுமாச்சு
　நிசமானநீங்காரம் வேலுமாச்சு
கூரானவடிவேலா மந்திரவானை
　கூர்மையுடன்சொல்லுகிறேன் ஓம் நீங் கென்று
மாராதமவுனமதாய் தியானம்பண்ண
　மார்க்கமுடன்திசைபான வகையைப்பற்றே. (௪௫௧)

பத்திமனங்கொண்டு பூரணமாய்நின்று
　பராஞானகேசரமே வாசமாகி
சுத்தமுடன்ஓம் நீங் வசிவசியென்றோத
　சூழ்ந்திருந்தசத்துருக்கள் வசியமாகும்
சித்தமுடன்ஓம்நீங் நசிநசியென்றோத
　சினந்துவரும்பிடையெல்லா மகன்றுபோகுஞ்
சத்தமுடன் ஓம் நீங் வசிவசியென்றோத
　சகலசவுபாக்கியங்கள் தானுண்டாமே, (௪௫௨)

உண்டாகும்ஓம் நீங் மசிமசியென்றோத
　ஓடுங்காதகாலகடி விஷங்கள்மீளும்
தண்டாமல் ஓம் நீங் அங்கென்றோத
　தட்டழிந்தமிருகமெல்லாந் தானேயோடும்
நன்றாகச்சொன்னதிந்த மந்திரவானை
　நாட்டமுடன்பூரணமாய் பூசைபண்ணி
நின்றாடயாதொருசா யெழுத்துக்கெல்லாம்
　நிசமானமந்திரவாள்ஓம் நீங் கென்னே, (௪௫௩)

யென்னுவதுமுன்னு மந்திரசூட்சம்
　யேகாந்தசூட்சமதை யென்னசொல்வேன்
விண்ணிறைந்தசூட்சமடா அம்மாவாசி
　வேதாந்தவாசிசிவ விந்துநாதம்
கண்ணிறைந்தபோதமடா கமலபோதங்
　கருணைவளர்பூரணமாய் நின்றநாதம்
உன்னிவினையாடுகின்ற நாதந்தன்னை
　உத்தமனேமெய்தவமாய்க் கண்டுபாரே, (௪௫௪)



பாரப்பாயிடதுகலை அகாரஞ்சந்திரன்
　பதிவானவலதுகலை உகாரஞ்சூரியன்
நேரப்பாசுழிமுனைதான் மகாரமக்கினி
　நினைவாகயிப்படியே தியானஞ்செய்து
கூரப்பாசெவிக்கிரதேவி மந்திரங்கேளு
　கருணையுடன் ஓம் நீங் சிவயவசியென்று
தேரப்பாயிப்படியே தியானசிவம்பண்ண
　சிவசிவாயிசுபாமு முத்தியாச்சே. (௪௫௫)

முத்தியுடன்யிப்படியே மூன்றுகாலம்
　முனைநிருத்திதியானசிவஞ் செய்துவந்தால்
பத்தியுடன்சிவயோகஞ் சித்தியாச்சு
　பஞ்சகணதீட்சையுமோ முத்தியாச்சு
சுத்தமுள்ளதீட்சையது ஆதாரஞ்
　சுகமானஆதாரம் ஆறுமுகமாச்சு
சித்தமுடன்யிருதயத்தில் தானேநின்று
　சிவசிவாநினைத்தபடி முடிக்கும்பாரே. (௪௫௬)

பாரடாசத்திசிவ பூசைபண்ணி
　பராஞானவாலைரசம் பதிவாய்க்கொண்டால்
நேரடாஆதாரஞ் சித்தியாகும்
　நிலையானவாசியது அகலாதய்யா
சாரடாஞானதாந்தப் போதத்தேகி
　சங்கையுடன்சற்குருவை தியானம்பண்ணி
பேரடாபஞ்சகண தீட்சையாலே
　யெட்டானஅஷ்டசித்துந் திட்டமாகும். (௪௫௭)

## பஞ்சகண தீட்சை.

திட்டமுடன்பஞ்சகண தீட்சைதன்னை
　செய்யுகிரமார்க்கமதை செப்பக்கேளு
சட்டமுடன்ஆதிகர்ப்பம் அகாரம்விந்து
　சங்கையுடன் ஆண்டோன்று செவித்தபின்பு
இஷ்டமுடன்உகாரமென்ற சத்திமாது
　யின்பமுடன்மனம்கிருத்திக் கொண்டுதேரு
வட்டமதில்மனம்கிருத்தி அந்திசந்தி
　மைந்தனேயெட்டிரண்டுங் கொண்டுதேரே. (௪௫௮)

தேரப்பாகாலைசிவ மாலைசத்தி
　செம்மையுடன்கொண்டுமனந் தேர்ந்தபோது
காரப்பாவாலைபதம் பணிந்துகொண்டு
　கருணையுடன்ஞானாந்த போததேகி
மேரப்பாபெருகடு முக்கோணத்தில்
　விஞ்ஞானயெனுங்காயாள் இரீங்காரத்தை

சாரப்பாதன்மனமே சாட்சியாகத்
 தானிருந்திதிங்கார் ரூமைப்பாரே. (௩௱௯௯)

பாரப்பாபரஞான சூழமனை
 பத்திபுள்ளகாயாஸ்திரி சந்நதையன்னை
நேரப்பாஅரியாமல் மதங்கள்பூண்டு
 நிசமில்லாஆதிமனை யோர்கள்கூடி
வீரப்பாகொண்டதொரு அட்சரத்தையோதி
 வீணிலேதானலைந்து விசையுங்கெட்டு
தூரப்பாஅடிப்படையுந் தகந்ஞானல்ல
 சுழிவானசுழிதனிலே சுழன்றார்காணே, (௪௱)

காணுகின்றசுழிதனிலே சுழலாமல்தான்
 கருவானகாயாஸ்திரி விந்நயசகேளு
ஊணுகின்றவிஞ்ஞையடா மவுனஞானம்
 உண்மையென்றஞானமடா மந்திரவாலே
தோணுகின்றவாலையடா மந்திரமும்
 சுயஞ்ஜோதியானஜெக ஜோதிதன்னை
பூணுகின்றசித்தமதாய் தானேநின்று
 பூரணமாய்க்கேசரியைப் பூசைபண்ணே. (௪௱௧)

பண்ணப்பாகேசரியை பூசைபண்ணி
 பணையானமந்திரகலை வாசிதன்னை
எண்ணப்பாஅவள்பதமே கெதியென்றெண்ணி
 நாளானநாளறிந்து பூசைபண்ணி
கண்ணப்பாதானருந்து மிகுடபாக்கண்ணில்
 கால்மாறிகொண்டுகெதி கண்ணைப்பார்த்து
உண்ணப்பாவசியினு அருந்தியுண்ணு
 உண்ணையிலேமனந்தன்னை யொடுக்கிஉண்ணே. (௪௱௨)

ஒடுக்கிமனதுருக்கமுடன் கொண்டாயானால்
 உனதுகெதிகால்வேக முரைக்கப்போமோ
யிடுக்கமென்றதீவினைக ளிடங்கெட்டோடும்
 யென்மகனேஉன்வுடம்பு ஞதமாகும்
அடுக்குநிலேஆகார மடங்கிவாழும்
 ஆதிசிவசாம்பவியாள் நிர்த்தஞ்செய்வாள்
தொடுக்குமெலாமுப்பூவின் வாசத்தாலே
 சுகசீவபிராணனது சுத்தமாமே. (௪௱௩)

## அமாவாசிவிப்ரம்.

சுத்தமுள்ள ஆகார சூட்சந்தன்னை
 தொடுகுறிபோலச்சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
சித்தமுள்ளதேகமது நிசமிமைந்தா
 சிவசிவாதிசமியிலே நவமிதோன்றும்



பத்தமுள்ளநவமியாலே அஷ்டசத்தி
 பதிவாக அஷ்டாங்க யோகமானால்
உத்தமதொரு அஷ்டாங்க போகந்தன்னில்
 உதித்தசதம் எழுவகை தோத்தம்பாரே. (௪௱௪)

பாரப்பா பெழுவகை தோத்தந்தன்னில்
 பதிவான மடபதிக ளாறுமாச்சு
காரப்பா மடபதியில் பஞ்சகர்த்தாள்
 கருணையுள்ளநால்வேதங் கருவாய்க்கட்டி
சேரப்பாநின்றதிரு மூர்த்தியானார்
 நிறைந்ததிருமூர்த்திசத்தி சிவமுமானார்
சாரப்பாசத்திசிவம் ரெண்டுமொன்றாய்
 தானுதித்தானவனுப் யேகமாமே. (௪௱௫)

ஏகமென்றதேசியடா ஏகாதேசி
 யின்பமுடன்துவாதேசி ரெண்டுமாகி
தேகமென்றவாசியடா நிறைபோதேசி
 செம்மையுடன்சதுர்த்தெசி சேர்ந்தொன்றாய்
ஆகமென்றயாகமங்க ளறிவேதானும்
 அடங்கிநின்ற வாசியம்மா வாசியாச்சு
பாகமுடன்வசிநின்ற அம்மாவாசி
 பத்தியுடன் தன்னகமாய்ப் பதிவாய்ப்பாரே. (௪௱௬)

பாரப்பாதன்னகத்தைப் பதிவாய்ப்பார்க்கில்
 பாழானசவிமதியும் பாய்ந்துபாய்ந்து
நேரப்பாவொன்றைப்போல் நம்பாமற்றன்
 நிலைதவறிமாண்டவிட்டமார்தான்காண்பார்
சேரப்பாமாண்டகெதி யென்னவென்றால்
 திங்களென்றசந்திரனே வாசியாச்சு
வீரப்பாகொண்டதொரு மூலஆவி
 விளங்கிநின்றசத்திசிவ மாகுங்காணே. (௪௱௭)

காணவேசத்திசிவ மாகிநின்ற
 காலானவாய்வுடனே நிமிரெண்டும்
பூணவே ஆகாரஞ் சாக்ஷியாகப்
 போனதின்பின்பிரிதிவியும் அப்புமிரெண்டு
தோணவேரெண்டுமது மொன்றாய்க்கூட்டி
 சேர்ந்துமிகதான்மகிழ்ந்து சுத்தமாகப்
பேணவேமண்ணுமே உப்பாய்ப்போன
 பேச்சறிந்துஅஞ்சையுமே பேணிப்பாரே. (௪௱௮)

பேணிப்பார்பஞ்சகர்த்தா ளஞ்சுமொன்றாய்
 பிலமாகநின்றவிதம் பார்த்தறிந்து
பூணிப்பார்ஆகாரமென்ற சிவமாமன்னிதை
 பத்தியுடன்பூரணமாய்ப் பூசைபண்ணி

வலரிப்பா இன்பிறகு உகாரசத்தி
  ஓமெனவே தான்செபித்து உறுதிபெற்றால்
ஆனிமத்த இசமதாய் பஞ்சபூதம்
  அப்பனே பூரணமா யாகும்பாரே. (௪௬௯)

பாரப்பா மவுனமுடன் நின்றுவாழ
  பனைஞானகேசரியாள் பாதம்போற்றி
சாரப்பா அவள்பதமே கெதியென்றெண்ணி
  சங்கையுடமவுனரசந் தானேகொண்டால்
பேரப்பா பெத்தமொரு தவப்பேராலே
  பேரண்டஞ்சிற்றிவர கெதியுண்டாகும்
ஆரப்பா அறிவார்கள் மவுனப்போக்கை
  யறிந்துகொண்டு பூரணத்தை அடுத்துவாழே. (௪௭௰)

அடுத்துமிகவாழ்வதற்கு மைந்தகேளு
  ஆதியண்டபூரணமாம் அண்டத்தேதி
விடுத்துமிகவஇன்ரசத்தை வாங்கிக்கொண்டு
  வேதாந்தசத்திசிவ பானமூட்டி
கடுத்துமிகப்போகாமல் கற்பூரஞ்சாற்றி
  கலங்கமில்லாரவிதனிலே காயவைத்து
யெடுத்துமிகப்பூரணமாய் கொண்டாயானால்
  ஏகாந்தமானசிவ யோகியாச்சே. (௪௭௧)

ஆச்சப்பா சிவயோகி யானதென்று
  அடங்கிநின்றபஞ்சகர்த்தா ளெல்லாம்போற்ற
பேச்சப்பா பேச்சறிந்து கண்டுகொண்டு
  பெருமையினால் சிவயோகமுற்றதென்ன
மூச்சப்பா தானறிந்து தன்னைப்பார்த்து
  முன்னோனசுழினையில் வாசிபூட்டி
காச்சப்பா அக்கினிகொண் டாறுதாரம்
  கசடகலகாச்சிவிட்டு வைத்தமாமே. (௪௭௨)

## அரிதாரயியம்.

ஆமப்பா கனகமென்ற தங்கத்தாளை
  அருமையுடன் காணுதற்கு அங்கக்கேளு
ஓமப்பா வீரமுடன் லிங்கங்கூட்டி
  உண்மையுடன் கமலரசந் தன்னாலாட்டி
நாமப்பா தாரமதுக் கங்கிபூட்டி
  சங்கையுடன் ரவிதனிலே காயப்போட்டு
நாமப்பா சொல்லுகிறோம் அயக்காண்டி
  நன்மையுடன் கவசமிட்டு வெண்ணைசூத்தே. (௪௭௩)

வெண்ணையென்றால் நல்வெண்ணை விட்டுமைந்தா
  வின்பமுடன் தானுருக்க வேமாகும்
வெண்ணையொற்றதாரமடா வேமானால்
  பொன்னானபொன்வினையும் புகழ்ந்துபாரு
கண்ணையென்ற அரிதாரயியந்தன்னை
  கருத்தினிலேயான்சொல்லவென்றால் மெத்தகஷ்டம்
யென்னைவளர்த்தெடுத்தகுரு நாதன்சொன்னார்
  யென்மகனேநீயுமிந்தப் படிகாண்பாரே. (௪௭௪)

## தாமரபற்பம்.

பாரப்பா யின்னமொரு கருணைக்கேளு
  பதிவானதாமடா கற்பூரந்தான்
நேரப்பா கற்பூர மதனோடொக்க
  சிசமானகெந்தகமும் கூட்டிச்சேர்த்து
காரப்பா கல்வமதி லரைக்கும்போது
  கசிந்துமிகசிவமாகுந் சிவத்திற்கேளு
சாரப்பா அரிதாரம் வீரஞ்சேர்த்து
  தானரைத்துகட்டுதற்கு கவசம்பண்ணே. (௪௭௫)

பண்ணப்பா கவசமது நன்றாய்ச்செய்து
  பாலகனேபுடம்போட பற்பமாகும்
யென்னப்பா வென்றுசொல்லி யிருந்துவிட்டால்
  யீடேற்றமில்லையடா தேதன்னைப்பாரு
விண்ணப்பா அங்கமதில் தன்னைப்பாரு
  மெய்யுருககாணுமடா அங்கத்தங்கம்
தன்னப்பா தங்கமடா தங்கமாகும்
  தாயானகெந்தகத்தின் தைலக்கேளே. (௪௭௬)

## கெந்தகத் தைலம்.

கேளப்பா பானையிலே பசும்பால்விட்டு
  சிறுமையுடன் தவ்வாளமுக் குலக்குவாக்கி
வாளப்பா குருத்திறனால் வேடுகட்டி
  மைந்தனே அதின்மேலே கெந்திபோட்டு
ஆளப்பா அடிப்பேற்றி யெரிக்கும்போது
  ஆதியென்றகெந்திபது தைலமாகும்
கேளப்பா யில்லாத தைலந்தன்னை
  கூர்மையுடன் பிடிக்காலில் வாங்கிக்கேளே. (௪௭௭)

கேளடா தயிலமதில் மைந்தாகேளு
  கேள்விவென்னபுருஷனுடனே குடன்கூட்டி
ஆளடா தயிலமதில் பொடியைப்போட
  அப்போது தயிலமது தண்ணீராகும்
கோடாயில்லாத தண்ணீர்தன்னில்
  கூர்மையுடன் மறோனிலையைத் அளவத்துவாட்ட
வாளடா வாட்டினதை உருக்கிமைந்தா
  வளமானதங்கமதிற் சேர்த்துக்காணே. (௪௭௮)

சேர்த்துமிகபார்க்கையிலே தங்கஞ்செய்யாரு
    சிவசிவாதங்காதி செய்புதன்னை
பார்த்துமிகவெள்ளியிலே பத்துக்கொண்டு
    பக்குவமாய்த்தான்குகித்து ஊதிப்பாரு
காத்துமிகவெள்ளியிலே ஊதிப்பார்க்க
    கைலாசமேருவது தங்கமாச்சு
சாத்தியதோர்தங்கமதைக் கண்டோரும்
    தன்மையுடன்பூரணமாய் வாழ்வாய்பாரே. (௪௭௯)

பாரப்பாவாழ்வதுவும் மாசைஆசை
    பலபணிநிறைவது மாசையாசை
கோப்பாகிரிப்பதுவு மாசையாசை
    தீஷ்டையென்றசிவயோக மாசைஆசை
காரப்பாசகலகலை வாசியேறி
    கண்ணமிர்ந்துபார்ப்பதுவு மாசையாசை
சாரப்பாகாயாதி கற்பந்தன்னை
    சந்தித்துமிர்ப்பதுவு மாசைதானே. (௪௮௦)

## ஆசாபாசம்.

ஆசையென்ற ஆசையெல்லா மாசாபாசம்
    ஆகாராதிபோகமென்ற பாசத்துக்கு
இசையென்றகன்னியதிலு லாசைமீறி
    உண்மையென்றஞானமதி தன்னைக்காண
பாசையென்றபலசமைய நூலாராய்ந்து
    பத்திகொண்டஅஷ்டாங்க பாசத்தேகி
பூசையென்ற ஆசைக்கா செய்துகொண்டு
    பொல்லாதமாயைவினிலே புகுந்தார்பாரே. (௪௮௧)

பாரப்பாமாய்கையென்ன ஆசாபாசம்
    பலபலவாய்சாஸ்திரத்தை பத்திபேதும்
ஜோப்பாயோகத்திலே சென்றேபோயும்
    கோமையுடன்புருவமதி னிலையில்நிற்கும்
காரப்பாகாயாதி கற்பந்தேடும்
    கர்ப்பமொன்றுசெந்தூர பாபஞ்செய்யும்
சீரப்பாசெந்தூர லோகம்பண்ணு
    விசையாவமாய்கைவினை யாட்டுத்தானே. (௪௮௨)

தானென்றமாய்கைவினை யாட்டிவலாட்டிற்
    சங்கற்பவிகற்பமென்ற சாற்பக்கேது
கோவென்றகுருவருளால் வெண்ணெய்பார்க்கில்
    கொண்டபடிநின்றதுவே பாசரூபம்
தேவென்றஅருபமதுக் காகவேவாடி
    செப்பதொருபலதொழிலாக் குத்தமில்லை



உடலென்றபலதொழிலுக் குருதியான
    உருதியுள்ளதங்கமடா உண்மைதானே. (௪௮௩)

## லிங்கக்கட்டு.

உண்மையுள்ளதங்காதி மாறுதன்னை
    உருதியுடன்காறுதற்கு வகைசொல்க்கேளு
தன்மையென்றகாரசம் பொன்றாய்க்கூட்டி
    சரியாகபொரிக்காரம் கெந்திசேர்த்து
நன்மையுடன்கலசப்பால் தன்னாலாட்டி
    ஞாதாந்தலிங்கமதுக் கக்கிட்டுடி
செம்மையுடன்ரவிதனிலே காயவைத்து
    சிவசிவாகன்னாம்பு முப்புங்கூட்டே. (௪௮௪)

கூட்டிமிகச்சம்பழந்தான் நன்றாயாட்டி
    கூர்மையுடன்மேல்கவசஞ் சீலைசெய்து
வாட்டிமிகப்புடம்போட்டு யெடுத்துப்பார்த்தால்
    மகத்தானசாதிலிங்கம் கட்டிப்போகும்
தாஷ்டிகமாய்ச்சவ்வீர மப்படியேகட்டுந்
    சார்வரிந்துகட்டுமுன்னா யிட்டம்பார்த்தால்
நாட்டியதோர்ரசவாதங் கைக்குள்ளாகும்
    நாதாந்தபுலத்தியனே யின்னங்கேளே. (௪௮௫)

## கல்லுப்புகட்டு.

கேளடாசவுக்கார மன்னபேதி
    கெடியானஅப்பிரக முட்டையோடு
வாளடாபொன்னுருக்கும் பொரிக்காரந்தான்
    மகத்தானசங்குடனே ஆறுங்கூட்டி
குளடாமேனிச்சார் தன்னாலாட்டிச்
    சுகமானகல்லுப்புக் கக்கிட்டுடி
மாளடாரவிதனிலே காயவைத்து
    மார்க்கமுடன்பின்னமொரு வரிசைகேளே. (௪௮௬)

வரிசையுடன்கன்னாம்பு முப்புங்கூட்டி
    மார்க்கமுடன்சம்பழத்தால் நன்றாயாட்டி
வரிசையுடன்மேல்கவசம் நன்றாய்செய்து
    வண்மையுடன்புடம்போட்டு யெடுத்துப்பாரு
கரிசனமாய்ப்புடமாறி யெடுத்துப்பார்த்தால்
    கல்லாகசல்லுப்பு கட்டும்பாரு
பரிசனமாய்கல்லுப்பு கட்டிச்சானல்
    பாலகனேபேதமுகம் பதிவாங்காணே. (௪௮௭)

காணவேகட்டிநின்ற உப்போடொக்க
    கருவானசாதிலிங்கக் கட்டுங்கூட்டி
ஊணவேசமலரசக் தன்னாலாட்டி
    உத்தமமேவல்லையதிந்து புடமேசெய்தால்

கோணவேலிங்கமுடன் உப்புஞ்சேர்த்து
சுத்தமுடன்கட்டியது சித்தியாகும்
பேணவேசித்திபுடன் கட்டும்லிங்கம்
பெரிதானவெள்ளிசெம்பில் வேதையாச்சே. (௪௮௮)

ஆச்சப்பாயின்னமொரு வேதைமார்க்கம்
அருமையுள்ளபுலத்தியனே சொல்லக்கேளு
தோச்சப்பா அரிதாரஞ் சாதிலிங்கம்
சுகமானபொரிக்காரஞ் சவ்வீரந்தான்
பாச்சப்பாவகைக்கிமஞ்சி சாறுவிட்டு
பதிவாகமரைசங் தன்னாலாட்டு
நீச்சப்பா தங்கமொரு பலந்தகட்டில்
நீமகனேகவசமது நன்றாய்ச்செய்யே. (௪௮௯)

## தங்கபஸ்பம்.

செய்யப்பாமணற்குகை வாலுவாய்ச்செய்து
சிவசிவாபுடங்களில் வைத்துப்பார்த்தால்
மைய்யப்பாமையென்ற தங்கபஸ்பம்
மார்க்கமுடன்செம்புதனிற் பத்துக்கொன்று
வையப்பாவைத்துமிகப் பார்த்தேனென்று
வன்மையுடன்சொல்லிநீயென் னசான்தானும்
கையப்பாதானிருந்து விருப்பிக்கொண்டு
கனமாகசொல்லென்று வெள்ளிசேரே. (௪௯௦)

சேர்த்துமிகத்தானு நக்கி பார்க்கும்போது
சிவசிவாபொன்னொளியை யென்னசொல்வேன்
மாத்ததிகமானசிவ சோதித்தாயை
மனதுபரிபூரணமாய்ப் பூசைபண்ணி
ஆத்துமத்துக்காரான சோதியென்று
அனுதினமுஞ்சிவயோகத் தாசைப்பூண்டு
பார்த்திபனேபூரணமாய் நின்றாயானால்
பக்குவமாய்ப்பூரணத்தில் பதிபலாமே. (௪௯௧)

பதியானபதியதுதான் பராபரமாம்
பசுவானவாசியடா காணுமாச்சு
விதியானபாசமடா வீடதாச்சு
வீட்டிற்றுகால்விருத்தி போகஞ்செய்தால்
கெதியானமுச்சுடரு மொன்றாய்நின்று
கேசாத்திலாடுகின்ற கெதியைப்பார்த்தால்
மதியானமதிமயக்கந் தானேதீர்ந்து
மாசற்றசோதியென வாழலாமே. (௪௯௨)

வாழலாஞ்சவுமியமாய் நின்றுகொண்டு
மகத்தானசாரசமுக் தாமென்றெண்ணி



ஆனவாயந்தரங்க முமாக
ஆதிபராஞ்சானவெளி சோதிபோலே
குளவாஞ்சுத்தசித்த சுகத்தைப்பெற்றுத்
துலக்கவாமணிமகுடச் சோதிபோலே
மேலெல்லாம்பாச்சென்று நினைக்கவேண்டாம்
வேதாந்தபின்டமடா வண்டத்தானே. (௪௯௩)

தானான அண்டபிண்ட மண்விண்ணுச்சு
சகலசராசரங்களெல்லாம் அதுதானுச்சு
வாவென்றவடிவுதன்னைக் காணுமெல்லாம்
வாசாகோசரமாகப் பேசலாச்சு
ஊனென்றகூட்டிலுயிரை உண்மையாக
உண்மையென்றஞானநெறி காணுமெல்லாம்
வீணென்றவேடமதை தரித்துக்கொண்டு
வெறிபிடித்தநாய்போலே திரிவான்பாரே. (௪௯௪)

## செயநீர்.

பாரப்பாவெறிபிடித்த உதாசீனந்தி
பாய்ந்தேரியத்தினை மயிலாமல்தான்.
காரப்பா அதற்குமொரு கருமைக்கேளு
கருவானதுரிசுசவ் வீரங்கூட்டி
சாரப்பாபச்சையென்ற கற்பூரத்தோடு
தனித்தபச்சைப்புழுகுடனே நாலுங்கூட்டி
சேரப்பா அரைத்துப்பின் காலில்வைக்க
நேசமாகவுருமடா செயநீர்தானே. (௪௯௫)

## வெள்ளிபஸ்பம்.

தானானசெயநீரில் மைந்தாகேளு
தகடான அரிதாரந் தோய்த்துதோய்த்து
வானானசிதனிலே வைத்துப்பார்க்க
மாசத்தாருமடா அருகநீருக்
கோணானசவ்வீரங் கூடநீரும்
கூர்மையுடன்மூன்றுமி மொன்றாக்கூட்டி
தேனானவெள்ளிபொரு பலந்தகட்டில்
மூர்க்கமுடன்தான்பூசிப் புடத்தைப்போடே. (௪௯௬)

போடப்பாபுடந்தனில் வைத்துப்பார்க்கப்
பூரணமாய்வெள்ளியது நீறிப்போகும்
நாடப்பாவெள்ளியென்ற நீறில்மைந்தா
நன்மையுடன்மிடைசரியாய் வீரம்பூரம்
கூடப்பாகல்வத்தில் நாதநீருக்
சுத்தமுடன்காணுட்டி யெடுத்துக்கொண்டு
ஆடப்பாதங்கமென்ற காசிலப்பா
அதின்பிறகுஉப்புடனே சங்குங்கூட்டே. (௪௯௭)

## தங்கபற்பம்.

கூட்டிநன்றாய்ப்பழச்சாற்றில் நன்றாயாட்டி
கூர்மையுடன்மேற்கவசஞ் சீலைசெய்து
நாட்டிநன்றாயொருவடிக்கி புடத்தைப்போட்டால்
நாதாந்ததங்கமது நீறிப்போகும்
தாட்டிகமாய்நீறிநின்ற தங்கம்நீறும்
தானெடுத்துப்பதனமதாய் வைத்துக்கொண்டு
பூட்டிநன்றாய்பவ லோகந்தன்னில்
பொல்லாதலோகமெல்லாந் தங்கந்தானே. (௪௯௮)

## நாகக்கட்டு.

தானானநாகமதைக் காணவேண்டி
தன்மையுள்ளநாகமுறை யொன்றுகேளு
வீணானகெந்தகமும் அரிசுதாரம்
வெள்ளைபாஷாணமுடன் சாரஞ்சங்கு
வானான அநுசாக்குங் கல்வத்திட்டு
வரிசையுடன்சம்பளத்தின் சாற்றிலாட்டி
கோனானநாகமதிற் கவசம்பண்ணிக்
கூர்மையுடன்சத்திப்பால் சீலைசெய்யே. (௪௯௯)

செய்யப்பாசீலைசெய்து புடத்தைப்போடு
செம்மையுடன்நாகமது உருகிநிற்கும்
மெய்யப்பாஉருகிநின்ற நாகத்தோடே
மேலானதங்கமதைச் சரியாய்ச்சேர்த்து
வையப்பாசெம்புவெள்ளி யொன்றாய்க்கூட்டி
மகத்தானநாகருக்கு பக்துக்கொண்டு
கையப்பாதானறிந்து குடுத்துப்பாரு
கண்ணடங்காதங்கவொளி காணலாமே. (௫௱)

காணவேயின்னமொரு கருவைக்கேளு
கருவானபேதியுடன் தாரங்கூட்டிப்
பேணவேதானரைக்க நீருண்டாகும்
பெரிகிநின்றநீர்தனில் சொல்லக்கேளு
தோணவேஅரிதாரம் வீரம்பூரம்
சுத்தமுடன் தானரைத்து ரவியில்வைத்து
உன்னவேகாந்தியது பற்பமாகும்
உத்தமனே அதனுடனே கெந்திகூட்டே. (௫௱௧)

கூட்டிமிகவாய்வீரா லரைத்துவைத்தா
குருவானதங்கமதின் மேலேபூசி
வாட்டிவிசப்புடம்போடத் தங்கம்நீறும்
மகத்தானபற்பமதை வைத்துக்கொண்டு
நாட்டமுடன்பணவிடைதான் தேனிற்கொண்டால்
நரசென்மம்வல்லவிட்டா தேவனாச்சு



தாஷ்டிகமாய்த்தாய்பதத்தைப் பூசைபண்ணி
தானவனால்நின்றுதவந் தானேசெய்யே. (௫௱௨)

## அரிதாரபற்பம்

செய்யப்பாகட்டிநின்ற வீரம்லிங்கம்
திர்க்கமுடன்றானநீர் தன்னாலாட்டி
மெய்யப்பாதாரமதுக் கங்கிபூட்டி
விசையானரவியில்வைக்க பற்பமாகும்
வையப்பாதங்கமதில் பற்பஞ்சேர்த்து
மார்க்கமுடன்தானுருக்க குருவாய்நிற்கும்
பையப்பாகுருவெடுத்து வெள்ளிசெம்பில்
பத்துக்குளன்றிடவே பழுக்கும்பாரே. (௫௱௩)

பாரப்பாகாரமுடன் வீரங்கூட்டி
பத்தியுடன்தானரைக்க நீருண்டாகும்
நேரப்பாஅன்னீரில் மைந்தாகேளு
நிசம்நாகசாரமுடன் வீரந்தோய்த்துக்
கூரப்பாவிளக்கொளியில் வாட்டினக்கால்
கசடற்றுகட்டியது திட்டமாகும்
சேரப்பாநாகமது உருகும்போது
செயமானசாரமதைச் சேர்த்துப்பாரே. (௫௱௪)

## நாகக்கட்டு.

சேர்த்துமிகத்தானுருக்க நாகந்தானும்
திர்க்கமுடன்தானிருந்து கண்விட்டாடும்
பார்த்துமிகஅன்னேரந் தங்கஞ்சேரு
பதிவானவீரமது கூடச்சேரு
கார்த்துநன்றாய்ச்சேர்ந்ததை யெடுத்துப்பாரு
கனகமயமானதொரு களங்கதாகும்
ஆற்றுமற்றுக்காசான் களங்குதன்னை
அன்புவைத்துவெள்ளிசெம்பி லீனத்துப்பாரே. (௫௱௫)

அனைத்துமிகதானுருக்கி எடுத்துப்பார்த்தால்
ஆதிமிகசோதியென்ற தங்கத்தாய்தான்
நினைத்தபடிதான்குடுக்குஞ் சோதித்தாயை
நித்தியமுஞ்சுத்தமதாய்ப் பூசைபண்ணி
மனதைமிகத்தானிருத்தி சோதிப்பார்த்தால்
மகத்தானவாசிசிவ யோகந்தன்னால்
சினந்துவருங்காலனை தேடிப்போவான்
சிவசிவாகுருபதத்தில் தெளிவாய்நில்லே. (௫௱௬)

## சாரக்கட்டு.

நில்லப்பாநானியண்ட முட்டைத்தோலும்
நிசமானகடல்நுரையுஞ் சாரஞ்சேர்த்து

உன்னைப்பானுதநீர் தன்னுலாட்டி
உத்தமவோசாரமதுக் கங்கிப்பூட்டி
சொல்லப்பாரவிதனிலே காயவைத்து
சிவசிவாபுடம்போட வுருகிக்கட்டும்
வில்லப்பாவிசைபோலே கட்டும்சாரம்
வேதாந்தநாகமிதில் கட்டும்பாரே. (௱எ)

## வீரவைப்பு.

பாரப்பாசவ்வீர வைப்புசொல்வேன்
பதிவானவெச்சாரம் அன்னபேதி
சாரப்பாகல்லுப்பும் சீனிக்காரம்
சங்கையுள்ளவெடியுப்பு துரிசுவெள்ளை
காரப்பாசாதிலிங்கம் கெவுரிதுத்தம்
கன்மானதாளகமும் வெவச்சாரந்தான்
சேரப்பாவகைக்கி ஒருபலமுங்கூட்டி
யிதமாகவடைக்கி அரைரசமுஞ்சேரே, (௱அ)

சேர்த்துமிகத்தான்பொடித்து குப்பிக்கேற்றி
நீர்க்கமுடன்மணஞ்சிலே மூன்றுஞ்செய்து
பார்த்திபனேகுப்பி மூக்களவுமட்டும்
பதிவாகமண்விட்டு அடுப்பில்வைத்து
காத்தூதீயெடுத்துஅதை கனமாய்வைத்தால்
கண்மணியேவீரவைப்பு யென்னசொல்வேன்
நாத்துமிகப்போகாமல் நாலுசாமம்
நன்றாகதீய்மூட்டி யெரித்துப்பாரே. (௱கூ)

பார்டாயெரித்துமிக யிறக்கிவைத்து
பத்திபுடன்குளுந்தபின்பு எடுத்துப்பாரு
நேரடாவீரமதை யென்னசொல்வேன்
நிசமானபூரணசந்திரனைப் போலே
போடாபெற்றதொரு வீரமாச்சு
பிலமானவீரமதை யார்தான்காண்பார்
காரடாசற்குருவை தொழுதுபோற்றி
கனமானசிவயோக கருத்தில்நில்லே. (௱௰)

## பாஷாணக்கட்டு.

நில்லென்றகிலேதனிலே நின்றுகொண்டு
நீமகனேவிதுப்பையுடன் பாலையாக்கி
செல்லென்றபாஷாணக் கட்டிமேலே
செம்மையுடன்தான்தடவி மைந்தாகேளு
உல்லென்றகாயனைத்தி பதமதிந்துமைந்தா
உண்மையுடன்புடம்போட வுருகிநிற்கும்
சொல்லொண்ணும்தவராமல் தாம்பூரத்தில்
சுத்தமுடன்பத்துக்கொன்றே. (௱௰௧)



ஒன்றாகத்தான்கொடுத்து உரிக்கிமைந்தா
உண்மையுடன்பத்துக்கு ஒன்றுவெள்ளி
நன்றாகத்தான்கொடுத்து உருக்கிப்பாரு
நல்லவெள்ளிமாத்ததிகம் நலமாய்க்காணும்
நின்றாடும்பொன்வெள்ளி கண்டாயானால்
நின்மனது அலையாது யோகத்தேகும்
குன்றாதுசிவயோகம் சூட்சமையாகும்
குருவசனம்தவறாமல் குறிகண்ணோட்டே. (௱௰௨)

நாட்டமென்றநயனமடா மைந்தாகேளு
நன்மையுள்ளயிடதுகலை சந்திரனாச்சு
தேட்டமென்றவலதுகலை சூரியனாச்சு
சிவசிவாநமெய்யகு சுழினையாச்சு
வாட்டமென்றஇவையெல்லா மொன்றாய்ச்சேர்ந்து
வண்மையுடன்வொன்றாகி நின்றுகொண்டு
கூட்டமென்றஅக்கினிதான் சோதியாச்சு
குருவருளால்முச்சுடரை கண்டிடேரே. (௱௰௩)

தேருவதுசூக்ஷாதி சூக்ஷமப்பா
திருவானசூக்ஷமதை சொல்லக்கேளு
நேருவதுகலையதிந்து சுழினைக்கேற்றி
னெற்றியென்றமத்தியடா மகாரமீதில்
சாருவதுதெளிவெனவே சார்ந்துகொண்டால்
தன்மயமாம்வாசிசரந் தயவாய்நிற்கும்
ஆருவதுஆதாரம் தன்னில்
அடங்கிநின்றஅக்கினியே சோதிகாணே. (௱௰௪)

## எல்லாந்தான்தான்.

சோதியென்ற அக்கினியே தான்தானாகும்
துலங்குகின்ற முச்சுடரும் தான்தானாகும்
ஆதியென்றமந்தமென்றுந் தான்தானாகும்
அடங்கிநின்றசிவயோகந் தான்தானாகும்
சாதியென்றசமரசமுந் தான்தானாகும்
சச்சுதானந்தபூரணமுந் தான்தானாகும்
நீதியுடன்தன்னறிவாய் பார்க்கும்போது
நிறைந்துநின்றபூரணமாய்க் காணலாச்சே. (௱௰௫)

## ஞானம்.

ஆச்சப்பாபூரணமாய் நின்றகாளி
அறிதலுகாணுதற்கு அருமையாகும்
பேச்சப்பாபெருகிநின்ற யிருளுக்குள்ளே
பிறந்துதடாவிமறியும் மொளியாய்நின்று
காச்சப்பாஒளியறிந்து வழியைக்கண்டேன்
கண்டவழிஒளியதுவே கலந்துநின்று

பேச்சப்பாயிருளொளியில் அலைந்துகொண்டு
போனவிடம்வந்தவிடம் புகுந்துபாரே. (௱௯௬)

பாரப்பாபுகுந்தவிடம் பத்திக்கொண்டு
பதிவாகவந்தவிடம் வெளிதான்மைந்தா
நேரப்பாவெளியொளிதா னெங்கேயென்றால்
நிசமான ஆகாசம் யிருளாய்ப்போச்சு
சேரப்பாசெனித்ததுவும் யிருளிலாச்சு
செத்திறந்துபோனதுவு யிருளிலாச்சு
காரப்பாகண்டதெல்லாம் யிருள்தானச்சு
கண்கண்டகாரியங்கள் கனவாய்ப்போச்சே. (௱௯௭)

போச்சப்பாகண்டதெல்லாம் கனவாய்ப்போச்சு
பொரிந்திமனங்காணாத பொருள்தான்சத்தியம்
போச்சப்பாசத்தியமெல்லா மாயமாச்சுப்
பேச்சற்றவிடமதுதான் னித்தியமாச்சே
ஆச்சப்பாஆசையெல்லாம் பாசம்பாசம்
ஆசையற்ற ஆசையது அதுதான்சாக்ஷி
சாக்ஷியென்றகாக்ஷிதனை கண்ணறக்காண
கண்ணுமில்லைகாதுமில்லை யென்றதானே. (௱௯௮)

யென்றுதானிருந்தபடி யிருந்ததெல்லாம்
யென்மகனேயினிமேலே வேறுண்டாச்சோ
அன்றுதான் இன்றுவரை ஒன்றேயல்லால்
ஆடினதுமடங்கினதும் அதுதான்பாரு
ஒன்றுதான்பலபொருளாய் விரிந்துநின்று
ஒடுங்கிஅடங்கினதும் ஒன்றுதானே
நின்றபடியிதுபோதங் கண்டுகொண்டு
நிச்சயமென்றுச்சிதமாய் நின்றுகாணே. (௱௯௯)

## பாசம்.

காணுவதும்பூணுவதும் பாசமாகும்
கலங்குவதுமுழங்குவதும் பாசமாகும்
பேணுவதும்பிதற்றுவதும் பாசமாகும்
பெருகுவதும் சுருங்குவதும் பாசமாகும்
பூணுவதும்போற்றுவதும் பாசமாகும்
போதனெறியானதுவும் பாசமாகும்
தேர்ணுவதுஞ்சுருக்குவதும் பாசமாகும்
சுத்தமுடன்நின்றபடி தன்னுள்பாரே. (௨௱)

பாரப்பாதன்னுள்ளே பகுந்துபார்க்கில்
பாழ்ரனபிரிதிவிதான் மண்ணாய்ப்போச்சு
நேரப்பா அப்பதுவுந் தண்ணீராச்சு
நிசமாய்தேயுவதுவும் நெருப்பதாச்சு



நேரப்பாவயுவதுவும் காற்றுமாச்சு
கருவான ஆகாசம் சாக்ஷியாச்சு
சேரப்பாஅறிவதுவும் அதுவேயாச்சு
தேட்டமென்னவாட்டமென்ன தெளிந்துபாரே. (௨௱௧)

தெளிந்துநிலைதனைஅறிந்து தெளிந்துபார்க்கில்
தெளிவறிந்துசொல்வதற்கு நாவங்கில்லை
அளிந்துஅந்தவடிவான வடிவேஅல்லால்
அருபமென்றஞ்சுருபமென்றும் அறுள்போமோ
தெளிந்துமனம்போகாமல் அழிந்துஅந்த
நேரறிந்துநிலைசெலுத்தி கொண்டால்மைந்தா
வளிந்தோடிப்போகாது அந்ததேசு
பாதமேபோதகமாய் வாழ்ந்காணே (௨௱௨)

## சூதமணிவேதை.

காணவேசூதத்தின் கட்டுச்சொல்வேன்
கருணைவளர்சூதமது பலந்தானொன்று
பூணவேகல்வத்தி லிட்டுக்கொண்டு
புத்தியுடன்வெற்றிலைச்சார் செங்கல் தூளும்
பேணவேமத்தித்து கழுவிப்போட்டு
பிலமானரவிதனிலே காய்ந்தபின்பு
தோணவேவழலைபச்சை தருசுகூட்டி
சுத்தமுடனுதவிங்கத விட்டுஆட்டே. (௨௱௩)

ஆட்டவேசூதமது வெண்ணையாகும்
அரைபச்சைபூநாகம் அரைத்துக்கொண்டு
கூட்டவேகுகைபோலே செய்துமைந்தா
குருவானரசவெண்ணை அதற்குள்வைத்து
நாட்டவேஅவிபுடமாய் பத்துப்போட்டால்
நல்லரசந்தானிறுகி கல்லுப்போலாம்
வாட்டகருவூமத்தின் காயில்வைத்து
மைந்தனேமுன்போலே புடத்தைப்போடே. (௨௱௪)

போட்டபின்புகரண்டியிலே யெண்ணைகுத்தி
புத்தியுடன்தானுருக்கி யெடுத்துக்கொண்டு
நாட்டமுடன்குடக்கறியி லுருக்கிப்பார்த்தால்
நல்லரசமணியதுவும் கண்விட்டாடும்
தேட்டமுடன்அம்மணியை யெடுத்துக்கொண்டு
சிவசிவாசாரணைகள் திரமாய்ச்செய்தால்
ஆட்டமுடன்அண்டமெல்லாஞ் சுத்திவரலாகும்
அரகராசூதமணி ஆட்டுத்தானே. (௨௱௫)

தாமென்றபூரணமே அமுர்தமாகும்பாரு
தன்மையுடன்அந்தமுர்தந் தானேகொண்டு
தேமென்றஅந்தமுர்தங் கொண்டுதேர்ந்தால்
திருவாசல்பூட்டுகள்தான் திறக்கும்பாரு

ஊனென்றஆதார மங்கேகோனும்
உண்மையென்றதைவொளி தேய்கேழ்க்கும்
நானென்றநாட்டமதாய் நின்றயானல்
நல்லபதங்கிட்டுமடா நயனம்பாரே. (ருஉசு)

## சூதமணிசெந்தூரம்,

பாரப்பாசூதமணி தனையெடுத்து
பத்தியுள்ளநாதமதால் சுருக்குத்தாக்கி
சேரப்பாஅந்திடைக்கி தங்கஞ்சேர்த்து
திரமானஅப்பிரகம் விந்தாலாட்டி
நேரப்பாமணிதனக்கு அங்கிபூட்டி
நேர்மையுடன்ரவிதனிலே காயப்போட்டு
தேரப்பாசட்டியிலே கரியுப்பிட்டு
திறமானரசமணியை நடுவில்வையே, (ருஉஎ)

வையப்பாமேலுமந்தப் படிதானுப்பை
வரிசையுடன்செய்தபின்பு சட்டிமூடி
மெய்யப்பாமணஞ்சீலை யேழுசெய்து
மெஞ்ஞானசற்குருவின் பாதம்போற்றி
தையப்பாதவறுமல் அடுப்பிலேற்றி
கமலமென்ற அக்கினியை ஞலுசாமம்
செய்யப்பாதீமூட்டி பதந்தப்பாமல்
செம்மையுடன்தானிறக்கி ஆறவையே. (ருஉஅ)

ஆறவைத்துரசமணியை யெடுத்துப்பாரு
அப்பனேசெந்தூரங் கண்கொள்ளாது
தேரவைக்குந்தேகமதை செந்தூரந்தான்
சிவசிவாபணவிடைதான் தேனிற்கொண்டால்
மாறவைக்கும்வாசியது னேரேநிற்கும்
மகத்தானஆகார மங்காதப்பா
ஊறவைக்குஞ்செம்புதனில் சத்தேபட்டால்
ஊறலத்துதங்கமய மாகுந்தானே. (ருஉகூ)

## லிங்க வேதை,

தானென்றசாதிலிங்கம் வேதைசொல்வேன்
தவறுமல்லிங்கமது ஒர்பலமும்வாங்கி
கோனென்றரசமுடனே வங்கஞ்சேர்த்து
குருவானஅரைபொடியுங் கூடச்சேர்த்து
தேனென்றநாதமதால் நன்றயாட்டி
செம்மையுடன்லிங்கமது கங்கிபூட்டி
வானென்றரவிதனிலே மைந்தாநீயும்
வணக்கமுடன்காயவைத்து வரிசைகேளே. (ருஙய)

வரிசையுடன்கெந்தி அரிதாரம்வெள்ளை
மகத்தானகெவுரிகரி யுப்புத்தாக்கம்



உரிசையுடன்வகைக்கிருகளஞ்சிவாங்கி
உத்தமனேகல்வமதில் பொடித்துக்கொண்டு
கரிசனமாய்அயச்செம்பில் பொடியதைதானிட்டு
கனமாககலசமதை அதின்மேல்வைத்து
புரசமுடன்புடம்போட்டு யெடுத்துப்பாரு
புதுமைவெகுசெந்தூரங் கண்கொள்ளாதே. (ருஙக)

கொள்ளாதபசுவுக்கு கண்ணங்கேது
கொண்டுகரையேறுதற்குச் செந்தூரத்தில்
ஞானாந்த மவுனகுரு தேசிபார்ச்சே. (௮௧௨)

தேசிபற தேசிவிசு வாசியாகள்
சிவசிவா மவுன குருநாதனவான்
வாசிவலம் சாரியிட சாரிசெய்வான்
வணக்கமுடன் செகந்தனிலே வாழ்ந்து கொள்வான்
கனிமுனை யரிக்குமாரி காலையத்து
ஞானமுடன் வாசியோகம் மெய்ஞானம்
நேசமுடன் சரிதைவழி நடந்தாயாகில்
நிசமான ஞானமது விழுக்கும்பாரே. (௮௧௩)

## கோமுக ஆசனம்.

இருக்குமடா சரிதையொடு கிரியையொண்டும்
இதறிந்து யோகத்துக் கழுதன்னமைந்தா
செலிக்குமடா கோமுக ஆசனத்தைக்கேளு
சிரக்கரெண்டு முழங்காலை ஒன்றாய்ச்சேர்த்து
கலிகருமடா குறிகையொன்றில் பாணன்காக்க
கட்டறவே நெருக்கியே மேல்மூலம்பாரு
நெரிக்குமடா நுனிநாணி சுழிமேலே
நேர்மையுடன் அங்கொன்று நிர்தாநூனோ. (௮௧௪)



உயர்ணியே வாசிதனி லேறிப்பார்க்க
உத்தமனே ரவிபோலே ஒளிதான்வீசும்
பேணியே சிவயோகம் ஆர்தான்செய்வார்
பெரியோர்கள் சொல்வார்கள் அரிதரிதென்பார்
தோணியே பார்ப்பதற்கு யின்னூல்பாரு
சுகமாக ஏராறு தலமேற்சென்று
ஆணியாய் மூலெழுத்தும் ஒன்றாய்நின்ற
அறிபார்கள் அசபை முதலறிவாங்கனே. (௮௧௫)

கண்ணரியார் மூக்கரியார் காதுங்கேளார்
கருத்துவைத்து சுழினையிலே மனத்தையூணர்
விண்ணிலிக்த கேசரியைப் பெற்றோரில்லை
வேதாந்தம் வாயப் பேச்சாலங்கக்குள்ளாமோ
எண்ணரியா மனத்தையங்கே பூசிக்கானை
உத்தமனே மூதண்ட முடிக்குஞ்சென்று
தன்னறிவால் ஞானவிந்து குளிகைசெய்து
நாதமென்ற வாசிமேலோடினேனே. (௮௧௬)

## மூச்சுழி.

வலஞ்சுழி யிடஞ்சுழியை வத்துமேலே
மகத்தான சுடற்சுழியின் மனையிலேவி
தலஞ்சுழியில் சிக்குவந்து வாசல்தன்னில்
தானிருக்கும் ஆவார பாலகர்காண்மைந்தா
வலஞ்சுழில சுழிக்கசழந்த இசைந்தாக்கால்
நின்றதிலே அண்ட வெளிச்சுழினை சென்று
குலம்சுழியின் வலஞ்சுழிபாய்வந்ததாலே
கொஞ்சிலம் போலிடனக் குரிகண்டேனே. (௮௧௭)

குழிகண்டு நெறிகமர்க்குள் செல்லும்போது
கொம்புசுத்தி ஆடுஞ்சுழி காத்துமைந்தா
நெறிபதிந்து வலமிடமாய் நின்றதாலே
நிலைபதிந்து கதவிருதாள் பூட்டிதன்னை
அறிவறிந்து சுழிமுனையின் குருத்தாலே
ஆறியென்ற தான்திறந்து அண்டஞ்சென்றேன்
பரிபதிந்து அண்டமதில் சென்றுமார்க்க
பரந்த சுழிகாத்து நெருப்பதிவதாச்சே. (௮௧௮)

ஆச்சப்பா சுழிகாத்துக் கப்பாலே
அன்னுக்கை யுன்னுக்குள் அறிந்துப்பாரு
மூச்சப்பா நிறைந்தசுழி சுழியின்காந்து
முன்னைய மானசுழி முனையிற்சென்று
போச்சப்பா பரவெளியே பரமென்றெண்ணி
பூரிமுனை காசம் பொருந்திப்பாரு
பேச்சப்பா பிரந்தருவும் வெளியிலாச்சு
பேசுதிறந்து போனதும் வெளியில்காணே. (௮௧௯)

பரவெளி.

வெளியான பரமவெளியார் தான்காண்பார்
வேதாந்த புரந்திரியனே சொல்லக்கேளு
தெளியான சுழிமுனையில மனதுநாட்டி
நேரான அந்தரக்கந் தமரில்சென்று
முழிபான முழிதிருத்தி முழித்துப்பார்த்தால்
மூதண்ட பாரமவெளி யென்னசொல்வேன்
சுழியானவழி யறிந்து வெளியைக்காத்தால்
சுத்தவெளி பளிதமாய்த் தோணும்பாரே. (௮௨௰)

சாதனை.

பாரப்பா பலவித மாய்த்தோன்றிநின்ற
படிவான பரமவெளி அண்டமாச்சு
கோப்பா அண்டகோசமே சோதி
வேதாந்த சோதியடா சுழினைக்குள்ளே
சாரிகை கும்பார்த்துமனதிலிருத்தி
சந்திரகலை சூரியகலை வாசியேற்றி
நேரப்பா நினைந்தகே சரியைக்கண்டு
நெடுவானில் நாதிதனி நிற்கப்பாரே. (௮௨௧)

பாரடா நாதிதனி யுன்னுமேலே
பதிவாகச்சேர்வதற்கும் பதிவாய்க்கேளு
நேரடா தானிருந்து சாக்கைகோத்து
சேர்வையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
தேரடா சர்ஜனியும் மந்திரமும்கூட்டி
திருவான நாசியிலே லகுத்தினமந்த
சாரடா நாதிதனி யுன்னுமேலே
சார்ந்திருந்த நிதியமும் சாதிப்பாயே. (௮௨௨)



சாதித்து வரும்போது மைந்தாமைந்தா
தருதிநின்ற பிணையெல்லாம் தானேபோகும்
பேதித்த தேகமதுசிலமாய் நிற்கும்
பிலமான வாசிசிவ போகந்தங்கும்
ஆதித்தன் சந்திரனும் சொன்னபடியாகும்
ஆனந்த நித்தியமூர்த்த மங்கேயாம்
சோதித்து அண்டவரைக் குள்ளேமைந்தா
சோதிமணி நாவிதனி சொரிப்பபாரே. (௮௨௩)

சொருபி விளையாடுதற்கு மைந்தாகேளு
சோதிதிரு மணிநாவி னடியிலேதான்
இலக்கியிரு விரலருத்தி மேலேபேத்து
இப்படியே இருந்தேரமுஞ் சாதித்தாக்கால்
திருது மணிவாசலுட திரைக்குமேலே
சிவசிவா சுழிமுனைமேல் சேர்ந்திருக்கும்
பருதிமதி சுடரதிலே சேர்க்கபோதே
பக்திமுக்தி சித்திவைராக்ய மாச்சே. (௮௨௪)

ஆச்சப்பா நெஞ்சிலவைராக்யம் வைத்து
அறுதினமும் மணிவாவை யசைத்துள்ளேற்றி
காச்சப்பா கலையறிந்து கபாடவாசல்
கதவறிந்து தான்திறந்து கால்கொண்டேறி
மூச்சப்பா காலறிந்து முனைகொண்டேனி
முச்சுடரு மொன்றுசி முன்பின்தோணும்
நீச்சப்பா நிலையறிந்து மணிநுவுன்னி
நேமமுடன் நித்தியமும் நிலையைப்பற்றே. (௮௨௫)

நிலையறிந்து நாற்பத்து முக்கோணத்தை
நின்றுநடு வாசியினாற் கண்டேகொண்டு
தலையறிந்து தலைமலையின் குகையில்சென்று
தானறிந்து மேலான கன்னைத்தாண்ட
அலையாத அமூர்த்தாச தெக்கைத்தாலும்
சோதிமணி வாசலிலே சொலிக்குமைந்தா
கலையறிந்து நினையறிந் தமூர்த்தங்கொண்டால்
கைவல்யபத சிதுதைக்குள் ளாச்சே. (௮௨௬)

பதவிகாண.

ஆச்சப்பா கைமேலாய் பதவிகாண
அந்த ரங்கமானதை பாகங்கேளு
பேச்சப்பா பேசாத மவுனமாக
பிலமான கோமுக ஆசனமேல்கொண்டு
டாச்சப்பா தர்ஜனியு மத்திமையுங் கூட்டி
பாலகனே யடிகாலைப் பதிவாய்த்தள்ளு
மூச்சப்பா நிலையறிந்து தள்ளினக்கால்
மூவுலகுந் தன்வசமாய் முனைகொண்டேனே. (௮௨௭)

நாவசையாமவுனம்.

வனுவது மூலமதில் அங்கென்றானு
உண்மையுடன் கண்டமதில் உங்கென்றானு
பேனுவது சுழிமுனையில் மங்கென்றானி
பிலமான மணிகாவி லடிவாரத்தில்
பூணுவது தர்ஜனியும் மத்திமையுங்கூட்டி
பொருந்த மகக்கனிவதனால் மேலேயேற்று
வானுலகம் கைவசமாம் மைந்தா மைந்தா
மகத்தான அண்டவரை ஆறுதானே. (௮௨௮)

தானென்ற அண்டவரை தாண்டியேற
சாதகமாய் வாசியினால் மணிநாவுள்ளி
வானென்ற சுழிமுனையில் திரையைநீக்கி
மகத்தான தமர்வாசற்குள்ளே சென்றால்
கோனென்ற குருபரமென்னசொல்வேன்
கூறுதற்கு நாவசையா மவுனமாச்சு
ஊனென்ற கரம்பூண்டு மவுனங்கொண்டால்
ஒருகோடி யூழிவரை யிருந்திடாமே. (௮௨௯)

உறுதிகொண்டு கேசரியி லொடுக்கிவாழு
உண்மையென்ற மவுனமடா மணிநாவுள்ளி
பரிதிமதி கலைபதிந்து தமரில்புக்கி
பார்த்தடா கேசரியில் பாதந்தன்னை
அருதிமுறை தவறாமல் கார்த்தாயானால்
சொலிக்குமடா அமுர்தரசச் செந்தேன்மைந்தா
சுருதிரசக் கனிவதனால் கால்கொண்டேனி
கனிந்தமுர்தம் கொண்டுசுழி யோளிப்பாரே. (௮௩௰)



ஒளிகண்ட போதிலிருளோடிப் போச்சு
உள்ளமையென்ற மவுனமது வொடுக்கமாச்சு
விளிகண்ட பின்பலவோ சுழினைக்குள்ளே
வேதாந்த நாட்டவிழி யொளி தன்னாலே
வெளிகண்டோம் வெளியிலிட விலாசங்கண்டோம்
வேதமயமான பூரணமுங் கண்டோம்
சுழிகண்டோம் சுழியினுட் குளங்கண்டோம்
சோதிமணி வாசலுட் றானகண்டோமே (௮௩௧)

துளைகண்ட சுழிமுனையின் வாசலுக்குள்
குளத்திருகத விருதாள் பூட்டுத்தன்னை
அளைசீண்டு அளையுதிந்துவாசல் சென்று
வங்குசிங்குசிங்குவங்குவாசற்குள்ளே
திரைகண்டு மணிபசைத்து மணிநாவுள்ளி
நெருங்குமணி பூட்டதனைநெகிழ்த்துக்கொண்டு
கரைகண்டு கண்டுகளைநீந்தியேறி
கனிந்துவரும் அமுர்தரசச்சுனை கண்டேனே. (௮௩௨)

சுனைகண்ட குளத்தினதை சொல்லக்கேளு
சொல்பெரிய சவுயிடாக்கத்தாளென்பார்
மனைகண்ட சாகரத்தான் மணிகாவென்பார்
மாந்தான சகஸ்திரமாமலை யென்பார்கள்
அணைகண்ட மனோரான அடிநுக்குள்ளே
அடங்கிநின்ற அமுதரசத்தாளியென்பார்
முனைகண்ட முனிவிருத்தி யமுர்தங்கொள்ள
முத்திதனியடி நாக்குத் தாளிப்பாரே. (௮௩௩)

தாளியென்ற மதமதக்கத் தாளிதன்னை
தள்ளிமேலேயேற்று தற்கு வகைகாணுமல்
தாளியென்ற தாளியடி வாரந்தன்னை
சத்தரமாம் வாளதனால் நறுக்குமைந்தா
தாளியென்ற காளியது தலையேறாகத்
தான்கவிழ்ந்து வாயடைத்து தாகங்கெட்டு
தாளியென்ற வாதாரக் காளியெல்லாம்
தான்கவிழ்ந்து மங்களார்த்துதபங்களாச்சே. (௮௩௪)

தயங்காமல் தாளிபடிக்கி ராமந்தன்னை
  தாளியடி முனையண்டத் தமருக்குள்ளே
மயங்காமல் மணிரவின் அடிசாவுக்குள்
  மத்திமையும் தர்ச்சனியும் வளையாய்கூட்டி
தியங்காமல் ஓங்கார விசையால்தள்ளி
  திருவான கபாடமென்றதிரையைநீக்கி
ஜெபங்கான பிரம்மரந்திரத் துள்ளேசென்று
  திருநடனக்கூத் தறிந்து தெளிவைக்கொள்ளே. (அகடு)

கொள்ளடா மதநிவால் குருவின்பாதம்
  கொண்டு கரைபேறுதற்கு மணிரவுள்ளி
தள்ளடா சமாதிக்குத் திரையைநீக்கி
  சக்கரமாயசன்ற அழிமுனையில் மைக்கா
நில்லடா வாசியினால் சமர்மையத்தில்
  நின்று கொண்டு அண்டவரைசென்றுபார்த்தால்
உள்ளாட ஆதார மூலமெல்லாம்
  ஒளிவிளக்காய்த் தோணு தடாவுன்னப்பாரே. (அகரு)

உன்னியத் தாளிமதியை யொன்றுப்சேர்த்து
  உற்சுகமென்பான மென்றடைத்துண்டி
அவ்வியென்ற சமாதியிலே மாக்கொண்டேடு
  வாசியாறும் என்லே வணக்கிறாக்கல்
சென்னியென்ற வுச்சியடி வாரத்துள்ளே
  நிர்க்கருடன் மதியமுர்தம் தெளிவுசாறும்
கண்ணிறைந்த தெளிவுதனைக் கனிவாய்கொண்டால்
  காயமென்ற ஆகாரம் கககமாமே. (அகள)

ஆமப்பா ககமென்ற ஆகாரத்தை
  அறிந்து கொண்டு மேலாமமிக்ககேளு
வாமப்பால் மொண்டசிவ போதத்தாலே
  மார்க்கமுடன் சுகாசனமா யிருந்துக்கொண்டு
தாமப்பாதன் மகேசா வழியாக
  தானிருந்து காவிஅனி தமரிலேற்று
ஓமப்பாவாசி வாவசி யென்றேற்ற
  ஓடுறவப்பாயுமடாவாசியோ. (அஅக)



உளக்கெதிக்கு யிருதயமாம் பீடந்தன்னில்
  ஊரணிபிராத்தாளிருந்து தன்னைப்பாரே. (அஅளக)

## இருதயதரிசனம்

பாரப்பாயிருதயமாங் கமலத்தேதி
  பதியிருந்துமவுனமதாய்ப் பார்க்கும்போது
நேரப்பாநின்றதொரு நவக்கிரகம்
  நிசமானஅனுக்கிரகம்நாதவிந்து
சாரப்பா அண்டமொடு புவனபோகஞ்
  சதாசிவனுமயேஸ்வரனு ருத்திரமூர்த்தி
காரப்பாஅயன்மாலுங் கதிர்மதியுங்
  கண்ணறிந்துகாணவெகு மாயமாச்சே. (௬௱)

மாயமென்றமாயமெல்லாம் கண்ணின்குசுதம்
  மகத்தானருசுமடா மனக்கண்பார்வை
தாயகமாய்நீயிருந்து மனக்கண்கொண்டு
  தன்னைமிகத்தானறிந்து தானேநின்றால்
நேயமுடன்காயமது காரணமாய்நின்று
  நினைத்தபடி சித்தாளின யாடும்பாரு
ஞாயமுடன்நிவிருந்து ஞானம்பாரு
  ஞானமென்ற அக்கினிதன் வசமாம்பாரே. (எ௱க)

பாரப்பாஅக்கினியே போதமாகும்
  பதிவானபோதமதே ஞானமாகும்
நேரப்பாஞானமதே தீபமாகும்
  நிசமானதீபமடா மனக்கண்பார்வை
காரப்பாகருணைவிழிமலர்க்கண்தன்னை
  காலறிந்துமேலேறி கடைக்கண்கொண்டு
நேரப்பாஆதார முழுதும்பார்த்து
  தெளிந்தமனதறிவாலே ஆதியாரே. (எ௱௨)

ஆதியென்றயிருதயமே கமலபீடம்
  அண்டசராசரமெல்லாம் மடங்கும்பீடம்
நீதியுடன்ரவிமதி சென்றிருக்கும்பீடம்
  நேர்மையுடன் செபதவத்துக்குகந்தபீடம்
ஓதியநீகார்மந்திரகலைக் கிபானபீடம்
  உறுதியுள்ள ரிஷிமுனிவர்க்குகந்தபீடம்
சோதிமணிதேர்ந்தெடுக்க மானபீடஞ்
  சுருதிவரைபீடமதை சூழ்ந்துபாரே. (எ௱௩)

சூழ்ந்துபார்யிருதயமே சொர்க்கவீடு
 சோதிமணி ஞானமது துலங்கும்வீட்டில்
தாழ்ந்துகொண்டு தன்னறிவே சாக்ஷியாக
 காணிருந்து பூரணமாய் தன்னைப்பார்த்தால்
வீழ்ந்துசடம்போகாது வேதர்தாக்கும்
 வேதமென்றசென்மத்தில் விரும்பிநின்று
வாழ்ந்திருக்கச்சொன்னமடா மவுனவீட்டில்
 மனங்குவிந்து செம்பொவிசைமகிழ்ந்துகாணே (௭௱௪)

காணடா மனங்குவிந்து கயலவீட்டை
 கண்டுமனங்கொண்டுனிதங் கார்த்தாயானால்
வீணடா போகாது வேதாந்தத்தி
 மெய்நிறைந்த போதமடா ஞானாந்தத்தி
பேணடா தீயரிந்து பிலமாயூது
 பிரக துவாசிசிவம் வசியமாச்சு
பூணடா வாசிசாம் பூண்டுகொண்டால்
 பொருகமலச் சோதிமெருகுபுனிதமாமே (௭௱௫)

ஆமப்பா புனிதமுடன் விருந்துகொண்டு
 ஆதிமுதலாந்தவனையறியவேணும்
தாமப்பா தன்மயத்தையறியவேணும்
 சதாபோதயோகமதுஞ் சாரவேணும்
காமப்பால் காணறபால் காணவேணும்
 கண்டுகிதம்கொண்டு கரையேறவேணும்
நாமப்பா வென்றடசட்டம் பேனுமயில்
 நற்குணமுயல்லவடா நாயதான்பாரே (௭௱௬)

பாரப்பாபல வினைவை திருத்தினைமந்தா
 புத்தியுடன் ஒருமுகமாய் பலன்கைக்கொண்டால்
னேரப்பா தன்மயமே சாக்ஷியாகும்
 சேமானவன்மையமே சோதியாகும்
காரப்பா மின்மயத்தில் மனக்கண்வைத்து
 கருணைவளர்மின்மயமாய் கிடாக்ஷம்பெற்றால்
ஆரப்பா வுனக்கு நிகராகுயில்லை
 அப்பனையாஞானவித்தைநகேளே (௭௱௭)

வெடியுப்புஜெயநீர்

சேனப்பா வித்தையிலே செய்நீர்வித்தை
 சிறுபையுடன் சொல்லுகின்றேன் நன்றாய்க்கேளு
கல்லப்பா வெடியுப்பு பலமும்பத்து
 கருவான பூநீ யெட்டிராமப்பொண்டு

வாளப்பா துருசுபொண்டு ஞூடம்ரெண்டு
 லகையுடனே வெண்காரம்ரெண்டுங்கூட்டி
குளப்பாலவ மறில வொன்றாய்க்கூட்டி
 சுத்தமுடன் அமுரியிலே லரைத்துக்கூட்டே (௭௱௮)

கூட்டிநன்றாயரைத்து நட்டிவெடுத்துக்கொண்டு
 கூர்மையுடன் பீங்கானிற்றன் தானிக்குள்ளே
மாட்டிநன்றாய் மதிகனிலேவைத்துப்பாரு
 மகத்தானவாருதிபோல் செலந்தானாகும்
தாட்டிகமாயச் சலத்தைகையொன்றில் வாங்கி
 சங்கையுடன் விறமிட்டுதானே பார்த்தால்
ஞட்டியதோர் செநீரைபென்னசொல்வேன்
 ஞதாந்தஞானமென்றும் பேசே (௭௱௯)

பேரானநாதநீர் பெருமைமெத்தப்
 பேசுகிறேனதிலுடைய பலத்தைக்கேளு
வீருணபாஷாணங்காரசாரம்
 விளங்கியதோரு பாசங்கலி தாவெட்டும்
னோராகநீயிருந்து செயநீர்பண்ணி
 நினைத்தபடிநின்றுவினை யாடும்மைந்தா
கூரானசெயநீரை ஒன்றில்வாங்கி
 கூர்மையுடன்நாகமதை யுருக்கிச்சாயே (௭௱௰)

வுருக்கியேதனிலுஞ்சு திரமேசாய்த்தால்
 உண்மையுள்ள நாகமதுகட்டிப்போகும்
பெருக்கமுடன்கட்டினதோர் நாகந்தன்னில்
 பெருமையுடனிடைசரியாய் தங்கஞ்சேர்த்து
திருக்கறவேதாறுருக்கி பெதித்துமைந்தா
 செப்புவெள்ளியிடைசரியாய்ப் பத்துமொன்று
யிருக்கமுள்ளநாகமதைக் கொடுத்துப்பார்த்தால்
 யிரெட்டுவயதுடையதங்கந்தானே (௭௱௰௧)

தானென்றதங்கமதி மாதுதன்னை
 தன்மையுடன்தானறிந்து பூசைசெய்தால்
தேனென்றஅமுர்தாச பானமீவாள்
 திருவாணவாசியது திடமாய்நிற்கும்
வானென்றகேசரியாள் நிர்த்தஞ்செய்வாள்
 வரிசையுடன்அஷ்டசித்தும் வசியமாகும்
ஊனென்றதேகமதி லுருதிகொண்டு
 உண்மையுடன்நடுவணையை யுகந்துபாரே. (௭௱௰௨)

## திரிகோணபூசை.

### வாசல்திறக்க.

பார்ப்பதற்குப்பொருள்சொல்ல நன்றாய்க்கேளு
பருபரையின் திரிகோணம் பதிவாயக்கிநி
சேர்ப்பதற்குணமைப் மதனேஜன் வட்டம்
சிறப்பாகவிட்டு ரீங்காரம்போடு
ஆர்ப்பனமென்றேயிதனை மனதில்வைத்து
அப்பனேமேல்வாசல் திறக்கவேண்டி
நாற்பதுனன்மானதமாய்ப் பூசைபண்ண
நாடிநின்றவாசலது திறக்குந்தானே. (௭௰௩)

திறக்கவேஅகாரத்தை மதிவித்சேரு
சிவசிவாஉகாரத்தை ரவிவித்சேரு
சிறகவேமகாரத்தை பேலேபோடு
சின்றிலங்குந்தீபஒளி சேர்மையாக
சிறக்கவேவிதைதனை மேகநீரை
திருகபனைகுறினைவட்டநெ சொர்க்கண்ணுக்
சுரக்கவேயிதைத்தேடு மவுனவீடு
சுத்தமுடன்தானறிந்து சேர்தியாமே. (௭௰௪)

சோதியிருகண்மணியாய்த் துலங்கிநின்ற
சுத்தாஞ்சேர்புலத்தியனே சொல்லக்கேளு
நீதியென்றமுகசோண
நிலையறியாமுட்ருக்கு யீரந்தாயானல்
ஆதியென்றஅம்பரத்தில் செந்தீபத்தும்
அண்டசராசரங்களெல்லா மதிலேவாழும்
வீதியிருமுன்அமனே மேலாம்வீட்டில்
மேவிருந்துமவுனரச பூசைசெய்யே. (௭௰௫)

### நவகோணபூசை.

செய்யவேதிரிகோண பூசைமார்க்கம்
தீர்க்கமுடன் கண்ணதை நீதெளிந்துபார்த்து
அப்பனேநவகோண பூசைதன்னை
அங்கமுடன்சொல்லுகிறேன் தங்கத்தாலே
மெய்யெனவேநவகோணதாகச்செய்து
வேதாந்தநால்வாசல் கோட்டையிட்டு
தாயனவேகோட்டைநடு விந்தபோட்டு
சோதியென்றவிந்துநடு சொல்லக்கேளே. (௭௰௬)
கேளப்பாவிந்துவென்ற உமையதன்னை
செணிதமுடன்நவகோணம் நன்றாயச்செய்து



வாளப்பாநவகோணம் நடுமுக்கோணம்
மையமென்றமத்தியிலே ஓங்காரஞ்சாத்தி
ஆளப்பாஓங்காரமதனுள் மைந்தா
அமையடக்கமானரீங்காரஞ்சாத்தி
நாளப்பா அறிந்துநவகோணபூசை
நன்மையுடன் செய்யுமிற ஞட்டங்கேளே (௭௰௭)

### மானதபூசை.

நாட்டமுடன் மானதமாம் பூசைமார்க்கம்
நன்மையுடன் சொல்லுகிறேன் நுண்மையாக
தேட்டமென்ற தேகமடா சதிரகிரியாக
தீர்க்கமுடன் சிரசதுதான் பொதிகையாக
வாட்டமில்லா அக்கினிதான் மறையோனாக
மகத்தானவாசியது அகத்தீசராக
ஆட்டமென்ற ஆதாரபீடமாக
அருளானமுச்சுடரே வாசிமலரெனவே (௭௰௮)

யென்னவே அறிவல்லோ தீபமாக
யேகாந்தமனக்கண்ணே தீபமாக
விண்ணப்பாநிறைந்த ரசபோதமாக
வேதாந்தபூரணமே சாக்ஷியாக
நண்ணப்பாசகலவுப சாரமாக
நாட்டமுடன் மானதமாய்ப் பூசைசெய்து
கண்ணப்பாமனக்கண்ணால் தன்னைப்பார்த்து
கற்பூரதீபமதை கையில்வாங்கே (௭௰௯)

வாங்கியந்த தீபமதை மைந்தாநீயும்
மனதுபரிபூரணமாய் வலமாய்ச்சுத்தி
தாங்கியந்த கற்பூரவிபூதிவாங்கி
சந்தோஷமாகவே நீயணிந்துக்கொண்டால்
பூங்கமலைமாதுதன் வசமாய்நின்று
போதமுடன் ஞானபதம்புனிதமாக
பாக்குபெறத்தன்வசமாய்க்காட்டிவைப்பான்
பத்தியுடன் சுத்தமதாய் பூசைசெய்யே (௮௰)

செய்யப்பா சிவபூசை சத்திபூசை
செயமானவாலைபூசைசெய்து
மெய்யப்பா தவறாமல் பூசைபண்ணி
வேதாந்தபூரணத்தில் விரும்பிநின்று
மையப்பா மையமென்ற மவுனவீட்டில்
மார்க்கமுடன் தானிருந்துவாசிபூட்டி

வைப்பாரேசகற்பூரகமுந்செய்து
 பத்திகொண்டுதன்னகத்தைப் பதிவாய்க்காரே (௭௨௧)

காப்பாதன்னகத்தைக் காக்கவேணும்
 காயாதிகற்பமதை கொள்ளவேணும்
நேரப்பாநிலைபதிந்து கொள்ளவேணும்
 நிலையறிந்து சிவயோகத்திருக்கவேணும்
நேரப்பாசிவயோகத்திருந்துகொண்டு
 செகசாலமாய்கையெல்லாந் தெளிந்துபார்த்து
மேரப்பாமேருகிரி வாசமாகி
 மெய்யானசித்துவிளையாடக்கேளே (௭௨௨)

## செம்புகத்தி.

கேளப்பா சித்துவிளையாடுகற்கு
 திறமையுடன் செம்புசுத்தி சொல்லக்கேளு
வாளப்பாவெடியுப்பு துருசுகூட்டி
 மகத்தானகருவங்கமிடையே சேர்த்து
சூளப்பாக மலரசம் விட்டிஆட்டி
 சுகமாகக்கட்டிமணி போலேசெய்து
ஆளப்பாவெள்ளிதனை யுருக்கிக்கொண்டு
 அந்நிடைக்குவங்கமணி யதனிற்றாக்கே (௭௨௩)

தாக்கிநன்றாயுருக்கியதை யெடுத்துக்கொண்டு
 தன்மையுடன்செம்புதனில் காலங்கொன்று
தாக்கியேதானெடுத்து வுருக்கிமைந்தா
 தப்பறவாயோட்டில்வைத்து ஊதிப்போட்டால்
நோக்கியதோர் தீபவொளி போலேமைந்தா
 நன்மையுள்ள செம்புவதுபிரகாசமாகும்
பாக்கியமேபடைத்தவர்க்கு எல்லாம்சித்தி
 பத்தியுடனின்னமொரு பாகங்கேளே (௭௨௪)

### வேறு.

பாகமென்றசத்தியுடன் துருசுலிங்கம்
 பதிவாகத்தானரைத்து மணிபோல்செய்து
ஆகமுடன்செம்புருக்கி யிடையேதாக்கி
 அப்போதேயோட்டில்வைத்தூதிப்போட்டால்
சாகமுள்ளவாடையது போய்ப்போகும்
 நன்மையுள்ள செம்புநல்லசுத்தியாகும்
போகமுடன்தானிருந்து இனமாய்ப்பார்த்தால்
 நாட்டமொன்றும் சுத்தமடாபத்திபாரே (௭௨௫)



பத்தியுள்ள சித்தனிட்சத்துவொன்று
 பாரையென்றவுப்புவெடியுப் புங்கூட்டி
சத்தானசீனமுடன் துருசம்பூரம்
 சுகமானசத்தியுடனேழுங்கூட்டி
சுத்தமுடனெஜயநீரலரைத்துருட்டி
 செம்மையுடன் புடம்போடச்சுன்னமாகும்
பத்தமுடன் சுன்னமதைப் பதனம்பண்ணி
 பாலகனேஇன்னமொருகருவைக்கேளே (௭௨௬)

கருவானசுன்னமதில் வாய்நீர்விட்டு
 கையாலேமத்தித்துக் காசில்பூசி
யுருவானகரிசலென்ற சாம்பற்குள்ளே
 யொடுக்கிவைத்துப் புடம்போடவூரல்போகும்
குருவானபதியறிந்து கருவாய்ச்செய்தால்
 குணமாகசகலசித்துங் கைக்குள்ளாகும்
திருவானலட்சுமிதன் செயந்தன்றாலே
 தீர்க்கமுடன் இன்னமொருகருவைக்காணே (௭௨௭)

### வேறு.

காணவேயின்னமொரு கருவைக்கேளு
 கண்டருடன் அடிப்பூரங்கருவாய்கூட்டி
பேணவேதான்பொடித்துவைத்துக்கொண்டு
பெருமையுடன்செம்புருக்கி மருந்தையீந்து
 பூணவேதான்கொடுத்து மைகதாநீயும்
புத்தியுடன்புத்தோட்டி ஊதிப்பாரு
 தோணவேகளிம்பற்று சோதியாகும்
சுத்தியுள்ளசோதியடா தங்கமாமே (௭௨௮)

## தங்கச்செம்பு

தங்கமென்ற அங்கமதைச்செம்பாய்ச்செய்ய
 சாகரத்தில்சொல்லுகிறேன் தங்கந்தன்னை
அங்கமுடனகுகையில்வைத்துருக்கிமைந்தா
 அதற்குநிகர் அரிதாரம் துரிசுகெந்தி
சங்கையுடன்மிருதாரு சிங்கிகூட்டி
 தான்பொடித்துத் தங்கமதைக்கொடுத்துப்பாரு
டங்கமாய்நின்றதங்க மெடுத்துப்பார்த்தால்
 மாசற்றரவிபினிடமாக்கமாமே (௭௨௯)

மாக்கமென்ற வெள்ளியிலேபத்துக்கொண்டு
 மாசற்றதங்கரவி யீந்தாயானால்
ஏர்க்கையுள்ள தங்கவயதென்ன சொல்வேன்
 ரமெட்டுவயதுடைய தங்கத்தாலே

சேர்க்கையுடனவன்பதமேகெதிபென்றெண்ணி
சிவசிவாசிவயோகத்திறத்தில நில்லு
தீர்க்கமுடன்சிவயோகத்திறத்தில் நின்றால்
சிவசிவாதேகவச்சிரகாயமாமே (௭௱௰)

ஆமப்பாதேகவச்சிரகாயமானால்
அஷ்டாங்கயோகமது திட்டமாகும்
காமப்பால் கானல்பால்கருணையாகும்
கருணையுடன்பூரணமேகாணலாகும்
தாமப்பாபூரணத்தைத் தானேகண்டு
சதாபோதமவுனசபானங்கொண்டு
ஓமப்பாவென்றபிரணவத்தை காட்டி
உண்மையுடன்றானிருந்து வுச்சம்பாரே (௭௱௰௧)

உச்சமென்ற வுச்சிபடிவாரமான
உண்மையென்ற புருவநடு அடிவாரத்தில்
பக்ஷமுடன்றானிருந்து வாசியேற்றி
பருதிமதிகலைபதனை பருவமாக
அச்சமறஅக்கினியிற்றாக்கிப்பார்க்க
ஆகதமானசிவசோதிநிறுக்கும்
மச்சுமென்றமாளிகையிலுச்சமீதில்
மகத்தானசோதிரெகச் சோதியாமே (௭௱௰௨)

சோதியென்ற சோதிசிவருக்காநாளும்
சுயஞ்சோதியிருதயமாங் கமலமீதில
நீதியுடன்தானிருந்து நிலையைப்பற்றி
நிலைபானமுச்சுடரு மொன்றாய்க்கண்டு
ஓதியதோர் பிரணவத்தின் சூக்ஷத்தாலே
உண்மையென்ற ஆதியந்ததன்னுள்பார்க்க
ஆதியென்றசின்மயமாயங்கேதோணும்
அந்திடமேசொந்தமென வறிந்துநில்லே (௭௱௰௩)

அறிந்துகொண்டுநிலையறிந்து நின்றால்மைந்தா
ஆகாரசுருபியிலே அங்கேதோணும்
வருந்திநின்று மலறனையில் மகிழ்ந்துகொண்டால்
வாசியுள்ளயோகியடாதேசவாசி
வரிந்துநின்ற ஆகமபுராணசாஸ்திரம்
வேதாந்தஞ் சித்தாந்தம்மனுவிச்யானம்
தெரிந்துகொண்டு தெளிவதறவபார்க்கும்போது
சிவசிவாசிவமயமாய் தெளியலாச்சே (௭௱௰௪)



ஆர்சப்பாதெளிவான சோதிமூலம்
அருளானபொருள்பெருகு மாதிமூலம்
மூச்சப்பாதானடங்கு மவுனமூலம்
முத்தியுள்ளமூலமடா தங்கமூலம்
நீச்சப்பாஇல்லாத தங்கமூலம்
நிசமானமூலமடா தன்னுள்பாரு
பேச்சப்பாபேசாத நாதவிந்து
பெருமையுள்ள சரக்குவகைபிலத்தைக்கேளே (௭௱௰௫)

பிலமானலோகமடா கீழ்லோகத்தில
பிலத்திருந்தசத்துவகை யெல்லாங்கூட்டி
தலமானஅத்தலத்தில் மாண்டுபோன
சங்கைதனையாரறிவார் சாற்றக்கேளு
குலமானகுலமறிந்து கூட்டிப்பாரு
கூட்டும்வகைசொல்லுகிறேன் குருவதாக
நிலமானராசிபரைப் பொடியும்நேராய்
நிலையறிந்துகுகைதனிலே யுருகும்பாரே (௭௱௰௬)

பாரப்பாசத்துசிவமொன்றாய்க் கூட்டி
பதிவாகமங்கனிந்து வுருகும்போது
நேரப்பாதங்கமது வெள்ளிசேரு
நிசமாகயதற்குநிகர் நாகஞ்சேரு
காரப்பாமங்கனிய லிங்கஞ்சேரு
கசடானகளிம்பகல வீரஞ்சேரு
பேரப்பாபெற்றதொரு சாரஞ்சேரு
பிசகாமல்சேர்த்து வொருமணியாய்வாங்கே (௭௱௰௭)

வாங்கியந்தமணியதனை மைந்தாகேளு
மகத்தானவெள்ளிசெம்பில் நூறுக்கொள்ளு
தாங்கியேதான்கொடுத்து வுருக்கிப்பாரு
தாயானதங்கமடா அதிககாந்தி
பூங்கமலகாந்திதனை மைந்தாநீயும்
பூரணமாயநுதினமும் பூசைபண்ணி
பாங்குபெறசிவயோகத் திருந்துகொண்டால்
பாஞானதேசியென்ற யோகியாமே (௭௱௰௮)

ஆமப்பாபோகமதுக் குறுதியான
அருளானகளங்கதனைகல்வத்திட்டு
நாமப்பாசொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுள்ள களங்குநிகர் காய்கெந்தி

ஓமப்பாசாந்துடன் ஒன்றாய்சேர்த்து
உறுதியுடன்தான்பொடித்து குப்பிக்கேத்தி
தாமப்பாதன்னறிவால் மண்சீலைசெய்து
தாளியரைசாம்பவிட்டு குப்பிவையே (எகூக)

வைத்துகுட்பிமுக்களவு சாம்பவிட்டு
மகத்தானசர்க்குருவை மகிறக்கொண்டு
மெய்த்திட்டமாகவே தானடுப்பிலேற்றி
மேன்மைபெற அனல்மூட்டி பதத்தைப்பாரு
கைத்திட்டமாகவேதான் சிலாகைபோட்டு
கதிர்முனையில்சிவந்த நிறங்கண்டால்மைந்தா
மைத்திட்டமானபதம் சரிதானென்று
மார்க்கமுடன் தானிறக்கி ஆறவையே (எசல)

ஆறவேவைத்ததொருபாண்டத்துள்ளே
அருள்பெருக்கும் குப்பிதனையெடுத்துப்பாரு
தேறவேவைத்த குப்பிக்குள்ளேமைந்தா
சிவந்திருந்தசெந்தூரமென்னசொல்வேன்
சேரவேநவலோகம் தங்கமாகும்
நீமகனேபணவிடைதான் கொண்டாயானால்
கூறவேநாவேது தேககாந்தி
கோடானகோடிரவி போலாமென்னே (எசக)

## அயங்களங்குவேதை

என்னோமுங் குருவைத்தியாமம்பண்ணி
ஏகாந்தமானரச வாதம்பார்க்க
சன்றோரக்கண்டபடி சொல்லக்கேளு
கருவானஅரப்பொடியை கலந்திட்டு
விண்ணானகமலரசந்தன்னாலாட்டி
மேலானநாதரசம் வங்கஞ்சேர்த்து
பொன்னானகாரமுடன் கெந்திலிங்கம்
பொருளானதங்கமுடன் வீரஞ்சேரே (எசஉ)

சேரப்பா நவமூலமொன்றாய்கூட்டி
நீர்க்கமுடன் வழித்துருட்டி வட்டுபண்ணி
கீரப்பாதான்கவ்வரவியில்போட்டு
நீமகனேகாய்ந்தபின்பு ஓட்டில்வைத்து
சாரப்பாமண்சீலை நன்றாய்செய்து
சர்க்குருவைத்தான்பண்ணி புடத்தைப்போடு
தேறப்பா புடமாறியெடுத்துப்பாரு
செந்தூரமானதொரு கட்டியாமே (எசங)



ஆமப்பாசெந்தூரக் கட்டிதன்னை
அவையடக்கமாகவே நிபதனம்பண்ணி
வாமப்பாபூரையிலே வைத்துப்போற்றி
மகத்தானவெள்ளிசெம்பு தகட்டிமேலதான்
தாமப்பாவாய்கீராலுரைத்துப் பூசி
தன்னிலேவைத்தானதிக்கு புடத்தைப்போட்டால்
பேச்சப்பா வெள்ளிசெம்பென்ற பேச்சு
புதுமையுள்ள தங்கமென்ற பேரோயாச்சே (எசச)

## குடவன்சத்தி

ஆச்சப்பாஇன்னமொரு வித்துகேளு
ஆதியென்றவெடியுப்பு துருசுகுடன்
மூச்சப்பாதானிருந்தும் நவச்சாரந்தான
முத்தியுள்ளகாரமுட னஞ்சுங்கூட்டி
பாசசப்பா அதற்குகீர் சத்திசேர்த்து
பதிவாகஜெயநீராலரைத்துக்கூட்டி
வீச்சப்பாகொண்டதொரு குடவன்தன்னில்
மேலாகத்தான் பூசிபுடத்தைப்போட்டே (எசரு)

போடப்பாபுடம்லகுவாய்ப் போட்டெடுத்தால்
புகழானகுடவனது சுத்தியாச்சு
ஆடப்பாசெம்புதனை யெடுத்துமைந்தா
அருளானவெள்ளிதனில் நாலுக்கொன்று
நாட்டப்பாநாட்டினதை யுருக்கிப்பாரு
நயமானபொன்னிறவை யென்னசொல்வேன்
தேடப்பாஇவ்வேதை கிமிஷமோதை
தெளிவானமகத்தெளிவாயிருந்துபாரே (எசசா)

இருந்துகொண்டு மகத்தெளிவைநன்றாய்ப்பாரு
என்மகனேகதிர்மதியைபொன்றாய்ச்சேரு
வருந்திமிக்ககிரதனை பொன்றாய்சேர்த்து
மகத்தானஅக்கினியில் வாசமாகி
அருந்தவமாயிருந்துநின்று சார்ந்துகொண்டால்
அசடானகல்மிஷங் களகன்றுபோகும்
விரிந்தமனத்தை நிறுத்திவேதம்பார்த்து
மேன்மைபெறச் செபதவங்கள் செய்துபாரே (எசஎ)

## செபத்துக்குமணி

பாரப்பாபுலத்தியமாரிஷியே யப்பா
பதிவாகச்செபதபங்கள் செய்வதற்கு
நேராகஅந்தந்தவாரந்தன்னில்
நிசமானமணியெடுத்து செபமேசெய்ய

பேராகச்சொல்லுகிறேன் ஆதிவாரம்
  பலமானருத்திராக்ஷம் மெத்தநன்று
சீரானவாரமடா சோமவாரம்
  சிவசிவாபளிங்குமணி செயமாங்காணே (௭௪௮)

காணவேமங்களமாம் வாரந்தன்னில்
  கருணைதரும்தாமரையின் மணிதான்மைந்தா
பூணவேபுதவாரந் தன்னிலேதான்
  புத்திதரும்துளசிமணி புகழோமெத்த
பேணவேகுருவாரந் தன்னிற்கேளு
  பலமாகுஞ்சங்குமணி பெருமைமெத்த
தோணவேசுக்கிரன்றன் வாரந்தன்னில்
  சுகருடாமணியதுதான் சுத்தமாமே (௭௪௯)

சுத்தமுள்ள சனிவாரந்தன்னில்மைந்தா
  சோதிரசமணியதுதான் துகளறுக்கும்
சித்தமுடன்தானிருந்து வாரந்தோறும்
செப்பியசொல்தப்பாமல் சித்தியாக
முத்திபெறச்சொல்லுகிறேன் மைந்தாகேளு
  முதலானமஹேன்மணியை மவுனமாக
நித்தியமும்கிலையறிந்து சுத்தமாக
  நேமமுடன் மஹேன்மணியால்செபமேசெய்யே (௭௫௰)

செய்யப்பாசெபமதுதான் தினமுஞ்செய்தால்
  சிவசிவாஆகாரஞ்சித்தியாகும
மெய்யப்பாகபமதுதான் விலகிப்போகும்
  வேதாந்தம்சித்தாந்தம் மெய்யுள்தங்கும்
மையப்பாகுழினைதனில் வாசியேறும்
  மைந்தனே அஷ்டாங்கம் திட்டமாகும்
பொய்யப்பாபோகாது தன்னைப்பாரு
  பூரணமுங்காரணமும் பொருந்தும்பாரே (௭௫௧)

பொருந்துமனங்கொண்டு சிவயோகஞ்செய்ய
  போதமயமானசிவசத்திபாதம்
இருந்துமிடந்தன் மகமோசாக்ஷியாக
  ஏகாந்தமாயிருந்து பூசைசெய்தால்
வருந்திவரும்பிறப்பிறப்பு மாயமாகும்
  மார்க்கமுள்ளசெகசாக்ஷிமனதில்தங்கும்
அருந்தவமாயினுநூறொரு சாக்ஷிதானும்
  ஆசாரசின்மய மாயாதிதானே (௭௫௨)



## முச்சுடர்மகக்கண்

ஆமென்றஆதியந்தம் மண்விண்ணாச்சு
  அதினடுவில்அப்புடனே தீயுங்காலும்
ஓமென்றுமுச்சுடராய் விளங்குதய்யா
  உறுதியுடன்தன்னகத்திலொடுங்கிப்பாரு
தானென்றபானுவது பருதியாச்சு
  சதிரானகாலதுதான் மதியுமாச்சு
நாமென்றதீயதுதான் சுடருமாச்சு
  நாட்டமதில்கண்டறிந்துநயம்பாரே (௭௫௩)

பாரப்பாநயனமது மகக்கண்ணாச்சு
  பதிவானதீபமது மகக்கண்ணாச்சு
நேரப்பாவாசியது மகக்கண்ணாச்சு
  நேர்மையுள்ளசிவயோக மகக்கண்ணாச்சு
சாரப்பாகுருமொழியு மகக்கண்ணாச்சு
  சகலகலைக்கியானமெல்லா மகக்கண்ணாச்சு
தேறப்பாதெரிசனமு மகக்கண்ணாச்சு
  சிவசிவாசின்மயமு மகக்கண்ணாச்சே (௭௫௪)

சண்ணானவிண்ணறிந்து கால்கொண்டுணி
  சருவளர்கேசரியில் கருத்தைவைத்து
மூன்றானமுச்சுடரி னடுவிலேதான்
  முதலானஞானசிவ சோதிருக்ஷம்
ஒன்றானசூக்ஷமதை யூணிப்பார்க்க
  உண்மையென்ற வதிசயத்தை யென்னசொல்வேன்
விண்ணானவதிசயத்தைப் பார்க்கவென்றால்
  வேதமுறைதவறாமல செபமேசெய்யே (௭௫௫)

## அஷ்டகர்மம்வாறறிய

## ருத்திராக்ஷவிவரம்

செய்யப்பாசெபமதுதான் செய்யவென்றால்
  தீர்க்கமுள்ளருத்திராக்ஷம் செபத்தைக்கேளு
மையப்பாமையமென்ற சுழினைக்கண்ணாய்
  வளர்ந்துமிகப் பொருந்திருத்ராக்ஷமாச்சு
மெய்யப்பாருத்திரனே குடியாய்நின்று
  மேல்கீழாம் ஒன்றானதமர்தானாச்சு
பையப்பாதமர்வாசலறிந்துசேர்ந்து
  பத்தியுடன்செபதபப் பிராணயஞ்செய்யே (௭௫௬)
செய்யடாபிராணயம் நன்றாய்ச்செய்ய
  சிவதலத்தில் மகதரிமையாகநின்று
மெய்யடாசொல்லுகிறேன் ஆதிவாரம
  மேன்மையுள்ளவசிகரத்துக் குயிருமாச்சு

மையடா மையமென்ற சோமவாரம்
மகத்தான மோகனங்கள் வரிசையாகும்
கையடா தவறாத செவ்வாய் மைந்தா
கதையுள்ள தம்பனத்துக் கடிதானாமே (௭௫௭)

ஆமென்றடு தனதுதான் மைந்தா மைந்தா
அருமையுள்ளச் சடானத்துக் கடிதான்காணும்
தாமென்ற வியாழந்தை யென்னசொல்வேன்
தன்மையுள்ள கிரிசனங்கள் தானேயாகும்
நாமென்ற வெள்ளியுட மகிமைதானும்
நாட்டிய பேதனங்கள் நன்மையாகும்
ஓமென்ற சனிவாரந்தன்னில் மைந்தா
உண்மையென்ற மாரணங்களுறுதியாமே (௭௫௮)

உறுதியுடன் மகத்தி வால்தன்னை நக்காண
ஒருமையுடன் மனோன்மணியால் தியாநம்பண்ணு
பருதிமதி சுடரதுபோ லஷ்டகர்மம்
பாலகனே யுனதிடத்தில் பதிவாய் நிற்கும்
சுருதிபொருளான தொருமவுநங்கொண்டு
சுத்தமுடன் அஷ்டகர்மந் திட்டம்பாரு
குருவசனந்தனை மறவாதிருந்துகொண்டு
கோடானகோடி வித்தை கூர்ந்துபாரே (௭௫௯)

கூர்ந்துபார்த்தறியவென்றால் மவுநவாலை
குணமறிந்தவனக்குத் தற்குருவைப்போற்றி
நேர்ந்துகொண்டண்ணாக் கையுண்ணாக்குள்ளே
நேர்மையுடன் ஓங்காரவிசையாமேற்று
தேர்ந்துகொண்டு கபாடமென்ற வாசற்குள்ளே
சிவசிவாமென்று திருநடனமாடி
சார்ந்திருந்து சிவயோகசித்தனாகி
தண்மையுள்ள பூதவகை சரக்கைக்கேளே (௭௬௦)

## பஞ்சபூதசரக்கு

கேளப்பா பூமியது தங்கமாகும்
கிருபையுள்ள நீரம் அப்புவாகும்
கேளப்பா தேய்வதுவும் செம்புவாகும்
கிருபையுள்ள இரும்பதுவும் வாயுமாச்சு
கேளப்பா வாகாசம் நாகமாகும்
கிருபையுடன் பூதவகை யறிந்துகொண்டால்
கேளப்பா நவலோகந் தங்கமாகும்
கிருபையுடன் காரசாரத்தைக் கேளே (௭௬௧)



கேளடா பிருதிவிதான் மைந்தா கேளு
கிருபையுள்ள இந்துப்புகல்லுப்பாச்சு
ஆளடா அப்பதுதானென்னவென்றால்
ஆதியென்ற சாரமுடன் சத்திசாரம்
வேளடா தேய்வதுதான் சொல்லக்கேளு
வெடியுப்பு சவட்டுப்பு ரெண்டுமாச்சு
சாளடா வாய்வதுதான் கருதக்கேளு
கருவான துருசுவெண் காரங்காணே (௭௬௨)

காணவே யாகாசம் வழலைபூரம்
கண்டறிந்து பூதவகை கனிவாய்ப்பார்த்து
தோணவே வாதமுறை வைத்தியமும்பார்க்க
சுத்தமுடன் சற்குருவைத் தொழுதுபோற்றி
பேணவே பூதவகை காரசாரம்
போதிந்து வேதமுறை யிலப்பாய்ப்பாரு
பூணவே தன்னறிவால் பார்த்துக்கொண்டு
பூதவகைப் பாஷாணம் பொருந்தப்பாரே (௭௬௩)

பாரப்பா பிருதிவிதான் தொட்டிசிங்கி
பதிவானகார்முகியும் பவழம்பத்து
நேரப்பா அப்பதுவுங் கெவுரி வெள்ளை
நிசமான குதிரைப்பல் சோளிகெந்தி
வீரப்பா தேய்வதுவும் கெந்திசிலை
விளையானவரிதாரங் கண்டுகொள்ளு
ஆரப்பா வறிவார்கள் ஆகாசத்தை
அப்பனே குதமெனவறிந்து தேடே (௭௬௪)

தேடவே பாஷாணஞ் செயலைச்சொன்னேன்
திவ்வியமாய பாசத்தைச் செப்பக்கேளு
நாடவே பூமியது அப்பிரகங்காந்தம்
நலமான சலாசத்து பூநாகந்தான்
கூடவே அப்பதுதான் சிலாசிசங்கு
குருவான அண்டமொடு நத்தைகண்டு
ஆடவே தேய்வதுதான் கிளிஞ்சல் பூரம்
அணுதியொடு வேறுமுடன் ஆமைதானே (௭௬௫)

தானென்ற வாய்வு அன்னபேதி ரோமம்
தருவானகல்மதமும் சாத்திரபேதி
வானென்ற ஆகாசம் துத்தம் அயக்காந்தம்
மார்க்கமுள்ள ராசிதபாஷாணம் சக்கான்

கோமென்றகுருவருளால் மைந்தாகேயும்
குறிப்புடனேபூதவகை சரக்கைப்பார்த்து
தேமென்றருசிபோலே வேதைபார்த்தால்
சிவ்யோகபூரணமாய் வாழலாமே (௭௬௯)

## புடவரிசை

ஆம்பபாபுடந்தனக்கு விதானங்கேளு
அப்பனேகாடையது எருவொன்றாகும்
நாமப்பாகவுதாரி யெருமூன்றப்பா
நன்மையுள்ளகுக்குடந்தான் எருபத்தாகும்
தாமப்பாவராகபுடம் எருஐம்பதாகும்
தயவானகஜபுடந்தான் எருநூறாகும்
ஓமப்பாகெஜபுடந்தான் ஆயிரமுமாகும்
உத்தமனேநைமுறையாய்ப் புடமாய்ப்பாரே (௭௭௦)

## ஊத்துமுறை

பார்ப்பாவூத்துமுறை வகையைக்கேளு
பக்குவமாயுருக்குமுறை துருத்தியொன்று
சேரப்பாசத்துவகை துருத்தினாலு
செயமானைமுறையாயறிந்துகொண்டு
காரப்பாகருணையினாலாதாரம்
கண்டறிந்துகாரணமாய் மேலாதாரம்
சேரப்பாவாசியினால் மவுனங்கொண்டு
சிவசிவாகேசரியை திருமுநோக்கே (௭௬௮)

நோக்கடாஅற்பசிமுதல் மூன்றுமாதம்
துண்மையுடன் உருக்கினதுங்காலமாகும்
வாக்கடாதைமுதலாய் மூன்றுமாதம்
மகத்தானஜெயகீரின் காலமாகும்
தாக்கடாசித்திரைமுதல் மூன்றுமாதம்
சங்கையுடன் குருமுடிக்குங் காலமாகும்
தாக்கடாஆடிமுதல் மூன்றுமாதம்
சுத்தமுடன்திராவகம் செந்தூரஞ்செய்யே (௭௬௯)

செய்ப்பாநீற்றினத்தின் கருவைக்கேளு
சிவசிவாபுதுக்குடனே வீரம்பூரம்
மெய்ப்பாகுருவண்டு ருடனூதம்
விதமானகார்முகிலும் சவுக்காரமூரம்
செய்ப்பாசரக்குவகை யொன்பதில்தான்மைந்தா
திருவானநவகோலம் நீறிப்போகும்
கைப்பாகைமுறையா யறிந்தாயானால்
கசடறுவேதமுறை காணலாமே (௭௭௰)



காணவேயுருக்கினத்துச் சரக்கைக்கேளு
காரமுடன்சவ்வாது வெடிசாரமுப்பு
வேணவேகண்டரோடுமால்தேவிவெள்ளை
பிலமானரெங்குடனே ஆமணக்குகுன்றி
தோணவேதேனுடனே பூரவிசெனச்சம்
தொகுத்தறிந்துகருமானங் கண்டாயானால்
ஊணவேகவலோக முருகிப்போகும்
உத்தமனேகண்டறிந்து யோகக்காணே (௭௭௧)

## செந்தூரவகைச்சரக்கு

காணவேநவலோகம் உபரசங்கள்
கடிதானபாஷாணவகைகளெல்லாம்
பேணவேசெந்தூரஞ் செய்யநல்ல
பிலமானசரக்குவகை சொல்லக்கேளு
தோணவேமனோசிலையுந் தாளகெந்தி
சுத்தமுள்ளவப்பிரகம் கெவுரிதுத்தம்
ஊணவேவெடியுப்பு இதுவெல்லாந்தான்
புத்தியுடன் செந்தூரக் குருவாம்பாரே (௭௭௨)

## வாதவகைச்சரக்கு.

பாரப்பாவாதவகை சரக்கைக்கேளு
பரிவானதங்கமொடு நாகம்ரூதம்
நேரப்பாசிமிளியொடு வுப்புமைந்தா
நேரிந்துகைபாக முறையாய்ப்பார்த்தால்
பேரப்பாபெற்றதொருநவகோலங்கள்
பிலமானவரண்முறைக்கு இதுவேயாகும்
சாரப்பாசற்குருவின் பாதங்கண்டு
சங்கையுடன் சவுமியசாகரத்தைப்பாரே (௭௭௩)

பாரடாசற்குருவின் கடாக்ஷத்தாலே
பதிவாகக்கட்டியதோர் சூதந்தன்னில்
நேரடாகாரியம் சரியாய்க்கூட்டி
நேர்மையுடன்நாவிலொன்று தங்கஞ்சேர்த்து
சேரடாபொடியாக்கி குப்பிக்கேற்றி
சிவசிவாசீலைமண்ணுந் திறமாய்ச்செய்து
காரடாபாண்டத்தில் சாம்பலிட்டு
கைமுறையாய் வாலுகையின்மேலேயேத்தே (௭௭௪)

எத்திநன்றாய்க்கிமூட்டி மைந்தாநீயும்
இன்பமுடன் பதம்பார்த்து செந்தூரித்து
பாத்தியேநவகோலம் நூற்றுக்கொன்று
பூட்டாபகிரண்டுமாத்துமாகும்

பார்திபனேஇன்னமொரு சூதந்தானும்
பதிவாகப்பலமெட்டு எடுத்துக்கொண்டு
சாற்றியதோர் தங்கமொருபலமுங்கூட்டி
சங்கையுடன் தெளிவாக வுருக்கிப்பாரே (௭௭௫)

பாரப்பாயருக்கியதைப் பொடியாய்ச்செய்து
பார்திபனேபதினாறு பலந்தான்கெந்தி
சேரப்பாபொடிசெய்து கூட்டியும்
நேர்மையுடன்குப்பியிலே நிசமாய்ச்சேர்த்து
சேரப்பாவாலுகையிலேத்திமைந்தா
தீர்க்கமுடன்பதம்பார்த்து செந்தூரித்து
போத்தியேநவலோகம் நூற்றுக்கொன்று
பூட்டடாபனிரண்டு மாத்துமாமே (௭௭௬)

வாலைச்சந்திரசெந்தூரம்.

ஆமப்பாஇதின்பேரு வாலைச்சந்திரன்
அரகராகுன்றி யுண்ணுஇருநேரந்தான்
தாமப்பாமண்டலந்தான் கொண்டாயானால்
சந்திரன்போல் தேகமது காந்தியாகும்
ஓமப்பாசட்டையது வுரிந்துபோகும்
உன்மேனிதங்கம்போல் பிரகாசிக்கும்
போமப்பாதசையிலுள்ள தோஷமெல்லாம்
புத்தியுள்ளதாதுகள்தான் விருத்திகாணே (௭௭௭)

காணவேநரைதிரைகள் காணாதோடும்
கன்னிகையேல் வைகமது மெத்தவாகும்
பூணவேதந்தமெல்லா மிறுகிப்போகும்
பூரணமாய்க்கண்கள்ரெண்டு மொளியாயிருக்கும்
தோணவேயுடம்பிறுகி வாலையாகும்
சுத்தமுள்ளசுப்பமடா இந்தமார்க்கம்
பேணவேயுன்போர்க்கு சோதிநாளும்
பேர்பெரியவேதாந்தம் சித்தியாமே (௭௭௮)

சுத்தமுடன்உபாசத்தின் சத்துசொல்வேன்
செயமானநவச்சாரம் வீரகன்ரெண்டு
பத்தமுள்ளவீரமது வீரகன்ரெண்டு
பதிவானபடிகாரம் பலமோபத்து
புத்தியுடன்அண்டநீர் விட்டேஆட்டி
பூரணமாய்குகைவிட்டு வுருக்கச்சத்தாம்
வெற்றியுள்ள சத்துதான்நாகம்போலே
வேகமுடனுருகுமது கண்டுபாரே (௭௭௯)



பாரப்பாதுத்தசத்தின் வேதைசொல்வேன்
பரிசமுதற்சந்நாகதாபதீபம்
சேரப்பாசத்திடைக்கு சூதம்சேர்த்து
நேர்மையுடன் கூட்டிநன்றாயுருக்கிப்பாரு
காரப்பாநாலிலொன்று தங்கஞ்சேர்த்து
கருணையுடனுருக்கியந்த மணியைவாங்கி
சேரப்பாஅந்திடைக்கு கெந்திசேர்த்து
சிவசிவாபொடிசெய்து குப்பிக்கேத்தே (௭௮௦)

ஏத்திநன்றாய் வாலுகையில்கமூட்டி
எடுத்திடுநீசெந்தூரம் பதமும்பார்த்து
போத்திநன்றாய் நவலோகம் நூற்றுக்கொன்று
பூட்டினால்பதினாறுமாத்துமாகும்
பார்த்துநன்றாய் வீரமிட்டு செந்தூரத்தில்
மகத்தானசூதமிட்டு அரைத்துக்கொண்டு
தோற்றியதோர் தாசியிட்டு திரித்துக்கொண்டு
சுத்தமுள்ள நெய்யதனில் தோய்த்திட்டாயே (௭௮௧)

தோய்த்ததொரு திரியெடுத்து தீபமேத்தி
சூழவேகடிதாசிகூடுகட்டி
பலித்ததொரு நவகோலத்தகட்டுக்கேதான்
பத்தியதோர்திரியவித்து ஆபஞ்சாடில்
தவித்ததொருகசடெல்லாங் கறுத்துப்போகும்
தண்மையுடன்தணல்காட்டத் தங்கமாகும்
செவித்ததொருதாம்பிரமாம் வேதைமார்க்கம்
செம்மையுள்ள மாணாக்காகண்டுகொள்ளே (௭௮௨)

கண்டுபார்காந்தமது பலந்தானொன்று
கட்டியதோர்சாரமது பலந்தானொன்று
விண்டுபார்ஜெயவீரம் பலந்தானொன்று
வெற்றியுள்ளவெண்காரம் காசுபோட்டு
கொண்டதொரு சிப்பிநீர்விட்டேஆட்டி
குறிப்பாகத்தானுருட்டி குகையில்வைத்து
சென்றிடவேசில்விட்டு வுருக்கிப்பாரு
சிவசிவாநாகம்போல்சத்துபாரே (௭௮௩)

பாரப்பாநாகரசம்போல்காந்தமானால்
பதிவானகாயசித்தி யோகசித்தி
சேரப்பாகண்டிடைக்கு ரசமுங்கூட்டி
நிஜமானசத்திடைக்கு தங்கங்கூட்டி

சேரப்பாதானுருக்கி மணியாய்வாங்கி
திர்க்கமுள்ளகெந்தகமுஞ் சமனைப்சேர்த்து
சாரப்பாபொடிசெய்து குப்பிகேத்தி
கருணையுடன் வாலுகையில்தீயைமுட்டே (எஅச)

முட்டிநன்றாய் செந்தூரபதத்தைப்பாரு
மோசங்கள்வாராமல் சிலாகைபோட்டு
நீட்டியதோர் சிலாகைமுனைசாசாப்புகண்டால்
நிலைத்ததொருசெந்தூரம் பதமாச்சென்று
பூட்டியதோர்பிசாணம் பூசைசெய்து
புகழாகக்குளிந்தபின்பு இரக்கிப்பாரு
ஆட்டியதோர் செந்தூரமருண்ன்போலாம்
அந்திசந்திதினமிரண்டு குன்றிதின்னே (எஅரு)

தின்னடாமண்டலத்தில் காயசித்தி
சிவசிவா அருணைனைப்போல் தேகமாகும்
கண்ணடாசோதிவெகு காந்தியாகும்
கலகலத்தந்தமெல்லா மிறுகிப்போகும்
பெண்ணடாபெண்மேலே யாசைநீக்கு
பேர்பெரியாகசியத்தைப் பேணிப்பாரு
பொன்னடாபொன்னதனைக் காணவென்றால்
பூட்டுகிறதுரையினுட போக்கைக்கேளே (எஅசு)

கேளடாகாந்தசத்து நாகமொன்று
கெடியானதங்கமொன்று ரசந்தானொன்று
நாளடாமூன்று மொன்றாயுருகும்போது
நல்லதொருநாகமது மூன்றுபோடு
காலடாபுகையமர்ந்து கட்டிப்போகும்
கருணையுடன்நின்றுருகி மணியுமாகும்
ஆளடாஅந்திடைக்கி கெந்திகட்டி
அப்பனேநாலிலொன்று சிலையுஞ்சேரே (எஅஎ)

சேரப்பாபொடித்தல்லோ குப்பிச்கேத்தி
செம்மையுடன்வாலுகையில் வைத்துமூடி
காரப்பாதீயெரிக்கச் செந்தூரமாகும்
கருணையுடன்பதம்பார்த்து இரக்கிக்கொண்டு
நேரப்பாநவலோகம் நூற்றுக்கொன்று
நீட்டிடவேபணிரண்டுமாத்துமாகும்
தேரப்பாமயங்காதே பொன்னைபபார்த்து
தீர்க்கமுடனுருளிகையிட்டுப் பார்த்திடாயே (எஅஅ)



பாரப்பாபூநாகச்சத்துசொல்வேன்
பதிவானபூமிவேர் தன்னைவாங்கி
சேரப்பாஉலர்த்திநன்றாய்ப் பொடியேசெய்து
செயமானசாரமது விராகனைந்து
காரப்பாசவ்வீரம் விராகனைந்து
கட்டான வெண்காரம் விராகனைந்து
தேரப்பாவிதுவெல்லாம் செயநீர்தன்றால்
செம்மையுடனரைத்துருட்டிகுகையில்வையே (எஅகூ)

வைத்துநன்றாய்சில்லிட்டு வுருக்கிப்பாரு
மார்க்கமுடன்மணிமணியாய் சத்துவீழும்
மைத்ததொருமணியெல்லா முருக்கிப்பார்க்க
மகத்தானவைரம்போல் பளபளக்கும்
கைத்ததொரு பூநாகச்சத்தில்தானும்
கருணையுடன் காசிடைதானுருகும்போது
வைத்தல்லோ நாகமந்திடையேபோடு
நல்லகுருரெண்டு மொன்றாயுருகும்பாரே (எகூய)

பாரப்பாயிப்படியே ஊட்டிப்பார்க்க
பரிவாகநூரிடைதான் நாகங்கட்டும
சாரப்பாகட்டியதோர் நாகமொன்று
சங்கையுள்ள சூதமென்று தங்கமொன்று
நேரப்பாஉருக்கியதை வாங்கிக்கொண்டு
நேராககெந்தகமும் கூட்டிமைந்தா
சேரப்பாபொடியாக்கி குப்பிக்கேத்தி
செம்மையுடன் வாலுகையில் வைத்திடாயே (எகூக)

செந்தூரம்

ஏத்தியல்லோதீயெரிந்து செந்தூரித்தால்
என்னசொல்வேன் நவலோகம்நூற்றுக்கொன்று
சாத்தியல்லோதானுருக்கி பார்த்தால்மைந்தா
சங்கையுடன் பதினாறுமாத்துகாணும்
பாத்திபனேமற்றதெல்லாம் சுருக்கிலேமைந்தா
பார்மகனே அதிகாசம் நாகரசமாச்சு
போத்தியல்லோ ஆர்யெடுத்துப்பார்த்தாலுந்தான்
புண்ணியர்க்கு ரசவாதம்புகழுண்டாமே (எகூஉ)

புகழாகப் பூனாகசத்தினோடே
பூட்டடா சமன்தங்கம் உருக்கும்போது
அகலாதசெயசூதம் சமனாய்ப்போட்டு
அய்யனேதானுருக்கினொருக்கிக்கொண்டு
பகலாயகெந்தியதினிடையேகூட்டு

பதித்யுடன்குப்பியரை வாசிபோட்டு
  நிரையாகவாலுகையில் வைத்தால்மைந்தா
நிற்மலம்போல் செந்தூரமாகுந்தானே (௭௬௩)

தானென்றசெந்தூரந் தன்னைமைந்தா
  சமாசமாய்குன்றியிடை தினமுந்தின்ன
தானென்றமண்டலத்தில் காயசித்தி
  சங்கையுடன்சட்டையொன்று தானேபோகும்
வானென்றகுருபதந்தான் வொளியாய்க்காணும்
  மைந்தனேகேசரியில் மகிழ்ந்துபாரு
கோனென்றபூரகசத்துமைந்தா
  சூரியரிந்தசெரியறிந்து கூர்ந்துகேளே (௭௬௪)

கேளடாஅயத்தினிடகற்பங்கேளு
  குணமானஅரப்பொடியும் பலமும்ரெண்டு
விள்ளடாசெயசாரம் பலமுங்கால்தான்
  விசையானசெயவீரம்பலமுங்கால்தான்
அல்லடாசெயநீரை விட்டேஆட்டு
  அப்பனேகுகையிலிட்டு உருக்கிப்பாரு
வெல்லடாயியம்போ லுருகிநிற்கும்
  வேதாந்தஅயத்தினிட யியந்தானே (௭௬௫)

தானனையியமது உருகும்போது
  தாக்கடாநாருசொந்தம் தாக்கக்கட்டும்
வானனபச்சைரசமிரதமும்
  வரிசையுடன்சட்டிமடா நாலுசொந்தம்
கோனனதங்கமிட்டு கெந்திகூட்டி
  குமுறவேசெந்தூரம் செய்தாயானால்
தேனனதவலோகம் நூற்றுக்கொன்று
  சேர்க்கவேயன்னிரண்டு மாத்துமாமே (௭௬௬)

ஆமப்பாஅயமுடனே தங்கஞ்சேர்த்து
  அடங்கிநின்று வுருகையிலேரசத்தைக்கேளு
தாமப்பாஅந்திடைக்குப்போட்டுந்தான்
  சங்கையுடனுருக்கியொரு மணியாய்வாங்கி
ஓமப்பாஇந்திடைக்கு கெந்திகூட்டி
  உருக்கமுடன் பொடித்துஅதைகுப்பிக்கேத்தி
சாமப்பாவாலுகையில் செந்தூரித்து
  சாதகமாய்தினம்ரெண்டு குன்றிதின்னே (௭௬௭)



தின்னவேகாயமது இரும்புபோலாம்
  திறமாகதாதுவெல்லாம் தீர்க்கமாகும்
உண்ணவேஇருபோது அப்பிரகமப்பா
  உத்தமனேசித்தியடா மண்டலத்திலாகும்
பொன்னடாவுன்றேகம் வைரக்கட்டி
  புணர்ச்சிசெய்ய சுக்கிலந்தான்மேலேயேறும்
நண்ணடாசற்குருவின் பாதந்தன்னை
  நாட்டிநின்ற பூரணத்தில்நயமாய்த்தேறே (௭௬௮)

தேறவென்றால் காவியத்தைநன்றாய்ப்பாரு
  தீர்க்கமுடன் பூரணத்தைத்தேடிப்பாரு
ஏறவென்றால்சகலகலைஞானம்பாரு
  என்மகனேசவுமியசாகரத்தைப்பாரு
கூறவென்றால் தத்துவமாயிரத்தைப்பாரு
  கூர்மையுடனமாந்திரீக குணத்தைப்பாரு
ஆறவென்றாலாயிரமா மதவிக்யானம்
  ஆறிதொகுத்தகதவரை யன்பாயப்பாரே (௭௬௯)

பாரப்பாபலநூலுந் தேடிப்பாரு
  பரிவானசூத்திரங்கள் பற்றிப்பாரு
நேரப்பாநிலையறிந்து பார்ப்பதற்கு
  நிலையானசிவயோகம் நேர்மைசேரு
காரப்பாஅண்ணாக்கை யுண்ணாக்குள்ளே
  கருத்துறவேதானிருத்தி கலையைப்பற்றி
சேரப்பாஅண்டபத முடிவிலேதான்
  இன்பமுடனன்றாயிருந்து ஆண்டுகொள்ளே (௮௱)

ஆண்டிருந்துமதுரத்தை சுழிவையுள்ளே
  ஆசைவானவாசிசிவயோகம்பார்த்து
பூண்டுகொண்டு மனதைபங்கேபூட்டிப்பார்த்தேன்
  புருவமையத்தாள் திறந்துபோனேன்மேலே
தாண்டியந்த அறுவரையுந் தானேகண்டேன்
  சதாசிவபதபூரணமாய் தானேநின்று
தூண்டினேன்விளக்கொளியின் சூட்சங்கொண்டு
  சொர்க்கபதந்தனைக்கொண்டேன் சுகம்பெற்றேனே ()

சுகம்பெற்ற சூட்சமதையென்னசொல்வேன்
  சுத்தமுள்ளபுலத்தியனே சொல்லக்கேளு
அகம்பெற்றதேகமாநந்தமாக
  அருமையுடன்தர்ஜனியு மத்திமையுங்கூட்டி

முகம்பெற்றநாவிலிருபுறஞ்செலுத்தி
முற்கமுடன் தானுசத்திமேலேதள்ளு
செகமுற்றதமர்வாசல் திரையைநீக்கி
தீர்க்கமுடன்முச்சுடரைக் கண்டுமேவே (அ௱௨)

சத்திருட்சம்பத்தாந்தீட்சை

மேலப்பாசத்தியுட் சூட்சந்தன்னை
விளம்புகிறேன் ஒங்கென்றும்அங்கென்றுள்ளே
தாவப்பாமாகதமாய்ப் பூசைபண்ண
தன்ரூபம்கண்ணாடிபோலேகாணும்
கூவப்பாசிவசத்தி பததாந்தீட்சை
சொல்லுகிறேன் வெளியொளியின் அந்தரத்தே
நாமப்பாமூலமங்கே மங்கென்றோதி
நாக்கைமேல் நோக்கியந்தவமுர் தங்கொள்ளே (அ௱௩)

கொள்ளடாவமுர்தரச பாரந்தன்னை
குருவானசுழிமுனையில் மகதைநாட்டி
நில்லடாவாசியினால் மணிநாவுன்னி
நேர்மையுடன்மணிவாசல் பூட்டுதன்னை
தள்ளடாதமர்வாசல் திரையைநீக்கி
சச்சிதானந்தமென்று குகையில்சென்று
உள்ளடாமகதாகந்து வெளியைப்பாரு
உத்தமனேமூக்குநுனி சுழியைப்பாரே (அ௱௪)

மூக்குநுனிசுழினையிலே மகதைமுட்டு
முத்திபெறத்தவருமல் வாசியூதி
தாக்கினால்அறிவங்கேசெல்லும்போது
சதானந்தவிந்துவினால்வாசிதங்கும்
நாக்குநுனிமேல் ஞெங்கிசாதகம்செய்ய
நலமானவாதபித்தம் சிரசேருது
சீக்கிரத்தில்ஒளிகாண சுழிமுனையில்மைந்தா
திருவான்நாவிநுனி சேர்த்துப்பாரே (அ௱௫)

சோடாசுழினைவழி தமருக்குள்ளே
சிவசிவாஓமெனவே மவுனம்பூட்டி
காரடாகருணையினால் வசிவசியென்றோதி
கருணைவளர்ஓங்காரக் கம்பமீதில்
ஏறடாஅந்தரங்கமுடிமேல் சென்று
பிரங்குதுரைவழிபதிந்துவமுர்தங்கொண்டு
மோடாசென்றுவலம் வந்தாயாகில்
மெஞ்ஞானகுருதேசி வாசியாச்சே (அ௱௬)



வாசிவா ஓமெனவே மகக்கண்கொண்டு
மகத்தான கேசரியில் மணிநாவுன்னி
சேசிவாவென்று அந்தத்தமரில் செல்ல
நின்றிலங்கும் ரவிமதியு மொன்றாய்க்கூட்டி
நாசிவா வென்றுசுழி மேலேநின்று
நாதாந்தக் கண்திறந்து அமுர்தம்பாயும்
வாசிவா வசியென்றே அமுர்தங்கொண்டால்
மகத்தான மவுனசிவ யோகிகாணே. (அ௱௭)

காணவே சிவயோகத் திருந்துகொண்டு
கருணை பெறச் சுழிமுனையில் மணிநாவுன்னி
தோணவே மந்திரங்கள் செபித்தாயாகில்
சொல்நிறைந்த வசீகரங்க ளெல்லாம்சித்தி
பேணவே ஆகாரம் பிலமாய்நிற்கும்
பெருகிநின்ற வாசிநிதம் பிராணதப்பா
பூணவே மகம்நிறுத்தி மவுனம்பூட்டி
பொருந்திமகக் கனிந்தமுர்தம் பொழியும்பாரே. (அ௱௮)

பாரப்பா கனிந்தமுர்தத் தேனைமைந்தா
பத்தியுடன் மவுனமதா யிருந்துகொண்டு
சாரப்பா சதாகரலம் பூசித்தாக்கால்
சாமான வாசிதிரு வசியாகி
நேரப்பா நிறைந்த திருவாசியாலே
நின்றிலங்கும் அண்டகேசரியால் தானும்
மேரப்பா மேருகிரி தீபம்போலே
விளங்குமடா சுழினையடி முடிமேல்பாரே. (அ௱௯)

ஏகாக்ஷரம்

பாரப்பா அடிமுடிமேல் பார்க்கும்போது
பதிவானசரம் ஏகாக்ஷரத்தை மைந்தா
கேரப்பா சவுமியமாய் நிலைக்கச்சொல்வேன்
நிஜமான புலத்தியனே நினைவாய்க்கேளு
மேரப்பா வலஞ்சுழித்தடியின் கீழ்
மெஞ்ஞான இடஞ்சுழிமேல் ஓலஞ்சாத்தி
தேரப்பா சூலமிடை தீயுங்காலும்
தீர்க்கமுடன் விருத்திமேல் விந்தப்போடே (அ௱௰)

பொட்டொரு இந்துவட்டக் கோட்டைக்குள்ளே
பூரண ஏகாக்ஷரத்தைப் பார்க்கும்போது
நாட்டமென்ற அஞ்செழுத்து மங்கேகண்டேன்
நன்மையுள்ள எட்டும்இரண்டு மங்கேகண்டேன்
ஆட்டமென்ற முக்கோண மேருகண்டேன்
அதில்நிறைந்த சிதம்பரச் சக்கரமுங்கண்டேன்
தேட்டமென்ற தேட்டமெல்லா மங்கேகண்டேன்
சேர்ந்துமிக வொன்றான செயல்கண்டேனே. (௨௪௩)

செயலறிந்து நடப்பதற்கு மைந்தாமைந்தா
தீர்க்கமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
பதுமகல கோமுகஆசன மேல்கொண்டு
பக்தியுடன் பிராணாயஞ்செய்தாயாகில்
தயவாகப் பிராணவாசிதானும்
தன்னுள்ளே நின்றுநீ தன்னைப்பார்த்து
நயமாகச் சொல்லுகிறேன் யோகமார்க்கம்
நடுவணையும் அடிமுடியும் நன்றாய்ப்பாரே. (௨௪௪)

யோகமார்க்கமாத்திரை.

பாரப்பா ரேசகந்தான் மாத்திரைதானாறு
பதிவான மூலமதில் ஓமென்றுரேசி
காரப்பா பூரகமு மாத்திரைதானெட்டு
கனிவாக ருத்திரனில் ரீங்கென்றுகூவி
நேரப்பா கும்பகந்தான் மாத்திரையீரெட்டு
நினைவாகக் கண்டமதில் அங்கென்றுகும்பி
சாரப்பா சவுபீஜ மாத்திரைநாலெட்டு
சங்கையுடன் ஓம்-ரீங்-அங்கென்றேதான். (௨௪௫)

பிராணபமைந்து.

ஓதுவது ஓம்-ரீங்-அங்கென்றேதான்
உத்தமனே சுழிமுனையில் மணிநாவுன்னி
நீதியுடன் உன்னிநடு மனையில்சென்று
நிற்பீஜம் மாத்திரை தானறுபத்துநாலு
வீதியென்ற ஆதாரமேலாதாரம்
வெளிகனிலே யறுபத்து நாலுமேற்று
நாதியென்ற பிராணப மிதுதான்மைந்தா
ஐந்தினிலே தனையறிந்து அடங்கியதே. (௨௪௬)



ஏதுவது மனதடங்கி சுழினைக்கேக
என்மகனே பிராணப கருவைக்கேளு
சேருவது சுழிமுனையில் ஓமென்றாவி
நிச்சயமாய் நாலுதரம் ரேசித்தாக்கால்
பேருபெற மூலவன்னி மேலேறும்
பிரியமுடன் அந்நேரம் ஓம்ரீங்கென்று
சீருபெற இருநான்கு பூரித்தாக்கால்
சிவசிவா அந்தவன்னி தீர்க்கலாமே. (௨௪௭)

தீர்க்கமுடன் நின்றவன்னி கண்டத்தேயும்
சிவசிவா அந்நேரம் நிறமாய்நின்று
மார்க்கமுடன் ஓம்ரீங் அங்கென்றையா
மாத்திரைதான் பதினாறு கும்பித்தாக்கால்
பார்க்குமுன்னே அந்த வன்னிசுழினைக்கேகும்
பக்தியுடன் சவுபீஜமுப்பத்திரண்டும்
ஏர்க்கையுடன் தானறிந்து மவுனம்பூட்டி
என்மகனே நிற்பீஜ மின்பங்கேளே. (௨௪௮)

இன்பமென்ன நிற்பீஜம் மாத்திரையெட்டெட்டும்
ஏகாந்த அண்டவெளி தன்னிலேற்றி
அன்புடனே வாசியா லோமென்றூதி
ஆதரவாய் தானிரங்கி யருள்கைக்கொண்டு
தென்புடனே ஆதார மூலத்தேகி
தீர்க்கமுடன் பிராணபமைந்துந் தீர்த்தால்
பண்புடைய சிவயோக முத்தனுமாய்
பதிவான சிவயோக வாழ்க்கையாமே. (௨௪௯)

பாரப்பா சிவயோக வாழ்க்கைபார்த்த
பதிவான மாத்திரையை அறியார்தான்
சாரப்பா ரவிமதியை மாறுவோரும்
தன்னுறவாய் வாய்வதனை யடக்குவோரும்
நேரப்பா வென்றகண்ணை மூடுவோரும்
நிசமாக செவிமூக்கை யடைப்போர்தானும்
வீரப்பா கொண்டிலகில் திரிவார்தானும்
வேதாந்த பிராணப விதிக்காணாரே. (௨௫௰)

விதியான அமைத்த விதியெழுத்தைப்பற்றி
  மெஞ்ஞான சற்குருவைப் பணிந்துகொண்டு
கெதியான பிராணப மறிந்துகொண்டு
  கெவுனமென்ற மவுனசிவ யோகமாகி
பதியான தலமதிலே வாசமாகி
  பத்திகொண்டு இருபாத்திற் பதிவாயிருப்பான்
மதியானகாலடக்கி வழியில் சென்று
  மவுனமுற்றுச் சுழினையிற் சென்றமுர்தங்கொள்ளே. (அ௬௧)
கொள்ளப்பா அமுர்தரச பானந்தன்னை
  கொண்டிகவா யேறுதற்கு வகையைக்கேளு
செல்லப்பா சற்குருவின் பதியைநோக்கி
  செங்கமலச் சுழினையிலே மனதைநாட்டி
கல்லப்பாய் தானிருந்து அகாரமான
  நன்மையுள்ளகாமப்பால் கொண்டு தேர்ந்து
உள்ளப்பா நின்றிலங்கு முகாரசத்தி
  உண்மையுள்ள நாதமதை யுண்டுகொண்ணே. (அ௬௨)

நாதவிந்து.

காணவே நாதவிந்து கொண்டுதேர்ந்தால்
  கடமான ஜடமதனில் குடிலமிக்கும்
பூணவே குடிலமென்ற மாய்கையற்றால்
  பொற்கமலமதில் மவுனம் பூட்டலாகும்
தோணவே சுழினையிலே மவுனம்பூட்டி
  சுத்தியிட சாரிவசாரியானால்
பேணவே அண்டரண்டங் காணலாகும்
  பெருகின்ற வாசியது பிராணன்பாரே (அ௬௩)

பிராணவாயுவினிலே.

பாரடா பிராணனென்ற பிராணவாயு
  பத்தியுடன் தானியங்கும் வகையைக்கேளு
கோடாவைட விழி சுழியில் தோன்றும்
  சின்னுசித்திர நாடியிலே சிம்மெனவேயிருக்கு
சாரடா நிமெனவே மூலதாரம்
  சார்ந்திருந்து நாபியிலே ஆலென்றேறி
காரப்பாசுழி மதியில் சவ்வெனவேசென்று
  கபாலத்தை சுத்திமேநாசிகாணே (அ௬௪)



காணுமிடை பின்கலையில் மைந்தாகேளு
  கைவிரல்நா மூன்றுபிர மாணம்வந்து
பேணுவிரல் பிரமாணம்நால் சென்றேகும்
  பிலமான எண்விரல் தானுள்ளேநின்று
தானுமென நின்றிடத்திற் றுனேநிற்கும்
  சங்கையுள்ள பிராணனிலே தன்னைக்கண்டு
வானுலகி விரவுபக லறுபதுக்கும்
  மகத்தான சுவாசமதின் வகையைக்கேளே. (அ௬௫)

சுவாசநிலை.

கேளப்பா மூலமதில் சுவாசந்தானும்
  கிருபையுடன் தானிருக்கும் அறுநூறப்பா
வாளப்பா பிரிதிவியில் ஆயிரமாம்பாரு
  வகையான அப்புவினில் இப்படியேநிற்கும்
ஆளப்பா அக்கினியில் அப்படியேநிற்கும்
  அரகாரமயேஸ் வரத்தில்சுவாச மாயிரமாம்
காலப்பாசி வனிடமே சுவாசமாயிரமாம்
  கருணைவளர் நாதாந்தந் தன்னில்காணே. (அ௬௬)
காணவேநா தாந்த தெசஞ்ஞமூர்த்தி
  கனிவான சுவாசமாயிர மாய்நிற்கும்
பேணவே கூட்டியொரு ஆரையைக்கேளு
  பெருகின்று மூவேழு மறுநூறுச்சு
தோணவே மூவேழுமறு நூறுதன்னில்
  சுழன்று ஏழாயிரமு மிருநூர்பொச்சு
ஊணுபதி நாலாயிரத்து நானூறுசுவாசம்
  உள்ளுறவாய் நின்றதடா வுகந்துபாரே. (அ௬௭)

சுவாசம்நிற்க.

உகந்து நின்றசுவாசவெளி பாழ்போகாமல்
  உத்தமனே தானிறுத்த வகையைக்கேளு
அகந்தெளிந்து அகமறிந்து பிராணபந்தான்
  ஆதிதொடுத் தந்தவரையைந்தும் பார்த்து
ஜெகந்தெளிந்து மூக்குநுனி புருவமத்தி
  திருவான சுழியினிலே மணிநாவுண்ணி
முகந்தெளிந்து பிரம்மரந்திரத்தில் சென்று
  முத்திரையில் சந்தமுடன் பத்திநில்லே, (அ௬௮)

நில்லென்று நிலையறிந்து சுழினைமேவி
நிரஞ்சன மாய்சர்க்குருவை தியானம்பண்ணி
உள்ளென்ற வீடறிந்து மவுனம்பூட்டி
ஓங்கார விசையதனை லுன்னியேறி
செல்லென்று பிரமரந்திரத்தில் புக்கி
சிவாய வசியென்று தாரணையேசெப்ப
கல்லென்ற கோட்டைக்கு வசமாய்ப்போகும்
காத்திருந்து ஓமெனவே கருதிடுதே. (௮௮௯)

மூலத்தில் சாந்தி.

ஊதலிலே துன்ப மென்ற வினைகள்நீக்கும்
ஊதாகண்ட நஞ்சதுவும் உட்கொள்ளாது
போதையிலே மூலத்தில் காந்தியுண்டாம்
பொருந்திநின்ற காந்தியிலே கடுப்புகண்டால்
ஆதாரவாய் தற்முறை சேருவாக்கி
அதற்கு நிகர்யேரண்டத் தைலம்விட்டு
சாதகமாய் நடுவிரலில் தோய்த்துக்கொண்டு
தன்மையுடன் மூலமதி சுழற்றிபாட்டே. (௮௯௰)

ஆட்டையிலே தூர்மலங்கள் விஷநீரெல்லாம்
அப்பனே கீழ்நோக்கி யகன்றுபோகும்
நாட்டையிலே பூரணத்தை நாடிச்செல்லு
நடுக்கமுடன் மயக்கங் கொண்டாலமுரிகொள்ளு
மூட்டையிலே பசிதாகம் கண்டால்மைந்தா
முறையோடே பாலுடனே யமுதுகொள்ளு
நாட்டிகமாய் முன்போலே யமுரிகொள்ளு
தனியிளகு பொடியமுரி தன்னிற்கொள்ளே. (௮௯௧)

கொள்ளையிலே கபநீர்க ளகன்றுபோகும்
கொடிதான சூட்டுடனே மயக்கங்கண்டால்
அல்லவே சொல்லுகிறேன் மைந்தாகேளு
அப்போதே மூகண்டக் கொழுங்கொள்ளு
சொல்லலே பந்திசந்தி யாறுவேளை
தீர்க்கமுடன் கொண்டிடவே மேகம்போகும்
சொல்லவொண்ணா சூட்டுடனே மேகந்தீர்ந்தால்
சுருதியுள்ள வாசியது கலக்கும்பாரே (௮௯௨)



பாரப்பா சூட்டுடனே கபங்கள்தீர்ந்தால்
பதிவான வாசியது சுழினைக்கேகும்
தேரப்பா வமுர்தசா மொழுகும்பாரு
சிக்குவங்கு நன்மையினால் தீபங்காணும்
காரப்பா தீபமதை பேதக்காலே
கருணை வளர்போதமென்ற மவுநத்தாயை
நேரப்பா நிலையறிந்து மவுனம்பெற்று
நேர்மையுடன் சதாநந்தி தன்னைக்காணே. (௮௯௩)

காணவே கேசரத்தின் மேலேநின்று
கதித்தெழுந்த சூட்டுடனே கபாலநீர்கள்
தோணவே யிந்நீர்கள் ளைத்திருக்கும்
சுத்த முடனிறை யறிந்துவழிதள்ளி
பூணவே பூரணமாய் மவுனம்பூண்டு
புத்தியுடன் கண்டறிந்து அகண்டம்பாரே. (௮௯௪)

பாரடா கண்டமென்றால் கழுத்தின்மேலே
பத்திநின்ற நீரதனால் வருஷமாச்சு
நேரடா இந்நீர்தான் நாள்கள்தோறும்
நின்றுகொண்டு கபத்தைமெல்ல அகலப்பண்ணும்
காரடா கபமதுதான் நின்றுகொண்டு
கனமான நெஞ்சினுள்ளே கக்கலாகும்
சாரடா சுவாசமதை தரிக்கொட்டாது
தவறான மூக்குநுனி சுழியைப்பாரே. (௮௯௫)

பாரப்பா சுழினைநிற வாசலுக்குள்ளே
பதிவான கதவிருதாள் பூட்டுமேலே
நேரப்பா அப்பூட்டுக்கடுக்க மைந்தா
நெருக்கு நிட்டிவாசலுண் டதற்குக்கீழே
காரப்பா சுழினைநிட்டி வாசற்குள்ளே
கதித்தெழுந்த வாசியடா சுவாசத்தந்தம்
மேரப்பா கொண்டுநின்ற சுவாசதந்தம்
விசையுடனே பரிபட்டப் பரிரண்டாச்சே. (௮௯௬)

ஆச்சப்பா சூர்யகலை பனிரண்டாச்சு
அக்கினியி லெண்கலைதான் ஜீவாத்மாவாம்
மூச்சப்பா நாலுகலை வெளியாய்நின்று
முத்தி பரமாத்மாவாய் முடிந்ததப்பா
நீச்சப்பா நிலைபதிந்து மவுனங்கொண்டு
நிலைபதிந்து வுள்வெளியு மொன்றாய்க்கண்டால்
பேச்சப்பா அவமிருந்து வெங்கேபோச்சு
பூரணத்தில் தானொடுங்கி சாக்ஷியாச்சே. (௮௬௭)

சாக்ஷியென்ற சாக்ஷியெல்லாம் வாசியாச்சு
கருணைவளர் சிவயோகம் வாசியாச்சு
பேச்சிறந்த மவுனமது வாசியாச்சு
பெருகிநின்ற மவுனரசம் வாசியாச்சு
சாக்ஷியில்லாவாதமது வாசியாச்சு
சகல கலைபோதமது வாசியாச்சு
மூச்சதிந்து நின்றவிடம் வாசியாச்சு
மூதண்ட அண்டவெளி மூலம்பாரே. (௮௬௮)

நாதவிந்து.

பாரப்பா மூலமுதல் ஆறுதாரம்
பதிவான சுழினையடா மேலாதாரம்
காரப்பா ஆதார மூலத்துக்கு
கருணைவளர் போதமடா வமுர்தவிந்து
மேரப்பா மேருகிரி கிங்கேரடாக்க
மெஞ்ஞான மானதொரு நாதஞ்சேர்க்க
ஆரப்பா அறிவார்கள் ரெண்டுமொன்றாய்
அடங்கியது பூரணமாய் கெங்கையாச்சே. (௮௬௯)

ஆச்சப்பா கெங்கையென்று லார்தான்காண்பார்
அருளான மதிபமுர்த கெங்கையாச்சு
நீச்சப்பா நிலையாத கெங்கைதன்னை
நிலைபதிந்து நீந்தினபேர் கோடிக்கொன்று
மூச்சப்பா முன்னிலையாம் மவுனம்பூட்டி
முனையான சுழினைவழிக் குள்ளேசென்றால்
வாச்சப்பா வெள்ளதிரு வாசிகொண்டு
மார்க்கமுடன் தானிருந்தி வருந்திகில்லை (௮௭௰)



வருந்திநின்ற வமுர்தகலை யுட்கொண்டேதான்
வாங்கடா மதிபமுர்த பானந்தானும்
இருந்தியதோர் திரிசுழியை முனைமையத்தில்
தெளிந்துவரு மமிர்தரசத்தேனைக் கொண்டால்
இருந்துயுக முடிவுவரை காணலாகும்
சாரூ வரைகடக்க கெவுனமுண்டாம்
அருந்தவசு பெற்றவர்க்கு இந்தயோகம்
ஆதிபராபர னருளா லறிகுவாரே. (௮௭௧)

அறிவான பூரணமே யமிர்தயோகம்
ஆதிசிவ போதமென்ற வமிர்தம்வாங்கி
குறிபான சரக்குவகை பாஷாணங்கள்
குறிகிநின்ற வுபரசங்கள் காரசாரம்
சரியாகச் சொன்னவகைச் சரக்கெல்லாந்தான்
சுன்னத்திலே கட்டுமடா மனதைக்காரு
துரியாதீதந் தனிலே யிருந்துகொண்டு
சுத்தமுள்ள சக்கிரத்தின் கோட்டைகாரே. (௮௭௨)

காரப்பா சக்கிரத்தின் நடுமையத்தில்
சாகரமாங் கோட்டை நடுவாசற்குள்ளே
சேரப்பா மனம்நிறுத்தி வாசிகொண்டு
சிவசிவா நடனசபைக் குள்ளேசென்று
பாரப்பா பஞ்சசபை யயர்ந்தானைப்
பக்குவமாய் கண்டுநிதங் கொண்டாயானால்
ஆரப்பா வுனக்குநிக ராருமில்லை
ஆதிசிவ யோகியென்ற வறிவாம்பாரே. (௮௭௩)

பாரப்பா மவுனரச வமிர்தம்வாங்கி
பத்தியுடன் பிங்கானில் பதம்பண்ணி
கோப்பா சாரமுடன் காரங்கூட்டி
நிசமான வங்கபற்ப மதாயேசேர்த்து
நீரப்பா தானடங்கக் கல்வத்திட்டு
வேதாந்த வமிர்தரசம் விட்டுஆட்டி
தேரப்பா மெழுகதுபோல் நன்றாயரட்டி
தீர்க்கமுடன் தானுருட்டி ரவியில்வையே. (௮௭௪)

சாரக்கட்டு.

வையப்பா ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால்
மார்க்கமுடன் மண்ணிலே வலுவாய்ச்செய்து
மெய்யப்பா காட்டெருவிற் புடமேசெய்ய
வேகமுள்ள சாரமது கட்டுமப்பா
பொய்யப்பா போகாது சாரக்கட்டு
புத்தியுள்ள கண்மணியேநன்றாய்ப்பாரு
செய்யப்பா கையாகத்தாலே பார்த்தால்
தீர்க்கமுள்ள வீரமதின் கட்டுகேளே. (அளரு

வீரக்கட்டு.

கட்டான வீரமதின் கட்டைக்கேளு
கருவான வீரமுடன் துரிசுசேர்த்து
மட்டாக வங்கபர்ப்பல் காலேகூட்டி
மார்க்கமுடன் கல்வமதில் வைத்துமைந்தா
மிட்டான மதியமுர்தம் தன்னாலரைப்பு
மார்க்கமுடன் வழித்துருட்டி தகளியில்போடு
இட்டமுடன் காட்டெருவில் புடத்தைப்போட்டால்
சிவாசிவா வீரமது கட்டுங்காணே. (அளசு

நாகக்கட்டு.

காணப்பா சாரமுடன் வீரம்ரெண்டு
கைமுறையா யமுர்தாசத்தாலேகூட்டி
பூணப்பா பரணிதனில் பதமாய்ப்பண்ணி
புத்தியுட னின்னமொரு கருவைக்கேளு
பேணப்பா நாகமது குகையிலிட்டு
பெருமையுடன் தானுருகும் போதிலேதான்
தோணப்பா சாரமுடன் வீரம்ரெண்டும்
சுத்தமுடன் ஐம்பத்து ஒன்றுசேரே. (அளஎ)

சேர்த்து நன்றாய்க்காசமதை யுருக்கிச்சாய்க்க
சிறடங்கிக் கட்டியது வெள்ளிபோலாம்
காத்துநன்றாய் மூன்றுதரமுருக்கும்போது
கனகமென்ற தங்கமதற் கிடையேசேர்த்து
பார்க்கிறபோ தானெடுத்துப் பார்க்கையாலே
பதிவான நாகமடா குருவாய்ப்போச்சு
ஆத்துமத்துக் குயிரான குருவைப்போற்றி
அருள்பெருகும் நாககுருவேதை கேளே. (அளஅ)



நாககுருவேதை.

கேளப்பா செம்புவெள்ளி ஆறுக்காறு
கிருபையுள்ள நாகுரு வொன்றுகூட்டி
காலப்ப வலுவறிந்து வுருக்கிப்பாரு
கனகமென்ற தங்கமடா மங்காத்தங்கம்
ஆளப்பா மங்காதத் தங்கத்தானை
அனுதினமும் உன்மனதாய்ப் பூசைசெய்ய
தாளப்பா நிரந்தமுர்தந் தானேயீய்வாள்
தன்மனதே சாஸ்வதமா யிருந்துவாழே. (அளக)

யிருந்துவாழ்கமவுனம்.

யிருந்துமிக வாழ்வதற்கு மைந்தாகேளு
யின்பமென்ற மவுனமதை யார்தான்காண்பார்
வருந்திநின்ற அண்ணாக்கையுண்ணாக்குள்ளே
வாழ்ந்திருக்கத் தானிருந்து வாசியூது
அருந்தவமாய் நின்றிரு வாசியூத
அருள்பெருகி பூரணமாய் அண்டத்தேறும்
பொருந்தி அண்டத்தமதிலே யேறும்போது
பூரணமும் காரணமும் பொருந்தும்பாரே. (அஅ௰)

பாரப்பா மனதறிவால் பொருந்தும்போது
பதிவான கேசரியில் மனதுகூர்ந்து
நேரப்பா நின்றவன்றும் அமிர்தமீவாள்
நிசமான றவிமதியும் வசமாய்நிற்கும்
தேறப்பா தேறமன தறிவால்நின்று
சிங்குவக்கு தானறிந்து நடுவிலேநில்
சாரப்பா சராசரமே தான்தானாக
தன்மையுடன் பூரணமாய் தன்னைப்பாரே. (அஅக)

தன்னைத்தான் தானறிந்து விண்ணைநோக்கி
தமரான அண்டவெளிக் குள்ளேசென்று
உன்னைத்தா னறிந்துசிவ ஓமென்றாணி
உருதியுடன் மனமிருத்தி யேறினக்கால்
விண்ணைத்தா னறிந்து வலம்சுற்றுதற்கு
வேகமுடன் கெவுனமதில் மேவலாகும்
தன்னைத்தா னறிந்துமனக் கண்ணைக்கொண்டு
கயிலாச முடிவனையும் காணலாமே, (அஅஉ

### நாகரசவங்க செந்தூரம்

காணவே யின்னமொரு சூக்ஷங்கேளு
  கருவான நாகரச வங்கங்கூட்டி
பேணவே யிறக்குநிகர் கெந்திசேர்த்து
  பிலமான அமுர்தரச விந்தினாலே
பூணவே கல்வமதில் நன்றாயாட்டி
  புத்தியுடன் வழித்துருட்டி ரவியில்போட்டு
தோணவே ரவிபனலில் காய்ந்ததானால்
  சுத்தமுடன் சருகெருவில் புடத்தைப்போடே. (௮௮௩)

புடம்போடும் வகையதுதான் சொல்லக்கேளு
  போதமுடன் சருகெருவில் பொடிமேல்வைத்து
திடமாக மேலுமந்த சருகைப்போட்டு
  தீர்க்கமுடன் இன்னமொரு கருவைக்கேளு
அடவாக அதின்மேலும் யெருவடிக்கி
  அற்புதமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
குடம்போன்ற மாதுதிரு மகிமையாலே
  குவித்தமலர் செந்தூரம் ஆகும்பாரே. (௮௮௪)

பாரப்பா செந்தூர மதிககாந்தி
  பத்தியுடன் தானெடுத்து பதனம்பண்ணி
நேரப்பா நிலைபதிந்து குருவைப்போற்றி
  நித்தியமும் அந்திசந்தி கொண்டாயானால்
ஆரப்பா உனக்கீடு சொல்லப்போறேன்
  ஆனந்த மதியமுர்தம் அருவிப்பாயும்
காரப்பா அந்தமுர்தங் கொண்டுசேர்த்து
  கைமுறையாய் வாதமுறை கருவைப்பாரே. (௮௮௫)

கருவான நாகரச செந்தூரத்தை
  கருணையுடன் வெள்ளிச்செம்பில் கடாக்ஷித்தாக்கால்
குருவான தங்கமதை யென்னசொல்வேன்
  கோடிரவி காந்திபடர் கூறப்போமோ
திருவான செகசால சோதித்தாயை
  சிவசிவா மவுனமென்ற வாசிபூட்டி
தருவான அமுர்தமென்ற வாசல்சென்று
  தன்மயமும் சின்மயமு மொன்றுப்பாரே. (௮௮௬)



### தாம்பூரசுத்திக்கு அறுவகைச்சுன்னம்.

பாரப்பா பூரமென்ற தாம்பூரத்தில்
  பத்திநின்றபாசமது களறவேண்டி
காரப்பா கல்லுப்பு வெடியுப்புச்சினம்
  சருவான பூரமுடன் தாருசுகாரம்
நேரப்பா சரியிடையாய் கல்வத்திட்டு
  நீமகனே மவுனரசந் தன்னாலாட்டி
சாரப்பா ஆட்டியதை வட்டுபண்ணி
  சங்கையுடன் காயவைத்து புடத்தைப்போடே. (௮௮௭)

போட்டபுடம் ஆறவிட்டு யெடுத்துப்பாரு
  புண்ணியனே அநுசரக்கும் ஒன்றாய்க்கட்டி
நாட்டமுடன் நீறியது சுன்னமாகும்
  நல்லபிள்ளை யோகமடா சுன்னத்தாட்டு
தேட்டமுடன் சுன்னமதை பதனம்பண்ணி
  தீர்க்கமுடன் தாம்பூரத் தகடுசெய்து
வாட்டமில்லா சுன்னமதை அமுர்தந்தன்னால்
  வணக்கமுடன் தானரைத்துத் தகட்டில்பூசே. (௮௮௮)

பூசியே காயவைத்து மைந்தாகேளு
  புத்தியுடன் சருகெருவின் சாம்பல்தன்னால்
நேசமுடன் கீழ்மேலும் நன்றாயிட்டு
  நேமமுடன் தானிருந்து புடத்தைப்போடு
வாசமுடன் வாசிதனை சுழினைக்கேத்தி
  மைந்தனே புடமாறி யெடுத்துப்பாரு
ஆசுவென நின்றதாம்பூரந் தானும்
  அங்கமுடன் உளறலற்று தங்கமாச்சே. (௮௮௯)

### தாம்பூரச்சுத்தி.

தங்கமென்ற செம்புதனில் தகைசேர்க்க
  தங்கமய தென்ன சொல்வேன் மங்காத்தங்கம்
அங்கமுள்ள வாதமுறைக் குருதியான
  அருமையுள்ள செம்புசுத்தி அதிகவேதை
சங்கமுடனின்னமொரு சுத்திகேளு
  தாம்பூரம் குகையில்வைத்து உருகும்போது
பங்கமில்லாக் கருநாகம் ரசிதமொன்றாய்
  பாச்சியதை தானெடுத்து ஓச்சுவாயே. (௮௯௰)

ஊதடா கரடறவே ஓட்டிஊதி
உத்தமனே தானெடுத்து உருக்கிப்பாரு
சூதடாயிருந்த முறை கருவாய்பாரு
சுத்தமென்ற சுத்திபடா மெத்தநன்று
வாதடா செய்துவரும் வாசிதன்னை
வகையுடனே சுத்தியடா வரிசைகேளு
கோதறவே சுத்திமுறை சொன்னேனால்
குருபுத்திர னுதமென்று குணமாய்ப்போச்சே. (௮௧௧)

குடவன்சுத்தி.

குணமாக யின்னமொரு மார்க்கங்கேளு
குடவனென்ற பித்தளையை குணமாய்த்தட்டி
கனமான சாரமுடன் வெடியுந்தினம்
கண்டருடன் காரமுடன் பூரஞ்சேர்த்து
மனமான சத்தியரை வாசிகூட்டி
மார்க்கமுடன் மதியமுர்தந் தன்னலாட்டி
தனமானகுட வனிலே பிசிறிமைந்தா
தன்மையுடன் ஓட்டில்வைத்துப் புடத்தைப்போடே. ()

போட்டபுடம் ஆறவிட்டு யெடுத்துப்பாரு
புத்தியுடன் மூன்றுதிரம் புடமேசெய்து
நாட்டமுடன் தானெடுத்து பார்த்தாயானால்
ஞுத்தமுள்ள குடவனடா நன்மையாகும்
தேட்டமென்ற குடவன்செம்பை யெடுத்துமைந்தா
செம்மையுடன் வெள்ளிதனில் ஒன்றுக்கொன்று
ஆட்டமுடன் தான்கொடுத்து உருக்கிப்பார்த்தால்
ஆறுவப தானசிறு மாற்றுதானே. (௮௧௩)

லிங்கக்கட்டு.

தானான லிங்கமடா சாதிலிங்கம்
தன்மையுடன் கட்டுமுறை திட்டங்கேளு
வானான காசி யுடகுப்பி வாங்கி
மார்க்கமுடன் கல்வமதில் பொடித்துக்கொண்டு
கோனான வெடியுடனே சீனிக்காரம்
குவிந்த அண்டத்தோடுடனே காரங்கூட்டி
ஊனான மதியமுர்தந் தன்னலாட்டி
உண்மையுடன் லிங்கமதில் கவசஞ்செய்யே. (௮௧௪)



செய்யடா கவசமது வலுவாய்ச்செய்து
திர்க்கமுடன் மண்சீலே திறமாய்ச்சுற்றி
வையடா ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தால்
மார்க்கமுடன் வுமிப்புடத்தில் வலுத்துப்போகும்
கையடா தவறாமல் மெய்யாய்பாரு
கனகமென்ற பாக்கியங்கள் கைமேலாகும்
பொய்யடா போகாது தன்னைப்பாரு (௮௧௫)
பூரணமாய் மவுனமது பொருந்திவில்லே.

பொருந்தி மனம்நின்று சிவயோகஞ்செய்ய
பூரணமா யின்னமொரு கட்டுச்சொல்வேன்
திருந்தியதோர் அயக்காந்தம் கல்வத்திட்டு
திர்க்கமுடன் பழச்சாற்றால் நன்றாயாட்டி
வருந்திமிக ஆட்டயிலே மைந்தாகேளு
மால்தேவி மனோசிலையும் கெந்திகூட்டி
அருந்தவமாய் அமுர்தரச விந்தாலாட்டி (௮௧௬)
அடக்கமுடன் லிங்கமதற் கப்பிபூட்டே.

பூட்டிமிக ரவிதனிலே காய்ந்தபின்பு
புத்தியுடன் மண்சீலே பொருந்தச்செய்து
நாட்டமுடன் கீழ்மேலும் வுமியைக்கொட்டி
நாதாந்த சற்குருவை தியானம்பண்ணி
தாஷ்டிகமாய் புடம்போட்டு யெடுத்துப்பார்த்தால்
தன்மையுள்ள லிங்கமது கட்டிப்போகும்
தேட்டமுடன் கட்டினதோர் லிங்கந்தன்னை (௮௧௭)
திருவான தங்கமதில் சேர்த்துப்பாரே.

லிங்கவேதை.

பாரப்பா தங்கமுடன் லிங்கஞ்சேர்த்து
புத்தியுடன் தானுருக்க மணிபோலாகும்
நேரப்பா லிங்கதங்க மணியைவாங்கி
நிச்சயமாய் வெள்ளிதனில் பத்துக்கொன்று
சாரப்பாதான் கொடுத்து உருக்கிப்பாரு
தன்மையுடன் வெள்ளியது தங்கமாகும்
ஆரப்பா அறிவார்கள் லிங்கவேதை (௮௧௮)
அடங்காத வேதையடா ஆதியாமே.

ஆதியென்ற பிர்மதலம் மணிநூலாச்சு
அண்ணாக்கை யுண்ணாக்குள் அடக்கிமைந்தா
சோதியென்ற சுழினையிலே துலங்கப்பண்ணி
துருவமென்ற தமரதிலே சொக்கிநின்று
நீதியுடன் அண்டவெளி தன்னைப்பார்த்து
நிறைந்தபரி பூரணமாய் நின்றாயானால்
சாதியென்ற சமரசமும் மொன்றாய்ப்போகும்
தனித்திருந்து மவுனமதில் சார்ந்துநில்லே. (௮௯௯)

நில்லடா நிலையறிந்து வாசிகொண்டு
நேசனே உன்னி விளையாடும்போது
உள்ளடா சுழினையிலே மனதைவைத்து
உத்தமனே ஓங்காரக் கம்பம்நாட்டி
சொல்லடா சிவயவசி யென்றுமைந்தா
சுகமாகப் பிராணாயஞ் செய்தாயாகில்
அல்லடா சொல்லுகிறேன் ஒளிதான்காணும்
ஆதியொளி தன்னையறிந்து அண்டம்பாரே. (௯௱)

அண்டபிண்டமறிய.

பாரப்பா அண்டபிண்ட மார்தான்காண்பார்
பதியறிந்து காண்பதற்கு வகையைக்கேளு
சேரப்பா பிண்டமென்றால் அண்ணாக்காச்சு
நிசமான அண்டமென்றால் சுழினையாச்சு
காரப்பா அண்ணாக்கை சுழினைக்குள்ளே
கைமுறையா யுண்ணிநடு மனையில்சென்று
மோப்பா சுத்திவலம் வந்தாயாகில்
மெஞ்ஞான மானசிவ சோதிதானே. (௯௱௧)

அயச்செம்புவேதை.

சோதியென்ற ஆதியடா தங்கத்தாயை
சத்தமுடன் கண்டுமனம் முத்தியாக
நீதியென்ற அயமுடனே வன்னிகூட்டி
அந்தயிடை மதிசேர்த்து உருக்கும்போது
நீதியுடன் அரிதாரக் கட்டைமைந்தா
நிசமாக அந்திடைக்கிச் சமனாய்ச்சேர்த்து
சாதியென்ற தங்கமயிராலுங் கொண்டு
சங்கையுடன் தான்கொடுத்துஉருக்கிப்பாரே. (௯௱௨)



பாரடா மனதாக உருக்கிப்பார்த்தால்
பருமையுள்ள தங்கமது களங்கமாச்சு
காரடா களங்கமில்லா களங்குதன்னை
கருணையுடன் செம்புவெள்ளி பத்துக்கொன்று
சேரடா தெளிவறிந்து சேர்க்கும்போது
திருவான லட்சுமிதன் விடமேறிப்பாள்
ஆரடா வுனக்கீடு ஆருமில்லை
அருமையுள்ள மவுனரச ஆண்மைதானே. (௯௱௩)

தானேதான் நின்றவிளை யாடுதற்கு
தன்மையுடன் இன்னமொரு சூக்ஷங்கேளு
பூனேநீ அயமுடனே வன்னிகூட்டி
புத்தியுடன் கல்வமதில் பழச்சார்விட்டு
வீணேதான் திரியாமல் நன்றாயாட்டி
விபரமுட னாட்டையிலே வீரலிங்கம்
மானேகேள் தாரமுடன் காரங்கூட்டி
மடியகன்றாய்த் தானரைத்து வட்டுப்பண்ணே. (௯௱௪)

பண்ணியதோர் வட்டுதனை ரவியில்போட்டு
பாலகனே தானெடுத்து ஓட்டமூக்கி
உண்ணியது போகாமல் கசைஞ்செய்து
உத்தமனே நிதானமதாய்ப் புடத்தைப்போட்டு
புண்ணியனே அறுசரக்கும் ஒன்றாய்க்கட்டி
பூரணமாய் நிற்குமடா புதுமையாக
தன்னிமையாய்க் கட்டினதை தங்கத்தன்னில்
தாக்கஅந்த தங்கமது குருவாங்காணே. (௯௱௫)

குருவான தங்கமதை யெடுத்துமைந்தா
குணமாக மதிதனிலே பத்துக்கொன்று
சருவாகத் தான்குடுத்து உருக்கிப்பாரு
சனகமென்ற தங்கமதை யென்னசொல்வேன்
திருவான லட்சுமிதன் பாதங்கண்டால்
சிவயோக மானசிவஞ் சித்தியாகும்
தருவான கற்பகமுஞ் சித்தியாகும்
தன்மையுடன் மவுனமதில் சார்ந்துநில்லே. (௯௱௬)

சார்ந்து அந்தநிலையறிந்து மவுனங்கொண்டு
  சச்சிதானந்த மென்ற சுழினையீதில்
கூர்ந்துமனக் குறியறிந்து வாசிபூட்டி
  குருவான பிர்மதல மறிந்துகொண்டு
தேர்ந்து அந்தலமறிந்து வாசயானால்
  சிவசிவா கயிலாச் தேகமாகும்
னேர்ந்து கொண்டுநிலையறிந்து வாசிபூட்டி
  நின்றதினால் சிவயோகம் நிசமதாமே. (௮௰௭)

நிசமான சுழினையிலே வாசிபூட்டி
  நீமகனே அண்டபதம் கொண்டாயானால்
திசமான நிலைகூடி மவுனநிலை கண்டு
  சித்திமுத்தி யாகுமடா திருவைபோக்கு
வசமான பூரணமாம் தானேயாவாய்
  வாசிசிவ யோகியென்ற மவுனியாவாய்
கசகாமல் காலறிந்து வாசிகொண்டு
  கண்மூக்கு மத்தியென்ற கருத்தில்லாமே. (௮௰௮)

ஒன்றான சிவநிலைகூ தன்னை மைந்தா
  உரிமையுடன் மவுனசாதக மாய்ச்சொல்வேன்
கண்ணான நிலைதெரிய நினைவுதானும்
  கருணைவளர் அகாரமடா விந்துவிந்து
முன்னான விந்ததுவும் தண்ணீர்தண்ணீர்
  முனையறிந்து அண்ணார் ஒன்றில்வாசி
வின்னான வால்பிளகு பொடிதான்செய்து
  விபரமுடன் பணவிடைதான் வீரில்போடே. (௮௰௯)
போட்டவுடன் தான்விரி விமைந்தா மைந்தா
  புத்தியுடன் சிவசிவசி யென்றுநீயும்
நாட்டமுடன் கொண்டுவிடு உதயகாலம்
  நன்மையுடன் சதாகாலம் சாதித்தாக்கால்
வாட்டமென்ற வல்பிணியும் விஷரோகங்கள்
  மார்க்கமுடன் தான்விலகி மகிழ்ச்சியாகும்
ஆட்டமென்ற சக்கரமும் சாராதையர்
  ஆதியென்ற வாசியதை அழுத்தியுதே. (௯௰)



அழுத்தியே முனையறிந்து அடக்கஞ்சென்று
  ஆதியென்ற அகாரமதை அறிந்துக்கொண்டு
முழித்தாயிலே தனையழுத்தி உகாரசக்தி
  முறக்கமுள்ள சத்தியை நீ லக்கமாக
வழுத்தியதோர் அஞ்செழுத்தால் மவுனங்கொண்டு
  வரிசையுடன் உங்கேலே வாசிபூட்டி
செழித்த புத்தியரிவாலே கபாடவாசல்
  திறப்பதற்கு அலாபுகுந்து திருவைநோக்கே. (௯௰௧)

நோக்கிமன தரிவாலே மவுனங்கொண்டு
  நுண்மையுடன் சத்திசிவ பூசைசெய்தால்
தாக்கிமனம் நோக்குமுன்னே அண்டத்தேகும்
  சந்திரனும் சூரியனும் தானேதானாய்
வாக்குமன மொன்றுபதி சுழிமையத்தில்
  மகிழ்ந்திருக்க வாசிசாம் ஒன்றுயரின்று
நாக்குமுனை புண்ணாக்கை அண்ணாக்குள்ளே
  ஞதாந்த சுன்னைவழி கண்ணைநோக்கே. (௯௰௨)

கண்ணான மவுனமதின் நிலைகுதன்னை
  கருணையுடன் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
முன்னான மூலமதில் உகாரமோட்டு
  முதலான கண்டமதில் அகாரமோட்டு
விண்ணான புருவமதில் மகாரம்போட்டு
  வேகமுடன் ஞவிஞ்ஞனி சுழினைக்குள்ளே
ஒண்ணான சுழிமுனையில் சோதிதானும்
  ஒருகோடி சூரியன்போலுதயமாமே. (௯௰௩)

உதயமென்ற சுழினையிலே மைந்தாநீயும்
  உன்னிமிக ஞவிஞ்ஞனி உள்ளேசென்றால்
மிதயமென்ற மிருதயத்தில் சோதிதானும்
  இன்பரச அமுர்தமது தானேவரும்
அதையறிந்து அர்தரசம் கொண்டால்மைந்தா
  ஆயிரமாம் வருஷமதா அனையதில்லம்
பதையாமல் மனமிருத்தி மவுனமுன்னு
  பாமகை வாசமென்ற தேகமாமே. (௯௰௪)

ஆமப்பா தேகமென்ற பஞ்சபூதம்
  அட்டாங்க ஒன்றுப்பின்மயிட்டம் ஆர்தான்காண்பார்
நாமப்பா சொல்லுகிறேன் மைந்தாகேளு
  நட்டமென்ற பூதமைந்தும் நாவென்றெண்ணி
தாமப்பா தன்னிலேயாம் தமருக்குள்ளே
  தன்னதிலே பூரணமாய்த்தானேசென்று
ஓமப்பா வென்றுமன தன்னிபாட
  வைத்திருவிப் பாய்ந்துமனம் மொடுங்குவகாணே. (கூஎ௯)

காணுக அந்தரங்கச் சுழினைவீடு
  கண்ணான மணிவீடு கமலவீடு
தோணுது தோணுகிற சோதிவீடு
  சோதியுமானசிவ கயிலாசவீடு
வாணுன தேவர்களும் ரிஷிகள்சித்தர்
  வரிசையுடன் தான்வணங்கி மகிழ்ந்தவீடு
கோணுன குருபீடமான வீட்டை
  குறிப்பறிந்து வணங்குதற்கு சொன்னேன்பாரே. (கூஅ௦)

பாரப்பா மனமேது நியானமேது
  பதிவான சரிதையொடு ஞானமேது
னேரப்பா கிறிமட்டவார் யைபக்தமேது
  விசமான மக்களொடு சுற்றமேது
காரப்பா உபதேச குருத்தானேது
  கருவேது கைபாக முனைதானேது
சாரப்பா உடலேது உயிர்தானேது
  தகமையில்லா பெருவெளியில் சாருந்தானே

தானென்ற ஓங்காரக் கம்பமாத்த
  சங்கையுடன் அகாரம் அங்கேயிருந்ததாச்சு
வானென்ற வழியியார்க் கொன்றுமில்லே
  மகத்தான பூரணத்தை மகிழ்ந்துகொள்ளு
ஊனென்ற உடலுயிரும் நாதவிந்து
  ஓங்கிநின்ற சுழினைபடா அண்டமேரு
கோவென்ற குருபீடமானமேல்
  குறிப்பறிந்து வெளிதனக்குள் குணமாய்நில்லே. (கூஅ௧)



குணமான மந்திரத்தைச் சொல்லக்கேளு
  குருவான அகாரமொடு உகாரத்தோடு
யினமான மகாரமொடு மூன்றுஞ்சேர்ந்தால்
  யிருக்குமடா சிவயோகம் யின்பமாக
கனமான உச்சிவெளி சுழினைமூலம்
  கண்ணரிந்து விண்ணதனைக் கருவாய்ப்பாரு
மனமான பஞ்சஅறை வாசல்கானை
  மவுனமுடன் ஓம்சிவயவசி யென்றானே. (கூஅஉ)

காணுவது சுழிமுனையில் வந்திசென்று
  உண்மையுடன் அண்டவெளிக் குள்ளேசென்று
சாணுவது ரேசபூரகமாய் நின்று
  கலைபரிந்து கும்பத்தில் கனிந்தபோதால்
தோணுவது யென்னென்று சொல்வேனப்பா
  தூண்டாத மணிவிளக்கின் சோதிதன்னை
பேறுவதாற் கயிலாச தேகமாச்சு
  பேரண்டத் துச்சிவெளி மகாரமாச்சே. (கூஅ௩)

ஆச்சப்பா கிரிகைவெளி கல்லக்கேளு
  அப்பனே சரிதையிலே அடங்கிநின்று
மூச்சப்பா ஆறுதலந் தன்னைக்கண்டு
  முனையறிந்து யிடையொடு பின்கலைபாய்ப்பாரு
பேச்சென்ற உடலுயிரை கன்றப்பேறு
  பேரண்டச் சுழிமுனையில் மனக்கண்ணூட்டு
நீச்சென்ற அக்கினி பஞ்சாக்ஷரத்தைக்கைக்கொண்டு
  நிலைநிறுத்தி பூரணமாய் நின்றுபாரே. (கூஅ௪)

பார்படா அண்டமெனுந் தொண்டைக்குள்ளே
  பத்தியுடன் அங்கென்று வாசிகொண்டு
னேரடா அந்தரங்கச் சுழினையேல
  நிலைபரிந்து தமர்வாசல் குள்ளேசென்றுன்
றூரடா அடிமுடியும் ஒன்றாய்க்காணும்
  சுத்தமாய் பிராணகலை துலங்கும்பாரு
பேறடா வாசிகொண்டு முனைமையத்தில்
  யிருக்கடா அமுர்தமது யிரங்குந்தானே. (கூஅ௫)

தானான பிரமத்தில் அண்டத்துச்சி
  தமரான அந்தரத்தில் தானேநின்று
வீணான சத்தாதி விஷயம்போக்கி
  மெஞ்ஞான பூரணமாய்த் தன்னைப்பார்த்தால்
ஊனான ஜீவாத்துமா பரமாத்துமாவில்
  உண்மையுடன் நின்றதாரணைதான் மைந்தா
கோனான குருவினுடைய தேசங்கண்டால்
  குவிந்து அக்குறியில் குணமாவாரே. (௯௨௩)

வாரான அசபை யென்றும் சிவாத்துமாவை
  வணக்கமுடன் பராபரத்தில் மகிழ்ந்துகூட
கூரான ஓங்கார மூலவட்டம்
  குண்டலியாம் பிரணவத்தின் குணுநிதந்தான்
னேரான சிகுருவங்கு ரந்திரவாய்ப்பவை
  நீக்காமல் யேகமதாய் நிறுத்திக்கொண்டு
பாரான அக்ஷரசாதன மூந்தன்னி
  பாமகயிலாச மென்றபதியில் நில்லே. (௯௨௪)

நில்லடா நிலையான அண்டத்தன்னே
  நின்றுவினை யாடுதற்கு நிசமாய்மைந்தா
சொல்லடா அந்தரக்கச் சுழினைநீதில்
  திருதுமணி வாசலுட நிரையைநீக்கி
வுள்ளடா தானிருந்து வாசிகொண்டு
  [illegible] அண்டமென்னி [illegible]
[illegible] சொல்லென்ற சர்ப்பமேறி
  சகலகலை போதமென்ற [illegible] (௯௨௫)

அவயோகி.

பாரப்பா பிரஞ்ஞைய யோகஞ்செப்ப
  பதிவான தசநிலைக்குள் ளேநின்று
னேரப்பா சமாதியிலே மனதுபூண்டு
  நின்றக்கால் காயசித்தி யோகமெய்தும்
வரப்பா விருக்கிரவன் பிரஞ்ஞையென்று
  உருவெசிப்பான் மணிபெடுத்து மூக்கைத்தொட்டு
பேறப்பா யிதிலேயோ ஒன்றுமில்லை
  பூமியிலே பிறந்தவர்கள் கோடிதானே. (௯௨௬)



கோடியடா உலகத்தில் பிறப்புஞ்செய்ய
  குறையாம லொருபோது பிச்சைக்கொண்டு
வாடியல்லோ உடம்பெல்லாம் வெளுத்துசோம்பி
  மகத்தான சற்குருவை காணவென்று
தேடியல்லோ மலைதோறுஞ் சென்றுபுக்கி
  தசநிலைகூட யறியாமல் செனித்தோர்கோடி
வாடியல்லோ குருவறிந்து தசநிலைகூடபெற்றால்
  நன்மையுட னிருந்து அஷ்டசித்தியாரே. (௯௨௭)

பாரப்பா தன்மயத்தை யறியாமல்தான்
  பத்தியுடன் அடையோகஞ் செய்வான்பாவி
சீறப்பா மூச்சடக்கி செவிவாய்மூடி
  வேகமுடன் பூரிக்கில் மோனிதன்னில்
சாரப்பா மூலமதில் சொருகிக்கொண்டு
  கலைவலித்து கதவடைத்து முகமுங்கோணி
நேரப்பா கண்தெரித்து மதிகலங்கும்
  நேர்மைகெட்ட அடயோகந் தன்றுதன்னே. (௯௨௮)

பரியங்கயோகம்.

தன்னடா பரியங்க யோகந்தானும்
  சாதகமாய் சலந்தனிலே தானேசென்று
மென்னடா தானிருந்து அபானத்தாலே
  விரும்பியே பூரித்து வேசிப்பான்பார்
உள்ளடா மூலமென்ற ஆகாரத்தில்
  ஓதுகின்ற தங்கியது குன்மமாகும்
[illegible] ஒன்றுமில்லை
  ஆதியென்ற மனு [illegible] பாரே. (௯௨௯)

மனுஞானயோகம்

பாரப்பா மனுஞானி யோகஞ்செப்ப
  பாழான தத்துவத்தை அடக்கிமைந்தா
னேரப்பா குருபதத்தில் நின்றுயானால்
  நிசமான லயயோக மென்னும்பேறு
சாரப்பா தத்துவ லயயோகத்தாலே
  சங்கையுடன் தானவனைத் தன்னைக்கண்டு
சாரப்பா சற்குருவின் கடாக்ஷத்தாலே
  கருணையுடன் மந்திராதி யோகந்தானே. (௯௩௰)

மந்திராதியோகம்.

சௌடா வங்கென்று மூலத்திற்பூரி
கெணிதமுடன் சிங்கென்று மேலேயேறி
ஆளடா மங்கென்று சுழினைக்கட்டி
அண்டவழி தனையறிந்து வாசியேத்து
ஞூளடா துருவனிலே கண்டுதேற
சுத்தமுடன் சிங்குவங்கு தன்னைக்காரு
மோடா தனையறிந்து காத்தாயானால்
விசையாதி மந்திரமாயோக மாச்சே. (௬௱௧)

ராஜாங்கயோகம்.

ஆச்சப்பா யிதுமேலே ராசாங்கயோகம்
ஆதியென்ற யோகமடா மவுனயோகம்
மூச்சப்பா தானிறைந்த மவுனயோகம்
முறையறிந்து சையோகம் முத்திபெற்றால்
நீச்சப்பா அண்டவெளி சாகரத்தில்
நின்றுநிலை யறிந்து பிராணபவழியேசென்று
பாச்சப்பா வாசிசரம் சுழினைக்கேறில்
பனிவரனவேகண்ட தெல்லாம் வெளியாய்ப்போச்சே. (௬௱௨)

வெளியான வெளிபரிய ஒளியைத்தாண்டி
வேதஒளி தன்னாலே வெளியைக்கண்டு
ஒளியான வாசிசரம் உசரயேத்த
ஓமென்ற பிரணவத்தா லுறுதிகொண்டு
வழிபாடு தனையறிந்து மணிநாவுன்னி
மகத்தான [illegible]
அறியாத பேரின்ப வீட்டில்சென்றால
அமுர்த ரசபோதமா னந்தமாமே. (௬௱௩)

ஆமப்பா ஆனந்த போதமான
அகாரமுட னுகாரம் மகாரம்கூட்டி
நாமப்பா வென்றமொழி தனையகத்தி
நடுவான சுழினையிலே நாட்டக்கண்டால்
சோமப்பால் கசிந்துவெகு பூரணமாய்காணும்
துலங்குதிரு வாசியென்ற குகையைக்காரு
காமப்பால் கசிந்தொழுகும் குகையைக்கார்க்க
கருணைவளர் சற்குருவை யடுத்தக்காரே. (௬௱௪)



அடுத்துமிகப் பொருளீய்ந்து தொண்டுபண்ணி
அனுசரித்து கேட்டாக்கால் அருளிச்செய்வார்
தொடுத்துமிகக் கேட்டிடனே சொல்லவில்லையென்று
சுகமரியாக் குறைகதுபோல் கெட்டோர்கோடி
கடுத்துமிக அலையாதே மோக்ஷம்வேண்டி
காத்திருந்து குருபதத்தில் கனிவாய்க்கேளு
தடுத்தடிமை கொண்டவரும் திசைதீக்ஷையைப்பார்
சதாயோக பூரணத்தில் தாக்கினீரே. (௬௱௫)

நீயென்றும் நானென்றும் பேதமில்லை
நிர்மலமாம் வெளிதனிலே நின்றபோதம்
தாயென்றும் சேயென்றும் பேதமில்லை
சராசரங்கள் ரெண்டுமொன்றாய் நிறைந்ததப்பா
காயென்றுங் கனியென்றும் பேதமில்லை
கருவான முக்கனியை கண்டபோது
சிவனென்றும் அமுர்தமென்றும் பேதமில்லை
தெளிந்தோர்க்கு வாசியென்ற குதிரைதானே. (௬௱௬)

குதிரையென்ற வாசியினால் தீக்ஷைவிடு
குறுகாமல் சுழிமுனையில் குறியாய்ப்போடு
குதிரையின்மே லேறியல்லோ சக்கரங்களெல்லாம்
[illegible] யறிந்து குணமாய்நின்று
குதிரையின்மே லேறியல்லோ ராஜவீதி
குருபதமாம் புருவமையத் தூடேபோகும்
குதிரையின்மே லேறியல்லோ அண்டபதஞ்சுத்தி
குதிரைமுனை அண்டமட்டும் கட்டிகட்டே. (௬௱௭)

கட்டினால் வாசியது மூச்சாடாது
கருவறிந்து குருசொல்ல கட்டவேணும்
வெட்டினால் பிராணயம் வாசியோகம்
இயங்காமல் ஊதினால் ஒன்றுமில்லை
முட்டினால் வாசியது கட்டாதய்யா
மூகண்ட குளிகைக்கு பலமொயில்லை
ஓட்டினாலவகென்ன அன்னத்தைவிட்டு
உத்தமனே தீக்ஷைவிட்டால் ஒக்கப்பாமே. (௬௱௮)

பாழான முப்பாழை அறியவேணும்
பரமபதத் தெல்லையிலே பதிவாய்நின்று
மேலான நிற்குணப்பாழ் கண்டுதேறி
மெஞ்ஞான கேசரியில் வாசிபூட்டி
காலான அகமுடிவு மொன்றாய்நின்று
கருணைவளர் ஓங்காரக் கம்பத்தேறி
நாலான சாகரமே போதமென்று
நோக்கு மனங்கொண்டு அந்தப்போக்கைக்காணே. (௧௬௯)

போக்கோடே பூரணத்தை நன்றாய்ப்பார்த்து
போதமென்ற பருவமையம் தசமாந்நிலைக்கு
வாக்கோடே யேறுதற்கு அமுர்தமுண்டால்
மகத்தான அமுர்தமடா வழலைப்பாம்பு
தாக்கோடே வழலைகடி பட்டதென்றால்
சகலசறக் கந்தனையும் சாந்தமாகும்
நாக்கோடே மேல்வாசற்குள்ளேசென்று
நலமான மதிஅமுர்தம் வழலைவாங்கே. (௧௭௦)

அமுர்தரசத்தால் தருசுன்னம்.

வாங்கியந்த வழலையிலே வீரஞ்சேர்த்து
மகத்தான சுக்குலமுங் கூட்டிட்டு
பாங்குபெற அமுரியுங் கூடச்சேர்த்து
பனையான போதம்விட்டு பரிவாய்நீயும்
பூரங்கமுடன் கற்பூரஞ் சீனம்சேர்த்து
சாத்தடா துரிசுதான் சுன்னமாகும்
வாங்கியே கெந்திரசம் பாஷாணந்தான்
என்னசொல்வேன் கட்டுமடா நிட்டந்தானே. (௧௭௧)

நிட்டமென்ற பிரமநிட்டை வாசந்தன்னில்
சிக்குவங்கு காலரிந்து அங்கென்றாதி
கெட்டிமனதாயிருந்து வட்டமேவி
கீழ்மேலாய் நின்றிலங்கும் வாசிதன்னை
யிட்டமுடன் சுழிமுனையடா தமருக்குள்ளே
யியங்குகின்ற வாசிசர மேறினக்கால்
வட்டமதில் மதியமுர்தம் நிட்டமாக
வாசிசரந் தன்னுடனே வடியுந்தானே. (௧௭௨)



அமுர்தரசவேதை.

வடிந்தொழுகும் அமுர்தரச வழலைதன்னில்
மகத்தான வேதைமுறை வழுத்தக்கேளு
கொடிந்தரசந் தன்னுடனே நாகஞ்செந்தி
சுத்தமுள்ள தங்கமுடன் கல்வத்திட்டு
வடிந்துவந்த வழலைதன்னால் அரைத்துமைந்தா
பரமகுரு தன்னருளால் புடத்தைப்போடு
மடிந்தபுடந் தனையெடுத்துப் பார்த்தாயானால்
மகத்தான யேமமென்ற குருவாய்பாரே. (௧௭௩)

பாரப்பா யேமமென்ற குருவைமைந்தா
பத்தியுடன் தானெடுத்து வைத்துக்கொண்டு
நேரப்பா வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
நேர்மையுடன் தான்கொடுத்து உருக்கிப்பாரு
சாரப்பா உருக்கிநின்ற சத்தைப்பார்த்தால்
தன்மையமாய் நின்றமாற்று சோதியாகும்
சாரப்பா கருணைவளர் சோதித்தாலைய
கண்மூக்கு மத்தியிலேகண்டு பாரே. (௧௭௪)

கண்டுகொண்டு யோகமதி லிருக்கவேணும்
கருணைவளர் பூரணத்தைக் காணவேணும்
நின்றுகொண்டு வாசியிலே நிலைக்கவேணும்
நேரறிந்து நிலைசெலுத்திக் கொள்ளவேணும்
பண்டுடைய வேதமொடு சாஸ்திரங்கள்
பலவான சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
அண்டகே சரமதிலே மனக்கண்சாத்தி
அருள்போகத் தன்மையைக் கொண்டறிவாய்நில்லே. (௧௭௫)

தருசுச்சுன்னம்ஜயநீர்.

நில்லென்ற நிலைதனிலே வாசிபூட்டி
நீமகனே அமுர்தரச வழலைவாங்கி
கல்லென்ற வீரமுடன் பூரஞ்சேர்த்து
நாடியான லவணமொடு காரச்சுன்னம்
கல்லென்ற கல்வமதி லாட்டிமைந்தா
கணக்காக நீறியென்று சாரஞ்சேர்த்து
கொல்லென்ற தருசுதனை கக்கிபூட்டி
கூர்மையுள்ள புடத்திலிட கெருசுன்னமாமே. (௧௭௬)

ஆமப்பா கல்வமதில் நூறுக்கொன்று
  ஆட்டிநின்ற நவச்சாரங் கூடச்சேர்த்து
ஆமப்பா சொல்லுகிறோம் பனியில்வைக்க
  ஓதாந்த மானதொரு செயநீராகும்
காமப்பாலான செயநீர்தன்னை
  காசியென்ற குப்பியிலே பதனம்பண்ணி
தாமப்பா தன்னிலையைத் தானேகண்டு
  சங்கையுள்ள வேதமுறை சாற்றக்கேளே. (கசஎ)

கேளடா அப்புமுடனே வெள்ளிச்செம்பு
  கிருபையுள்ள நாகமொடு தங்கமஞ்சும்
ஆளடா அஞ்சையுமே கணக்காய்ச்சேர்த்து
  அப்பனே அதற்குநிகர் ரசத்தைவார்த்து
வாளடா கல்வமதில் யிட்டுக்கொண்டு
  வழலையென்ற அமுர்தரசச் செயநீர்தன்னால்
காலடா தானதிந்து விசைகொண்டாட்டி
  கைமுறையாய்த் தானுருட்டி காயப்போடே. (கசஅ)

போடப்பா காய்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு
  புதுமையுடன் செம்புருக்கி அதினில்தாக்கில்
ஓட்டப்பா செம்பதுவுங் கட்டிப்போகும்
  நன்மையுள்ள செம்பெடுத்து மைந்தாகேளு
வீட்டப்பா பிழைப்பதற்கு வெள்ளிதன்னில்
  வேகமுள்ள செம்பதனை பத்துக்கொன்று
கூட்டப்பா குகைதனிலே யுருக்கிப்பாரு
  சுத்தமுள்ள வெள்ளியுந் தங்கமாமே. (கசகூ)

தங்கமயமானதொரு அங்கந்தன்னை
  தானரிந்து வாசியினால் அண்டமேவி
சங்கையுடன் தானிருந்து மனோவுன்னி
  தன்மயமும் சின்மயமுந்தானே கண்டு
அங்கமுடன் அனுக்கிரக வழியேசென்று
  ஆதியென்ற கேசரியை அன்பாய்ப்போற்றி
மங்களமாய் மனதொருமை யாகநின்றால்
  மகத்தான சிவயோகவழி சொல்வாமே. (கடுo)



குடவன்சத்தி.

வழியான கருவியொடு விபரங்கேளு
  மகத்தான வெடியுப்பு சீனிக்காரம்
வழியான நவச்சாரம் துருசுவீரம்
  பாலகனே ஓரிடையாய் வாங்கிக்கொண்டு
தெளியாமல் யிதுக்கு நிகர்கரிசலுப்பு
  நேர்மையுடன் கல்வமதில் நன்றாயாட்டி
புளியான குடவனிலே பூசிமைந்தா
  புடம்போட்டுத் தானெடுக்க செம்பாய்ப்போச்சே. (கடுக)

போச்சப்பா குடவனது செம்பாய்ப்போச்சு
  பூரணமாய் வெள்ளியது தங்கமாச்சு
காச்சப்பா கசடற்றதங்கத்தாயை
  கனியமன முருகவேதான் பூசித்தாக்கால்
மூச்சப்பா ஓடாது முனைமேல்நிற்கும்
  முனையான சுழிமுனையிற் குள்ளேசென்று
பாச்சப்பா வாசிசரம் அண்டத்துள்ளே
  பத்தியுடன் தன்மயமாய் பதிவாய்நில்லே. (கடுஉ)

பதிவான பதியதுதான் அண்டத்துச்சி
  பரமகைலாச மென்ற சொர்க்கவீடு
மதியான வீட்டிலே மனக்கண்சாத்தி
  மார்க்கமுடன் சுழினையிலே மனோவுன்னி
விதியான யெழுத்தறிந்து கமலத்தேகி
  வேதாந்த அமுர்தரசங் கொண்டால்மைந்தா
கெதியான மோக்ஷமடா சொல்லப்போமோ
  கேசரத்தில் பூரணமாய் கெதிகொண்டேறே. (கடுங)

யேறுவதற் கின்னமொரு சூக்ஷங்கேளு
  யேகாந்த மாகவேநீ யிருந்துகொண்டு
தேறுவது ஓங்கார செயல்தன்னாலே
  திருகுசுழி கபாடமதின் திரையைநீக்கி
மாறுவிதந்தனை யறிந்து வாசியேத்த
  மணிமந் திறந்தனிலே தேங்கேழ்க்கும்
சாருவது மணிநாத ஓசைநீக்கி
  தன்மயங் கொண்டண்ட மதில்சார்ந்துகொள்ளே. (கடுச)

சொன்னடா அண்டமதில் சார்ந்துகொண்டு
 கூர்மையுடன் தன்மயங் கொண்டிருந்தாயாகில்
உள்ளடா சோதி பிரகாசமாகி
 உண்மையென்ற ஆதிபந்தந்தான் தானாகி
சொல்லடா சொல்லிறந்த மவுனமாகி
 சகசிவ பிராணகலை சுத்தனாகி
அல்லடா தன்மயங் கொண்டிருந்தாயாகில்
 அரகரா சின்மயமா யாகுந்தானே. (௯௫)

தானென்ற குருவினுப தேசத்தாலே
 சார்ந்துநின்ற அவத்தையெல்லாம் தானேபோகும்
வானென்ற வடிவுசிவ ரூபமானால்
 மவுனநிறை யோகமதில் வாழ்க்கைபெய்தும்
ஈனென்ற பிரபஞ்சமாய் கைக்கைப்பா
 ஞானமென்ற அக்கினியாம் நன்றாய்க்காணும்
தேனென்ற வேதாந்த முடிவைப்பார்த்து
 தெளிவான யோகமதில் நிற்கப்பாரே. (௯௬)

பாரப்பா பிரமத்தில் யார்தான்காண்பார்
 பதமில்லை யாதினிலும் பதிவுமில்லை
காரப்பா எந்தவித மானாலுந்தான்
 காணரிதாகு சிவயோகம் கண்ணில்காணு
ஊரப்பாகால அபிமானந் தானேகி
 உண்மையென்ற காரணமாம் உற்பத்திக்கி
பேரப்பா நன்மைதன்மை ரெண்டில்தானும்
 பொருந்தா மனமில்லாத சாக்ஷிதானே. (௯௭)

தானென்ற சாக்ஷியடா குணாதீதமாகி
 சகலபொருள் தானாகி தானேதானாய்
வானென்ற ஆகாச முடிவுமாகி
 மகத்தான சோதிவிஜகச் சோதியாகி
கோனென்ற குருவாகி யெங்குந்தானாய்
 குவி தெழுந்த வாசிசிவ யோகந்தானாய்
தேனென்ற அமுர்தரச யோகந்தன்னை
 சிவாயகுரு தெளிவாகி சொன்னார்காணே. (௯௮)



சொன்னதினால் தெரியாது மைந்தாமைந்தா
 தொடுகுறி போலங்கேயே நுலங்கினுக்கால்
கண்ணெதிரே தோன்றுகின்ற காட்சிபோலே
 கருணைவளர் சாஸ்திரத்தின் கருக்கெல்லாம்
விண்ணல்லோ தங்கிநின்ற ஒளிபோல்காணும்
 விளங்கிசுழி தனையறிய வெளியுங்காணும்
எண்ணநிலேகண்ட ஒளிவெளியின்குக்ஷம்
 ஓமுடிந்த குக்ஷமடா சுழினையாமே. (௯௯)

சுழியான காத்துவெகு சுழிகாத்தய்யர்
 சுழித்தசுழி நடுவறிந்து யேறமாட்டார்
வழியானவனை யறிந்து யேறுதற்கு
 வங்குநிங்கு வாசமிடமார்க்கசங்கேதரு
தெளிவான ஓங்காரக் கம்பந்தன்னை
 சிவயுவசி சிவயவசி யென்றுநாட்டி
வழியான மனவழியால் தன்னைப்பார்த்து
 வீடான பேரின்ப வீட்டில்நில்லே. (௱)

நில்லென்ற வீடுபேரின்ப வீட்டில்
 நிமலனை போதநெறியாக நின்றால்
வில்லென்ற விசைபோலே வாசிநின்று
 விளங்குமடா நிருகுசுழி முழுமையத்தில்
சுன்னென்ற சுயம்படா சுகாசத்தங்கம்
 துலங்குதடா சுதிர்மதிபோல் துருவமீதில்
உன்னென்ற சுழினையிலே மவுனம்பூட்டி
 உடுருவ அக்ஷரத்தை உசரயேதரே (௱௧)

யேத்தடா வாசிவலங் கொண்டுமைந்தா
 யிருத்தடா முனையறிந்து கமருக்குள்ளே
காத்தடா அசையாமல் நிலையைப்பேட்டு
 கண்ணறிந்து விண்ணான கதவைமைந்தா
சாத்தடா குகையறிந்து மெய்யால்நீயும்
 சாக்கொடுத்து அக்ஷரத்தால் தன்னைப்பார்த்து
யேத்தடா மவுனமென்ற வாசியாலே
 பொருந்திமனம் தரித்தமுர்தம் பூசைபண்ணே. (௱௨)

பூசையென்ன தமரிந்து வாசியேத்தி
 பொருந்தி நின்றஅஞ்சுகிலே பூண்போர்த்தால்
 பூசையென்ற சிவசத்தி பூசைத்தானும்
பூரணமாய் கோடிசெய்த பலத்துக்கொக்கும்
 ஆசையுடன் அந்தரங்க வாசல்கண்டு
அதிலிருந்து அம்சணவேபார்த்தால மைந்தா
 ஓசையென்ற மணிமேருள் சுழினைலிங்கம்
ஒருகோடி சூரியன் போல் காணலாமே. (கூசுக)

காணவே செகச்சால வார்த்தைமார்க்கம்
 கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
தோணவே சொல்லுகிறேன் சரக்கின்மார்க்கம்
 சுத்தமுள்ள பாஷாணம் அறுபத்திநாலும்
பேணவேலவண மென்ற காரசாரம்
 பெருமையுள்ள யிவ்வகைதா னிருபத்தஞ்சே
பூணவே உபரசங்கள் நாற்பிரண்டுபத்தும்
 புதுமையுடன் கண்டறிந்து வாதம்பாரே. (கூசுஉ)

சரக்குவகைசத்துருமித்துரு

பாரப்பா வாதமுறை பார்ப்பதற்கு
 பதிவான உபரசங்கள் காரசாரம்
சாரப்பா பாஷாணவகைக் கெல்லாந்தான்
 சத்துருவு மித்துருவும் தானேசொல்வோம்
னேரப்பா தானிருந்து சத்துருவுமித்துருவும்
 சேர்மையுடன் கண்டறிந்து நிலைமைபார்த்தால்
 வீறப்பா கொண்டு நின்றவவேலாகங்கள்
வேதாந்த குருவருளால் தங்கமாமே. (கூசுந)

துருசுசத்துருமித்துரு.

ஆமப்பா துருசுசத் துருவைக்கேளு
 அடங்காத யினைக்குறொடு சினமுடன்
தாமப்பா அப்பிரகம் கல்லுப்புநாகம்
 சங்கையுள்ள யிந்துப்பு வங்கலிங்கம்
கட்டமுடன் கண்டறிந்து நன்மையாக
 காமப்பா சொன்னவகை சத்துருவேயாகும்
ஓமப்பா சத்துருவால் துரிசைக்கொண்டு
 உத்தமனே மித்துருவை உரைக்கக்கேளே. (கூசுச)



கேளப்பா துரிசிசத்துருவைச் சொன்னேன்
 கெணிதமுடன் மித்துருவை நன்றாய்க்கேளு
ஆளப்பா சாரமொடு வீரமரிதாரம்
 அழகான வெண்காரம் கெந்திருகம்
தாலப்பா பூரமொடுமனோசிலையும் லிங்கம்
 கருவான மித்துருவென் றறிந்துகொண்டு
வாளப்பா மித்துருவால் செயமேசெய்து
 மார்க்கமுடன் வேதமுறை மகிழ்ந்துபாரே. (சுகூஎ)

பாரப்பா சத்துருவால் துருசைக்கொன்று
 பரிவான மித்துருவால் சன்னமாக்கி
சாரப்பா யிவ்விதமாய் வேதைப்பார்த்தால்
 சங்கையுடன் காணுமடா அங்கமாக
கேரப்பா தானிருந்து அங்கம்பார்த்து
 நீமகனே பூரணமாய் நின்றாயாகில்
பேரப்பா பெத்தசிவ யோகியாவாய்
 பேரண்டம் சித்தண்டம் ரெண்டுங்காணே. (சுகூஅ)

சாரசத்துருமித்துரு.

காணவே சார சத்துருவைக்கேளு
 கல்லுப்பு யிந்துப்பு வளையலுப்பு
ஊணவே வங்கமொடு காரியந்தான்
 பொருளான அண்டமொடு மடிந்தசங்கான்
பேணவே அப்பிரகம் மிருவெல்லாந்தான்
 பேருகின்ற சாரசத்துருவே யாகும்
தோணவே யிச்சறக்கால் சாரந்தன்னை
 துடியடங்க கட்டினபின் மித்துருவைக்கேளே. (சுகூகூ)

கேளடா சாரசத்துருவை சொல்வேன்
 கெந்தி மனோசிலைதாரம் வீரம்லிங்கம்
ஆளடா காரம்வெடி காரியந்தான்
 அப்பனே கெவுரியொடு நாகங்கூட்டி
வாளடா அயிர்தமதால் கவசஞ்செய்து
 மைந்தனே புடம்போட்டு பார்த்தாயானால்
காலடா வலுவாகி சாரங்கட்டி
 கனகமென்ற குருவாகும் கண்டுபாரே. (சுளம)

வெடியுப்புசத்துருமித்துரு.

பாரப்பா வெடியுப்பு சத்துருவைக்கேளு
பகையான காரியம் துருசுருடன்
நேரப்பா வெள்ளிசெம்பு யிரும்புகெந்தி
நிசமான அண்டமொடு சத்துருவேயாகும்
சாரப்பா சத்துருவா லுப்பைக்கட்டி
தன்மையுடன் வேதைமுகம் தானேகண்டால்
ஆரப்பா உனக்கீடு ஆருமில்லை
ஆதியென்ற லவணமதை யறிந்துகாணே. (௯௭௧)

காணவே சத்துருவா லுப்பைக்கொன்று
கருணைபெற மித்துருவைக் கருதக்கேளு
பூணவே லிங்கமுடன் காரக்கல்லுப்பு
புகழான யிந்துப்பு வீரங்காரம்
தோணவே நாகமொடு தேரும்வெள்ளை
சுத்தமுள்ள சீனமொடு மித்துருவேயாகும்
பேணவே சத்துருவா லுப்பைக்கட்டி
பிரியமுடன் மித்துருவால் சுன்னஞ்சேரே. (௯௭௨)

கல்லுப்புசத்துருமித்துரு.

செய்யடா கல்லுப்பு சத்துருவைக்கேளு
செயமான வீரமொடு சிங்கிமனோசிலையும்
மெய்யடா பழம்புளியோ டிவையெலாந்தான்
மேன்மையுள்ள கல்லுப்பு சத்துருவேயாகும்
கையடா தவறாமல் மைந்தாநீயும்
கல்லுப்பை சத்துருவால் கலியபோக்கி
பொய்யப்பா போகாமல் செயமேசெய்து
புத்தியுடன் மித்துருவை புகழ்ந்துகாணே. (௯௭௩)

காணவே மித்துருவை சொல்லக்கேளு
கருவான லிங்கவங்கம் நாகம்செம்பு
பூணவே பூரம்அரி தாரங்காரம்
புத்தியுடன் மித்துருவென் றறிந்துகொண்டு
பேணவே மதியமுர்த வழலைதன்னால்
பெலமான சரக்குகளை அரைத்துக்கொண்டு
தோணவே சரக்குகளுக் கங்கிபூட்டி
சுத்தமுடன் புடம்போட்டு வேதையாமே. (௯௭௪)



காரசத்துருமித்துரு.

பாரடா காரத்தின் சத்துருவைக்கேளு
பதிவான சலாசத்து அண்டனுருடன்
நேரடா சரக்குவகை தானேகண்டு
நிசமான அமுர்தரச வழலைதன்னால்
காரடா கல்வமதில் நன்றாயாட்டி
கருணையுடன் காரமதுக் கங்கிபூட்டி
சேரடா புடமதிலே வைத்துப்பார்த்தால்
சிவசிவா காரமது கட்டுங்காணே. (௯௭௫)

காணவே சத்துருவால் காரங்கட்டி
கருணையுடன் மித்துருவை கருதக்கேளு
ஊணவே உபரசங்கள் பாஷாணங்கள்
உண்மை யுள்ளலவலோகந் தனக்குமைந்தா
பேணவே காரமது காலனாகும்
பெருமையுடன் சத்துருமித் துருவைப்பார்த்து
பூணவே கண்டுமனம் கொண்டாயானால்
புத்தியுடன் வாதமது வசியமாமே. (௯௭௬)

தங்கத்தின்சத்துருமித்துரு.

ஆமப்பா தங்கமென்ற அபரஞ்சிக்கு
அப்பனே சத்துருவைச் சொல்லக்கேளு
நாமப்பா சொல்லுகிறோம் துருசுலிங்கம்
நன்றான யிணங்கிறோடு நாகம்வெள்ளை
தாமப்பா தாளகமும் சூதகெந்தி
தண்மையுடன் மனோசிலையும் அண்டங்கூட்டி
சோமப்பால் தன்னாலே ஆட்டிமைந்தா
சுத்தமுள்ள தங்கமதுக் கங்கிபூட்டே. (௯௭௭)

பூட்டியே புடமதிலே வைத்துப்பாரு
போகமுள்ளதங்கமது குருவாயிருக்கும்
நாட்டியே தங்கமது குருவாய்நின்றால்
நலான காரியமும் நன்மையாகும்
தாஷ்டிகமாய் சற்குருவின் பாதம்போற்றி
சங்கையுடன் மவுனரசந் தானேகொண்டு
நீட்டியதோர் வாசியினால் நெற்றிக்கண்ணை
நினைவாக நித்தியமும் கண்டுதேறே. (௯௭௮)

கண்டுசிவ ஜோதியென்ற தங்கத்தாய்க்கு
கருணைவளர் மித்துருவை கருதக்கேளு
விண்டுசொல்வேன் நவலோகந் தனக்குமைந்தா
மேன்மையுள்ள உயிராகும் தங்கத்தாய்தான்
அண்ட கேசரியான தங்கத்தாயை
அனுதினமும் பூசைபண்ணி பதிவாய்நில்லு
வண்டனென்ற சத்துருவை புறத்தேதள்ளி.
மைந்தனேல்லா மித்துருவென் றறிந்துகில்லே. (௬௭௬)

ரசத்துக்குசத்துருமித்துரு.

அரிவான ரசத்துக்கு சத்துருவைக்கேளு
அப்பனே நாகமொடு காரீயம்வங்கம்
சூரியான கெந்தகமும் மனோசிலையும்வீரம்
சூரியான தாரமொடு வெள்ளிச்செம்பு
னெரியான வெண்காரம் துரிசிசாரம்
நேர்மையுடன் சத்துரு வென்றறிந்துகொண்டு
அரிவான மனதைமெள்ள வசமேபண்ணி
மேன்மையுள்ள மித்துருவை விளங்கக்கேளே. (௬௭௭)

கேளடா மித்துருவைச் சொல்வேன்மைந்தா
கெவ்வியென்ன யிரும்புவெடி குடன்காந்தம்
சூளடா மித்துருவென் றறிந்துகொண்டு
அருளான வேதைமுறை அறிந்துபார்த்தால்
கோளடா ஒன்றுமில்லை குருவேயாகும்
குருவான அமுர்தரச மறுலேகண்டால்
காலடா வலுவாகி வாசியேறும்
கண்மூக்கு மத்தியென்ற சுழியைப்பாரே. (௬௭௮)

அயத்தின் சத்துருமித்துரு.

பாரப்பா யிரும்புக்கு சத்துருவைக்கேளு
பகையான அபிறகம் வெண்காரஅண்டம்
நேரப்பா வங்கமொடு கெந்திவெச்சாரம்
நிசமான வீரமொடு கெவுரிசலாசத்து
சாரப்பா யிரும்புக்கு சத்துருவேயாகும்
கண்டறிந்து விண்டபடி கருவாய்பார்த்தால்
வீரப்பா கொண்டஅயச் சத்துருவால்மைந்தா
விசையடங்கும் மித்துருவை விளம்பக்காணே. (௬௭௯)



காணவே யிரும்புக்கு மித்துருவைக்கேளு
கருவான வெள்ளி செம்புநாகந்தங்கம்
பூணவே காந்தமொடு கெந்திகூடன்
பொருந்தி நின்றமித்துருவென் றறிந்துகொண்டு
பேணவே தானிருந்து வேதைபாரு
பெலமாக வாசிசரம் சுழினைக்கேத்து
ஊணவே தானிருந்து மவுனங்கொண்டால்
உற்றசிவ யோகியென்ற உண்மையாமே. (௬௮௰)

நாகத்தின்சத்துருமித்துரு.

உண்மையுடன் சொல்லுகிறேன் நாகத்துக்கு
உத்தமனே சத்துருவை உரைக்கக்கேளு
தண்மையுள்ள தங்கமொடு வெள்ளிவங்கம்
தயவான வெடியுப்பு சிலைக்கல்லு
வெண்மையுள்ள வெண்கலமும் துளசிவீரம்
விசையான நாகசத்துருவே யாகும்
தன்மையுடன் சத்துரு மித்துருவைக்கண்டு
நாட்டமுடன் பூரணத்தில் நடந்துகில்லே. (௬௮௧)

நில்லென்ற நாகமதின் மித்துருவைக்கேளு
நிசமான அபிரகம் யிரும்புகாந்தம்
உள்ளென்ற சலாசத்து செம்புருதம்
உறுதியுள்ள காரீயம் சாரங்கெந்தி
சொல்லென்ற விசைபோலே நாகத்துக்கு
சுகமான மித்துருவால் சுத்தம்பண்ணி
வில்லென்ற விசைபோலே வாதம்பாரு
வேதாந்த சின்மயத்தில் விரும்பித்தேறே. (௬௮௨)

காரீயசத்துருமித்துரு.

தேறவே காரீயந் தனக்குமைந்தா
சிலசிலர சத்துருவை சொல்லக்கேளு
கூறவே காந்தம்அயம் கிளிஞ்சிஅண்டம்
குருவான கெவுரியொடு கெந்திசேர்த்து
மீறவே அமுர்தமதால் நன்றாயாட்டி
மேன்மையுள்ள காரீயந் தனக்குமைந்தா
மாறவே கவசமது நன்றாய்ச்செய்து
மார்க்கமுடன்புடம்போடக் கட்டும்பாரே. (௬௮௩)

பாரப்பா காரியசத்துருவைச் சொன்னேன்
  பதிவான மித்துருவை பகரக்கேளு
சேரப்பா செம்புவெள்ளி வங்கம்நாகம்
  திரமான துகமதால் குருவாய்நிற்கும்
னேரப்பா குருவறிந்து மகிழ்ச்சிகாண
  நிசமான சத்துருமித்துருவை பார்த்து
காரப்பா கருவறிந்து செய்தாயாகில்
  கனகமென்ற பாக்கியங்கள் கைக்குள்ளாமே. (௯௮௭)

ஆமப்பா கைவசமாய் பொருளைக்காண
  அருள்பெருகும் பூரணத்தி லழுத்திமைந்தா
தாமப்பா தன்னிலையில் மனதைநாட்டி
  சங்கையுடன் சத்துரு மித்துருவைகண்டு
ஓமப்பா சொல்லுகிறோம் பாஷாணந்தான்
  நலமான உபரசங்கள் காரசாரம்
சாமப்பா சத்துருவால் செயமேசெய்து
  சங்கையுள்ள மித்துருவால் வேதைதானே. (௯௮௮)

வேதையென்ற வாதமது போதமாக
  மெஞ்ஞான சற்குருவின் கடாக்ஷம்பெற்று
போதையென்ற சோதிபிர காசங்கண்டு
  பூரணமாய் அவனிதனில் புகழ்ந்துவாழு
வாதையென்ற சூழ்வினைகள் தீர்வதற்கு
  மகத்தான அமுர்தரச கிருதந்தன்னை
கோதையென்ற மனோன்மணியின் கடாக்ஷத்தாலே
  கூறினேன் சவுமிய சாகரத்தைப்பாரே. (௯௮௯)

பாரப்பா புலத்தியனே சொல்லக்கேளு
  பதிவான மேகமென்ற வகைகட்கெல்லாம்
வீரப்பா தானெடுமெகித் தீர்வதற்கு
  விபாமுள்ள கிருதவகை யொன்றுகேளு
னேரப்பா பசுவின் நெய்படியொன்றுக்கு
  னேர்மையுள்ள சாருவகை சொல்லக்கேளு
சேரப்பா சலஸ்தம்பம் நேவிச்சாரம்
  திருவான வோரிதழ்த் தாமரையின்சாரே. (௯௯௦)



சாரான அவரையின்றுவல் இலையின்சாரும்
  தன்மையுள்ள விடத்திலைச் சாறுந்தும்மைந்தா
னேராக வகைக்கிக்கால் படியாய்வாங்கி
  நெய்யுடனே தான்கலந்து ரவியில்வைத்து
பேராக அதில்சேர்க்குஞ் சரக்கைக்கேளு
  பெருமையுள்ள சீரகமும் பலந்தானென்று
கூரான அதிமதுரம் பலந்தானென்று
  குக்கிலது பலங்காலாய்க் கூட்டிச்சேரே. (௯௯௧)

சேரப்பா சாதிக்காய் விராகனொன்று
  திரமான கிராம்பதுவும் விராகனொன்று
வீரப்பா சாதிபத்திரி விராகனொன்று
  விபாமுடன் யேலமது பலமுங்கால்தான்
சாரப்பா வால்மிளகு விராகனொன்று
  சன்னலென்ற லவுங்கமது விராகனொன்று
பேரப்பா விலாமிச்சு விராகன்ரெண்டு
  பெருகுவெள்ளைக் குங்கிலியம் ஒன்னரையாம்பலமே. ()

பலமான பலமறிந்து வினைவாய்வாங்கி
  பசுவின்பால் தன்னாலே பதிவாயாட்டி
குலமான நெய்யுடனே கலந்துமைந்தா
  குருவான சற்குருவின் பாதம்போற்றி
பிலமான அடுப்பேத்தி அனலைதாக்கி
  பிரியமுடன் மெழுகுபதம் தனிலிறக்கி
நலமான நிற்பதுநன் கொள்ளும்போது
  நாடிநின்ற மேகமெல்லாம் நாசமாமே. (௯௯௩)

ஆமப்பா மேகமென்ற தெல்லாந்தீரும்
  அதிலெழுந்த பிரந்திமுதல் விரணந்தீரும்
போமப்பா வாதபித்த சிலேஷ்டமவாய்வு
  பொல்லாத கிரணியுடன் மூலரோகம்
சாமப்பா காசமொடு அஸ்திவெட்டை
  தணியுமடா கிருதமதை தயவாய்க்கொண்டால்
சோமப்பால் தான்சொலித்து சோதிகாணும்
  துன்பமற்று யென்னாளும் வாழ்வாய்காணே. (௯௯௪)

## பூரண லேகியம்.

ஏனவே பூரணலேகி யத்தைக்கேளு
காயான ஜாதிக்காய் ஜாதிபத்திரி
பூணவே கிராம்புடனே யேலம்தானும்
புத்தியுடன் வகைக்கிக்கால் பலமேவாங்கி
பேணவே இரிகடுகு பலமொன்றாக
பெருமை யுள்ளசரக்கேழுஞ் சூரணமேசெய்து
தோணவே யிதில்செட்டி மைந்தாகேளு
சுத்தமுள்ள ஆனந்த மூலிவாங்கே. (௧௧௫)

வாங்கியந்த மூலிகையை சூரணமேசெய்து
மைந்தனே யிருவகையும் மொன்றாய்க்கூட்டி
பாங்குபெற தேனதிலே சக்கரையும்வெல்லம்
பனைவெல்லம் மூன்றுமதில் கரைத்துக்கொண்டு
சாங்கமாய் முன்செய்த சூரணத்தைமைந்தா
தன்மையுள்ள பாகதிலே சேர்த்துக்கிண்டி
நீங்கில்லா பசுவெண்ணை செருகவிட்டு
சேர்த்துமிகத் தான்பிசைந்து ரவியில்வையே. (௧௧௬)

வையடா ரவிதனிலே நவநாள்வைத்து
மார்க்கமுடன் தானெடுத்து பதனம்பண்ணி
மெய்யடா சற்குருவின் பாதம்போற்றி
மெஞ்ஞான அருள்பெருக மைந்தாகேளு
கையடா மெய்யுடைய வலுவிருந்து
கருணைவளர் பூரணலேகியந்தில் மைந்தா
பையடா பார்வையிற் சுழினைக்கேற்றி
பாலகனே பணவிடைதான் கொண்டுதேறே. (௧௧௭)

தேறப்பா பணவிடைதான் கொண்டுமைந்தா
தீர்க்கமுடன் தானிருந்து வாசியேற்றி
ஏறப்பா கேசரியில் மனக்கண்ணோட்டி
கண்ணான விண்ணதிற் உன்னிநோக்கால்
ஊறப்பா னிறைந்துவரும் அமுர்தபானம்
னிசமான பானமதை கொண்டுதேர்ந்தால்
மேரப்பா னிதிபம்போலேமைந்தா
மெஞ்ஞான கேசரியில் தோணும்பாரே. (௧௧௮)



தோணுமடா கேசரியில் சுழினைமூலம்
சோதியென்ற ஆதாரக் கமலபீடம்
காணுமடா ரவிமதியு மொன்றாய்கூட்டி
கால்நிறுத்தி பிடரிவழி கண்ணைப்பார்த்து
பூணுமடா வாசியது பொருந்தும்போது
பூரணமும் காரணமும் பொருந்தியொன்றாய்
வானுலகில் சாகலியென விளங்குதய்யா
மைந்தனே ரவிமதியை வணங்கிப்பாரே. (௧௧௯)

வணங்குவது பெரியோரை வணக்கவேணும்
மகத்தான சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
இணங்குவது வாசியிலே யிணங்கவேணும்
யேகாந்த மானசிவ யோகம்வேணும்
மனங்குவிந்து தானிருந்து மனிதருன்னி
மகத்தான ஓங்கார வழியேசென்று
குணங்குவிந்த அமுர்தரசம் கொண்டால்மைந்தா
கூர்மையுடன் வெளிவெளியில் கூடும்பாரே. (௱௨௰)

பாரப்பா அறிவான ஒளிவின்கண்ணு
பதிவான வெளியதுதான் அண்டத்துச்சி
னேரப்பா அண்டமென்ற உச்சிமீதில்
நிசமான அறிவின்கண்ணோ பாய்ந்தால்
பேரப்பா பெற்றதொரு ஜீவாத்துமாவும்
பேசாத மவுனமென்ற பரமாத்துமாவும்
தேரப்பா இரண்டுமொன்றாய்ச் சேர்த்துமைந்தா
சிவசிவ வெளிவொளியாய்ச் சேருந்தானே. (௱௨௰௧)

தானேதான் ஒளிவெளியிற் சேர்ந்தபோது
சங்கையுள்ள பிரிதிவிதான் பிரிதிவியில்சேரும்
ஞானதாவென்ற அப்புநிலத்தில் சேரும்
நிலையான அக்கினியும் வாயுவுங்கூடி
வீணேதான் ஆகாசம் சாட்சிபாக
விளங்கிநின்ற குகைமதை பரிபாலையய்யா
கோனோ தானுநித்த னவநாதருள்
குறியில்லா நிர்மலத்தின் கெதியைப்பாரே. (௱௨௰௨

செதியான மோக்ஷகதி வீட்டைக்காண
கிருபையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பதிவான மூலமடா புருஷமத்தி
பரமகை லாசமென்ற சுழினைவீட்டில்
மதிபான மதிரவியும் ஒன்றாய்ச்சேர்த்து
மவுனமென்ற பீடமதில் வாசமானால்
விதியான செதிமோக்ஷம் வீடுந்தோணும்
விளங்குமணி வீட்டிலே விரும்பிநில்லே. (௯௩)

விரும்பியந்த சுழினையிலே மனத்தைநாட்டி
வீடான பேரின்ப வீட்டில்சென்று
வரும்பிறவி தனையகற்ற வகையைக்கேளு
வங்குரிக்கு வாசலிலே மணிநாவுண்டு
திரும்பிமன மசையாமல் சிவயசிவென்று
தீர்க்கமுடன் பதினாறு உருவைச்செய்தால்
அரும்பிறவி யில்லையடா மைந்தாமைந்தா
அண்ணாக்கை யுண்ணாக்கு ளடக்கிப்பாரே. (௯௪)

பாரப்பா அண்ணாக்கை உண்ணாக்குள்ளே
பத்தியுடன் தானடக்கி பதிவாய்மைந்தா
சாரப்பா ஓமெனவே தமரில்புக்கி
சமரிதைத் தானிருக்கி தானேநின்றால்
பேரப்பா பெற்றசிவ போகந்தங்கும்
பேரண்டத் தமுர்தரசங் கொள்ளைமெத்தும்
சேரப்பா சுத்திவர கெவுனமுண்டாம்
வேதாந்த சேசரியின் விந்துசதானே. (௯௫)

ஆறுமுக களங்கவேதை.

தானான விந்துசவென்ற சத்திமாது
சமரசமாய்த் தான்விளங்கும் தங்கமாது
வானான சேசரியாம் தங்கமாதை
மார்க்கமுடன் கண்டறிந்து மகிழ்ச்சியாக
போனான குருநாதால் சொல்லக்கேளு
உருவான அயமுடனே பூரஞ்சேர்த்து
தானான காரமிட்டு உருக்குமைந்தா
பொருந்திடுமென் றேமுமாவாகி பொருந்துங்காணே. (௯௬)



காணவே காருருகிப் பொருந்தும்போது
கனிவான ஞாகமுடன் லிங்கம்தாரம்
பேணவே ரசமுடனே நாருஞ்சேர்த்து
பிரியமுடன் தான்குடுக்க வாங்கிக்கொள்ளும்
தோணவே அதற்குக்கால் தங்கஞ்சேர்த்து
சுத்தமுடன் தானுருக்கி வைத்துக்கொண்டு
பூணவே வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
பூரணமாய் களங்குதனில் ஒன்றுபோடே. (௯௭)

போட்டுமிகத் தானுருக்கி யெடுத்துப்பார்த்தால்
பொன்னான தங்கமதை யென்னசொல்வேன்
நீட்டறிந்து பொர்க்குரியைக் கண்டால்மைந்தா
பொன்னால யெல்லாமுனது வசமாய்நிற்கும்
தாஷ்டிகமாய் பொன்னாலயில் தானேதானாய்
தானிருந்து சிவயோகத் தலைவனாகி
பாட்டறிந்து பதியறிந்து பதியில்நிற்க
பத்தியுடன் பின்னமொரு பாகங்கேளே. (௯௮)

பஞ்சமுகக்களங்கு.

கேளப்பா யின்னமொரு சூக்ஷங்கேளு
கிருபையுள்ள புலத்தியனே நன்றாய்க்கேளு
ஆளப்பா அயமுடனே வெள்ளிசெம்பு
அருள்பெருக குகையில்நின்று உருகும்போது
காலப்பா யேமரசம் ஞாகங்கூட்டி
கசிபமன் முருகவே தானுருக்கிப்பார்க்க
கேளப்பா யில்லாத களங்காய்நிற்கும்
குருவான களங்கிதுவே வேதைகாணே. (௯௯)

காணவே வேதையுட வகையைக்கேளு
கருவான செம்புவெள்ளி சருவாய்க்கேளு
தோணவே அஞ்சுமிக களங்கைமைந்தா
சுகமுடன் பத்துக்கு வொன்றுதாக்கு
பேணவே வாலையை தென்னசொல்வேன்
பேர்பெரிய புலத்தியனே யிரெட்டாகும்
பூணவே யித்தமுறை பெற்றுக்கொண்டு
பூலோக வசமதாய் நகைபண்ணே. (௱)

கெதியான மோக்ஷகதி வீட்டைக்காண
 கிருபையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பதிவான மூலமடா புருவமத்தி
 பரமகை லாசமென்ற சுழினைவீட்டில்
மதிபான மதிரவியும் ஒன்றாய்ச்சேர்த்து
 மவுனமென்ற பீடமதில் வாசமானால்
விதியான கெதிமோக்ஷம் வீடுந்தோணும்
 விளங்குமணி வீட்டிலே விரும்பிநில்லே. (௩௩)

விரும்பியந்த சுழினையிலே மனத்தைநாட்டி
 வீடான பேரின்ப வீட்டில்சென்று
வரும்பிறவி தனையகற்ற வகையைக்கேளு
 வங்குரிக்கு வாசமிலே மணிநாவுள்ளி
திரும்பிமன மசையாமல் சிவயவசியென்று
 தீர்க்கமுடன் பதினொரு உருவைச்செய்தால்
அரும்பிறவி யில்லையடா மைந்தாமைந்தா
 அண்ணாக்கை யுண்ணாக்கு ளடக்கிப்பாரே. (௩௪)

பாரப்பா அண்ணாக்கை உண்ணாக்குள்ளே
 பத்தியுடன் தானடக்கி பதிவாய்மைந்தா
சாரப்பா ஓமெனவே தமரில்புக்கி
 சாமரிந்துத் தானேநிற்கி தானேநின்றால்
போப்பா பெற்றசிவ போகந்தங்கும்
 பேரண்டத் தமுர்தரசக் கொள்ளலாகும்
சேரப்பா சுத்திவர கெவுனமுண்டாம்
 வேதாந்த சேசரியின் விஞ்சைதானே. (௩௫)

ஆறுமுக களங்கவேதை.

தானான விஞ்சையென்ற சத்திமாது
 சமரசமாய் தான்விளங்கும் தங்கமாது
வானான கேசரியாம் தங்கமானத
 மார்க்கமுடன் கண்டறிந்து மகிழ்ச்சியாக
கோனான குருவருளால் சொல்லக்கேளு
 குருவான அயமுடனே பூரஞ்சேர்த்து
ஊனான சாரமிட்டு உருக்கமைந்தா
 பொருந்திமென்று முடவாகி பொருந்துங்காணே. (௩௬)



காணவே காணுருகிப் பொருந்தும்போது
 கனிவான நாகமுடன் லிங்கம்தாரம்
பேணவே ரசமுடனே நாருஞ்சேர்த்து
 பிரியமுடன் தான்குடுக்க வாங்கிக்கொள்ளும்
தோணவே அதற்குக்கால் தங்கஞ்சேர்த்து
 சுத்தமுடன் தானுருக்கி வைத்துக்கொண்டு
பூணவே வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
 பூரணமாங் களங்குதனில் ஒன்றுபோடே. (௩௭)

போட்டுமிகத் தானுருக்கி யெடுத்துப்பார்த்தால்
 பொன்னான தங்கமதை யென்னசொல்வேன்
பூட்டறிந்து பொற்குரியைக் கண்டால்மைந்தா
 பொன்னுலகெல்லாமுனது வசமாய்நிற்கும்
தாஷ்டிகமாய் பொன்னுலகில் தானேதானாய்
 தானிருந்து சிவயோகத் தலைவனாகி
பாட்டறிந்து பதியறிந்து பதியில்நிற்க
 பத்தியுடன் பின்னமொரு பாகங்கேளே. (௩௮)

பஞ்சமுகக்களங்கு.

கேளப்பா பின்னமொரு சூக்ஷங்கேளு
 கிருபையுள்ள புலத்தியனே நன்றாய்க்கேளு
ஆளப்பா அயமுடனே வெள்ளிசெம்பு
 அருள்பெருக குகையில்நின்று உருகும்போது
காலப்பா யமரசம் நாகங்கூட்டி
 கசிபமன் முறுகவே தானுருக்கிப்பார்க்க
கேளப்பா நில்லாத களங்காய்நிற்கும்
 குருவான களங்கினுட வேதைகாணே. (௩௯)

காணவே வேதையுட வகையைக்கேளு
 கருவான செம்புவெள்ளி சருவாய்க்கேளு
தோணவே அஞ்சுமிக களங்கைமைந்தா
 சுத்தமுடன் பத்துக்கு வொன்றுதாக்கு
பேணவே வாலையை தென்னசொல்வேன்
 பேர்பெரிய புலத்தியனே யிரெட்டாகும்
பூணவே யித்தமுறை பெற்றுக்கொண்டு
 பூலோக வசமதாய் நடசுபண்ணே. (௪௰)

செம்பபம்.

பண்ணப்பா யின்னமொரு பாகங்கேளு
பாரான அயமுடனே செம்புசேர்த்து
கண்ணப்பா தானுலக்க வுருகும்போது
கனிவான தாரமுடன் லிரம்சிங்கம்
நண்ணப்பா மனோசிலையும் கெவுரிகூட்டி
ஞாட்டமுடன் தான்குடிக்க சத்தையுண்ணும்
உண்ணப்பா நிறைந்தசத்தை யுன்றுநின்ற
முறையுள்ள செம்பபத்தை யெடுத்துப்பாரே. (௲௰௧)

யெடுத்ததொரு செம்பபத்துக் கிடைதான்மைந்தா
யேகாந்த மானகுரு தங்கஞ்சேர்த்து
கடுத்திறமாய்த் தானிருந்து உருக்கிப்பாரு
நன்மையுள்ள களங்கு வெகுவுண்மையாகும்
தொடுத்ததொரு சளங்கதனை யெடுத்துக்கொண்டு
சுத்தமுள்ள வெள்ளியிலே பத்துக்கொன்று
கொடுத்துமிகத் தானுருக்கிப் பார்த்தாயானால்
குருவான தங்கமது காந்திபாமே. (௲௰௨)

அரிதாரக்கட்டு.

ஆமப்பா காந்தியென்ற அரிதாரத்தை
அப்பனே கட்டுகிற வகையைக்கேளு
ஞாமப்பா சொல்லுகிறோம் ரெங்குவெடி னம்
நலமான காரமுடன் தாரஞ்சேர்த்து
தாமப்பா தண்ணீரில அரைத்துருட்டி
தங்கமென்ற தாரமதுக் கங்கிமூட்டி
ஓமப்பா மண்சிலை வலுவாய்ச்செய்து
உத்தமனே காடையென்ற புடத்தைப்போடே. (௲௰௩)

செம்புக்குடவன்.

போடப்பா நிதானமதாய்ப் புடத்தைப்போடு
பொன்னான தாரமதை யெடுத்துப்பார்த்தால்
ஞமப்பா நிலைக்கவேதான் கட்டிப்போகும்
கல்லைவட்டுத் தாரமதை யெடுத்துமைந்தா
கூடப்பா தாம்பூரந் தன்னிலேதான்
சுத்தமுடன் அரைவாசி தாரஞ்சேர்த்து
கூடப்பா குகைதனிலே யுருக்கிப்பாரு
குருவான தாம்பூரம் குடவனாமே. (௲௰௪)



ஆமடா குடவனென்ற தாம்பூரத்தால்
அரைவாசி தங்கமிட்டு உருக்கிக்கொண்டு
ஓமடா வெள்ளிதனில் பத்துக்கொன்று
உருக்கமுடன் தான்குடுத்து உருக்கிப்பார்த்தால்
ஞமடா சொல்லுகிறோம் வெள்ளிமைந்தா
நல்லதங்கச் சோதியடா கண்கொள்ளாது
தாமடா தன்னிலையில் வாசிமூட்டி
சங்கையுள்ள மவுனநிலை யோகங்காணே. (௲௰௫)

வெள்வங்ககுரு.

காணவே யின்னமொரு வெள்ளிவித்தை
கருவாகச் சொல்லுகிறேன் கண்டுபாரு
பூணவே வெள்வங்கந் தன்னைவாங்கி
புத்தியுடன் அதற்கு நிகர்ரசத்தைச்சேர்த்து
பேணவே அதற்குநிகர் வெள்ளைகூட்டி
பேரின்ப அமுர்தரசந் தன்னாலாட்டி
தோணவே ரவிதனிலே காயப்போட்டு
சுத்தமுடன் தானிருந்து யின்னங்கேளே. (௲௰௬)

கேளடா வெள்ளிதனை யுருக்கிமைந்தா
கிருபையுள்ள வங்கமதைச் சரியாய்தாக்கி
காலடா வலுவறிந்து உருக்கிப்பாரு
கைலாச வெள்ளியது குருவாய்நிற்கும்
வாளடா வெள்ளியென்ற குருவைமைந்தா
மார்க்கமுடன் செம்பினிலே பத்துக்கொன்று
கூளடா தான்கொடுத்து உருக்கிப்பார்க்க
சுத்தமென்ற செம்பதுவும் வெள்ளியாமே. (௲௰௭)

ஆமப்பா இன்னமொரு கருமானங்கேள்
அடங்கிநின்ற வெள்ளைப் பாஷாணந்தன்னில்
ஓமப்பா யிடைசரியாய் ரசத்தைவார்த்து
உண்மையென்ற மவுனரசந் தன்னாலாட்டி
நாமப்பா வெள்வங்கத் தகட்டில்பூசி
நன்மையுடன் ஓட்டில்வைத்து மண்ணுஞ்செய்து
தாமப்பா நிலையறிந்து புடத்தைப்போட்டால்
தண்மையுள்ள வங்கமது வெட்டைக்காணே. (௲௰௮)

காணவே வெட்டையென்ற வங்கந்தன்னை
காரயிட்டு குகைதனிலே உருக்கிபார்த்தால்
பேணவே தங்கமது உருக்கிகல்ல
பேற்பெரிய வெள்ளியப தாருப்பாரு
பூணவே பொற்கமலந் தன்னில்நின்று
புத்தியுடன் அண்டவெளிக் குள்ளேசென்று
உண்ணவே உள்வெளியும் மொன்றாய்நின்று
உண்மையென்ற மவுனமது உறுதியாமே. (௱௧௯)

தெரிசனம்பதினறு.

உறுதியுள்ள மவுனமடா உரைக்கக்கேளு
உண்மை யென்றசுழினையடா கந்தவீடு
பருதிமதி யொன்றாகி பாய்ந்தவீடு
பரமகைலாச மென்ற பரமவீடு
சுருதிபொரு ளானதொருபரம வீட்டில்
சோதிமணி ரவிதுவனி சுழற்றினக்கால்
கருதியதோர் கபாடமதாக் குள்ளேசென்று
கருணைவளர் தெரிசனத்தை கண்டுபற்றே. (௱௨௰)

பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பதிவான தெரிசனங்கள் பதினார்தன்னை
முத்தியுள்ள ஆதாரதெரிசனந்தா னென்று
மூலமென்ற ஆத்துமாவின் தெரிசனந்தானென்று
சித்தியுள்ள அரிவானதெரிசனந் தானென்று
சிவசிவாமவுன மென்றதெரிசனந் தானென்று
புத்தியுடன் மனமடங்கு தெரிசனந்தானென்று
புகழான உள்ளமென்ற தெரிசினந்தானென்றே. (௱௨௧)

ஒன்றான பூரணமாந் தெரிசினந்தானென்று
உறுதியுள்ள ஞானதுவனி தெரிசினந்தானென்று
பன்றான புருவமய்யந் தெரிசனந்தானென்று
பரமகலை வெளியான தெரிசினந்தானென்று
நன்றாக நின்றஒளி தெரிசனந்தானென்று
நாடிமனங் கொண்டவிந்து தெரிசினந்தானென்று
குன்றாத நாதமென்ற தெரிசினந்தானென்று
குணமான உருவமென்ற தெரிசினந்தாங்காணே. (௱௨௨)



காணவே அருபமென்ற தெரிசினந்தானென்று
கைலாச சாயுட்ச தெரிசினந்தானென்று
தோணவே தெரிசினங்கள் பதினாறுதன்னை
சுத்தமுடன் சற்குருவின் கடாக்ஷத்தாலே
ஊணவே அந்தமிலே ஊணிப்பார்த்து
உண்மையுடன் தன்னிலையாய்த் தன்னைக்கண்டு
பூணவே மிகபரசாதனத்துக்கெல்லாம்
பொருந்தி மனம்பூரணமாய் வாழ்வாய்ப்பாரே. (௱௨௩)

ஆதாரதெரிசினை.

பாரப்பா தெரிசினங்கள் பதினாறுதன்னை
பத்தியுடன் தன்னகமாய் பதிவாய்க்கண்டு
நேரப்பா சொல்லுகிறேன் மூலாதாரம்
நேர்மையுடன் தான்அறிவாய் நிலையைக்காண
சாரப்பா ஆதார மேலாதாரம்
சகலகலை அரகூடா மூலாதாரம்
காரப்பா அந்மூலமூ[illegible]தாரந்தன்னை
கருணையுடன் ஓமென்று மிங்கென்றானே. (௱௨௪)

[illegible]வாசிதனை மூலந்தன்னில்
ஓமென்று தானிறுத்தி உறுதிகொண்டு
பேணவே மிங்கென்று மவுனம்ப[illegible]
பெருமையுள்ள[illegible]ங்சிவய நமவென்று
தோணவே[illegible]ந்து உருவேசெய்தால்
சுத்தமுள்ள சுழினையிலே நந்திகாணும்
பூணவே நந்தியுடபிரகாசங்கண்டால்
பொருந்தி நின்ற ஆசாரஞ் சித்தியாமே. (௱௨௫)

ஆமப்பா அதாரஞ் சித்தியானால்
ஆதார தேவதைகள் அப்போகாணும்
ஓமப்பா வென்றபிரண வத்தினாலே
ஒளிவிளக்காய் நின்றதொரு சோதிகாணும்
வாமப்பால் நிறைந்த பூரணத்திலேதான்
[illegible] சோதிபஞ்ச வர்ணமாக
தாமப்பா தன்னிலையில் தானேகாணும்
தன்மையுடன் கண்டதெல்லாம் சித்தியாமே. (௱௨௬)

## ஆத்துமதெரிசனம்.

சித்தியுள்ள ஆதாரதெரிசனமுஞ் சொன்னேன்
சிவசிவா ஆத்துமாவின் தெரிசினத்தைக்கேளு
பத்தியுடன் கண்டமதில் அங்கென்றாணி
பூரணமாய்வாசி தனையிருத்திக்கொண்டு
பத்தியுடன் சுழிமுனையில் வாசியேற
பாலகனே உங்கென்று மவுனம்பூட்டி
சுத்தமுடன் உங்கிலிங் சிங்கென்று
சுருதிபெற தினம்நூறு உருவேசெய்யே. (௲௨௭)

செய்யப்பா உறுதிகொண்டு உருவேசெய்ய
செயமான திருவுருவாம் ஆதாரத்தில்
மெய்யப்பா சுழிமுனையின் பிரகாசத்தாலே
மெஞ்ஞான மூலவன்னி பிரகாசிக்கும்
மையப்பா மூலவன்னி பிரகாசத்தாலே
மந்திரகலை ஆத்துமா வென்றறிந்துகொண்டு
கையப்பா குவித்தாணிதம் பணிந்துகொண்டால்
கருணைவளர் சிவாத்துமா கனியுந்தானே. (௲௨௮)

அறிவுதெரிசனம்,

தானென்ற ஆத்துமாவின் தெரிசினத்தைச்சொன்னேன்
சிந்தையுடன் அறிவான தெரிசனத்தைக்கேளு
வானென்ற மூலமதில உங்கென்றாணி
மவுனமென்ற பீடமதில் அங்கென்றிருத்தி
கோனென்ற விழிபோகம் கொண்டுநல்ல
குரியரிய ஓம்நம சிவயவென்று
தேனென்ற ரசம்போலே உருவேசெய்தால்
தேவாதி தேவனென்ற பிர்ம்மமாச்சே, (௲௨௯)

ஆச்சப்பா பிர்மமென்ற தார்தான்செல்வார்
ஆதியென்ற சுழினையிலே அக்கினியேதோன்றும்
பேச்சப்பா யிம்மூல வன்னிதன்னால்
பேரண்டம் சத்திவர கெவுனமுண்டாம்
நீச்சப்பா வெகுநீச்சு மூச்சேசுபந்தம்
நிசமான அந்தமடா நெத்திக்கண்ணு
பாச்சப்பாக் கண்ணைறிந்து வாசிகொண்டால்
பதிவான மவுனசித்து பலிக்குங்காணே. (௲௩௦)



## மனோதெரிசனம்.

வானென்ற அறிவான தெரிசனந்தான்சொன்னேன்
கலங்காத மனமென்ற தெரிசினத்தைக்கேளு
வானென்ற பூரகத்தில் சிங்கென்றூதி
மகத்தான சுழினையிலே வாசிபூட்டி
ஊனென்ற ஓம்அரியம வென்றேதான்
புத்தியுடன் தினம்நூறு உருவேசெய்தால்
வானென்ற தேகம்வெகு குளிர்ச்சியாகும்
மகத்தான ஆனந்த மயமாந்தானே. (௲௩௧)

தானென்ற ஆனந்தம் தானேதானாய்
தன்மையுடன் நின்றநிலை தானேகண்டு
வானென்ற கேசரியில் மவுனம்பூட்டி
வரிசையுடன் அண்டகேசரத்தில் சென்றால்
யேனென்ற மனோன்மணிதான் முன்னேநின்று
யின்பரச அமுர்தமது ...சமைந்தா
...யென்று யோகமதை விட்டாயானால்
வேதாந்த மவுனமதாக் குறிநிபோச்சே. (௲௩௨)

உறுதியுள்ள மனமடங்குந் தெரிசினமுஞ்சொன்னேன்
...த்துமன மடங்கினதோர் தெரிசனத்தைகேளு
பரிதிமதி சுடரிந்து மவுனம்பூட்டி
பத்தியுடன் ருத்திரனில் வங்கென்றாணி
திருசுழிமுனையதிலே சிங்கென்றூட்டி
தீர்க்கமுடன் தானிருந்து குருவைப்போற்றி
உறுதியுடன் சிங்குசிவா வசியென்றோத
...வலமையுள்ள ருத்திரனுர் தெரிசனமுமாமே. (௲௩௩)

ஆமப்பா தெரிசனத்தை யென்னசொல்வேன்
ஆதியென்ற தேகமதில் அக்கினிகாண்டேறும்
காமப்பால் காணப்பால் கனிந்தமூர்தமூறும்
கண்ணறிந்து மவுனமதாய் கனிவாய்நின்று
வாமப்பா வுறுதியினுஞ் ...ர்கள்தாண்டி
மகத்தான சுழினைவழி வாசல்சென்று
...மப்பா தன்னறிவே சாக்ஷியாக
தன்மயமும் விண்மயமும் தானுமில்லை. (௲௩௪)

### உள்ளமென்றதெரிசனம்.

நில்லென்று மனகட்டக்குந் தெரிசனமுஞ்சொன்னேன்
நிசமான புலத்தியனே யின்னங்கேளு
உள்ளமென்ற உள்ளமதின் தெரிசனத்தைச்சொல்வேன்
உத்தமனே சற்குருவைத் தியானம்பண்ணி
செல்லென்று வாசிதனை வங்கென்றெழுப்பி
தீர்க்கமுடன் உங்கென்று மவுனம்பூட்டி
சொல்லென்று அங்கிலிவசி யசியென்றோத
துலங்குமடா மச்சஸ்பாத்தின் தெரிசனந்தான்காணே. (௩௩௬)

காணவே மெய்யகுறத்தின் தெரிசனந்தான்மைந்தா
கருணையுடன் காணவே அரிதாம்பாரு
பூணவே புருவமப்பா சுழினைக்குள்ளே
பொருந்திநின்று வந்தவொரு வாசிதானும்
தோணவே துலங்கிநின்று அசவையாகி
சொல்நிறைந்த மந்திரமுமுருவேயாக
ஊணவே மவுனமது குருதியாகி
உள்வெளியாய் நின்றதடா உகந்துபாரே. (௩௩௭)

### பூரணதெரிசனம்

பாரப்பா உள்ளமென்ற தெரிசனந்தான்சொன்னேன்
பதிவான பூரணமாந் தெரிசனத்தைக்கேளு
நேரப்பா அங்கென்று வாசிதனையெழுப்பி
நிலையான சுழினையிலே அங்கென்றிருத்தி
காரப்பா ஓம்றீங் கிலிமங்கென்று
சுருக்காக லூற்றெட்டு உருவேசெய்தால்
கோரப்பா அண்டமெனும் சுழினைக்குள்ளே
தீர்க்கமுடன் சதாசிவனார் தெரிசனையாங்காணே. (௩௩௮)

காணவே அரிதாகும் தெரிசனந்தான்மைந்தா
கற்பூர தீபமதின் காந்திதன்னை
பேணவே மனம்பூண்டு காந்திதன்னால்
பேசாத மவுனரச பானமுண்டால்
தோணவே மவுனரச பானங்கொண்டால்
துலங்குமடா சிவயோகம் சுத்தமாக
ஊணவே தானிருந்து மவுனம்பூட்டி
ஓர்நின்ற வாசியது ஒடுக்கமாச்சே. (௩௩௯)



### நாசிநுனிதெரிசனம்.

ஒடுக்கமுடன் பூரணமாம் தெரிசனத்தைச்சொன்னேன்
உண்மையென்ற நாசிநுனி தெரிசனத்தைக்கேளு
அடக்கமுடன் மனதனிலே வங்கென்றிருத்தி
ஆதியென்ற சுழிமுனையில் சிங்கென்றூதி
தொடுத்துமிக சிவயவசி யும் மங்கென்று
சுத்தமுடன் லூற்றெட்டு உருவேசெய்தால்
நடுத்தமரில் நாதாந்த சோதிதோன்றி
நூலான காரியமும் நன்மையாமே. (௩௪௰)

நன்மையுடன் நாசிநுனி நாட்டம்பாரு
நாதாந்த பூரணமாய் சுழினைக்கேத்தி
உண்மையென்ற வாசியிலே உகந்துநில்லு
உறுதியுடன் வாசிசிவ யோகம்பாரு
தன்மையுடன் உலகமதில் தானேநின்று
சகலவுயிர் தாபரமும் தானேதானாய்
சின்மயமாய்த் தானிருந்து தெளிந்துகொண்டால்
சிவசிவா மவுனமது தீர்க்கமாமே. (௩௪௧)

### புருவமய்ய தெரிசனம்.

சாரப்பா நாசிநுனி தெரிசிவ முஞ்சொன்னேன்
பரிவான புருவமய்யத் தெரிசனத்தைக்கேளு
நேரப்பா மனந்திறுத்தி மவுனம்பூட்டி
நேர்மையுடன் சுழினையிலே மனக்கண்சாத்தி
காரப்பா கனிந்துமனங் கொண்டுமைந்தா
கருணையுடன் நின்றுதவம் செய்தாயாகில்
தோரப்பா சதுரகிரி முடியிலேகாண்
மெஞ்ஞான சோதிசிவ சோதியாமே. (௩௪௨)

சோதியென்ற ஆதியடா சுழினைக்கம்பம்
சுபஞ்சோதி யானசிவ ஞானதீபம்
ஆதியென்ற தீபமடா ஆத்துமாவாகும்
அருள்நிறைந்த வாதியடா மூலவன்னி
நீதியென்ற வன்னியடா சிவனுக்கு
நிலையான தீபமடா பரமாய்நிற்கும்
சாதியென்ற வன்னியடா ஆவிதன்னை
தணியரிந்து சோதியாம் தன்னில்சேரே. (௩௪௩)

சேரப்பா மூலவன்னி தன்னில்மைந்தா
திருவான சோதிபரஞ் சோதிதன்னில்
சாரப்பா ஒன்றிரண்டு மொன்றாய்ச்சேர்ந்தால்
தன்னகமும் விண்ணகமும் ஒன்றாய்ப்போகும்
நேரப்பா ஒன்றான காட்சிபார்த்தால்
நிறைந்த பரிபூரணமாய் நிசமாய்க்கண்டோம்
ஆரப்பா அறிவார்கள் ஆதியந்தம்
அடங்கிநின்ற பரசுருபம் வெளிதானாச்சே. (௯௪)

பிர்மவெளி தெரிசனம்.

ஆச்சப்பா புருவமடு தெரிசனமுஞ்சொன்னேன்
அரகரா பிர்மவெளி தெரிசனத்தைக்கேளு
பேச்சப்பா பெருகிநின்ற மூலந்தன்னில்
பிரணவத்தால் வாசிதனை மேலேநோக்கி
பாச்சப்பா மவுனமதில் நீங்கென்றிருத்தி
பதிவான சுழிமுனையை பத்திப்பார்க்கில்
மூச்சப்பா நிறைந்ததிரு ஆதாரம்
முடிவில்லா பரமவெளி காந்திபாச்சே. (௯௫)

காந்தியென்ற பரமவெளி காந்திதன்னை
கனிவான கண்ணாலிருந்து ஆர்தான்காண்பார்
பாந்தமாய் பரவெளியை பதிவாய்ப்பார்த்தால்
பஞ்சவர்ண அந்தங்கிலே தானேதோணும்
சாந்தமுடன் அந்தங்கிலே தன்னைப்பார்த்தால்
தன்மயமும் விண்மயமும் அதுவாய்ப்போச்சு
நேர்ந்தமிக பூரணமாய் மவுனங்கொண்டால்
நிசமான மவுனகுரு ஆகனாச்சே. (௯௬)

ஒளிதெரிசனம்.

ஆச்சப்பா பரமவெளி தெரிசனமுஞ்சொன்னேன்
அருள்நிறைந்த ஒளியினுட தெரிசனத்தைக்கேளு
காச்சப்பா அக்கினியென்று கண்டமதில்இருத்தி
கருணைகளா உச்சியிலே நிறுத்தியென்று நோக்கி
பாச்சப்பா யிப்படியே பிராணாயஞ்செய்தால்
பரமவெளி தன்னிலொளி பளிங்குபோலேதோணும்
மூச்சப்பா நின்றதிலே ஆதியப்பொருள்
முத்திகொண்ட சுழிமுனையடா சத்தியந்தான்பாரே. (௯௭)



விந்துதெரிசனம்.

பாரப்பா ஒளியினிட தெரிசனமும்சொன்னேன்
பதிவான விந்தினிட தெரிசனத்தைக்கேளு
சாரப்பா கேசரியில் மனதைநாட்டி
தமரான அறுவாசல் தன்னில்நின்று
நேரப்பா கண்ணடங்க மவுனம்பூட்டி
நேர்மையுடன் தானிருந்து வசதிக்கென்று
காரப்பா வாசியை நீமேலேநோக்கி
கருணையுடன் சுழிமுனையிலே நிசமென்றுமில்லே. (௯௮)

நில்லடாசிம் மெனவே வாசிகொண்டு
நிலையான தமரதிலே வாசியேத்து
வில்லுடா விசைபோலே வாசியேத்து
விபரமுடன் பிரணவத்தை அறிந்துகொண்டு
செல்லடா தமரதிலே நின்றுபார்த்தால்
சிவசிவா பூரணசந் திரனேகாணும்
உள்ளடா பூரணசந் திரனைக்கண்டால்
உறுதியுடன் சிருஷ்டிதிதி சங்காரமாமே. (௯௯)

நாததெரிசனம்.

ஆமப்பா விந்தினிட தெரிசனமுஞ்சொன்னேன்
அருள் பெருகுநாதமதின் தெரிசனத்தைக்கேளு
தாமப்பா தன்னிலையை தானேகண்டு
சங்கையுடன் விபூதி துளிதமேசெய்து
சோமப்பால் கொண்டுபரி பூரணமாய்நின்றால்
சொல்நிறைந்த ஸ்வாசமது பாழ்போகாமல்
நூமப்பா சொல்லுகிறோம் மவுனம்பூட்டி
நாதாந்தத் தமர்வாசல் திரையைநீக்கே. (௱)

நீக்கியந்த கேசரியில் மனத்தைநாட்டி
நிலையிருந்து ஓம்வசியென்று மைந்தா
தாக்கினன்றாய் ரேசகபூரண மாய்நிற்க
தன்மையுடன் வாசியது உண்மைபாரும்
போக்குவரத் தாகிநின்ற வாசிமைந்தா
பொருந்தி நின்றதமரதிலே யடக்கிநிற்கால்
வாக்குமன தொன்றாகி மனதுகூர்ந்து
மகத்தான கேசரியில் சோதியாமே. (௱௧)

### உருவதெரிசனம்.

சோதியென்ற ஞதாந்த தெரிசனமுஞ்சொன்னேன்
 சுருபமென்ற உருவமதின் தெரிசினத்தைக்கேளு
ஆதியென்ற கோமுக ஆசனமேல்க்கொண்டு
 அப்பனே விபூதி தாளிதமேசெய்து
நீதியென்ற வாமமதால் மவுனம்பூட்டி
 நின்றதிலே தமர்வாசல் திரையைநீக்கி
ஓதியதோர் பிரணவத்தால் உள்ளேசென்றால்
 ஒளிவெளியும் வெளியொளியும் மொன்றாய்ப்போமே

ஒன்றாகி நின்றபொருள் தானேதானாய்
 உத்தமனே அஷ்டசித்துந் தானேயாகும்
நன்றான சுவிமதியுஞ் சொன்னபடிசேழ்க்கும்
 நாட்டமுடன் யிசுபரமும் நன்மையாகும்
நின்றிடும் வாசியினால் மவுனங்கொண்டு
 நெறியான தமரதிலே வாசமாகி
னேராத மவுனரசங் கொண்டாயானால்
 சீருவான தேசியடா வாசியாமே. (௬௨)

### அருவதெரிசனம்

வாசியென்ற உருவதுவே பொருளொன்றெண்ணி
 மனதுபரி பூரணமாய் பூசைசெய்து
தேசியென்ற அருவமதின் தெரிசனத்தைக்கேளு
 திருகுமணி வாசலிலே மவுனம்பூட்டி
ஞசிநுனி சுழினை வழிதமருக்குள்ளே
 ஞவிநுனி மைதிரு நாட்டங்கொண்டு
ரேசிவாசிம் மெனவே வாசிபூது
 நின்னகமும் என்னகமும் ஒன்றாங்காணே. (௬௩)

ஒன்றான காசுஷியடா அருபமாச்சு
 உத்தமனே அருபமென்ற காசுஷிதன்னை
அண்டகேசரி யெனவே அமர்ந்துகொண்டு
 அறுதினமும் பிராணதாரகமாய் நின்றால்
குன்றாத சமாதியடா சோதியாச்சு
 குருவான சோதியிலே கூர்ந்துகொண்டால்
நன்றான பதவியடா சாயுச்சியபதவி
 காதாந்த பதவியென்ற அருபமாச்சே. (௬௪)



### சாயுச்சியதெரிசனம்.

அருபமென்ற தெரிசனங்கள் பதினாறுக்கும்
 ஆதியென்ற தெரிசனந் தான்மவுனபீடம்
சுருபமென்ற சோதியிலே மனக்கண்சாத்தி
 சுத்தமுடன் அந்தரத்தில் மணிநாவுன்னி
அருபமென்ற தெரிசனங்கள் யிரெட்டுந்தான்
 அங்கனையே தோணுமடா அமர்ந்துபாரு
ருபமென்ற சோதியிலே அமர்ந்துபார்த்தால்
 துலங்குமடா நினைத்தவண்ணஞ் சோதிதானே. (௬௫)

தானான சோதியடா உச்சிமூலம்
 தனையறிந்து வாசியடா மவுனபீடம்
கோனான சுழினையடா நந்திக்கம்பம்
 குருவான மூலமடா ஓங்காரந்தான்
வானான வட்டமடா கபாடவாசல்
 வளையறிந்து திரையகற்றி மவுனங்கொண்டால்
தேனான அமுர்தரசந் தெளிவுகாணும்
 தெளிவான ஒளிவறிந்து வெளியைச்சாரே. (௬௬)

காணவே சொல்லுகிறேன் கமலந்தன்னை
 கண்மூக்கு மத்தியிலே கருத்தைவைத்து
தோணவே காணுமடா விநாயகன்மூலம்
 துகளறுத்து சுழிமுனையி லொளியைக்கண்டால்
பூணவே காணுமடா சுவாதிஷ்டானம்
 புத்தியுடன் அச்சபையிலே பூண்டுபாரு
ஊணவே சுழினையிலே மணிநாவுன்னி
 ஓடாது வாசிசரம் ஞதம்தானே. (௬௭)

காணான மவுனமடா பூரகந்தான்
 தன்னிலே யிற்றனறிந்து ஒளியைப்பாரு
வானான அனாகதம்பின் கடைக்கண்ணாலே
 உருமையுடன் ருத்திரன்றன் ஒளியைப்பாரு
வானான ஆக்கினையிற் சதானந்த
 மணிமேலும் சதாசிவந்தன் ஒளியைப்பாரு
கோனான குருமுறையாய் பார்த்தபின்பு
 குண்டலியாம் ஆதாரம் மூலம்நோக்கே. (௬௮)

ஞேக்குவதுக் கொருபோது அமுதுகொள்ளு
ஞண்மையுடன் பிங்கலையில் மவுனமூணி
ஞக்குனி கலைபாக மரிக்துகொள்ளு
னலமான உமினீர் மதுவேபாரும்
மூக்குனி சுழிமுனையிலே வாசியேற்ற
முத்திபெற யிப்படியே புத்திசொன்னேன்
பாக்குடனே வெத்திலையும் அகலதள்ளு
படுக்குமிடக் கறத்தில் தலைபைத்தாங்கே. (௩௬௪)

நாக்குவதுக் கனுபோகம் சூரியனிலக்கூடுஞ்
சையோக மானதென்ன சிவயோகமய்யா
தூக்குவது மவுனமதாய் தூக்கவேணும்
தூக்கையிலே சோதிப்பிரகாசம்பாரு
ஒக்குவதுக் கோசரக் கம்பநாட்டி
உத்தமனே மேல்வாசற் குள்ளேதாக்கு
வாங்குவதுக் கிடமிருந்து சாத்தைவாங்கி
வளமான ரேசகந்தான் மேலேதாக்கே. (௩௬௫)

தாக்கடா மேல்வாசற் குள்ளேசென்று
சாக்கிரத்தின் கண்மூடி சதாவித்தம்பாரு
ஞேக்கடா ஞேப்பகளெல்லாம் அகண்டபோகும்
ஞண்மையுடன் பர்த்துவாக் கண்மூடாமல்
வாக்கடா பேசாதே மவுனம்பூட்டு
மகத்தான சமாதியடா விளங்கும்பாரு
போக்கடா ஐம்பொறியை அடக்கித்தள்ளு
பூரணமாய் மதியமுர்தம் விளங்கும்பாரே. (௩௬௬)

விளங்குமடா குருபாதம் நடுலாடத்தில்
மெஞ்ஞான விழிரெண்டும் மேவுங்காலம்
தளங்கொண்ட புரிட்டம் பூரணமும்மேலாய்
தன்மையுடன் ஒருவழியாய்ச் சார்ந்துநிற்கும்
குளங்கொண்ட சாமதியடா மவுனமார்க்கம்
குருமுறையாய்ச் சக்திமேலே கூர்ந்துபார்க்கில்
கலங்கொண்ட மவுனமடா அண்டமேரு
ஞதாந்த வேதமடா சுழிமுனைதானே. (௩௬௭)



தாவென்ற தியானமடா அந்தஞ்சொன்னேன்
தன்மையுள்ள ஆதார வலமுஞ்சொன்னேன்
கோவென்ற குருவருளால் ஒளியைக்காண
குருவான தியானமதின் குருவுஞ்சொன்னேன்
தேவென்ற பஞ்சசக்தி நிலைகூசொன்னேன்
சிவயோக சூத்திரத்துட நிரமுஞ்சொன்னேன்
வாவென்ற சடாதார யோகத்துக்கு
வரிசையுடன் தானிருந்து வாசியூதே. (௩௬௮)

வாசிதாரணை.

வாசியென்ற யிடகலையில் பூரகந்தானென்று
வரிசையுள்ள சுழிமுனையிலே கும்பகந்தானனறு
தேசியென்ற பிங்கலையில் ரேசகந்தானென்று
செம்மையுடன் பவனத்தைத் தொட்டுச்சந்திரன்
ரேசியென்ற முனை அம்மாவாசிதொட்டு
நிசமாக வளர்பிறையிற் றுக்கிப்பாரு
மாசியென்ற பித்தநீர் பாயாவண்ணம்
மதிபாத்துக் கண்ணாலே ஞேக்குவாயே. (௩௬௯)

ஞேக்கடா ஆதாரம் பனிரெண்டும்பார்த்து
உண்மையுடன் தமர்வாசற் குள்ளேவாசி
தாக்கடா ரேசகமாய் கண்டம்பாயும்
சத்தியிடை பாயாமற் பிங்கலைக்கேசேசி
வாக்கடா மேல்வாசல் பூட்டிவிட்டால்
மகத்தான பொரிபதுஞ் பூதாதிபா
ஞக்கடா வாசிதாரணையுமாச்சு
நலமான சுழிமுனையில் நாடிநில்லே. (௩௭௰)

நில்லடா அக்கினி தாரணையுமாச்சு
நிசமான விந்துவுடன் ஞதக்கட்ட
செல்லடா நிராசனுதம் கிளம்புமப்பா
திடமான பூரணமாம் மதியினுள்ளே
அல்லடா அமுர்தமது கக்கலாகும்
அடியான அமுர்த தாரணையுமாச்சு
கல்லடா ஆதாரம் காலின்மாண்டான்
காலென்ற யிடகலையை நனிதானுண்மே

உண்டதொரு சவியாலே மதியமுர்தமாச்சு
சாதியலல் தான்கொளுத்த வேற்மையாச்சு
கண்டதொரு அப்புகர்மனைதான் மைந்தா
கல்தேகமாவதினால் தாறமையாம் பூமி
கொண்டதொரு மேல்வாசல்திரந்தபோது
குருவான சூரனையாம் வெளிச்சமாச்சு
அண்டபிண்டம் ரெண்டுமடா தூன்றும்பின்று
ஆகரமுடன் னிருவினையும் அமர்தயாதே. (௮௰௭)

ஆபிந்த வாசிவழி யூடேசென்று
அடங்கினது பிராணபம் அப்பாசொன்னேன்
ஓயிந்த இருவாசி மேலேயேறி
உரைத்திட்டால் பிரத்தியா காரமாச்சு
சாயிந்த இப்படியேதான் பிர்மமாகி
தன்மையுடன் பூரணத்தில் ஒடுக்கிட்டாச்சே
போசிந்த னைமமுடன் யேமந்தானும்
பூரணத்தில் சேர்ந்தவன் யோகிருக்கப்பூனை. (௮௰௮)

பூனாக மனத்தோர்க்கு தியானமேது
புத்தியறிவில்லார்க்கு ஞானமேது
வீணான வீணர்க்கு வாதமேது
விண்ணைதனை யறியார்க்கு யோகமேது
ஊனாக மனத்தோர்க்கு மவுனமேது
உறுதிமன மில்லார்க்கு கெவுனமேது
பேனாக மடையர்க்கு உயிர்தானேது
பிறுணலே தனையறிந்து ஒடுக்கங்காணே. (௮௰௯)

ஒடுக்கமென்ற நிலைபதுதா னுன்னுக்குள்ளே
ஒசந்த திட்டுக்கடுக்க ஒருத்துக்தானுண்டு
அடக்கமென்ற குகைபதனை காணவென்றால்
அரிதரிது வெகுகடினம் அறியப்போமோ
அடக்கருந்து பஞ்சசன இலக்ஷபெற்று
ஆனந்த மணிவிளக்கை யாண்டிருக்கால்
அடக்குமின்று [illegible]
ஏகாந்த அண்டவெளி தெரிசனைடாயேன். (௯௰)



தானென்ற கொண்டையடா விந்துவட்டம்
தமரிலே கொண்டெழுந்த வாசிதன்னால்
கோனென்ற முக்கோண மவுனபீடம்
குருவான பீடமடா மவுனமூலம்
வானென்ற மூலமதில் மணிமுவுன்னி
மார்க்கமென்ற அனுக்கிறக வாசல்சென்று
பூனென்று மனம்நிறுத்தி மவுனங்கொண்டால்
பூரணமாய் மதியமுர்தம் பொங்கும்பாரே. (௯௰௧)

ஒடுக்கத்தோற்றம்.

பாரப்பா அண்டபிரண்டமெல்லாம்
பாங்காரு-பூரணத்தில் செனித்தவாறு
னேரப்பா மேகசிலம் உவனாளிக்கி
னேர்மையுடன் குன்றுசெடி தாபரங்கள்
வீரப்பா தழைத்தாப்போ லந்தமேகம்
விபரமுடன் சூரியனில் வொடுங்கும்பாரு
சாரப்பா ஆகாரத்தில் உகாரந்தோன்றி
தன்மையுள்ள ஆகாரமுடன் விந்திறுலே. (௯௰௨)

ஞலரன விந்துவிலகந்தம் சோமன்
நயந்து பார்செறிபோடு நாதாந்தந்தான்
மேலான உகாரமதிற் சத்திதானும்
வியற்பினேயும் சாமனைமுத ஓண்மனை தானப்பா
ஞலான கருமனைதனும் ஓம்ருபி
நன்மையுடன் அனந்த முதல்னுதயோடு
மாலான ஆறுநிருவதை யிதூரா லுந்தான்
மார்க்கமுடன் சிவசிவமாய மகிழுந்தாக [illegible]னே. (௯௰௩)

காணவே சோடசமாய் சகஸ்ரதாறு
கமலமதை ஞெக்குசுற்கு காலாய்நின்று
பேணவே அகாரந்தான் சோதியாகி
பிரளாமன் மூலமதிற் பெலமாய்நிற்கும்
தூணவே அகாரத்தான் அண்டத்துள்ளே
பொருந்திநின்ற அக்கினிபோல் போதமாகும்
தோணவே மகாரந்தான் கண்டத்தன்னில்
துலங்கிநின்ற ஆதித்தன் காந்தியாமே. (௯௰௪)

### மேலாதார தெரிசனம்.

காந்தியென்ற விந்துவது மின்போல்தோன்றி
கண்டமதில் அங்குலம்நால் கடந்தாயிற்றும்
சாந்தியென்ற புருவமதில் சாந்தமானால்
சந்திரன்போல் ஒளிவீசும் தன்மையாகும்
பாந்தியமாய் தினந்தோறும் பழக்கமானால்
பாலகனே கற்பூர தேசமாகும்
சேர்ந்துபார் அங்குலமேல் மூன்றேயானால்
சிவசிவா சோடசமாம் கலைதான்பாரே. (௲௭௰)

பாரப்பா புகைபோலே யாகுந்தேகம்
பதிவாக அதிலே சேர்க்கால்மைந்தா
சேரப்பா சத்திவடிவேலேபோகும்
நேமகனே அங்குலம் மூன்றப்பால்சென்றால்
பேரப்பா ஞானகலை மாணிக்கம்போல்
பிளாமல் வொளிவீசும் பேணிப்பாரு
சாரப்பா ஞானந்த உச்சிமீதில்
சார்ந்திலாய் மின்கோடி ஒளிபோலாமே. (௲௭௧)

ஒளியான மாத்திரைதான் அரைக்கால்வைத்து
உற்றப்பா ரந்தமதிலே மாயாமாயம்
தெளிவான பேரின்ப மோக்ஷவீடு
திரைகடந்து அங்குலநால் சென்றபோது
அழியாது சத்திகலை ரவிபோல்தோன்றி
அரைமாகாணி மாத்திரைதா னங்கேகுத
விழியான கடாதுபோலும் தன்தேகம்
விளங்குமடா சித்திமுத்தி மேவிக்காணே. (௲௭௨)

காணவே அங்குலம்நால் கடந்தாமைந்தா
கயிலாச வியாபினியாய் சகலகாலின்று
ஊணவே ஆதித்தன் ஒளிபோல்காணும்
உண்மையுடன் மாத்திரைமா காணிவைத்து
பேணவே நியானிக் தானுந்தன்தேகம்
பேர்பெரிய றவிபோல காந்திகாணும்
பூணவே தோத்திரஞ் செய்வானந்தகாலே
புத்தியுடன் சித்திமுத்தி வருகுந்தானே. (௲௭௩)



தானான உச்சிவெளிக் கப்பால்மைந்தா
சமனாக நின்றதிலே ஒளிபோற்காணும்
தானான மாத்திரைதான் அரைமாகாணி
தன்மனதின் கண்ணாலே தாண்டிப்பாரு
தானானதேக மப்பா ஒளிபோல்வீசும்
தன்மையுடன் உன்மனையைத் தாண்டிப்பாரு
தானானவெளி பொளிபோல் காந்திதோன்றும்
சங்கையுடன் மாத்திரைதான் அரைக்காலோதே. (௲௭௪)

ஓதினால் வெளியொளி போலுந்தன்தேகம்
ஒளிவிளக்காய் நின்றதடா பிடிகொள்ளாது
சோதிபிர அண்டபகிரண்ட மெல்லாம்
சுத்தமுடன் சித்துவினை யாடலாகும்
நீதியுடன் ஆதாரமாறில் நின்றால்
நின்தேகம் பரரூபம் நிசங்காண்மைந்தா
ஆதிபராய் நின்றதிரு வாசிமூலம்
அறிந்து தலந்தனில்நிருத்த மவுனஞ்சித்தே. (௲௭௫)

### சித்திமூலம்.

சித்திதரும் மூலமென்று செப்பக்கேளு
சிவ்வுடனே அவ்வோடே கிலியுங்கூட்டி
பத்தியுள்ள பாதையென்று ஞயன்சொன்னார்
பரமாகுழி முனையில் பதிவாய்க்கண்டேன்
சத்திசவ்வுண்டு சித்தியானால்
சதாசிவனும் மனோன்மணியும் தானேதானும்
புத்திக்குள் விதைப்பாரு ஒன்றாய்க்காணும்
பூரணத்தால் அஞ்செழுத்தை போற்றுவாயே. (௲௭௬)

போற்றியதோர் மூன்றெழுத்தை நுண்பாரு
புத்தியுடன் யெட்டெழுத்துப் வாலைதானும்
ஆற்றியதோர் அரியெழுத்து அழுத்திப்பாரு
ஆதியென்ற சுயம்புலிங்கம் அதுதான்மைந்தா
சாற்றியதோர் யெழுத்தரிந்து பிடித்துவாங்கு
சங்கையுடன் ஞானெழுத்து தன்னைப்பாரு
போற்றியதோர் ஓரெழுத்தை அறியச்சொன்னேன்
பிதுவரைக்கும் ...ரிவார் தன்னைக்காணே.

காணாதிராய் நின்றதொரு மூலகுண்டம்
  கண்டவர்கள் சிவயோகி சிவன்முத்தன்
பூணாதிராபுலகத்தில் மாண்பர் தானும்
  புத்தியுடன் பேறுபெற வழிவைக்கானூர்
தோணாது விழிமயக்க மைந்தாமைந்தா
  சுழிநிறக்க மேலாகும் சுத்தமாகும்
பேணாது பேணாது மனப்பேய்மைந்தா
  பிலத்த புத்திஅறிவாலே குருவைக்காரே. (௩௮௩)

காரப்பா வாசியினல் சாகரத்திநுள்ளே
  கலக்காக்கால் சிவபோகம் கைக்குள்ளாகும்
மேட்டப்பா மனமாண்டு கனலைத்தாண்டி
  யோகாந்த நிராதமுஞ் சுடர்தப்பாலே
சேர்ப்பா சுழியில்நின்று வெட்டதுளே
  சார்ந்துகொண்டு நீபிரிந்து பதத்தைப்பாரு
னேரப்பா நின்றுமனம் நின்றேடாது
  நிலைபிரிந்து காந்தவினை போகும்பாமே (௩௮௪)

ஆமப்பா சிவமென்று மயமென்றும்
  அப்பனே வசியமென்றும் மூன்றுதிரம்பாரு
ஓமப்பா பிருணவம் மொன்றதாச்சு
  உத்தமனே ரெண்டுதிரம் ஓதிநுக்கால்
தாமப்பா சுடரொளி போல்தேகமாகும்
  சாந்தமாய் சட்டைபோன்று வெறுப்பாய்போகும்
காமப்பா பிராணயம் யெமனேயம்
  கண்மூக்கு மத்தியிலே கண்டிடேடே. (௩௮௫)

கூடப்பா யோகத்தில் குரிகண்ணூட்டு
  குமுறுகின்ற குகமதில் கூடியேதி
நாட்டப்பா அக்ஷரம் ஓமென்றாணி
  நன்மையுடன் சிவ்வங் மங்கென்றேதான்
ஆட்டப்பா அஷ்டசக்தி தானுப்பிற்பாள்
  அஞ்செழுத்தில் மூன்றெழுத்தை அனைத்துமாறு
தேடப்பா அஷ்டாங்கம் நிலைநின்றுபி
  சிந்தைதனில் நினைத்தவண்ணம் செய்வாய்கேளே. (௩௮௬)



தெளிவான பராபரையை சிம்மென்றேத்த
  சிவசிவா அட்டசித்தாம் தெளிவாயமே
வழியான வாதசித்தி காயசித்தி
  மகத்தான ஞானமொடு யோகசித்தி
அழியாத ரீங்காரஞ் சுழியிற்சேரு
  அறிவென்ற நூல்களிலே அறிந்துபாரு
ஒளியாமல் பராபராயாள் பெருத்தைமைந்தா
  நிலையான சுழிதனிலே நிலைத்துத்தேறே. (௩௮௭)

தேறப்பா சாயுச்சிய பதவிகாட்டும்
  சிவஞான நூலிதுபோல் செப்பாதய்யா
னேரப்பா ஆயிரமாம் இதழுக்குள்ளே
  நின்றிலங்கும் அமூர்த்தமதை நினைவாய்கொண்டு
கூரப்பா குருசற்று வைக்கேது
  குறிபறிந்து வாசிபட்ட ஒளிபோல்காணும்
தேறப்பா வென்றுசொல்லி வைத்தேன்குருசூக்ஷம்
  சிவசிவா பூரணத்தில்சென்று பாரே. (௩௮௮)

பார்ப்பதற்கு வகையது மைந்தாகேளு
  பதிவாக யிடையிலே வங்கென்றூது
சேர்ப்பதற்கு பின்கலையில் சிங்கென்றூது
  தீர்க்கமுடன் சிம்மென்று தெளிவாய்ப்பாரு
சார்ப்பதற்கு சுழினையிலே மங்கென்றூது
  சுருனையுடன் மவுனமதால் கால்கொண்டேறு
யேரப்பா தற்குயோகமப்பா வாசியோகம்
  யென்மகனே சுழினையில் சென்றிருந்துபாரே (௩௮௯)

பாரடா மூலமதில் விந்துவினால்தோணும்
  பதிவான மூலமது நிர்மலமாய்க்காணும்
சேரடா சந்திரனில் ஒளிந்தவாசி
  சிவசிவா சுழினையிலே சேர்ந்துநிற்கும்
கூறடா அகாரத்தில் உகாரஞ்சேர்ந்து
  குருவான மகாரத்தில் அணமாயூந்து
யேறடா பிரமாந்திரத்தில் சென்று
  யேகமென்ற காலறிந்து நிற்றுவாயே. (௩௯௰)

ஊதிபதோர் வாசியதை அறிந்தோன்யோகி
உயிரிருந்த நிலைபறிந்தோன் அவனேஆசான்
நீதியுடன் மனம்நிறுத்தி மவுனம்பூட்டி
நிலைபறிந்து நின்றவனே கெவுனியாகும்
ஓதியதோர் வேதநிலைபிரம்ம மாகும்
உச்சியென்ற மூலமடா ஓங்காரந்தான்
வீதியென்ற ஆதாரங் கடந்துமேலே
விளங்கும் ஒளிதனைபரிய அகத்தான்நில்லே (௩௬௩)

நில்லடா நிலைபறிந்து மணிவுவுண்ணி
நேமகனே பூரணத்தில் நின்றுபானால்
உள்ளடா ஆதாரமூல மெல்லாம்
ஒளிவிளக்காய்த் தோணுமடா ஊணிப்பாரு
கொல்லடா கருவிகரணாதி யெல்லாம்
குடிவமதைத் தானகத்தி குருவைப்போற்றி
செல்லடா ஞானகேசரியாள் பாதம்
சிந்தைமனந் தொன்றாக தெளிவிற் காணே (௩௬௪)

காணுகிற கருவேது உருவமேது
கருணைவளர் பூரணமாம் வாசியேது
ஊணுகிற வாசியுட நிலையங்கேது
உற்றசிவ சத்தியுட மாய்கையேது
பூணுகிற பொருளேது அருளங்கேது
பொருந்தி மனங்கொண்ட அண்டபிண்டமேது
தோணுகிற மாய்கையெல்லாஞ் சுழியனையாட்டம்
சுழினைவழி தனையறிந்து சுகத்தைப்பாரு. (௩௬௫)

பாத்தனடா சுத்தவெளி பாதத்தின்வீடு
பதிவான நடுவீடு அண்டத்துச்சி
காத்தனடா சுழினைவழி வாந்திசேர்வை
கண்ணறிந்து விண்ணதிலே கால்கொண்டேறி
சேத்தனடா பவிமதியை சுழினைக்குள்ளே
தீர்க்கமுடன் கால்நிறுத்தி பார்க்கபார்க்க
கூத்தனடா காலறிந்து மாத்திவைத்தேன்
குருவென்ற சிவம்போலே நிற்பேனே. (௩௬௬)



தேறவே சவுமிய சாகரத்தைப்பார்த்து
தெளிந்துகொண்டே விருவினையின் செயலைக்கண்டு
மாறவே யெழுத்துவகை முன்னேசொன்னேன்
மகத்தான சித்தரெல்லாம் மறைத்துவைத்தார்
தேறவே ஓரெழுத்தை தியானித்தப்பா
சிவபஞ்சா க்ஷரத்தைமைந்தா செபித்துக்கொண்டு
மீரவே மவுனமதை வெளியிற்சொன்னால்
வேகுமடா உன்சிரசு வெடிக்குந்தானே. (௩௬௭)

தானேதான் விட்டகுறை மார்க்கத்தோர்கள்
சகலகலை நால்பார்த்து ஞானுக்கங்கண்டு
வானேதா னுகின்ற மவுனங்கொண்டு
மவுனமென்ற கெவுனமதின் தியானத்தாலே
கோவென்ற குருபாதம் தியானமாகும்
குறியறிந்து கருசித்தி கொண்டுநின்று
தேனென்ற அமுர்தரச பானங்கொண்டு
சின்மயங் கொண்டென்றுந் தெளியாய்நில்லே. (௩௬௮)

தெளிவான குருமுறையைத் தவறாமல்தான்
திடக்கமுள்ள மனதாலே மவுனங்கொண்டு
சுழிவான நிலையறிந்து சூக்ஷங்கண்டு
இலங்குமணி வாசலுட திரையைநீக்கி
வழிவான அனுக்கிரக வாசற்குள்ளே
மனமறிந்து சிவயோக நிஷ்டைபெற்றால்
கனியாது காயமது கனகமாகு
கனகமென்ற கற்பூர தேகந்தானே. (௩௬௯)

தாவென்றும் சுழினையென்றும் ஊமையென்றும்
சகலகலையாய் நிறைந்த அகாரமென்றும்
வாவென்ற வகாரமென்றும் யோகமென்றும்
மணிகெவுன குளிகையென்றும் வாசியென்றும்
தேனென்ற அமுர்தரச தெளிவேயென்றும்
தெளிவான பூரணமாம் தேசியென்றும்
கோவென்ற குருபீட மானதென்றும்
குருவிருந்த மணிமகுட பதிதான்காணே. (௩௭௦

பதியென்றும் பசுவென்றும் பாசமென்றும்
பரமென்ற வாசமென்றும் மேருவென்றும்
கெதியென்றும் சதுரகிரி மேருவென்றும்
கெவுன சமனிமுட்டப் பொதிகையென்றும்
விதியென்றும் ஏகாந்த வேதமென்றும்
விந்நாசமென்ற மந்திரமாம் யோகமென்றும்
மதியென்றும் சசியென்றும் சுழினையென்றும்
மகத்தான சோதியென்றும் உண்மைதானே. (௧௯௯)

பூரணசமாதி.

தானென்ற பூரணத்தின் சமாதிசேரு
தாணிதனி லரியார்கள் வெளியாய்ச்செல்வேன்
கோனென்ற அகாரமுடன் உகாரந்தொட்டு
குருவான மகாரமொழி மூன்றுங்கூட்டி
வானென்ற சஞ்சார சமாதியென்று
வகையுடனே சிவதலத்தில் வணங்கிநில்லு
ஊனென்ற அதிவுகொண்டு யோகம்பாரு
உண்மையுள்ள மெஞ்ஞான உறுதியாமே. (௨௱)

ஆமப்பா நிலைத்திச நிலையதாகும்
அடங்கிநின்ற மாதிரமு மதுவேயாகும்
ஓமப்பா சொல்லுகிறேன் மவுனமார்க்கம்
ஏகாந்த அண்டவெளி சுழினைக்குள்ளே
காமப்பா தன்னைநிலை யுன்னிப்பார்த்து
தன்மையுள்ள ஓங்காரக் கம்பமூட்டி
நாமப்பா சொன்னதொரு மவுனமார்க்கம்
மகத்தான மார்க்கமடா மவுனந்தானே. (௨௱௧)

தானான மவுனமதாக் குறியான
தன்மையுள்ள கற்பமொன்று சொல்லக்கேளு
கோனான கந்தகமுந் சேர்த்தெடுத்து
நீர்க்கமுடன் தான்கூறி செம்மையாக
வானான திரிகடுகு பொடித்துமைந்தா
உத்தமனே காணடி [illegible] சென்று
கோனான சற்குருவை நியானம்பண்ணி
குருவான கற்பகமெய் தான்றுணிந்தபோற்றே. (௨௱௨)



போற்றி மனம்பூரணமாய் வைத்தாயிடும்
புகழான குமரிதிரி கதிகுமென்று
பாத்திடவே பிக்காய் நன்றாவிசேர்த்து
பக்தியுடன் நிலைநிலை பதிவிட்டு
சேர்த்தா நன்றாய் [illegible]
நீர்க்கமுடன் வைத்தாடி தானவைத்தெடுத்து
ஆத்துமத்தின் பெயவழித்து ஆத்திரத்தி
அரகார மண்டலமாய்க் கொண்டுசேரே. (௨௱௩)

குமரிகற்பம்.

தேறப்பா மண்டலமாக் கொண்டுசேர்த்தால்
சிவசிவா தேகமது திரமாய்நிற்கும்
வீறப்பா கொண்டகபம் மடிந்துபோகும்
வேதாந்த சுழினையுட வெளியுந்தோணும்
சாரப்பா சுழினைவழிக் குள்ளேசென்று
சார்ந்திருந்து வாசியைக் காலேகொண்டால்
ஆரப்பா உனக்குநிகர் சொல்லப்போறேன்
அதிர்ந்த சுழினையிலே அமர்ந்துநில்லே. (௨௱௪)

அமர்ந்திலே தனையறிந்து சுழினைக்குள்ளே
அடுந்தபெருகும் வாசிசாம் அழுத்திப்பார்க்க
அமர்ந்துநின்ற வழிதனை அங்கேதோணும்
அனையறிந்து நிருகுமனைப் பூட்டையுடைந்தாக
அமர்ந்து அந்த நிருகுமனைப் பூட்டிதன்னை
ஆடிநின்ற சக்கரத்தா லழுத்தப்போமா
அமர்ந்துநின்ற நிலையகண்டு அழுத்தாற்றும்
அந்தமுள்ளம் பூரணமாய் வெளியாகுமே. (௨௱௫)

அறிவான கற்பமடா குமரிகற்பம்
அதையறிந்து கொண்டதினால் வைத்தாகேளு
குறியான சுழினையிலே வாசியேறி
கோடிரவி காந்தியென போதமுண்டாம்
நிருவான போதமதால் கெவுனமுண்டாம்
தேகமென்ற ஆன்மியே சிவசொரூபம்
உருவான சிவசொரூபந் தனையறிந்து
உண்மையுடன் வாசியென்ற மலைமாத்தே. (௨௱௬)

சாற்றடா மலரிந்து மனங்கண்கொண்டு
 சாங்தொடுத்து சுழினைவழி தானேகண்டால்
காத்தடா அசையாது சுழியின்காத்து
 காலறிந்து நிலைநிறுத்தி கடைக்கண்ணூலே
பாத்தடா பதியமனம் பதிவாய்நூண்டி
 பரஞான கேசரியில் வாசமானால்
கூத்தடா திருநடன சபையில்காணும்
 குருவான கனகசபை சுழினைதானே. (௩௱௭)

கரிசாலைநெய்.

தானென்ற சுழினைவழி கண்டுதேற
 சாதகமா யின்னமொரு பாகங்கேளு
வீனென்ற கபமகல மைந்தாமைந்தா
 விபரமுடன் கரிசாலை சாறுவாங்கி
கோவென்ற குருவருளா லாவின்நெய்யை
 கூர்மையுடன் இடைசரியாய் கலந்துகாச்சி
ஞானென்ற ஆறுவத்தை அகலத்தள்ளி
 நன்மையுடன் நெய்யதனை வடித்துக்கொள்ளே. (௩௱௮)

வடித்ததொரு நெய்யதனை மைந்தாகேளு
 மார்க்கமுடன் தர்ச்சனையும் மத்திமையுங்கூட்டி
கடுத்ததொரு நெய்யதனை தொட்டுநீயும்
 கண்டமதிற் சுற்றிவிடுகப நீரெல்லாம்
பிடித்தகபம் கட்டறுத்து ஆறுதாரம்
 பெரிதான ஸ்தூலமது சூக்ஷமாகும்
அடுத்ததொரு மேல்வாச லடைப்புநீங்கும்
 அரசரா அதின்சூக்ஷ மறியலாச்சே. (௩௱௯)

ஆச்சப்பா சூக்ஷமதா யிருந்துகொண்டு
 அப்பனே கரிசாலை நெய்யில்மைந்தா
பாச்சப்பா பெருவிரலை தோய்த்து அந்த
 பதிவான அண்ணாக்கை பதிவாய்சுத்தி
காச்சப்பா யிப்படியே பத்துவிசைசுற்று
 கபாடமதில் நின்றகபம் கழன்றுபோகும்
நேச்சப்பா ஓடுகின்ற அண்டவாசல்
 மூடிநின்ற திரையகன்றுவழி செல்வாமே. (௩௱௰)



வழியான சுழினைவழி கபாடவாசல்
 வங்குசிக்கு சுழினைவழி வாசற்குள்ளே
னெளியாமல் வாசிசர மதிலேபாய
 நிசமான புத்தியனே சொல்லக்கேளு
சலியாமல் சுகாதனமா யிருந்துகொண்டு
 தர்ச்சனையும் மத்திமையுந் தானேசேர்த்து
அழியாத பேரின்ப வீட்டைப்பற்றி
 அண்ணாக்கை யண்ணாக்குள்ளடக்கம் பண்ணே. (௩௱௰௧)

பண்ணப்பா அண்ணாக்கை யுண்ணாக்குள்ளே
 பயபத்தியா யடக்கம் பதிவாய்ச்செய்து
விண்ணப்பா தோன்றிநின்ற சத்தாதிவிடையம்
 விபரமுடன் தான்கண்டு மெஞ்ஞானதீபம்
கண்ணப்பா தான்துலங்கி சமலமீறில்
 காணுதடா பூரணமாய் கனிவாய்ப்பாரு
யெண்ணப்பா வென்றிதனை மறந்திடாதே
 யிசுபரமாய் நின்றுவினை யாடலாமே. (௩௱௰௨)

ஆமப்பா அகண்ட வெளிகண்டுயேறு
 அரிதரிது வேகுநடனம் அரியப்போமோ
ஞமப்பாவென்ற சத்தமதிற் தானுநில்
 ஞானமுன்னே அண்டவெளி நயமாய்க்காணும்
காமப்பால் கானல்ப்பால் கருவாய்க்கொண்டு
 சருனையுடன் கேசரியில் கலந்துகொண்டால்
சோமப்பால் சொலிக்குகின்ற அண்டமேரு
 சுத்தமுடன் தோணுமடா னித்தம்பாரே. (௩௱௰௩)

நித்தமும் நீதப்பாமல் சுத்தமாகி
 நிமகனே வாசிசரம் சுழினைக்கேத்து
சுத்தமுடன் காலிருந்து சுழினைக்குள்ளே
 சுகமான அங்குஷ்டம் சொருகிமைந்தா
சித்தமுடன் மனதரிவாய் சுற்றப்போது
 சிவாய குருசொருபமது தீபம்போலே
பத்தமுடன் காணுமடா பதிவாய்ப்பாரு
 பதிவான ஜீவகலைஒளி காண்பாரே (௩௱௰௪)

ஒளியறிந்து வெளியேற வகையைக்கேளு
ஓமென்ற பிரணவத்தால் உண்மையத்தா
வழியறிந்து ஈடாஜ நாடிவாய்வை
மார்க்கமுடன் யோகமதாய் வணக்கமாகில்
வெளியறிந்து பரவெளியின் புத்திமூலம்
வேதாந்த மூலமடா நாதாந்தத்தில்
முழிபெரிந்து முழிநிறுத்திக் கொண்டாலெண்மைத்தா
முத்தியுள்ள மவுனமடா சத்தமாமே (௲௰)

சத்தமுடன் நின்றவினை யறிந்துதானே
கொதிநதி போலொன்றொரு [illegible]
பத்தமுடன் யேகாந்த சித்தமாகி
பரமகலா குருபாதம் போற்றி
புத்தியுடன் நின்றறிந்து வாசிதேடி
பூரணமாய் சுழினையிலே மனக்கண்சாத்தி
சுத்தமுடன் ஓங்கார விசையினாலே
சுரீதாயிலே சின்மயனைத் தானறிந்திலே. (௲௰௧)

நில்லடா சரிதையிலே நின்றுதேறி
நிசமானகிரிகையிலே சேர்ந்துகொண்டு
உள்ளடா உடலறிந்து யோகம்பண்ணு
உண்மையென்ற யோகமதில் உருதியானால்
செல்லடா ஞானமென்ற நிலையில்நின்று
திருவான பூரணத்தைக் கண்டுகொண்டு
சொல்லடா சொல்பிறந்த மவுனத்தேகி
சுகமிருந்த முட்சியிலே கண்டுகொண்டேனே (௲௰௨)

கண்டுகொண்டு ஞானத்தும் பகையேதென்றால்
கசடான காமியமாம் சித்தத்தாலே
[illegible] கர்மத்தாலே
விளக்குகின்ற நாலுக்கும் விக்கினங்களாத்து
கொண்ட கொருஞானந்தனை சொல்லக்கேளு
கொடிதான வருமையொடு இரேசம் துக்கம்
வென்றிதொரு பெண்ணன்னை மனம்மனதுக்க
சத்தியுள்ளோர் தாம்படைத்து இயங்குவாரே (௲௰௩)



இயக்கினால் வாசியது மயங்கிப்போகும்
இரமரியா மானிடர்கள் செகத்திலுள்ளோர்
மயங்கினார் மாய்கையிலே மகிழ்ந்துகொண்டு
மாசற்ற சோதியிலே மனதுசெல்லாமல்
தயங்கினார் காமலோகக் குழிசென்று
தன்னிலையைத் தெரியமாட்டாமல்தான்
மயக்கியதோர் மயக்கத்தால் ஞானம்போச்சு
மகத்தான அறிவு [illegible] மாண்டுபோச்சே. (௲௰௪)

மாண்டுசெடம் போகாமல் [illegible]தெப்போ
மகத்தான அறிவிலே வாழ்வதெப்போ
பூண்டுகொண்ட ஆசையது ஒழிவதெப்போ
சொல்லாதமாய்கை விட்டு நிற்பதெப்போ
ஆண்டுகொண்ட காமமதை அடக்குவதெப்போ
அலைச்சலற்று நிற்பதெப்போ அப்பாஅப்பா
தாண்டியந்த கேசரியில் மனதைநாட்டி
சதானந்த போதமதாய் மூழ்குவாரே. (௲௰௫)

பாரப்பா இருகலை சண்டுதேறி
பதிவான மேலாதில் செல்லும்புக்கி
காரப்பா சுழிமுனையில் கலந்துகூடி
கருணையுள்ள மனோன்மணியை கண்டுபோற்றி
நேரப்பா மவுனமென்ற கேசரியில்சென்று
நிமலனை பராபரத்தில் சேர்ந்துகொண்டால்
சாரப்பா பிறப்புஇறப்புக் கழிந்துபோகும்
சதாபோத பிரணவ ஓங்காரக்கனே. (௲௰௬)

காணப்பா பிரணவக் கொண்டிருந்தமூலம்
கருணையுள்ள பஞ்சாக்ஷர பிருக்கவே
பூணப்பா அவ்விட்டுல் மனக்கண் [illegible]
பொருளான அகாரமுதல் உகாரங்களும்
ஊணப்பா மகார மொவுளிக்குஞ்சம்
உண்மையுடன் தானிருக்கும் அறிவானந்தம்
பேணப்பா அறிவான மவுனத்தேகில்
மெலமான போதமது பிறக்கும்பாரே (௲௰௭)

பிலமான ஓங்காரம் மண்ணையுண்ணும்
பெருகிநின்ற மண்ணதவும் சிலத்தையுண்ணும்
சிலமான சிலமதுதான் தீயையுண்ணும்
கொடிதான தீச்சென்று வாய்வையுண்ணும்
சணமான வாய்வதுதான் விண்ணையுண்ணும்
சுன்னையுள்ள செடமதுதான் தானேபோச்சு
தலமான தலமரிந்து தன்னைக்கண்டு
சந்திரகலை அமுர்தமதை கொண்டானே. (௩௱௨௨)

காணவே அகாரமது உகாரத்தைக்கொள்ளும்
கருவான உகாரமது மகாரத்தைக்கொள்ளும்
பூணவே மகாரமது விந்துவைத்தான்கொள்ளும்
பெருந்தி நின்றவிந்துவது நாதத்தைக்கொள்ளும்
தோணவே நாதமது சத்தியைத்தான்கொள்ளும்
சிகமான சத்தியல்லோ சிவத்தைக்கொள்ளும்
பேணவே சிவந்தன்னை பரந்தான்கொள்ளும்
பெரிதான பரஞ்சென்ற வெளித்தைப்பாரே. (௩௱௨௪)

பாரப்பா மூலமுதலாறும்பாரு
பதிவான சுழிமுனையை அறிந்துகொண்டு
சாரப்பா சாம்பவியைத் தானேகண்டு
தன்மையுடன் தானிருந்து தானேநின்றால்
சாரப்பா வாழ்வுசிவ போகம்வாழ்க்கை
கதிர்மதிய மற்றவிடம் யோகமாச்சு
னேரப்பா நின்றஇடம் கண்டால்போதி
நிசமான கேசரியைக் கண்டுபோரே. (௩௱௨௫)

கண்டுபார் லகிரியுண்ண மேலேயதும்
காணுமலகிரிவிட்டால் கிரேமயாயும்
[illegible] ஏனலவிருட்டால் சுதனத்துக்குள்ளே
உள்திருவக் கடந்தேறி ஒளியுக்காணும்
அண்டமெல்லாம் புவனமதை கண்டபாலும்
ஆதிவஸ்தும் அனாதிவஸ்தும் வெளியாய்காணும்
நில்மயார் நிக்குணத்தி அமுர்தமுண்ணி
நிசமான ஞானசத்தி பூட்டுவானே. (௩௱௨௬)



ஊட்டினதோர் தாயைவிட்டா லாரவுமுண்டோ
உலகத்தில் பூரணியைத் தாவிப்பார்கள்
ஆட்டினதோர் நிரோதாயி தானேநின்று
ஆதாரமாய் கையிலே எடுத்துக்கொண்டு
மாட்டினதோர் ஞானமெல்லாம் மகிழ்க்கண்ணி
மகத்தான காடமெனும் கலையைப்போட்டாள்
நீட்டினதோர் போதகத்தால் ஞானமாச்சு
நிலையறிந்து கொண்டவர்கள் வாசிபாரே. (௩௱௨௭)

வாசியென்று மவுனமென்றும் ரெண்டுமொன்று
மகத்தான கேசரியும் சாம்பவியுமொன்று
தேசியென்றால் போகத்துக் காதிவித்தை
தீரமான மவுனமென்றால் ஞானவித்தை
மாசியென்ற மயக்கமற்றால் ரெண்டுமொன்றாச்சு
மகத்தான அறிவுவந்தால் ரெண்டுமொன்றும்
நாசியென்ற வெளியல்லோ அகண்டவீதி
நாதாந்த பூரணத்தில் நாடுவீரே. (௩௱௨௮)

யோடா ஆதார மூலங்கொண்டு
யென்மகனே சத்தாதி விடயம்போக்கி
னேரடா குருபதியில் மனதைவைத்து
னேர்மையுடன் பூரணமாய் மவுனம்பூட்டி
சாரடா அகண்டவெளி யுச்சியீதில்
சந்திரனை சூரியனில் தாக்கிக்கொண்டு
காரடா கற்பூர தீபந்தன்னை
கண்ணுக்கு மூக்குநுனி கண்டுபாரே. (௩௱௨௯)

பாரப்பா உலகத்தில் மனுக்கள்கோடி
பாழான மாய்கையிலே மனதுபூண்டு
னேரப்பா கெஜதுரகரதங்களேறி
னேசமுடன் புஷணங்கள் தரித்துக்கொண்டு
பேறப்பா கொண்டவர்களாருமில்லை
பேறான சிவயோக வாழ்க்கைவந்தால்
மேரப்பா மேருகிரி தீபம்போலே
மெஞ்ஞான பூரணத்தில் கூடுவாரே. (௩௱௩௰)

வாழ்வதற்கு ஆதியடா மவுனயோகம்
மகத்தான யோகமடா நிசமாந்திட்சை
ஆள்வதற்கு அதிசமடா நிசமாந்திட்சை
ஆதியென்ற மூலமடா ஓங்காரத்தில்
தாழ்வதில்லை யுயர்வதில்லை மூலவன்னி
தன்மையுடன் தானிருந்து வாசியேறி
சூழ்வதற்கு அண்டவெளி சுழினைமேவி
சுத்தமுடன் தானிருந்து நித்தம்பாரே. (௩௱௧)

பாரப்பா குண்டலிக்குள் மூலமொன்று
பதிவான கேசரியின் மூலமொன்று
னேரப்பா சக்கரத்தில் மூலமொன்று
நிசமான விந்தென்ற மூலமொன்று
சாரப்பா சத்தியென்ற மூலமொன்று
சகலகுரு பராபரமா மூலமொன்று
சேரப்பா இதையறிந்து ஆதிமூலம்
செயலறிந்து கொண்டவனே சித்தருமே. (௩௱௨)

சித்தமுடன் தானிருந்து யோகமூலம்
திருவான மூலமடா சுழினையப்பா
சுத்தமுடன் சுழினையிலே மனதுறவுவன்னி
சோதிதிரு மனிவாசற் குள்ளேசென்று
சத்தமுடன் சேர்ந்தவரே அகலந்தன்னி
தன்மையுடன் சாந்தியாய் ஞானத்தேகி
பத்தமுடன் குருபதியில் நின்றயாகில்
பரஞானா கேசரியில் வாழ்வாய்க்காணே. (௩௱௩)

கண்ணேனது காதேது முகக்கேது
கருணையுடன் கண்டதெல்லா மறிந்துபோச்சு
மண்ணேது பொன்னதுமற்று நின்றதேது
வுற்றுப்பார் கெட்டவெளி யொன்றுமில்லை
விண்ணேது வெளியேது வொளியதேது
வேதாந்த கேசரியில் நின்றுபாரு
பெண்ணேது பெருந்தேது பேசமேது
போகமது பெரணமது விடத்தைத்தாணே. (௩௱௪)



காணவே கேசரியில் மனதைவைத்து
கருணையுடன் பூரணத்தில் கலந்துகொண்டு
பூணவே புருவமய்யத் தமருக்குள்ளே
புத்தியுடன் சித்தமதாய் வாசிபூட்டி
பேணவே கேசரியில் வாழ்ந்துகொண்டால்
பேசாத மவுனமது கைக்குள்ளாச்சு
தோணவே மவுனமது கைக்குள்ளானால்
சுகமேவ பிராணகலை சுத்தமாமே. (௩௱௫)

சுத்தமுள்ள சவுமியசா கரத்தைமைந்தா
சுகமறியா மானிடர்க்கு யீய்ந்தாயானால்
பத்தமுள்ள தேகமதை காணமாட்டாய்
பரமகைலாச மதில் சேரமாட்டாய்
கற்றதொரு மந்திரங்கள் வந்தாதய்யா
காலான வாசியது நில்லாதய்யா
முத்தமிழ்சேர் புலத்தியனே பதனம்பண்ணி
மோனமுடன் தானிருந்து தன்னைப்பாரே. (௩௱௬)

தன்னைப்பார்த் தறிவதற்கு மைந்தாமைந்தா
சாகரமும் ஞானமுந் தானேபார்த்து
விண்ணைப்பார்த் தந்தநிலை சோதிகாண
வேதாந்த காவியத்தை விரும்பிப்பாரு
கண்ணைப்பார் சகலகலை கியானம்பாரு
கருத்துவைத்துத் தத்துவமா யிரத்தைப்பாரு
மண்ணைப் பாத்தமர்ந்துநிலை கூடுதற்கும்
மகத்தான பூரணகே சரியைக்காணே. (௩௱௭)

காணப்பா பூரணகேசரியை மைந்தா
கருணைவளர் ஆயிரமும் கருவாய சம்சோரணஞ்
பேணப்பா சொன்னகரு விந்திரசாலம்
பெரிதான ஜாலமந்த பேணிப்பாரு
ஊணப்பா மந்திரகலை மாந்திரீகம்
புத்தியுடன் ஆயிரத்தை பூண்டியொரு
தோணப்பா சகலமுமே தொகுத்துப்பார்க்க
சொல்ல ஒண்ணு வுனத்தின் தினசுப்பாரே. (௩௱௮)

பாரப்பா நிசநிசைஷ யார்தான்காண்பார்
பதிவான மவுனமென்ற நிசநிசைஷபெற்றால்
னேரப்பா நிசநிசைஷ நிலைகாணலாகும்
நிசமான மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
காரப்பா மவுனநிசநிசைஷ தன்னை
கருத்துவைத்து பாராட்டால் கண்ணைக்குத்து
சாரப்பா கண்ணரிந்து தன்னைப்பார்த்தால்
தன்மயமும் சின்மயமாய்த் தானாவாயே. (௲௱௩௯)

தானென்ற ஆறுவத்தை தள்ளமாட்டார்
சங்கையுடன் பூரணத்தைச் சாரமாட்டார்
ஊனென்ற சுகபோகம் ஒளிக்கமாட்டார்
உறுதியுடன் சிவதலத்தி லொடுங்கமாட்டார்
வானென்ற மதிபமூர்தம கொள்ளமாட்டார்
பதிவான மவுனத்தை காணமாட்டார்
வானென்ற பொருளரிய எளிதோமக்காள்
மகத்தான வாசிபைக் கழினைக்கேத்தே. (௲௱௪௰)

எத்தமுள்ள செகஜால வித்தைசொல்வேன்
பெண்மகனே அதினாலே ஒன்றுமில்லை
சுத்தமுள்ள கெந்தகமும் சாதிலிங்கம்
நன்மையுள்ள வீரமுடன் கெவுரிகூட்டி
காத்துநன்றாய் யோரிடையாய் வாங்கிமைந்தா
கைமுறையாய்த் தான்பொடித்து சாண்டிசேர்த்து
பார்த்துநன்றாய் மப்பேத்தி நிலைமூட்டி
பத்தியுடன் அஞ்சமொன்றாய் விளக்கும்பாரே. (௲௱௪௧)

பாரப்பா விளங்கின்ற குளம்புக்குள்ளே
பச்சைப்பா நாவலம் பொங்கல் சேர்த்து
னேரப்பா நாரசம் பொடித்துச்சேர்த்து
னேர்மையுடன் தாவெடுத்து பார்க்கும்போது
சாரப்பா சார்ந்துநன்றாய் விளைப்போகும்
சங்கையுடன் காலவாசி தங்கக்கூட்டி
காரப்பா கமலரச அமுர்தந்தன்னால்
கல்வமதில் தானாக்க மெழுகுமாமே (௲௱௪௨)



ஆமப்பா மெழுகெடுத்து பதனம்பண்ணி
அப்பனே வெள்ளிசெம்பு சரியாய்ச்சேர்த்து
ஆமப்பா சொல்லுகிறேன் உருக்கினன்றாய்
ஆதரந்த மெழுகெடுத்து பத்துக்கொன்று
ஓமப்பா வென்றபிரண வத்தினாலே
உண்மையுடன் தான்குடுத்து உருக்கிப்பார்த்தால்
வாமப்பால் கொண்டகெதி தன்னாலமைந்த
மகத்தான தங்கம்வெகு சோதியாச்சே (௲௱௪௩)

சோதியென்ற ஆதியடா கழினைமூலம்
சுயஞ்சோதி யானதிரு வாசிபாலே
ஆதியென்ற அந்தமடா அண்ணாக்கப்பா
அருள்பெருகும் அண்ணாக்கை உண்ணாக்குள்ளே
ஓதியேசோர் பிரணவத்தால் ஓசறயேத்தி
ஓமசிவாய வென்றுஉறுதி கொண்டால்
நீதியுடன் கேசரியில் பஞ்சகர்த்தான்
னின்று விளையாடு வதைகாணலாமே. (௲௱௪௪)

ஆமப்பா சங்கென்று மூலசத்தி
அப்பனே ஆவன்வாயில் ஓங்காரந்தான்
ஆமப்பா பரிங்கேரிமணி நக்குள்நிற்கும்
அரகரா சிங்கென்று உற்றுபார்க்க
ஆமப்பா தெருவாகும் வெளியாய்க்காணும்
அங்கமுடன் வங்கென்று வாங்கிக்கும்பி
ஆமப்பா மாணிக்க ஒளிபோல்காணும்
ஆதியந்த மிருவாசி அங்கங்காணே. (௲௱௪௫)

காணவே ஒளியில்நின்று உற்றுப்பாரு
கண்கொள்ளா சோதிவெகு சோதிகாணும்
பூணவே சோதிதனை கண்டாயானால்
புனிதமுள்ள காயசித்தி போகந்தங்கும்
தோணவே மவுனமதாய் பூசைபண்ணி
சுத்தமுடன் வேதாந்த மதனைவயுண்டு
ஊணவே கழிநிறைந்து பாருபாரு
உத்தமனே கண்கொள்ளா சோதியாமே (௲௱௪௬)

ஆமப்பா காவென்ற பூமியெல்லாம்
அருள்பெருகி நின்றதொரு அக்கினியேயாச்சு
வாமப்பா வாவென்ற வெளியெல்லாந்தான்
மார்க்கமுடன் வார்த்திட்ட வெய்யுமாச்சு
காமப்பால் காலென்ற ஒளியேதானு
கருணையுடன் கலந்தெங்கும் தோற்றிருப்போல்
ஓமப்பா வென்றதொரு மூலசத்தி
உருதியுள்ள சோதிவெகு கண்கொள்ளாதே. (கூ௱ருஎ)

கொள்ளப்பா வயளொளி பார்லவதன்றல்
சூரியான சுழிமுனையிலே மனதைவைத்து
நில்லப்பா நிலையறிந்து மனக்கண்கொண்டு
நிலையான கேசரியை பூசைபண்ணி
சொல்லப்பா சகலகலை வாசியேறி
சுழிதிறந்து மேல்வாசல் அருவமீறல
நல்லொப்பசம் பலனதாய் ஞானாக்கத்தில்
நாட்டிநின்ற மூலமதை நயந்துகேளே. (கூ௱ருஅ)

கேளடா மூலமென்ற ஆதாரம்
கெடியான அண்டமது போலேநிற்கும்
கோளடா விதில்நாலு யிதழுமுண்டு
விபரமுடன் கண்டறிந்து விண்ணைநோக்கி
வாளடா நிவ்வுடனே வவ்வுங்கூட்டி
வணக்கமுடன் ரேசகபூரகமே பண்ணி
காலடா கண்டறிந்து மேலேநின்று
கருணைவளர் முச்சுடரை கண்டிபாரே. (கூ௱ருகூ)

பாரப்பா சுடரான மூலமதுக்குள்ளே
பத்தியுடன் அகண்டபரம் பகரக்கேளு
நேரப்பா நிசமான அகாரமொன்றில்
நிலையான கணபதியும் நிற்பார்பாரு
காரப்பா கருணைவளர் உகாரந்தன்னில்
கைலாசவல்லபையாள் காலாய்நிற்பாள்
கூரப்பா குறிபரிந்து குணமாய்க்கேளு
குண்டலியில் நின்ற தொருகலைப்பூவே (கூ௱சுய)



பூவான மலரதுவும் முகப்பிறாக
புத்தியில்லவர் பெண்பாம்பு போலேநிற
பூவான வாலதுவும் சுருட்டிக்கொண்டு
பூரணமாய் சுழிமுனையில் பொருந்திநிற்கும்
பூவான பூரணமாம் அவள்வாய்க்குள்ளே
பொருந்தி மனதுருநிமினல் வந்திதிர்பான்
பூவான மலரதுபோல் வந்திகாணும்
புத்தியுடன் காணுவது சிகாரத்தியே. (கூ௱சுக)

சிகாரமென்ற அக்கினியை மூட்டிக்கொண்டு
சிவசிவா சுழி முனையில் வாசியேத்தி
வகாரமென்ற வாசிதனை நிரவாள்சத்தி
வரிசையுடன் சத்திபட்டும் மவுனமாவாள்
மகாரமென்ற மவுனியவன் ஓங்காரந்தான்
வகையறிந்து ரவிமதியும் வாசமாகி
அகாரமென்ற மனோன்மணியை பூசைபண்ணி
அறுதினமும் சுழிமுனையை அறிந்துநோக்கே. (கூ௱சுஉ)

நோக்குவது சுழிமுனைக்குள் மனதைவைத்து
நன்மையுடன் அன்றாக்கை உன்றனுக்குள்ளே
தாக்குவது ரவிமதியை ஒன்றாய்க்கூட்டி
காணும் அறுவாசல் தனிலேதான்
நாக்குமனை தொண்ணூறு மனதுகூர்ந்து
வரிசையுடன் ரேசகமும் பூரகமும்பண்ணி
நோக்குவாசி அமுர்தமது நாவில்கொண்டு
நன்மையுடன் கும்பகத்தில் நாட்டிநில்லே. (கூ௱சுங)

நில்லென்ற நிலையான மூலசத்தி
நிசமான ஓங்காரந் தன்னில்மைந்தா
சொல்லென்ற சுழிமுனைவழி தன்னிலேவி
சுகமாக மேலாறும் அறிந்துபார்த்து
உள்ளென்ற சிகாரமதால் வுற்றுப்பாரு
உற்றுமென்னப் பார்க்கையிலே கண்டுகாணும்
செல்லென்ற யகாரமதால் நிபுக்காணும்
சேர்ந்து மிகவன்றுசி ஒளிபோலாமே.. (கூ௱சுச)

ஒளியான ஒளியரிந்து வுற்றுப்பாரு
  உற்றுமெள்ளப் பார்க்கையிலே நந்திகரனும்
விழியான தெளிவரிந்து கண்டாயானால்
  வேதாந்த மூலமதில் கனலேயிறும்
சுழியான கண்ணரிந்து வழியேசென்றால்
  சோதிதிரு வானகேசரிபான் பாதம்
வழியானதுரை யரிந்து கண்டாயானால்
  மகத்தான ரவிமதியின் காலைத்தேடே. (நூறு௫)

தேடிமனம் கொண்டதொரு சித்தர்பார்த்து
  தெளிவான காலறிந்து தெளிந்துகொண்டு
ஞாடிமனங் கொண்டுமிக சிப்சிம்மென்று
  ஞாதாந்த பூரணத்தில் கூட்டினார்கள்
வாடிமனம் போகாமல் மவுனம்பூட்டி
  மகத்தான சுழினையிலே வாசயோகி
ஆதியாந்தத் திருவடியைக் கண்டால்மைந்தா
  அக்கமுடன் பூரணமா யிருந்தார்தானே (நூறு௬)

இருந்தாரே சுழினைவழி குகைந்தன்னை
  யேகாந்த மானதொரு யெழுத்தைபோற்றி
யிருந்தாரே அந்தரங்க மனையில்சென்று
  யென்னசொல்வேன் தன்னகத்தைத் தரித்துக்கொண்டு
யிருந்து அந்தபூரணியைப் பூசைபண்ணி
  யேகாந்த வடிவதனை யெழுந்துபார்த்து
யிருந்தாரே சிவபவசி யென்றுமைந்தா
  யோகாங்க மானதிரு வாசியோரே. (நூறு௭)

பாரப்பா வாசிவா யென்றுஅன்னே
  பத்தியுடன் தானிருந்து மனிதவுன்னனி
நேரப்பா சேசிவாயென்று மென்று
  னேர்மையுடன் சேசகபூரகமும் பண்ணி
காரப்பா ஞசிவாய் செவிகண்மூக்கு
  கருணையுடன் ஞஇமடா நடுநின்றுமிம்
சேரப்பா ஓமெனவே வாசியுன்ன
  திருவாசி பூரணமாயாடும் பாரே. (நூறு௮)



ஆகுமப்பா அவ்வுபமும் தன்னிலேசென்று
  ஆதார மானதொரு மூலத்தோடி
ஓடுமப்பா வரிசையுட னல்லாமம்போல
  உன்னுடைய அன்னுடைய மக்கிமேடே
நாடுமப்பா விகமதின் நடுவேசென்று
  ஞாதாந்த நடுவன்னைய பிடித்துகொண்டு
வாகுமப்பா அருளுமதும் மவுனத்தாலே
  மவுனமுடன் வாசியைநீ யிருக்கிப்பாரே. (நூறு௯)

இருக்கியந்த ஞானத்தைநீ யிருக்கிப்பார்க்க
  யேகாந்த சபைதனிலே யிருந்தாயானால்
கருக்கிநின்ற அருஞ்சபஞ்ச பூதமெல்லாம்
  சொன்னபடி யாகுமடா தருவைப்பாரு

இருக்கமதே பூரணமாய் தாகம்பார்த்து
  செங்கமல் சுழினையிலே கனருமைந்தா
நெருக்கிநின்ற சுழினையிலே அமுர்தந்தீர்த்தும்
  மேமமுடன் நீயிருந்து பூசைபண்ணே. (௱௰)

  சைமுனா தனையரிந்து சுழினையில்நின்றால்
  பூரணமா யிதழ்கனிந்து அமுர்தம்பாயும்
னேசமுடன் அமுர்தமதைக் கொண்டால்மைந்தா
  னேர்மையுடன், வாசியது நிலையில்நிற்கும்
பாசமுடன் நிலையரிந்து வாசிபூட்டி
  பத்தியுடன் கேசரியை பணிந்துநின்றால்
ஆசையென்ற சத்ராதி விடயமெல்லாம்
  அசையகத்தில் பூரணமாய் அழிவில்லையே. (௱௰௧)

இல்லடா சுழியரிந்து லிங்கத்தோடும்
  னேர்மையுள்ள அமர்வாசல் தன்னிலேதான்
உள்ளடா மதிபமுர்தம் கசிந்துபாயும்
  உண்மையதாய் மவுனமுடன் அங்கேகொண்டால்
அல்லடா உன்தேகம் தங்கம்போலே
  அங்கனையே தேகமடா அழிவோமி
செல்லடா சோதியிலே மனத்தைவைத்து
  திருசுழி முனையிலே நிலைவையே. (௱௰௨)

சிந்தையது பூரணமாய் கொண்டாயானால்
சிறப்பான முப்பாழும் நிறமாய்காணும்
சந்தேக மில்லாமல் முப்பாழ்தன்னில்
தானிருந்து பூரணமாய் சுழினைப்பாரு
சொந்தமுள்ள சுழிதனிலே மனதைவைத்து
சுகமான வாசியைத்தான் கட்டுக்கேத்தி
அந்தமுடன் தானிருந்து தன்னைப்பாரு
ஆனந்த மானசிவ சோதிபாரே. (௲௬௬)

சோதியென்ற ஞானமடா மவுனஞானம்
சுயஞ்சோதி யானதொரு சுழினைமூலம்
ஆதியென்ற மூலமடா அண்டத்துச்சி
அருள்நிறைந்த பூரணமாம் யோகமல்லோ
நீதியுடன் வஸ்துவைநீ பூசைபண்ணி
நிசமுடன் வல்லமையப்பாத்து
ஓதிவைத்தார் மந்திரமே வாசியேறி
உண்மையுள்ள ஞானத்தில் புகுந்துகேளே. (௲௬௭)

கேளப்பா ஞானமதுக் கேருமார்க்கம்
கெடியான மண்டலங்க ளாறுஞ்சொல்வேன்
வாளப்பா தனலுருவா மண்டலந்தானென்று
மேலான ரவியிருக்கும் மண்டலந்தானென்று
சூழப்பா மதியிருக்கும் மண்டலந்தானென்று
சூழ்ந்திருக்கும் அமுர்தமிதே மண்டலந்தானென்று
சாரப்பா யிவ்வளவும் யோகசித்தி
சாத்துகிறேன் ஞானத்தும் சார்ந்துகேளே. (௲௬௮)

சார்ந்திருந்த குருபதந்தான் ஆறிரெட்டிதுதான்
சுவைபாரும் சக்திபுர மண்டலந்தானென்று
ஆயந்திருந்த ஆதிசிவ மண்டலந்தானென்று
அப்பனே அறுந்தெதி நின்றமானு
போந்திருந்த பிரமமாம் மண்டலத்தில்
போச்சுதப்பா பிரவியென்ற சந்திதன்னை
சார்ந்திருந்த நிமலமாய் நிறைந்தபோது
சுகையுள்ள மோக்ஷமென்று சாற்றுவாரே. (௲௬௯)



சாற்றுகிறேன் புருவமய்யந் தானந்தன்னில்
சற்குருவாம் நிமலத்தை போற்றிசெய்து
சாற்றுகிறேன் கிரியையில் வாலைபதந்தான்
சலியாமல் பூசைபண்ணி தியானஞ்செய்து
சாற்றுகிறேன் பூசைமுறை தன்னைக்கேளு
சாதகமாய் முதலெழுத்துஞ் சிகாரங்கூட்டி.
சாற்றுகிறேன் நிர்மலத்தை தியானம்பண்ணி
சலியாதே வாலைசந் தானங்கேளே. (௲௭௰)

சந்தான மவ்வோடி சிகாரந்தானும்
சாதகமாய் வகாரமொடு மூன்றுமாகி
சிந்தாமல் இருநயம் மூன்றுங்கூட்டி
திட்டமுடன் மவுனத்தை தியானம்பண்ணி
சொந்தமுடன் பூசையைத்தான் நன்றாய்பண்ணு
சுத்தமுடன் பண்ணையிலே நிர்த்தஞ்செய்வாள்
தந்திரமாய் செய்தி நீக்கசொன்னால்
தன்மையுடன் பூரணமாய் நின்றபாரே. (௲௭௧)

பாரப்பா வெளிபார்க்க வழியைக்கேளு
பதிவான குரியென்று சொல்லேனப்பா
சேரப்பா கண்மூடி விரலாலாட்டில்
செம்மையுடன் ரவியினையும் போலேகாணும்
காரப்பா ரவியினையும் கண்ணிலேதான்
கருத்துடனே வாசியைநீ கனமாய்பூட்டி.
தேரப்பா மவுனமதில் இருந்துகொண்டால்
நிறமான பூரணமும் தோன்றும்பாரே. (௲௭௨)

பாரப்பா தோன்றுகிற மதியைப்பற்றி
பதிவான நக்ஷத்திரம் போலேகாணும்
சேரப்பா நிலையறிந்து மவுனங்கொண்டு
நிசமான கேசரியில் வாசிபூட்டி.
காரப்பா கண்ணுக்கு மூக்குக்குமே
கபாடமென்ற வாசலிலே ஒளியாய்நின்று
பேரப்பா ஓங்கார மூலங்கொண்டு
இன்பமாக அமுர்தமதை கொண்டிடுமே. (௲௭௩)

நேரப்பா விள்ளமொரு கருமானத்தைக்
 கிருவான பூரணத்தை நிறையவாகி
காரப்பா பிங்கானில் பதனம்பண்ணி
 கருணையுடன் அமிர்தரச புறச்சார்விட்டு
நேரப்பா ரவியிருவ கட்டிச்சேர்த்து
 நிசமாகத் தான்பிசைந்து ரவியில்போடு
சாரப்பா ரவிதனிலே காய்ந்தபின்பு
 சட்டையுடன் பத்துமுறை தயவாய்ச்செய்யே. (௲ளங)

செப்பப்பா பத்துவிசை நிசைநசெய்தால்
 சிவசிவா பூரணமும் நிறமாயிருக்கும்
மெய்யப்பா கட்டிநின்ற பூரணத்தைமைந்தா
 மேன்மைபெற பிங்கானில் பதனம்பண்ணி
கையப்பா கவனமுடன் மைந்தாகேளும்
 கருவான கற்பத்தை கொள்ளும்போது
மெய்யப்பா மெய்நிறைந்து பூரணத்தில்
 மார்க்கமுடன் பணவிடை தான்கொண்டானே. (௲ளஉ)

காணவே பூரணத்தை கொண்டால்மைந்தா
 கருணையுள்ள வாசியது கடக்காதப்பா
பேணவே சுழிமுனையிலே தாக்கியேறும்
 பேரண்டம் சுற்றிவர தெளிவுமுண்டாம்
பூணவே தெளிவுமென்ற மவுனயோகம்
 பூரணமாய் வாசியிலே பூண்டுகொள்ளும்
ஊணவே ஊன்றிக்கொண்டு நின்றால்மைந்தா
 உன்தேகம் விண்ணதொளிபோல் மின்னலாமே. (௲ளச)

லிங்கமெழுகு.

தன்மையுட லிங்கமொரு கழஞ்சுவைத்தே
 உறுதியுடன் லிங்கம்அரி தாரம்வீரம்
தன்மையுடன் காரமுடன் தெளிவிட்டு
 நாதாங்க அமுர்த பூரணத்திலே
தன்மையுடன் கல்வமதில் நன்றாயாட்டி
 தயக்கமில்லாமல் [illegible]
சின்மயமாய் தானமர்த்தி பதனம்பண்ணி
 தெளிவுமிகப் பூரணியை நிறைவாய்ச்செய்யே. (௲ளரு)



செய்கவொரு மெழுகெடுத்து மைந்தாகேளும்
 செம்புவெள்ளி தகடடித்து மேலேபூசி
கொய்து மிசைடூல் வைத்துஊதி
 குரியுடனே மண்ணிலே வலுவாய்ச்செய்து
மெய்த்தவரு பூரணமாய் குருவைப்போற்றி
 மேன்மைபெற வெகுவதிக்கி புடத்தைப்போடு
கைத்தவரு மனதாக வெடுத்துப்பாரு
 கனகமென்ற தங்கமடா கண்கொள்ளாதே. (௲ளசு)

கண்ணான கமலக்கண் மனக்கண்ணாகும்
 கருணைவளர் பூரணமே அறிவானந்தம்
ஒண்ணான அறிவல்லோ பிரமமாச்சு
 உண்மையென்ற வாசியடா அமுர்தபானம்
வெண்ணான அமுர்தமதை அறிந்துகொண்டால்
 யோகவிரா மயமான சோதியாச்சு
விண்ணான சோதிதனை கண்டபோது
 மேலான பிரமமென்று மெய்யில்கொள்ளே. (௲ளஎ)

மெய்யான சவுமியசாகரத்தை மைந்தா
 விரும்பிநின்று ஆதியந்தம் நன்றாய்ப்பார்த்து
பொய்யான மாய்கையெல்லாம் விட்டகன்று
 போதமய மானசிவ யோகந்தங்கும்
மையான சுழிமுனையிலே மனக்கண்சாத்தி
 மகத்தான சாகரத்தை பூசைபண்ணி
கைய்யப்பா கைவிடலில் கனிபோல்மைந்தா
 கருணைபெற மவுனமதைக் காருதாரே. (௲ளஅ)

காரப்பாமவுனமதை காக்கவேண்டி
 கருணையுடன் சத்திசிவ பூசைபண்ணு
நேரப்பா வாலைதனை பூசைபண்ண
 நிசமான பூரணத்தைக் கண்டுகொண்டு
தேரப்பா நல்லபதம் தேர்ந்துவிகாணலாம்
 சிவசிவா மவுனமதாக் குறியாகும்
வீரப்பா கொண்டமெய் கெட்டுப்போனால்
 வேதமென்ன நூல்என்ன வீண்தான்பாரே. (௲ளகூ)

பாரடா வேதமொடு ஞானாந்தந்தான்
பதிவான ஆதியந்தம் மென்றம்பா
நேரடா ஆதியந்தம் மண்விண்ணப்பா
நிசமான மண்ணும் விண்ணும் ஞானதிக்கு
கூரடா ஞானவிந்து சத்திசிவமாச்சு
குறியான சத்திசிவ மேதென்றக்கால்
காரடா சத்தியென்றால் தேகமாச்சு
கருணைவளர் சிவமென்றால் வெளிதான்காணே. ([illegible])

காணவே புலத்தியனே சொல்லக்கேளு
கருணைவளர் சவுமியசாகரத்தில்மைந்தா
தோணவே வேதாந்தம் சித்தாந்தம்ரெண்டும்
சொல்முறைகள் தவறாமல் சமரசமாய்ச்சொன்னோம்
பேணவே ஞானம் பிரதமநூலில்
பெலமான மோடியங்கம் வினைகள்சொன்னோம்
பூணவே சகலகலைக்கியானம் மெல்லாம்
புத்தியுடன் நன்றாகப் பூண்டுபாரே. ([illegible])

பாரப்பா பூரண மீராறு நூலில்
பத்தியுடன் சகலகலைதீக்ஷை சொன்னோம்
நேரப்பா காவியத்தில் அடக்கமெல்லாம்
நிசமாகச் சொல்லிவைத்தோம் நிதானம்பாரு
சாரப்பா வைத்தியமாயிரத்தின் நூற்றில்
சகலமுறை கட்டுமுறை தயிலஞ்சொன்னோம்
சாரப்பா செந்தூரம் வைப்புமார்க்கம்
சமரசமாய் சொல்லிவைத்தோம் தானேகாணே. ([illegible])

காணவே கர்மமது நிவர்த்தியாக
காண்ட மென்றமுன் நூறு கனிவாய்ச்சொன்னோம்
ஊணவே பஞ்சமது பிருஷ்டத்தில்
உத்தமனே சொல்லிவைத்தேன் மறவாதேபாரு
தோணவே மாந்திரீக மாயிரத்தில்
சொல்லவொண்ணா அதிசயங்கள் தோணச்சொன்னோம்
பேணவே இனைந்தவிதி பூசைவிதிரெண்டும்
பெருமையுடன் சொல்லிவைத்தேன் போதிகாணே. ([illegible])



காணப்பா தத்துவமாயிரத்தில் மைந்தா
கருணையுடன் ஆதார கோர்வைதோறும்
பூணப்பா மனம்பூண்டு மனுவிக்ஞானம்
புத்தியுடன் ஆயிரமாம் சொன்னநூலில்
தோணவே யிகபரத்தின் குணங்கள்தோறும்
சுத்தமாய்போல் பூரணத்தில் சொக்கிநின்று
பேணவே சென்றுவெளிதாம் காப்புச்சொன்னோம்
பெருமையுடன் குண்டலிகள் அனேகந்தானே. ([illegible])

தானேதான் தானே பூரணத்தில் நின்று
சகலவுயிர்த் தாமாக தானேயென்னி
வானேதான் மனோன்மணியாய் கண்டுகொண்டால்
உற்றசிவ யோகியென உலாக்கலாகும்
பேணவே சிவயோகி பாருலகமைந்தா
பேசாதே மவுனமதில் கொண்டுசொல்வான்
[illegible] நோக்கும் வருத்தினால் [illegible]
புத்தியுடன் விட்டகுறை [illegible] பாரே. ([illegible])

வேறொருமிகே விட்டகுறை அனைப்பேயானால்
வேதாந்த தத்திசுரு கண்ணிதோறும்
சானையமாய்போகாது தன்னைகாட்டி
சச்சிதானந்தபூரண முங்காட்டி
கோணமெல்லாம் கக்கிவைக்கும்தமனாக்காட்டி
குறிப்பாகத் தொன்றுமிவாய் சுழிமுனைகாட்டி
தானொன்று வாய்க்கிறந்து அமுர்தமூட்டி
சாதிக்கும் யோகத்தில் வந்தன்றுசொல்வாயே. ([illegible])

சொல்லடா ஓங்கார குண்டத்தன்னை
சூரியன்போல் வட்டமதாய் சிருஷ்டிதன்னை
சொல்லடா மவுனமதில் குகையிதுவென்று
சுழிமுனையென்னும் ஓங்கார குண்டத்தன்னை
சொல்லடா நகரையமோ வுமைகுண்டந்தான்
தொடுகுறிபோல் சண்முகமாம் அறுகோணத்தில்
சொல்லடா பிறையன்னே முக்கோணத்தில்
சோதியெனும் கண்டமணி சொற்கந்தானே. ([illegible])

சொற்பமாக மகிமையென்ற நூலிலேமைந்தா
தாண்டி வித்த குருவருளா முனைப்புரிந்து
சொர்க்கபதம் தனைபார்த்து வாசியாலே
ஓட்டப்பா குளிகையொடு லகிரிகொண்டு
சொர்க்கபதக் கெடிச்சியா பார்க்கத்தை
தொடுகுறிபோல் வாசியிட்ட வத்தநாதம்
சொர்க்கபதம் குருவினுடைய பாதங்கண்டால்
தாலம்போல் காயமதில் வாசிசாக்கே [illegible]

சாத்துகிறேன் வாசியுடு கருவைக்கேளு
தற்பரமாம் சுழிமுனையிலே சாத்தைபூணி
வாத்திரமே பிரியாமல் ஒருக்கப்பார்க்கில்
கிலிபத்த புரியஷ்ட முள்ளாயிருக்கும்
சித்திநேர் பூரணத்தா லத்தும்மைந்தா
அப்பனே வெளிபோகு புகழ்வெளியுமே
காத்திரோ பூரணத்தில் மவுனத்தாக்க
மகத்தான சிவயோகம் விளங்கும்பாரே. [illegible]

யோகத்திறல் குருவைக்கொண்டாற் சாற்று.

பாருநீ யிப்படியேவாசி யோகம்
பார்க்கையிலே மவுனமது பிலக்குமித்தி
காருநீ குருவைக்கொண்டால் உள்ளக்காயில்
கசப்பால் பூரணமும் கலந்துநீரி
சேருநீ புளிபாகா சொல்லிக்கொண்டு
சிரப்பாக மனுசாற் றினுமுக்கொண்டு
சாருநீ தன்முருக வகையைக்கேளு
தனியொரு அமுரிதனி லுரைத்தாக்கனே. [illegible]

சாணவே அமுரிதனில் பிள்ளைகாத்து
காதுனையுடன் நான்குறைந்து தமிழ்நிறைந்து
பேணவே வெள்ளையில் முழுதுமைந்தா
பெரிதான கபாலத்தின் தெரிந்திருக்கும்
பூணவே கண்டேனிக் கபாலகுதம்
புத்தியுடன் நிருமயா புனிதமாக
கோணவே கண்முடி கண்ணைப்பாரு
சுத்தமுடன் இருகண்ணுந் தெரியுமே. [illegible]



கேளப்பா விரலாலே விழியைத்தாண்டி
கேசரியில் மத்தியிட்டு பாட்டுப்பாரு
சொல்லப்பா அக்கினியே லக்குதோணும்
மயமத்தில் காணுமடா சொர்க்க மோக்ஷம்
வாளப்பா ஸ்ரீதலக்கோ மோக்ஷமீது
வார்த்தைடா வத்தையைக்கு மைந்தா கேளு
கோளப்பா கோபமென்ற முனைபோக்கு
குறிபான மோக்ஷநெறி பாடுறான்பாரே. [illegible]

நெறியென்ற பாதெறிதா னிதுதான் மைந்தா
கேசரத்தில் கண்டெனுளிபோல் காணுமப்பா
பதியென்ற நெறியொன்று சொல்லக்கேளு
பதலன் காணுதிக்கு முன்னே சாராது
மதியென்ற விரகினி லாடத்தை நோக்கு
விளக்கவே சூரியனைக் கண்ணால் பார்த்து
நதியென்ற சுழிமுனையில் முகங்கண்டு
நெறிகுறியே லாடத்தில் மனக்கண்ணாலே. [illegible]

தலைனியே நாசியிலே நுனியைக்கண்டு
துகோதோ பூசையிலே ஈசிபோல் காந்து
தோணவே சொர்ணமது போலே காணும்
சொர்க்கபத முண்டாச்சு சுகமுண்டாச்சு
காணியே செய்பாய வெல்லாம் யோகம்
காணென்ற ஆறுவகைப்போது யோகமாச்சு
வாணியே சின்முத்திரி சுகங்களாகும்
வாத்திநுசொல்வான் சுழிமுனையிலே வாழுமைப்பாலே. [illegible]

வாழப்பா சித்தமொடு சிவமுனைந்தாம்
மகத்தான சுத்த நியமபோதே
ஆளப்பா காயத்தை பொளி போலாக்கி
ஆர்ந்து மதியமுர்த்த மவுனக்கொண்டு
தாளப்பா தாண்டிமைந்து நின்றுபாரு
சந்திரனுஞ் சூரியனுந் தானே தானும்

நீளப்பா சுழிமுனையிலே அக்கினியென்று
சேர்முகமாய் நின்றதை சேவிப்பீரே, (௲௭௱௬௰௯)

ஓடுகின்ற சேனைகண்டு ராக்காலத்தில்
உத்தமமோ கற்பூரச்சோதி தன்னை
நாடுகிற வொளிகாட்டி ஒளியைப்பாரு
நாவிரண்டு நிக்கவிலே தேகமெல்லாம்
ஆடுகிற செப்பருத்தம் பூப்போலாகும்
அசமான விளக்கொளியில் சாய்கையில்லை
சாடுகிற அண்டமதைப் பார்க்கும்போது
தன்வயத்தில் புடைக்கெழுந்த வொளிகண்டோமே (௲௭௱௭௰)

ஒளிகண்டோம் சதாகால மைந்தா கேளு
உண்மையாய்க் கருணைகையென்று நீயும்பார்த்து
வெளிகண்ட வெம்பலிலே சுழிமுனைமேல்
வேதாந்தமலைகாட்ட விழி யொளி கண்ணுட்டம்
விழிகண்டோம் பராபரத்தில் விசாலம் கண்டோம்
மெய்க்குள்ளே தத்துவங்களெல்லாம் கண்டோம்
சுழிகண்டோம் பூரணத்தின் சோதிபாலே
சொர்க்கபத மானதொரு சுடர்கண்டோமே (௲௭௱௭௰௧)

சுடர்காட்டிச் சுழிமுனையுட னொளியுங்காட்டி
சொர்க்கபத மானதொரு சன்புல்காட்டி
திடர்காட்டிப் பெரியதொரு சுழிமுனைகாட்டி
பேரொளியாய் நின்றதொரு பிறப்பைக்காட்டி
படர்காட்டி மதியொளிட பாதங்காட்டி
பருகபெற்ற ஆதியந்த நடுவுங்காட்டி
இடர்காட்டிக் காலகதியாய் சிவயோகத்தை
இருக்கிறி தெளிவாலே பாவம்போச்சே, (௲௭௱௭௰௨)

போச்சப்பா குருகாட்ட வாசியோகம்
பூட்டுவதால் சிவயோக முத்தனுக்க
ஆச்சப்பா இன்னும் சொல் கதியோகமும்
அறிவதன் சாதகங்களை யாருந்தான் சொல்வார்



வாச்சப்பா புலத்தியனே வாசிமார்க்கம்
மகத்தான நந்தியெனி கண்டுகொள்ளாது
பேச்சப்பா நெல்லையில் ஓங்கிக்கொண்டு
நிலமான ரவிமுகமா யிருந்து பாரே, (௲௭௱௭௰௩)

பாரப்பா இருவிழியால் மேலேபார்த்து
பதிவான பத்மாசனம் பார்க்கும்போது
காரப்பா மண்டலமூன்றங்கே காணும்
கதிர்மதியுஞ் சுழிமுனையுட கண்ணைகாணும்
நேரப்பா நின்றது சணமுங்காணும்
நிர்மலமபிரமபதம் நேரேகாணும்
சாரப்பா சராசரமுந் தானேகாணும்
தன்னுள்ளே காணுமடா தன்னைக்காணே (௲௭௱௭௰௪)

தன்னைத்தான் தானறிந்து தன்னைக்கண்டு
சவுமியமாய் நின்றசா கரத்தைப்போற்றி
விண்ணைத்தான் நோக்குதற்கு மணிநாவுன்னி
வேதாந்த சுழிமுனையிலே வாசியூட்டி
உன்னைத்தான் மாதுன்னி அண்டத்தேறி
ஓம்சிவா வென்றகுரு பாதம்போற்றி
நண்ணைத்தா னறிந்து வெளியொளி கண்டுகூட
கலந்துகொண்ட சவுமியசா கரந்தான் முற்றே. (௲௭௱௭௰௫)

முற்றுனசாகரந்தான் மைந்தா மைந்தா
முழுதுமதை ஆதியந்த மன்றாயப்பார்த்து
சித்தான சித்தவின யாடிதற்கு
சிவசிவா குருவாய்த் தேர்ந்துகொண்டு
சுத்தான சுத்தநற்குச் சேர்மியாக
சோதிமய மானசிவ ஜோதிதன்னை
பத்தான தசநிலைக முத்திதந்த
பாபதக் கெல்லையிலே பதிவாருமே, (௲௭௱௭௰௬)

வாதசௌமியம் ௲௨௱

முற்றுப்பெற்றது.

1888
२१/२/९६